வரு.73 இல. 48 ★
www.vaaramanjari.lk
/Thinakaran.lk /ThinakaranLK
REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

# தினகரன் வாரமஞ்சரி
THINAKARAN VAARAMANJARI

2021 நவம்பர் 28ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை

November 28 Sunday, 2021

32 பக்கங்கள் 40/-




05 ஆறாத் துயர் தந்த கிண்ணியா படகு விபத்து
10 அதிகரிக்கும் காஸ் சிலிண்டர் விபத்துகள்
18 கவர்ச்சி காட்டிய தர்ஷா குப்தா
24 ஆஸி. டெஸ்ட் அணி தலைவர் பெட் கம்மின்ஸ் உப தலைவர் ஸ்மித்

எத்தகைய விமர்சனங்கள், எதிர்ப்புகள் வந்தாலும்

## நாட்டை முன்னேற்றுவதற்காக சில தீர்மானங்களை எடுக்க நேரிடும்



உலகளாவிய ரீதியில் பொருளாதாரச் சவால்களை வெற்றிகொண்டு நாட்டை முன்னேற்றுவதற்காக, எதிர்காலங்களில் பல்வேறு தீர்மானங்களை எடுக்க வேண்டி இருக்குமென ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அத்தகைய தீர்மானங்கள் விமர்சனங்களுக்கு உள்ளானாலும், எதிர்காலங்களில் அதன் பிரதிபலன்கள் நாட்டுக்கும், மக்களுக்கும் கிடைக்குமென்று ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் (26) நடைபெற்ற 'ஜனாதிபதி ஏற்றுமதி விருது' விழாவில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

குறுகியகால சிக்கல்களை வெற்றிகொண்டதன் பின்னர்

04

## நடமாடும் சேவை மூலமாக "பூஸ்டர்"

### நேற்று முதல் ஆரம்பமானது



கொரோனா வைரஸ் தொற்றுப் பரவலுக்கு எதிரான இரண்டாவது டோஸ் தடுப்பூசியை ஏற்றி மூன்று மாதங்கள் கடந்த 60 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும், நடமாடும் சேவை மூலம் மூன்றாவது டோஸ் (Booster) தடுப்பூசி வழங்கப்படவுள்ளது.

இதற்கான நடவடிக்கையை எடுக்குமாறு, சுகாதாரத் துறை அதிகாரிகளுக்கு, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஆலோசனை

04

## அரச நிறுவனங்களின் முன்னேற்றம் குறித்து பிரதமர் எடுத்துரைப்பு

### 2022 முதல் இலாபமீட்டுபவையாக மாற்ற பணிப்பு



சகல அரச நிறுவனங்களும் அடுத்த ஆண்டில் சிறந்த முன்னேற்றம் அடைய வேண்டுமென பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ (26) அலரி மாளிகையில் தெரிவித்தார்.

இதுவரை நட்டத்தில் இயங்கும் நிறுவனங்களை அடுத்த ஆண்டில் இலாபமீட்டும் நிறுவனங்களாக மாற்றுவது தொடர்பில் அனைத்து அதிகாரிகளும் கவனம் செலுத்த வேண்டுமெனவும் பிரதமர் குறிப்பிட்டார்.

கிராமிய வீடமைப்பு மற்றும் நிர்மாணத் துறை மற்றும் கட்டிடப் பொருட் கைத்தொழில் இராஜாங்க அமைச்சுடன் இணைந்த நிறுவனங்களின் இரண்டாவது காலாண்டுக்கான முன்னேற்ற மீளாய்வு கூட்டத்தில் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் என்ற ரீதியில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே பிரதமர் இவ்வாறு குறிப்பிட்டார்.

கிராமிய வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை மற்றும் கட்டிடப்

04

நாட்டில் சமையல் எரிவாயு சிலிண்டர் வெடிப்பு சம்பவங்கள்

# சந்தையிலுள்ள சிலிண்டர்கள் குறித்த ஆய்வறிக்கை நாளை பாராளுமன்றில்

- சிலிண்டர் முதல் அதற்கு பயன்படுத்தும் உபகரணங்களின் தரம் குறித்தும் அரசு கவனம்
- பாராளுமன்றத்தில் நுகர்வோர் பாதுகாப்பு அமைச்சர் லசந்த அழகியவண்ண தெரிவிப்பு
- இது வரை வெடிப்புக்குள்ளான சம்பவங்கள் தரம் குறைந்த சிலிண்டர்களினால் ஏற்பட்டவை என உறுதிப்படுத்தப்படவில்லை

லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்

சமையல் எரிவாயு சிலிண்டர் வெடிப்புத் தொடர்பான பிரச்சினைக்குத் தீர்வு காண எடுக்க வேண்டிய சகல நடவடிக்கைகளையும் அரசாங்கம் மேற்கொண்டுள்ளது. சமையல் எரிவாயு சிலிண்டர் முதல் அதற்கு பயன்படுத்தும் மூலப் பொருட்கள் வரை அனைத்திற்கு தரம் நிர்ணயிக்கப்பட்டுள்ளதோடு தொடர்ச்சியாக அவற்றின் தரம் குறித்து கவனம் செலுத்தப்படுவதாக நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன தெரிவித்தார்.

சந்தையிலுள்ள சமையல் எரிவாயு சிலிண்டர்கள் குறித்து ஆய்வு மேற்கொள்ளப்படுவதாக தெரிவித்த அவர், பாவனை தொடர்பான பிரச்சினையாலும் அனர்த்தங்கள் நடைபெறுவதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

சமையல் எரிவாயு சிலிண்டர்கள் வெடிப்பது தொடர்பாக எதிர்க்கட்சித் தலைவரும் எதிர்க்கட்சி எம்.பிக்களும் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

பாராளுமன்றத்தில் நேற்று கருத்துத் தெரிவித்த

04



## அரசிலிருந்து ஒருபோதும் வெளியேறப்போவதில்லை

### -அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவிக்கிறார்



ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியை அரசாங்கத்திலிருந்து செல்லுமாறு வாய் வார்த்தைகளை பேசி ஒரு சிலர் பாராளுமன்றத்தை அவமதிப்பதாக அவர்கள் கூறுகிறார்கள் என்பதற்காக அரசாங்கத்திலிருந்து விலகபோவதில்லையென்று ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் பொதுச் செயலாளர், அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

அவர்கள் அழைத்ததற்காக தமது குழுவினர் இந்த அரசாங்கத்துடன் இணையவில்லை என்றும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் 14 உறுப்பினர்கள் இருப்பதாலேயே அரசாங்கத்துக்கு மூன்றிலிரண்டு பெறும்பான்மை பலம் இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பாராளுமன்றத்திலிருக்கும் ஒரு சிலரின் முறையற்ற

04

## சிலிண்டர் வெடிப்பு தொடர்பில் தெரிவுக்குழு ஒன்று அவசியம்

### பாராளுமன்றில் சஜித் பிரேமதாச கோரிக்கை



வீடுகளில் காஸ் சிலிண்டர்கள் வெடிக்கும் என்ற மக்களின் அச்சத்தைப் போக்குவதற்கு அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் இந்த அனர்த்தங்கள் தொடர்பாக விசாரணை மேற்கொள்ள பாராளுமன்ற தெரிவுக்குழு அமைக்கவேண்டும் எனவும் எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்று பாராளுமன்றத்தில் கோரினார்.

தினப்பணிகளை தொடர்ந்து எதிர்க்கட்சித் தலைவரும் எதிர்க்கட்சி உறுப்பினர்களும் காஸ் சிலிண்டர் வெடிக்கும் சம்பவங்கள் தொடர்பாக கேள்வி எழுப்பினர். பொலன்னறுவை பகுதி வீடொன்றில் காஸ் வெடித்ததில்

04

## பனை அபிவிருத்தி சபையை: கொழும்புக்கு மாற்றுவதா?

### எந்தவித தீர்மானமும் இல்லை என்கிறார் ரமேஷ் பத்திரன

லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்



பனை அபிவிருத்திச் சபையை கொழும்புக்கு மாற்றம் செய்வதற்கான எந்தத் தீர்மானத்தையும் அரசாங்கம் மேற்கொள்ளவில்லை என பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் ரமேஷ் பதிரண நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அதற்கிணங்க பனை அபிவிருத்திச் சபை

04

பெண்களை அவமானப்படுத்தும் வகையில்

## திஸ்ஸ குட்டியாராச்சியின் கருத்துக்கு மனோ பதிலடி

### காட்டுமிராண்டித் தனமானது என விமர்சனம்

தனிப்பட்ட முறையிலும், எனது தலைமையிலான அமைப்புகள் சார்பிலும், நம் நாட்டின் பெண்களுக்கு எதிரான அனைத்து நடவடிக்கைகள், அவதூறுகள் ஆகியவற்றை நாம் கண்டிக்கிறோம். இலங்கை

04






தென் ஆபிரிக்கா, நமீபியா, சிம்பாப்வே உட்பட

## 6 நாடுகளின் பயணிகளுக்கு இலங்கை வருவதற்குத் தடை!

ஆறு நாடுகளிலிருந்து இலங்கை வரும் பயணிகளுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளதாக சிவில் விமான சேவைகள் அதிகாரசபை தகவல்கள் தெரிவிக்கின்றன. அதன்படி தென் ஆபிரிக்கா,

04



பொது மக்கள் அவதானமாக இல்லாவிடின்

## பண்டிகைக் காலத்தில் கொவிட் பரவும் அபாயம்

### கட்டுப்பாடுகள் கடுமையாக்க நேரிடும் - Dr.ஹேமந்த ஹேரத்




டிசம்பர் மாதம் பண்டிகை காலப்பகுதியில் கொரோனா தொற்று பரவும் வகையில் மக்கள் செயற்பட்டால் கட்டுப்பாடுகளைக் கடுமையாக்க நேரிடுமென சுகாதார அமைச்சின் பிரதிப் பணிப்பாளர் வைத்தியர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார். தற்போதைய காலப்பகுதியிலுள்ள

04



திருகோணமலை, கிண்ணியா குறிஞ்சாங்கேணி பாலத்தின் நிர்மாணப் பணிகள் நிறைவடையும் வரை ஆற்றைக் கடந்து செல்வதற்கு அப்பகுதி மக்களுக்கு பாதுகாப்பான போக்குவரத்து வசதிகளை வழங்குவதற்காக பயணிகள் படகு சேவையை இலங்கை கடற்படை ஆரம்பித்துள்ளது.



உலக சுகாதார ஸ்தாபனம் அடையாளமிட்டது

## ஆபத்தான புதிய வைரஸுக்கு 'ஒமிக்ரோன்' என பெயர் சூட்டல்

04

இலங்கைத் தமிழருக்கு நியாயமான

## அரசியல் தீர்வைக் காண பிரித்தானிய ஒத்துழைக்கும்

### UK வெளிவிவகார அமைச்சர் சுமந்திரனிடம் உறுதி



இலங்கையில் தமிழ் மக்கள் நியாயமான அரசியல் தீர்வைக் காண்பதற்காக பிரிட்டன் தொடர்ந்தும் ஒத்துழைப்பு வழங்குமென அந்நாட்டின் பொதுநலவாய வெளிவிவகாரங்கள் மற்றும் மனித உரிமைகள் அமைச்சரும் பாலியல் வன்முறைகளைத் தடுப்பதற்கான பிரதமர் பொரிஸ் ஜோன்சனின் விசேட பிரதிநிதியும், தெற்காசிய மற்றும் ஐ.நா விடயங்களை கையாள்பவருமான

04

## சஹ்ரான் குழுவினருடன் நேரடி தொடர்பிலிருந்த இருவர் விடுதலை

### எவ்வாறு? அழுத்தம் கொடுத்தது யார்? -முஜிபுர் கேள்வி



லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்

சஹ்ரானின் குழுவுடன் நேரடி தொடர்பு வைத்திருந்த இரு நபர்களை பயங்கரவாதத் தடுப்பு விசாரணைப் பிரிவு, சட்ட மாஅதிபர் திணைக்களமூடாக விடுவித்துள்ளது. அதற்கு அழுத்தம் கொடுத்தது யார் என்பதை தேடிப்பார்க்க வேண்டுமென

04

## தோட்டத் தொழிலாளருக்கு ரூ. 2000 சம்பளம் வேண்டும்

### அரசை அதிகரிக்கக் கோருகிறார் ஸ்ரீதரன் எம்பி

லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்



அதிகரித்துள்ள அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலையேற்றத்திற்கு இணங்க தோட்டத் தொழிலாளர்களின் சம்பளத்தைக் குறைந்தது 2000 ரூபாவாக அதிகரிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென தமிழ் தேசிய கூட்டமைப்பு எம்பி ஸ்ரீதரன் நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

நாட்டின் பொருளாதாரத்தின் முதுகெலும்பாக திகழும் தோட்டத் தொழிலாளர்கள்

04

விக்கல் வீராச்சாமி



குறிஞ்சாக்கேணியில இப்ப கடற்படை இலவச படகுச் சேவைய எவ்வளவு சூப்பரா நடத்துகினம் பாத்தியிலே....

இத முதலில செய்திருந்தா அப்பாவி மாணவர்கள காப்பாத்தியிருக்கலாம், ஊர்ல தலைமை சரியா இருக்கணும் என்பது இதுக்குத்தான்...!!!


SAMSUNG
A52s 5G
A22 5G
Galaxy A52s | A22 5G
Awesome 5G,
Awesome speed
5G 12 band support*
120Hz, FHD+ sAMOLED display
IP67 for water and dust resistance*
5G
Available at:
JKOA | softlogic | softlogic MAX | SINGER | SINGHAGIRI | DAMRO | Dialog | SLTMOBITEL | Samsung e-Store | my softlogic.lk | Kapruka.com | Keells | And all authorized dealers island wide
Contact us
011 Samsung 7267864
Image simulated. Galaxy A52s is 5G ready and Galaxy A22 is 5G enabled. Compatibility dependent upon 5G network availability. Price starting at Rs. 59,9990/-.
*Features vary by devices. Prices may subject to change without prior notice. For more details, visit www.samsungsrilanka.lk/


வீதி விபத்துக்களால் உயிரிழந்தவர்களை
நினைவு கூரும்
சர்வதேச தினம்
2021
வீதி விபத்துகளால் உயிரிழந்தவர்களை நினைவு கூர்வதற்கான சர்வதேச தினமாக நவம்பர் மாதம் 21ஆம் திகதி ஐ.நா சபையினால் 2005ஆம் ஆண்டு அங்கீகரிக்கப்பட்டது.
30 KM/H
REMEMBER
SUPPORT
ACT
ACT
FOR LOW SPEEDS
இந்நிகழ்வு 2021 டிசம்பர் 01ஆம் திகதி
காலை 10.00 மணி முதல் 11.30 வரை மாக்கும்புரயில்
அமைந்துள்ள பல்மாதிரி நிலையத்தில் சுடத்தரணியும்
போக்குவரத்து அமைச்சருமான
கௌரவ திருமதி பவித்ரா வன்னியாரச்சியின்
வழிகாட்டலின் கீழ் வாகன ஒழுங்குபடுத்தல், பஸ் போக்குவரத்து
சேவை இராஜாங்க அமைச்சர்
கௌரவ திலும் அமுனுகமவின்
பங்குபற்றலோடு இடம்பெறும்
குறைந்த வேகத்துக்கான சட்டம்/
குறைந்த வேகத்தில் பயணிக்கும்
வீதிகளுக்கான சட்டங்கள்
வீதி பாதுகாப்புக்கான தேசிய மன்றம்
போக்குவரத்து அமைச்சு

# அரசியல் அரங்கம்

அர்ஜுன்



## பொருளாதார நெருக்கடி நீங்குவதற்கு இராஜாங்க அமைச்சர் கலாநிதி நாளக கொடஹேவா கூறும் ஆலோசனை

# வெளிநாட்டு முதலீடுகளை நாட்டுக்குள் கொண்டு வருவதே உடனடித் தீர்வு

**நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடி நிலைமையிலிருந்து மீள்வதற்கு வெளிநாட்டு முதலீடுகளைக் கொண்டு வருவதே உடனடித் தீர்வு. இது தொடர்பில் 2022 வரவுசெலவுத் திட்டத்தில் கவனம் செலுத்தப்பட்டிருப்பதாக நகர அபிவிருத்தி, கரையோரப் பாதுகாப்பு, கழிவுப் பொருள் அகற்றுகை மற்றும் சமூக துப்புரவேற்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் கலாநிதி நாளக கொடஹேவா தெரிவித்தார். எமக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இவ்வாறு கூறினார்.**

**கே: 2022ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்டம் குறித்த உங்கள் நிலைப்பாடு என்ன?**

பதில்: தற்போதைய நிலைமைகளின் அடிப் படையிலேயே வரவுசெலவுத் திட்டத்தை நாம் பார்க்க வேண்டும். பல்வேறு பிரச்சினை களுடன் இந்த வருடத்தை நாம் ஆரம்பித்தி ருந்தோம். கடந்த வருடத்தில் அரசாங்கத்தின் வருமானம் கணிசமானளவு குறைந்திருந்தது. அரசுக்கு வருமானம் ஈட்டக் கூடிய வழிகள் பல கொவிட்19 தொற்றுநோயால் பாதிக்கப் பட்டன. மறுபுறம் செலவுகள் அதிகரித்தன. நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷ இதை கவனத் தில் கொண்டு வரவுசெலவுத் திட்டத்தை தயா ரித்து அத்தியாவசிய பொருட்களுக்கு மாத்தி ரம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளதுடன், நிதியை குறைப்பதற்கான வழிகளையும் ஏற்படுத்தி யுள்ளார். இந்த வரவுசெலவுத் திட்டத்தில் அவர் இரு அம்சங்களை மிகப் பெரியவில் சாதித்துள்ளார். பல பகுதிகளில் செலவுகள் குறைக்கப்பட்டுள்ளன. அதே சமயம், பொது மக்களுக்கு சுமை ஏற்படாமல் இருக்க நிதிய மைச்சர் மிகுந்த கவனம் செலுத்தி வருகிறார்.

வரிச்சுமையை அரசாங்கம் அதிகரிக்கும் எனப் பலரும் எதிர்பார்த்தனர். ஆனால் அர சாங்கம் சிறப்பு வரிகள் தவிர வேறெந்த வரி யையும் அதிகரிக்கவில்லை. அது மாத்திர மன்றி அவை ஒரு நேரத்தில் அறிவிடப்படும் வரியாகும். மக்கள் மீது அரசு சுமையை சுமத்த வில்லை. நிதியை நிர்வகிப்பதில் அரசாங்கம் கடினமான காலகட்டத்தைக் கடந்து வந்தா லும், மக்கள் மீது சுமையாக இருக்கக் கூடாது என்பதில் மிகவும் கவனமாக இருந்து மக்கள் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும் என்பதில் கவனம் செலுத்துகின்றது. அரசாங்கத்தின் கொள்கை அறிக்கையை நடைமுறைப்படுத் துவதற்காகப் பெருமளவு பணம் ஒதுக்கப்பட் டுள்ளது. உதா ரணமாக, முன்னு ரிமைப் பகுதிகளைப் பார்த்தால் வீதிகள், ரயில் போக்குவரத்த, எரிசக்தி மற்றும் கல்வி போன்ற விடயங்கள் தேர்தல் விஞ்ஞாபனத் தில் குறிப்பிடப்பட்டவையாகும்.

> "எனது அமைச்சில் நகர்ப்புற மேம்பாட்டுக்கான வரவுசெலவுத் திட்டம் நான்கில் ஒரு பங்காக குறைக்கப் பட்டுள்ளது"

**கே: பல்வேறு பொருளாதார நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்துள்ள மக்களுக்கு இந்த வரவுசெலவுத் திட்டம் நிவாரணம் அளிக்கத் தவறியிருப்பதாக எதிர்க் கட்சியினர் குற்றஞ்சாட்டுகின்றனர். உங்கள் நிலைப்பாடு என்ன?**

பதில்: 2015 முதல் 2019 வரையிலான வர வுசெலவு திட்டங்களை அவர்கள் சமர்ப்பித் திருந்தமையால் இந்தக் கேள்வியை எதிர்க் கட்சியிடமே கேட்க வேண்டும். அவர்களின் காலத்தில் பொருளாதார நெருக்கடிகள் அதி கரிக்கவில்லையா? 2019 இல் பொருளாதா ரம் நெருக்கடியில் சிக்கவில்லையா? மக்கள் அவர்களின் வரவுசெலவுத் திட்டத்தினால் மகிழ்ச்சியடைந்திருந்தார்களா? மக்கள் வாழ்க்கைத் தரத்தில் மிகவும் மோசமான நிலைக்குத் தள்ளப்பட்டனர். இன்று அவர் களால் திரும்பிச் சென்று தற்போதைய அர சாங்கத்தை குற்றம் சாட்ட முடியாது. அவர் களின் ஆட்சி தோல்வியடைந்தது. வளமான பொருளாதாரத்தைப் பெற்றுக் கொண்டு அதனைத் தோல்வியடைந்த நிலையில் எம் மிடம் ஒப்படைத்தனர். எனினும், எமது அரசாங்கம் மீண்டு வரும் நிலையில் உள்ளது.

இவ்வாறு குற்றஞ்சாட்டுவதற்கு எதிர்க்கட்சியினருக்கு எந்தவித உரிமை யும் கிடையாது. இரண்டாவதாக அர சாங்கம் எங்கிருந்து பணத்தை ஈட்டிக் கொள்வது? எந்த வருடத்திலும் அர சாங்கத்தின் வருமானத்தில் 90 வீதம் வரியிலிருந்தே கிடைத்தது. மக்களுக்கு நிவாரணங்களை வழங்குவதால் அதற் கான பணம் மக்களிடமிருந்தே ஈட்டப்பட வேண்டும். ஒரு தொகுதி மக்களுக்கு நிவா ரணங்களை வழங்க மற்றுமொரு தொகு தியினர் அதற்கான பணத்தைச் செலுத்த வேண்டும். வரவுசெலவுத் திட்டத்தைப் புரிந்து கொள்ள முடியாத மக்களை திசை திருப்புவதற்கு எதிர்க்கட்சியினர் இவ்வா றான குற்றச்சாட்டுக்களை அடுக்கி வருகின் றனர். நிவாரணம் என்பது பொதுமக்களுக்கு மேலதிக சுமையாக அமையும்.

> "தோல்வியடைந்த பொருளாதாரத்தையே கடந்த ஆட்சியாளர்கள் எம்மிடம் ஒப்படைத்தனர்"

**கே: அரசாங்கத்தின் செலவீனங்களைக் குறைப்பதற்கு இந்த வரவுசெலவுத் திட்டத்தின் ஊடாக அரசு நடவடிக்கை எடுத்துள்ளது எனக் கருதுகின்றீர்களா?**

பதில்: ஆம், நிச்சயமாக, தற்போதைய வரவுசெலவுத் திட்டத்தைப் பார்த்தால், அர சாங்கத்தால் நீக்க முடியாத சில விடயங்கள் உள்ளன. உதாரணமாக, சம்பளத்தை எடுத் துக் கொண்டால் அரசாங்கத்தின் சம்பளச் சட் டத்தை எதுவும் செய்ய முடியாது. இது எமது வருடாந்த செலவீனத்தின் மிகப் பெரிய அங் கமாகும், அதாவது ஒரு ட்ரில்லியன் ரூபாவா கும். இதை விடவும் மற்ற செலவுகளுக்கா கவும் அரசாங்கம் சேமிக்க வேண்டியுள்ளது. எனவே இந்த வரவுசெலவுத் திட்டத்தில் ஏற்கனவே விளக்கப்பட்டுள்ள அமைச்சர் கள் மற்றும் அரசு அதிகாரிகளின் எரிபொரு ளுக்கான கொடுப்பனவு குறைக்கப்பட்டு, பிற அலுவலகச் செலவுகள் பெட்ரோல் ஒதுக்கீட்டைக் குறைத்தல் மற்றும் பிற அலு வலகச் செலவுகள் போன்ற சில பகுதிகளில் பிற செலவுகளைக் குறைக்க அரசு முயற்சித் துள்ளது.

அதேநேரம், அபிவிருத்தியைப் பார்த்தால் குறிப்பிட்ட சில பகுதிகளில் செலவுகள் குறைக்கப்பட்டுள்ளன. வீதிகள், நீர் மற்றும் எரிசக்தி வழங்கல் போன்ற சில அத்தியாவசி யப் பகுதிகள் எங்கள் தேர்தல் அறிக்கையில் உள்ளன. இவ்விடயங்களுக்கான செலவுக ளைக் குறைக்க முடியாது. இருப்பினும், சில விடயப் பரப்புக்களில் குறைப்புக்கள் மேற் கொள்ளப்பட்டுள்ளன. எனது அமைச்சில் நகர்ப் புற மேம்பாட்டுக்கான வரவுசெலவுத் திட்டம் நான்கில் ஒரு பங்காக குறைக்கப்பட்டுள் ளது. ஏனைய பல அமைச்சுக்களிலும் இதே நிலைதான். இது விரும்பத்தக்கதாக இல்லா விட்டாலும் சூழல் அப்படியானதாக உள்ளது.

**கே: தற்பொழுது நிலவும் வாழ்க்கைச் செலவு அதிகரிப்புக்கு தீர்வினை வழங்கும் வகையில் வரவுசெலவுத் திட்டத்தில் எவ்வித யோசனைகளும் முன்வைக்கப்படவில்லையென சிலர் கூறுகின்றனர். இது பற்றி என்ன கூறுகின்றீர்கள்?**

பதில்: நான் ஏற்கனவே குறிப்பிட்டதைப் போன்று டொலர் பிரச்சினை காரணமா கவே சீமெந்து, எரிவாயு மற்றும் எரிபொ ருள் போன்றவற்றின் விலைகளில் அதி கரிப்பு ஏற்பட்டது. இதற்கு சிறந்த தீர்வு வெளிநாட்டு முதலீடுகளை நாட்டுக்குள் கொண்டு வருவதாகும். இதனையே நாம் உடனடியாக மேற்கொள்ள வேண்டும். இதற்கான அடித்தளத்தை வரவுசெலவுத் திட்டம் ஏற்கனவே தீட்டியுள்ளது. கடன்களைப் பெறு வதற்காக அரசாங்கம் வெளிநாட்டு நிறுவனங்கள் மற்றும் வெளிநாட்டு அரசுகளுடன் கலந்துரையாடல்களை ஆரம்பித்துள்ளது. எனவே இதனை விசேடமாகக் குறிப்பிட வேண்டிய தேவை இல்லை.

**கே: கெரவலப்பிட்டிய அனல் மின்நிலையம் தொடர்பில் அமெரிக்க நிறுவனத்துடன் ஏற்படு–த்திக் கொண்டுள்ள ஒப்பந்தம் தொட–ர்பில் அரசாங்கத்தில் அங்கம் வகி–க்கும் பங்காளிக் கட்சிகள் விமர்சித்து வருகின்றனர். அரசாங்கத்திற்குள் முரண்பாடு ஏதும் உள்ளதா?**

பதில்: இது பங்காளிக் கட்சி என்பதை நாம் அனைவரும் ஏற்றுக் கொள்ள வேண்டும். கூட்டணி அரசாங்கத்தில் பல்வேறு மட் டத்திலான பல்வேறு தரப்பினர் இருப்பர். அனைத்துத் தரப்பினரும் ஒன்றிணைந்து ஜனாதிபதியின் தேர்தல் விஞ்ஞாபனத்துக் காக ஒன்றிணைந்தனர். அவர்கள் அனைவ ரும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன என்ற குடையின் கீழ் போட்டியிருந்தாலும், வெவ்வேறு சித்தாந்தங்களைக் கொண்டிருந் தனர். அந்த சித்தாந்தங்கள் தொடர்பில் பேசு கின்றனர். அவர்களுக்கு ஜனநாயக உரிமை உண்டு என்று நினைக்கிறேன். ஆனால் நாள் முடிவில் அமைச்சரவை இறுதி முடிவு எடுக்க வேண்டும். அமைச்சரவை முடிவெ டுத்தால் அதுவே இறுதியானது.

இந்த கூட்டணி கட்சி தலைவர்களும் அமைச்சரவையில் உள்ளனர். பிரச்சினை என்றால் அமைச்சரவையில் போராடி மாற்றிக் கொள்ளலாம். அதைப் பற்றி வெளியே வந்து பேசுவதற்கு அவர்களுக்கு உரிமை இருக்கிறது என்று நினைக்கிறேன். ஆனால் அவர்கள் சில அறிக்கைகளை வெளியிடுவதால் நாங்கள் கருத்து தெரிவிக்க முடியாது. அவர்களில் யாருடனும் நான் சண்டையிடவில்லை. எப்போதும் இரண்டு பக்கங்கள் உள்ளன. இருப்பினும், இந்த கட் டத்தில் முதலீடுகள் தேவை என்பது எனக் குத் தெரிந்த ஒன்று. நாட்டில் நெருக்கடி நில வுகிறது, அதற்கு வெளிநாட்டு முதலீடுகள் தேவை. எனவே, இந்த வெளிநாட்டு முதலீ டுகள் பயனுள்ளவை என்று அரசாங்கம் கரு தினால், அது செவிமடுக்கப்பட வேண்டும் என நான் நினைக்கின்றேன்.




# உல்லாச பயணிகளை கவர்வது அந்நிய செலாவணியை ஈட்டுவதற்கான விரைவான வழிமுறையாகும்

கொவிட் தொற்று காரணமாக சுற் றுலாத்துறை பலவீனமடைந் ததுள்ளது. சமூக இடைவெளி அத்தியாவசியமான காரணியாக காணப்படும் பின்னணியில் பயணங்கள் கட்டுப்படுத்தப்பட்டன. விமான பயணங்கள் மட்டுப்படுத்தப்பட்ட தோடு பரவலைத் தடுப்பதற்காக சட்டங்கள் பிறப்பிக்கப்பட் டன. இவ்வாறான பின்னணியில் சுற்றுலாத்துறை பெரும் பாதிப்படைந்தது. நிலைமை ஓரளவு சுமு கமானால் சுற்றுலாத்துறையில் முன்னேற்றத்தை எதிர்பார்க்கலாம். இலங்கை தனக்கு கிடைக்கும் முதலாவது சந்தர்ப்பத்தில் இது குறித்து முதலில் கவனம் செலுத்துவது நல்லது.

சுற்றுலாத்துறை தரவுகளின் படி கடந்த காலங் களில் இந்தியாவிலிருந்து குறிப்பிட்டளவானோர் இலங்கைக்கு வருகை தந்துள்ளார்கள் 2018 ஆம் ஆண்டு 4 லட்சத்து 25,000 உல்லாச பயணிகள் இந்தியாவிலிருந்து வருகை தந்துள் ளார்கள். சீனாவில் இருந்து வருகை தந்தோரின் எண்ணிக்கை இரண்டு லட்சத்து 60 ஆயிரத் துக்கும் குறைவாகும். பிரித்தானியாவிலிருந்து 2 லட்சத்து 54 ஆயிரம் பேர் வருகை தந்திருந் தார்கள். அதன் பின்னர் 2019 ம் ஆண்டில் அதி களவு உல்லாசப் பிரயாணிகள் இந்தியாவிலிருந்து வருகை தந்திருந்தார்கள். அவர்களின் எண்ணிக் கையானது 3 லட்சத்துஐம்பத்து ஐயாயிரத்தை தாண்டி இருந்தது. பிரித்தானியாவிலிருந்து ஒரு லட்சத்து 88 ஆயிரம் பேர் பேரும் சீனாவிலிருந்து ஒரு லட்சத்து 67 ஆயிரம் பேரும் வருகை தந்ததாக தரவுகள் தெரிவிக்கின்றன. ஈஸ்டர் ஞாயிறு தாக்குத லின் பின்னர் பலவீனம் அடைந்த சுற்றுலாத்துறை ஆரம்பத்தில் இருந்த நிலைமைக்கு இன்னும் மீள வில்லை. 2025ஆம் ஆண்டளவில் 25 லட்சம் உல்லாச பயணிகளை இலங்கைக்கு அழைத்துவர இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தது. அப்போதைய நிலைமையில் அது சிரமமான காரியம் அல்ல வென்பது தெளிவாக தெரிந்த விடயமாகும்.

தற்போது உள்ள கட்டமைப்பின் படி புதிதாக சிந் திக்க வேண்டியுள்ளது. சுற்றுலாத்துறை பொருளா தாரத்திற்கு முக்கிய திருப்புமுனையாகும். வெளி நாட்டு உல்லாசப் பிரயாணிகளின் வருகையை திட்டமிடுவது போல உள் நாட்டவர்களின் பயணத் துக்கும் சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுத்தல் முக்கிய மாகும். அது ஒரு ஆரம்பத்துக்கான அடிப்படையாக அமையும். இந்தியா தங்களது நடைமுறையை மாற்றுவதற்கு முயற்சி செய்து வருகின்றது. ஒரு பில்லியன் தடுப்பூசி செலுத்தும் இலக்கை நிறைவு செய்துள்ளது. அதற்கு இணைந்ததாக நாட்டில் போக்குவரத்தை ஆரம்பித்துள்ளது. புதிய ரயில் பாதைகள், அதிவேக பாதைகள், மற்றும் விமான நிலையங்களை அபிவிருத்தி செய்ய ஆரம்பித் துள்ளது. சுதந்திரம் பெற்ற பின்னர் இந்தியா 74 விமான நிலையங்களை அமைத்துள்ளது. தற்போ தைய பிரதமர் நரேந்திர மோடி கடந்த ஏழு ஆண் டுகளுக்குள் 62 விமான நிலையங்களை அமைத் துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. எதிர்வரும் 7 வருடங்களில் இந்தியா இந்த எண்ணிக்கையை 220 ஆக அதிகரிக்க திட்டமிட்டுள்ளது. சில விமான நிலையங்களை அரசாங்கம் அமைக்கின்றது. சில பகுதிகள் தனியார் பிரிவினரால் அமைக்கப்படுகின் றன. அவற்றை செயற்படுத்தி பின்னர் அரசாங்கத் துக்கு ஒப்படைக்கும் யோசனைக்கு திட்டமிட்டு வரு வதாக தெரிவிக்கப்படுகின்றது.


புதிதாக 21 ரயில் பாதைகள் அமைக்கப் பட்டு அதன்மூலம் இந்தியாவை இணைக்கும் யோசனையை பிரதமர் குடியரசு தினத்தன்று அறி வித்தார். தற்போது புதுடில்லியிலிருந்து புறப்படும் ரயில்களில் நூற்றுக்கு 90 வீதமானவை மின்சார ரயில்கள் ஆகும். இந்திய புகையிரத சேவை மூலம் நாளொன்றுக்கு 23 மில்லியன் மக்கள் தங்களது பயணத்தை மேற்கொள்கிறார்கள்.

விமான சேவைகள் மற்றும் ரயில் சேவைகளை விரிவு படுத்துவதோடு நாடு பூராவும் மின்சாரத் தால் இயங்கும் பஸ்கள், வாடகை வண்டிகள் மற்றும் முச்சக்கர வண்டிகள் சேவையையும் விரி வுபடுத்தி வருகின்றார்கள். தனியார் வாகனங்களை விலைக்கு வாங்கும் போது மின்சாரத்தால் இயக் கப்படும் வாகனங்களுக்கு வரிச் சலுகையும் வழங் கப்படுகின்றது. மின்சாரத் தேவைக்காக நாடு முழு வதும் சூரிய சக்தியை பயன்படுத்தும் திட்டங்களும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. மக்கள்தொகையில் அதி கமானோருக்கு பயணம் செய்வதற்கான சந்தர்ப் பம் ஏற்படுத்தப்பட்டுள்ளதோடு அவர்கள் சுற்றுலா செல்லும் சந்தர்ப்பங்களில் சூழலுக்கு பாதிப்பு ஏற்ப டாத வகையில் மாற்றங்களை ஏற்படுத்தும் முயற் சியிலும் ஈடுபடுகின்றார்கள். பசுமை கொள்கையை விரும்பும் ஐரோப்பிய உல்லாச பயணிகளுக்கு இது சிறந்த தகவலாகும். சூழலை பாதுகாக்க நட வடிக்கை எடுக்கும் நாடுகளுக்கு பயணங்களை மேற்கொள்வதை அவர்கள் விரும்புவார்கள்.

இலங்கையும் கொவிட் 19 ஐ கட்டுப்படுத்த பல நடவடிக்கைகளை எடுத்துள்ளது. தடுப்பூசியை மிக வெற்றிகரமாக வழங்கிய நாடு. வயதானவர் களுக்கான மூன்றாவது டோஸ் தடுப்பு ஊசியை யும் வழங்க நடவடிக்கை எடுத்து வருகின்றது. கொரோனாவை தாங்கக்கூடிய அளவுக்கு மக்கள் சமூகத்தை வேகமாக மாற்றியுள்ளதோடு அதன் பலனையும் வெகுவிரைவில் அடையலாம். அந்நிய செலாவணி நாட்டில் குறைவாக காணப்படும் இவ் வேளையில் சுற்றுலா துறை நாட்டுக்கு பல நன் மைகளை கொண்டு வரும்.

தமிழில்: வீ.ஆர். வயலட்

# ஆபத்தான புதிய வைரஸுக்கு 'ஒமிக்ரோன்' என பெயர் சூட்டல்



தென்னாபிரிக்காவில் முதல் முறையாக கண்டறியப்பட்டுள்ள கொரோனா தொற்று கவலைக்குரிய வகையைச் சேர்ந்ததென உலக சுகாதார நிறுவனம் வகைப்படுத்தியுள்ளது. கிரேக்க எழுத்து முறைப்படி அதற்கு 'ஒமிக்ரோன்' எனவும் பெயரிட்டுள்ளது.

தென்னாபிரிக்காவில் கடந்த 24 ஆம் திகதி முதல்முறையாகக் கண்டறியப்பட்ட புதிய வகை கொரோனா, பாட்ஸ்வானா உள்ளிட்ட அண்டை நாடுகளுக்குப் பரவியுள்ளது. 'பி.1.1.529' என்ற குறியீடு இடப்பட்டுள்ள அந்த வகைக் கொரோனா, இரு தவணை தடுப்பூசி செலுத்திக் கொண்டவர்களையும் தொற்றியுள்ளது. அது, தற்போது மிக வேகமாக பரவும் தன்மை கொண்ட டெல்டா வகை கொரோனாக்களைவிட அதிக தீவிரமாக மனிதர்களிடையே பரவும் என்று அஞ்சப்படுகிறது. இந்தப் புதிய வகை கொரோனா கவலைக்குரிய வகையைச் சேர்ந்ததென உலக சுகாதார நிறுவனத்தின் ஆலோசனைக் குழு வெள்ளிக்கிழமை வகைப்படுத்தியது. கிரேக்க எழுத்து முறைப்படி அதற்கு 'ஒமிக்ரோன்' எனவும் பெயரிட்டது. இந்த வகையானது உலக சுகாதார நிறுவனத்தின் கவலைக்குரிய கொரோனா வகைகளில் முதன்மையானது ஆகும்.

உலக நாடுகள் இதனால் பீதியடைந்துள்ளன. தென் ஆபிரிக்க வகை கொரோனா சர்வதேச நாடுகளுக்கு கலக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. தென் ஆப்பிரிக்கா மற்றும் அதன் 05 அண்டை நாடுகளிருந்து வரும் விமானங்களுக்கு பிரிட்டன் தடை விதித்தது. அந்த அறிவிப்பும் வெள்ளிக்கிழமை அமுழுக்கு வந்தது. தென்னாபிரிக்கா மற்றும் அதன் 07 அண்டை நாடுகளிலிருந்து அமெரிக்கர்கள் அல்லாதோர் அமெரிக்கா வருவதற்கு நவ. 29 முதல் அந்நாடு தடை விதித்துள்ளது.

தென்னாபிரிக்கா வழியாக கடந்த 15 நாட்களில் பயணம் செய்த வெளிநாட்டவர்கள் கனடா வருவதற்கு அந்நாடு தடைவிதித்துள்ளது. கனடாவைச் சேர்ந்தவர்கள் அவ்வாறு வந்தால் 14 நாள்கள் தனிமைப்படுத்திக் கொள்ள வேண்டும் எனத் தெரிவித்துள்ளது. ஜெர்மனியும், வெள்ளிக்கிழமை இரவு முதல் தென் ஆப்பிரிக்காவிலிருந்து பயணிகள் வருவதற்குத் தடை விதிக்கப்படுவதாக அறிவித்தது. அந்த நாட்டில் கொரோனா பலி 01 இலட்சத்தைக் கடந்துள்ளதுடன், தென் ஆப்பிரிக்காவிலிருந்து வரும் பயணிகளில் ஜெர்மனியர்களுக்கு மட்டுமே நாட்டுக்குள் வர அனுமதிக்கப்படுமெனவும் அவர்கள் கொரோனா தடுப்பூசி செலுத்தியிருந்தாலும் செலுத்தியிராவிட்டாலும் 14 நாட்களுக்குத் தனிமைப்படுத்தப்படுவர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## சுகாதாரத் துறைக்கு பணியாற்றிய பிரமுகர்களுக்கு இன்று யாழில் கௌரவம்

வடமாகாணத்தில் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் கொரோணா வைரஸ் பரவல் ஆரம்பித்த காலத்திலிருந்து இன்று வரை தமது உயிர்களை துச்சமென மதித்து நோயாளர்களின் நலன்களைக் காப்பதற்காக முன்னின்று உழைத்து வரும் முக்கியஸ்தர்களை கௌரவிக்கும் விழா இன்று ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணத்தில் நடைபெற உள்ளது.

பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் ஆதரவில் சமூக பிரமுகர் கந்தசாமி கருணாகரன் ஒருங்கிணைப்பில் இந்த விழா நடைபெறவுள்ளது. இவ்விழாவில் வடமாகாண கொவிட் ஒழிப்பு பிரதானியும் யாழ் மாவட்ட இராணுவ கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் ஜகத் கொடிதுவக்கு விசேட அதிதியாக கலந்து கொள்கிறார். இந்த விழாவில் சுகாதாரத் துறைக்கு பணியாற்றிய பலர் கௌரவிக்கப்பட இருக்கிறார்கள். இந்த விழாவில் நடிகர் ரஜினிகாந்த் நடிப்பில் வெளியான அண்ணாத்த படத்தில் ஒரு பாடலுக்கு நாதஸ்வர இசை அமைத்த இசைக்கலைஞரும் கௌரவிக்கப்பட இருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

## தோட்டத் தொழிலாளருக்கு...

கடந்த 2015ஆம் ஆண்டு முதல் ஆயிரம் ரூபா சம்பள அதிகரிப்பைக் கோரி வருகின்றனர். ஆனால் தற்போது நாட்டில் நிலவும் அத்தியாவசிய பொருட்களின் விலை அதிகரிப்பை கவனத்திற் கொண்டு அவர்களுக்கு 2000 ரூபாய் சம்பளத்தைப் பெற்றுக் கொடுப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் சபையில் கேட்டுக் கொண்டார். பாராளுமன்றத்தில் நேற்று பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு உள்ளிட்ட 4 அமைச்சுக்கள் மீதான வரவு செலவுத்திட்ட குழுநிலை விவாதத்தில் உரையாற்றிய போதே சிறிதரன் எம்பி இவ்வாறு தெரிவித்தார்

## பண்டிகைக் காலத்தில்...

சுகாதார வழிகாட்டல்கள் இதற்கு முன்னர் காணப்பட்டதை விடவும் தளர்த்தப்பட்டுள்ளன.

பொதுவாகப் பண்டிகைக் காலங்களில், சிறு குழந்தை முதல் அனைவருக்கும் சமூக ரீதியாகவும், ஆன்மீக ரீதியாகவும் பண்டிகைக் காலத்துடன் தொடர்புடைய தேவைகளை நிறைவேற்றுவதற்கான வாய்ப்பு வழங்கப்படுகிறது. நாட்டின் பெரும்பான்மையான மக்கள் சுகாதார வழிகாட்டல்கள் தொடர்பில் அவதானத்துடன் செயற்பட்டாலும் சிலர் சுகாதார வழிகாட்டல்களைப் பின்பற்றாமல் இருப்பது ஆபத்தான விடயமாகுமென அவர் தெரிவித்துள்ளார். சுகாதார பணியகத்தில் (26) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

## சஹ்ரான் குழுவினருடன் நேரடி...

முஜிபுர் ரஹ்மான் கோரிக்கை விடுத்தார். பாராளுமன்றத்தில் (26) சிறப்புரிமை மீறப்பட்டிருப்பது தொடர்பாக தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

2005 இல் வெளிநாட்டிலிருந்து வந்த நேரம் கையடக்க சிம் அட்டை ஒன்றை பெற்றுக்கொள்ள பல்வேறு ஆவணங்களை சமர்ப்பிக்க வேண்டி இருந்ததால், எனது நண்பன் ஒருவரின் பெயருக்கு சிம் அட்டை ஒன்றை பெற்றுக்கொண்டேன். பின்னர் அதனை எனது பெயருக்கு மாற்றிக் கொண்டேன். அன்று முதல் இன்று வரை அந்தத் தொலைபேசி இலக்கத்தையே பயன்படுத்தி வருகின்றேன்.

எனக்குத் தொலைபேசி இலக்கத்தைப் பெற்றுத்தர உதவிய நபரை பயங்கரவாதத் தடுப்பு விசாரணைப் பிரிவு கடந்த மாதம் 07ஆம் திகதி விசாரணைக்கு அழைத்திருந்தது. அவரிடம் எனது தொலைபேசியிலிருந்து மேற்கொள்ளப்பட்ட தொலைபேசி அழைப்புகள் தொடர்பாக நீண்ட விசாரணை மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது.

இதன்போது அந்த நபர் இந்தத் தொலைபேசி இலக்கத்தை பாவிப்பது பாராளுமன்ற உறுப்பினரென எனது பெயரை குறிப்பிட்டுள்ளார்.

இதன்மூலம் எனது தொலைபேசியிலிருந்து மேற்கொள்ளப்படும் தொலைபேசி அழைப்புகள் ஒட்டுக் கேட்கப்படுகின்றதாகவே தெரியவருகின்றது. இந்த நடவடிக்கையால் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவு எனது பாராளுமன்ற சிறப்புரிமையை மீறி இருக்கின்றது. அதனால் பயங்கரவாத தடுப்புப் பிரிவு விசாரணைப் பிரிவின் பிரதானியை பாராளுமன்ற சிறப்புரிமைக் குழுவுக்கு அழைத்து இதுதொடர்பாக விசாரணை மேற்கொள்ளவேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

## அரசியல் தீர்வினைக் காண...

தாரிக் அஹமட் தெரிவித்துள்ளார்.

பிரிட்டனுக்குச் சென்றுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளரும், பாராளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரனுக்கும் பிரிட்டனின் அமைச்சர் தாரிக் அஹமட்டுக்கும் இடையிலான சந்திப்பின்போதே மேற்கண்டவாறு அமைச்சர் தாரிக் தெரிவித்துள்ளார்.

பிரிட்டனின் வெளிவிவகார அமைச்சருடனான சந்திப்பு, மிகவும் ஆக்கபூர்வமாக அமைந்திருந்தது. அமெரிக்கா, கனடா ஆகிய நாடுகளில் நடைபெற்ற முக்கிய சந்திப்புக்களின் தொடர்ச்சியாகவே இந்தச் சந்திப்பும் நடைபெற்றிருந்தது. இச் சந்திப்பின் போது, இலங்கை அரசாங்கத்தைப் பொறுப்புக்கூறலை செய்ய வைப்பதற்காக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் பிரிட்டன் இணை அனுசரணை நாடுகளின் தலைமையில் 46.1 பிரேரணையை முன்னகர்த்தி நிறைவேற்றியமைக்காக தமிழினத்தின் சார்பில் சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன நன்றிகளை தெரிவித்திருந்தார்.

## சிலிண்டர் வெடிப்பு தொடர்பில் ...

19வயது பெண்ணொருவர் உயிரிழந்துள்ளார். இந்தப் பிரச்சினை தொடர்பாக உடனடியாக கவனம் செலுத்தவேண்டும் என்றும் அவர்கள் கோரினர்.

இதன்போது தொடர்ந்து கருத்துத் தெரிவித்த எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச, இந்த மாதத்தில் இதுவரை 7 இடங்களில் காஸ் சிலிண்டர்கள் வெடித்துள்ளன. அதனால் மக்கள் பெரும் அச்சத்தில் வீடுகளில் வாழ்ந்து வருகின்றனர். மக்கள் வரிசைகளில் காத்திருந்து வாங்கி எடுத்துச் செல்லும் காஸ் சிலிண்டரின் பாதுகாப்பு குறித்து சந்தேகம் ஏற்பட்டிருக்கின்றது.

## பனை அபிவிருத்தி சபையை:...

யாழ்ப்பாணத்திலேயே செயற்படும் என்றும் தெரிவித்த அவர் அபிவிருத்திச் சபை மற்றும் அந்தத் துறையில் பிரச்சினைகள் அல்லது குறைபாடுகள் காணப்படுமாயின் அது தொடர்பில் எமக்கு அறிவித்தால் உரிய நடவடிக்கை மேற்கொள்ளத் தயாராக உள்ளதாகவும் அமைச்சர் சபையில் தெரிவித்தார்

பாராளுமன்றத்தில் நேற்று குழுநிலை விவாதத்தில் உரையாற்றிய சிறிதரன் எம்பி எழுப்பிய கேள்வியொன்றுக்கு பதிலளிக்கும் வகையிலேயே அமைச்சர் ரமேஷ் பதிரண இதனைத் தெரிவித்தார். பாராளுமன்றத்தில் நேற்று பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு மீதான வரவு செலவுத்திட்ட குழுநிலை விவாதத்தில் உரையாற்றிய சிறிதரன் எம்பி,

யாழ்ப்பாணத்தில் செயற்படும் பனை அபிவிருத்திச் சபையை கொழும்புக்குக் கொண்டு வருவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக குறிப்பிட்டதுடன் தமிழ் மக்களின் பாரம்பரியத்தை அடிப்படையாகக் கொண்ட பனை அபிவிருத்தித் துறைச் சார்ந்த பனை அபிவிருத்தி சபையின் தலைவராக ஒரு சிங்கள சகோதரர் நியமிக்கப்பட்டுள்ளமை தொடர்பிலும் சபையில் தமது ஆதங்கத்தைக் குறிப்பிட்டார்.

கித்துள் அல்லது தென்னை அபிவிருத்திச் சபை தெற்கை சார்ந்தது என்பதால் அவற்றுக்கு ஒரு தமிழரை நியமிக்க வேண்டும் என்று நாங்கள் கேட்கவில்லை.

பனை அபிவிருத்திச் சபையில் பணி புரியும் கணக்காளர்கள் மற்றும் அதிகாரிகள் என சிங்களவர்களே நியமிக்கப்பட்டு வருகின்றார்கள். அங்குள்ள உத்தியோகத்தர்கள் மாற்றப்பட்டு வேறு மொழி பேசுபவர்கள் அதற்காக நியமிக்கப்பட்டு வருவதையும் காண முடிகிறது.

எவ்வாறாயினும் மேற்படி சபை வடக்கு கிழக்கை பிரதிநிதித்துவப்படுத்த வேண்டிய ஒன்று. அது தொடர்பில் அமைச்சர் கவனம் செலுத்த வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

அத்துடன் அதற்கு பதிலளித்த பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் ரமேஷ் பதிரன:

அது தொடர்பில் அநீதிகள் ஏற்பட்டிருந்தால் எமக்கு அறிவியுங்கள் பனை அபிவிருத்தி தொடர்பான முதலீடுகள், மற்றும் நடவடிக்கைகள் அந்த மக்கள் சார்ந்ததாக முன்னெடுப்பதற்கு அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஏதாவது சிக்கல்கள் காணப்படுமானால் நாங்கள் அதனைத் தீர்ப்பதற்கு உதவி செய்ய காத்திருக்கிறோம் என்றும் அவர் தெரிவித்தார்.

## திஸ்ஸ குட்டியாராச்சியின்...

ஜனத்தொகை எண்ணிக்கையில் 52 விகிதத்துக்கு அதிகமானோர் பெண்கள் ஆவர். ஆகவே பெரும்பான்மையினரான பெண்களை அவமானப்படுத்தி விட்டு, இலங்கை தேசத்தை கட்டியெழுப்ப முடியாது. பெண்களுக்கு எதிரான ஒடுக்குமுறைகளைக் கண்டிக்க இன, மத, மொழி, அரசியல் பேதங்களைகளை மறந்து ஒன்றுபடுவோம் என ஜனநாயக மக்கள் முன்னணி, தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர், கொழும்பு மாவட்ட எம்பி மனோ கணேசன் கூறியுள்ளார். இதுபற்றி மனோ எம்பி மேலும் கூறியுள்ளதாவது,

எமது சக பாராளுமன்ற உறுப்பினர் ரோகிணி குமாரி விஜேரத்னவுக்கு எதிராக பெண்ணின வெறுப்பு மற்றும் அருவருக்கத்தக்க கருத்துகளை, அரசு தரப்பு எம்பி திஸ்ஸ குட்டியாராச்சி பகிரங்கமாக சபையில் பிரயோகித்துள்ளார். இந்நாட்டுப் பெண்களை அவமானப்படுத்தும் முகமாக சபையில் சொல்லப்பட்ட இக்கருத்துகளை, பாராளுமன்ற பெண்கள் ஒன்றிய அமைப்பின் தலைவர் ராஜாங்க அமைச்சர் சுதர்ஷனி பெர்ணாண்டோபிள்ளை மற்றும் எதிரணி எம்பி தலதா அதுகோரள ஆகியோர், அரசு, எதிரணி பேதங்களுக்கு அப்பால் சென்று கடுமையாகக் கண்டித்து தமது உரிமைக் கோரிக்கைகளைமுன்வைத்துள்ளனர். மாத்தளை மாவட்ட எம்பி ரோகிணி குமாரி விஜேரத்ன உரிமை கோரிக்கை எழுப்பி, தன்னையும், இந்நாட்டு பெண்களையும் நிமிர்ந்து நின்று மகிமைப்படுத்தியுள்ளார்.

அருவருக்கதக்க விதத்தில், பெண்களை அவமானப்படுத்துவதும் பின்னர் அவற்றை விளையாட்டு, கேலி, கிண்டல், அரசியல் என்ற பெயர்களில் மூடி மறைப்பதும், நமது சமூகத்தில் வழமையாக நடைபெறுகிறது. இதுவே அன்று அரசு தரப்பு எம்பி திஸ்ஸ குட்டியாராச்சி வாயில் இருந்தும் பாராளுமன்ற சபையில் வெளிப்பட்டது.

## சந்தையிலுள்ள சிலிண்டர்கள்...

அமைச்சர் மேலும் குறிப்பிட்டதாவது, இந்தப் பிரச்சினையை தீர்க்க நாம் எடுத்துள்ள நடவடிக்கைகளுக்கு மேலதிகமாக ஏதும் யோசனைகள் வருமானால் அதனை ஏற்கத் தயாராக இருக்கிறோம். ஆனால் சகல நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளது. இந்த சிக்கல் நிலை ஏற்பட பிரதான காரணம் சில மாதங்களுக்கு முன்னர் 18 லீட்டர் சமையல் எரிவாயு சந்தைக்கு அறிமுகம்செய்தது.

அதனை அகற்ற நாம் பணித்தோம். 12.5 கிலோ சமையல் எரிவாயு சிலிண்டர்களில் புரகேன் 30 வீதமும் பூதேன் 70 வீதமும் இருந்தது. இதனை மாற்றி புரகேன் 50 வீதமும் பூதேன் 50 வீதமும் மாற்றி எரிசக்தி அளவை அதிகரிக்க முடியுமென லிட்ரோ நிறுவனம் அறிவித்தது. அது தொடர்பில் சமையல் எரிவாயு தரம் பற்றி அறிய எந்த அரசும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. மொரட்டுவ பல்கலைக்கழகத்துடன் பேசி இது பற்றி கணிப்பீடு செய்தது. 12.5 கிலோ சமையல் எரிவாயு சிலிண்டரை 18 லீட்டராக மாற்றுவதால் எரிசக்தி அளவு அதிகரிக்காது. அதில் 9.5 கிலோ எரிவாயுவே இருக்குமென அறிவிக்கப்பட்டது.

நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபை இரண்டு சமையல் எரிவாயு நிறுவனங்களுக்கும் எதிராக வழக்குத் தொடர்ந்தது. அதற்கமைய சந்தையில் உள்ள 18 லீட்டர் சமையல் எரிவாயு சிலிண்டர்கள் அகற்றப்பட்டன. 12.5 கிலோ 5 கிலோ மற்றும் 02 கிலோ சிலிண்டர்களே சந்தையிலுள்ளன. 30 க்கு 70 என்ற அளவிலே எரிவாயு உள்ளடக்கப்பட்டுள்ளது.

இரு நிறுவனங்களினதும் எரிவாயு மாதிரிகள் பெறப்பட்டு ஆய்வு செய்யப்பட்டுள்ளது. அதன் அறிக்கைகள் (27) கிடைக்க இருக்கிறது.

நாளை திங்கட்கிழமை இது தொடர்பில் பாராளுமன்றத்திற்கு அறிவிப்போம்.

நாட்டில் சமையல் எரிவாயு தொடர்பான பிரச்சினை உள்ளது. உலகில் சமையல் எரிவாயு தொடர்பான விபத்து நடக்கிறது. எமது நாட்டிலும் 10 முதல் 20 வரை விபத்து நடக்கிறது.

லாப் நிறுவன சமையல் எரிவாயு சிலிண்டர்கள் கடந்த 05 வருடத்தில் 23 தடவைகள் அனர்த்தத்திற்குள்ளாகியுள்ளன. இது தொடர்பில் விசாரணை நடைபெற்றது. இன்றும் விபத்துகள் நடைபெறுகின்றன. சிலிண்டருக்கும் ரெகுலேட்டருக்கும் குழாய்க்கும் தரம் நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

பாவனையாளர் பாதுகாப்புத் தொடர்பில் நீண்டகாலமாக பிரச்சினை உள்ளது. நாட்டுக்கு வரும் 07 ஆயிரத்திற்கும் அதிகமான பொருட்களில் 1,200 வரையான பொருட்களின் தரமே பரீட்சிக்கப்படுகிறது.

மொறட்டுவ பல்கலைக்கழக நிபுணர்கள் வெளிநாட்டு நிபுணர்களுடன் இணைந்து இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளன. துறைமுகத்தில் ஏற்றும் நாட்டில் சான்றிதழ் விநியோகிக்கப்படுகிறது. சமையல் எரிவாயு அனுப்பும் நிறுவனங்களை இங்கு பதிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தரநிர்ணய சபை பகுப்பாய்வு திணைக்களம் என்பன ஆய்வு செய்து வருகின்றன.

## 6 நாடுகளின் பயணிகளுக்கு ...

நமீபியா, சிம்பாப்வே, போட்ஸ்வானா, லெசோத்தோ மற்றும் எசுவாத்தினி ஆகிய 06 நாடுகளிலிருந்தே இவ்வாறு நாட்டுக்கு வருகைத் தர தடை விதிக்கப்பட்டுள்ளது. இந்தத் தடை எதிர்வரும் 14 நாட்களுக்கு விதிக்கப்பட்டுள்ளதாக சிவில் விமான சேவைகள் அதிகார சபை குறிப்பிடுகின்றது.

## அரசிலிருந்து ஒருபோதும்...

செயற்பாடுகளின் காரணமாக, சபையிலிருக்கும் 225 பேரும் அவமதிக்கப்படுவதாக அவர் மேலும் சுட்டிக் காட்டியுள்ளார்.

அவ்வாறான ஒருவர் பாராளுமன்றத்தில் பெண் பிரதிநிதி ஒருவரை அவமதிக்கும் வகையில் செயற்பட்டமை நாட்டிலுள்ள ஒட்டுமொத்த பெண் பிரதிநிதிகளையும் அவமதிப்பதாகவே நான் கருதுகிறேன்.

ஒருசிலரின் முறையற்ற செயற்பாடுகளினால் மக்களுக்கு பாராளுமன்றம் மீது வெறுப்பு ஏற்பட்டுள்ளது. இவ்வாறான செயற்பாடுகளினால் மாத்திரமின்றி பாராளுமன்றம் சர்வதேச மட்டத்திலும் அவமதிப்புக்குள்ளாகின்றது.

தற்போது பொய் கூச்சலிடுபவர்களே 2015ஆம் ஆண்டு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை ஜனாதிபதி பதவியிலிருந்து வெளியேற்றினார்கள். அவர்களே 2015ஆம் ஆண்டு மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கம் தோல்வி அடைந்ததற்கும் காரணம். தற்போதும் அதற்கே முயற்சிக்கிறார்கள். அவர்கள் ஜனாதிபதியையும் அரசாங்கத்தையும் சிக்கலுக்குள்ளாக்கவே முயற்சிக்கிறார்கள் என்பது எங்களுக்குத் தெளிவாக தெரிகிறது என்று குறிப்பிட்டுள்ள்ளார்.

1994 ஆம் ஆண்டு நான் பாராளுமன்றப் பிரதிநிதியாக தெரிவானேன். அன்றிலிருந்து இதுவரையில் இவ்வாறானதொரு நிலையை நான் சந்தித்தது இல்லை. நான் பாராளுமன்றத்துக்கு வந்த ஆரம்பப் பகுதியில் பாராளுமன்ற உறுப்பினர்கள் சபாநாயகருக்கு பெரும் மதிப்பை வழங்கினர். வார்த்தைகளில் கூட அவருக்கு அவமதிப்பை ஏற்படுத்தி விடக்கூடாதென்று வார்த்தைகளை பயன்படுத்தும்போது மிகவும் அவதானத்துடன் செயற்படும் நிலைமையே அன்று காணப்பட்டது.

## அரச நிறுவனங்களின்...

பொருட் கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் இந்திக அனுருத்த இதன்போது நோக்கத்தை தெளிவுபடுத்தியதுடன், அமைச்சின் செயலாளர் சிறிநிமல் பெரேரா இதுவரையான முன்னேற்றத்தின் சுருக்கத்தை முன்வைத்தார்.

தேசிய வீடமைப்பு அதிகாரசபை, வரையறுக்கப்பட்ட கட்டடப் பொருட்கள் கூட்டுத்தாபனம், கட்டடப் பொருட்கள் திணைக்களம், அரசாங்க தொழிற்சாலைகள் திணைக்களம், நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை, அரச பொறியியலாளர் கூட்டுத்தாபனம், தேசிய உபகரணங்கள் மற்றும் இயந்திர அமைப்பு மற்றும் ஓஷன்விவ் அபிவிருத்தி தனியார் நிறுவனங்களின் முன்னேற்றம் தொடர்பில் அந்தந்த நிறுவனத் தலைவர்கள் பிரதமருக்கு விளக்கினர்.

பாதி கட்டி முடிக்கப்பட்ட 72,000 வீடுகளில் மேலும் கட்டி முடிக்கப்பட வேண்டிய 40,723 வீடுகளுக்காக ஆண்டுதோறும் 500 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடுகளைப் பெற்றுக் கொள்ளல்,

மாதுலுவாவே சோபித தேரர் கிராமத்தில் எஞ்சிய 31 வீடுகள் மற்றும் அத்தியவசிய பணிகளை நிறைவுசெய்வதற்கு 112 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு பெறல் உள்ளிட்ட அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்கள் பெற்றுக்கொண்ட கடன்களுக்கு சம்பந்தப்பட்ட வங்கிகளிடம் இருந்து நிவாரணம் பெறுவது உள்ளிட்ட பல விடயங்கள் குறித்து கூட்டத்தில் கவனம் செலுத்தப்பட்டது.

இந்த சவாலான காலங்களில் பணிகளை இடைநிறுத்த இடமளிக்கக் கூடாதெனத் தெரிவித்த பிரதமர், பேச்சுவார்த்தை மூலம் தேவையான முடிவுகளை துரிதப்படுத்தி உரிய பணிகளை சட்டப்படி முறையாக நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை முன்னெடுக்க வேண்டுமென அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

நிறுவனங்கள் இணைந்து முன்னெடுக்கும் திட்டங்களில் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு அனைத்து நிறுவனங்களின் ஆதரவைப் வழங்குவது அவசியமாகும்.

சந்தையில் டைல்ஸ் தட்டுப்பாடு ஏற்பட்ட போது அரச நிறுவனங்கள் செயற்பட்ட விதத்திலேயே சீமெந்து மற்றும் கம்பிகளை தட்டுப்பாடின்றி பெற்றுக் கொடுப்பது தொடர்பிலும் கவனம் செலுத்துங்களென பிரதமர் குறிப்பிட்டார்.

## நடமாடும் சேவை...

வழங்கியுள்ளமைக்கமைவாக இந்த நடவடிக்கை ஆரம்பிக்கப்படவுள்ளது. 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான பூஸ்டர் தடுப்பூசி வழங்கும் நடவடிக்கை ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ள போதும் இதனை நடமாடும் சேவையூடாக நாடு முழுவதும் வழங்க நடவடிக்கை எடுக்குமாறே ஜனாதிபதி அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

மூன்றாவது பூஸ்டர் தடுப்பூசியாக பைஸர் தடுப்பூசியே வழங்கப்பட்டு வருகிறது. முதலாவது, இரண்டாவது தடுப்பூசிகள் சீன மற்றும் இந்திய, ரஷ்ய தயாரிப்புகளாக இருப்பினும் 03 ஆவது பூஸ்டர் தடுப்பூசியாக பைஸர் தடுப்பூசிகளே வழங்கப்பட்டு வருகிறது.

ஏற்கனவே இரண்டு தடுப்பூசிகளும் பெற்றுக்கொண்டவர்களுக்கு பூஸ்டர் தடுப்பூசி செலுத்தப்படுவதற்கான அறிவித்தல் அவர்களது கையடக்கத் தொலைபேசிகளுக்கு குறுஞ் செய்திகளாக அனுப்பப்பட்டும் வருகிறது.

வைத்தியசாலைகளுக்கு கிளினிக் செல்லும் 60 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும், அந்த சிகிச்சை நிலையத்தில் வைத்தே இந்த பூஸ்டர் தடுப்பூசியை வழங்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## நாட்டை முன்னேற்றுவதற்காக...

பொருளாதார நிவாரணங்களை வழங்க முடிவதோடு, நாட்டைப் பற்றி சிந்தித்து புரிந்துணர்வுடன் செயற்படுமாறு தாம் அனைவரிடமும் கேட்டுக்கொள்வதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் ஏற்றுமதியாளர்களுக்கு கிடைக்கக்கூடிய உயர் மற்றும் தனித்துவமான விருது இதுவாகும்.

ஏற்றுமதித் துறையின் வளர்ச்சிக்காக உயரிய பங்களிப்பை வழங்கிய ஏற்றுமதியாளர்களுக்கு இந்த விருது வழங்கப்படுவதாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

## ஆறாத் துயரத்தைத் தந்த... 05ஆம் பக்க தொடர்...

ஆனால் இதற்கு பின்வரும் நிபந்தனைகள் விதிக்கப்பட்டிருந்தன.

1. குறித்த சேவையின் போது பாதுகாப்பு நியமங்கள் கட்டாயம் பின்பற்றப்பட வேண்டும்

2. குழந்தைகள், பாடசாலை சிறுவர்களுக்கு இலவசமாக சேவையை வழங்க வேண்டும்

3. படகினது உறுதிப்பாடு குறித்து அவ்வப்போது சோதித்தல் அவசியமானது.

இந்த விதிமுறைகள் பின்பற்றப்பட்டி ருக்கின்றதா என பொதுமக்கள் கேட்கின்றனர். இவர்களின் கேள்வியில் நியாயம் இருக்கின்றது.

நான்கு பிளாஸ்டிக் வள்ளங்களை இணைத்து அதன் மேலே பலகை போடப்பட்டு இந்த படகு தயாரிக்கப்பட்டிருக்கிறது.

இதை தயாரித்தவர் ஒரு சாதாரண நபர். பொறியியல் தொழில்நுட்ப அறிவோடு கட்டப்பட்ட படகு அல்ல. எனவேதான் படகின் தர உத்தரவாதம் தொடர்பான பிரச்சினை படகு அனர்த்தத்திற்கு காரணமாக இருக்கின்றது என்று கூறுகின்றனர்.

அடுத்து, இந்த பால நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கும் போதே மாற்று வழி ஒன்றின் தேவை குறித்து பல்வேறு தரப்பினரிடமிருந்து ஆரம்பத்திலிருந்தே கருத்துக்கள் முன்வைக்கப்பட்டு வந்திருக்கின்றன. பாராளுமன்றத்திலும் இது குறித்து கருத்துக்கள் பலமுறை தெரிவிக்கப்பட்டிருந்தன.

அபிவிருத்தி குறித்து கவனம் செலுத்திய அதிகாரிகள், அரசியல்வாதிகள், இவ்வாறான அபிப்பிராயங்களை அலட்சியப்படுத்தியதன் விளைவே இந்த படகு அனர்த்தம் ஏற்பட காரணம் என பலரும் தற்போது பேசிக்கொள்கின்றனர்.

எனவே எந்தவொரு திட்டத்தின் போதும் மக்களுடைய கருத்துக்களை உள்வாங்கி அதற்கேற்றவாறு திட்டங்களை வகுத்து அனைத்து மக்களுக்கும் பிரயோசனம் தரக்கூடிய வகையில் அதனை அமைப்பதே பொருத்தமானதாகும்.

மாறாக திட்டங்களைத் தயாரித்து அதனை மக்கள் மீது திணிக்கின்ற ஒரு நிலைமை மிகவும் அபாயகரமானது என்பதை இந்த அனர்த்தம் ஒரு படிப்பினையாக புகட்டியிருக்கின்றது.

# ஆறாத் துயரத்தைத் தந்த கிண்ணியா படகு விபத்து!!



## படகு அனர்த்தத்திற்கு காரணமானவர்கள் யார்?





கிண்ணியா மத்திய நிருபர்
கியாஸ் ஷாபி

"எனது இரண்டு பிள்ளைகளும் பாடசாலை செல்லும்போது கைகளை இறுகப் பற்றியவாறு சந்தோசமாக சகோதரப் பாசத்தோடு செல்வார்கள். அன்றைய நாளும் அவ்வாறே இணை பிரியாது சென்றனர்.

அவர்கள் மரணித்து ஜனாஸாவாக மீட்கப்பட்டபோதும் இருவரும் கட்டியணைத்த படியே இருந்தார்கள்.

எங்களது மூத்த மகள் பாத்திமா ஷிரீன் நல்ல கெட்டிக்காரி. ஒரு நாள் கூட நான் பாடசாலைக்கு செல்வதற்கு அந்த பிள்ளையை நான் எழுப்பியது கிடையாது. தானாகவே எழுந்து தானாகவே கடமைகள் எல்லாம் முடித்துவிட்டு பாடசாலைக்குச் செல்வது வழக்கம்.

நன்றாகப் படித்து நான் ஒரு நாள் வைத்தியராக வருவேன் வாப்பா என்று மூத்த மகள் அடிக்கடி கூறிக் கொள்வார்" என்று கூறினார் இரண்டு பெண் பிள்ளைகளையும் படகு விபத்தில் இழந்த அபூபக்கர் முபாஸ்.

8 வயதான பாத்திமா ஷிரீன் மற்றும் 6 வயதான பாத்திமா அஹிலா ஆகிய இரு சகோதரிகளும் இந்த விபத்தில் உயிர் பிரிந்திருக்கிறார்கள்.

" என்னா ... பின்னே சுகமா.. மறா என்னா சொல்லுங்களேன்.... சொல்லுங்களேன்.... என்ன செய்றீங்க.... நாங்கள் இரிச்சம். பாதை எல்லாம் வேலை செய்யிது. இனி அதில் பள்ளிக்கூடத்துக்கு போவோம். திரும்பவும் லொக்டவுன் போடுவாங்களா.... நாங்கள் போயிட்டு வாரோம்....... "

இரண்டு தினங்களுக்கு முன்னர் பாடசாலைக்குப் போகும் மகிழ்ச்சியில் தந்தையின் போனை எடுத்து, அந்தப் பிள்ளைகள் இருவரும் கட்டிலில் படுத்தவாறு எடுத்துக் கொண்ட வீடியோ பதிவிலே தானாக இருவரும் மேற்கண்டவாறு பேசியிருக்கிறார்கள்.

இந்த வீடியோவை எங்களிடம் காட்டி, "இழப்பை ஈடு செய்ய முடியாத வலியோடு, இறைவனின் நாட்டப்படி சென்றுவிட்டார்கள்" என்று அழுதவாறு கூறினார் அந்த பிள்ளைகளின் தாயார்.

இந்த இரு சகோதரிகளும் படகு கவிழ்ந்த இடத்தில் இருந்து சுமார் 200 மீட்டர் தூரத்தில் உள்ள அல் அஸ்கர் வித்தியாலயத்துக்கு செல்பவர்கள். இவர்களை தாயார் குறிஞ்சாக்கேணி இறங்கு துறைக்கு அழைத்து வந்து படகில் ஏற்றி விட்டு, மீண்டும் வீட்டை அடைவதற்கு முன்னர், அதாவது 10 நிமிடங்களுக்குள் அந்தப் படகு கவிழ்ந்த செய்தியானது அந்தத் தாய்க்கு எட்டியிருக்கின்றது. இந்த நிலையை அந்த தாயால் எப்படித் தாங்கிக் கொள்ள முடிந்திருக்கும்?

இந்தப் படகு விபத்தில் மேலும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தாயும் அவரது பிள்ளையும் உயிரிழந்ததோடு, இதே குடும்பத்தைச் சேர்ந்த ஆறு வயதான மற்றொரு ஆண் பிள்ளை ஒன்றும் படுகாயங்களுடன் உயிர்தப்பி கிண்ணியா தள வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளது.

30 வயதான பாத்திமா சப்ரினா என்ற இந்த தாயும் இவரது மூன்றரை வயதான மகன் சேகு சஹி என்பவரும் இந்த அனர்த்தத்தில் உயிரிழந்துள்ளனர்.

பாத்திமா சப்ரினா ஒரு முன்பள்ளி ஆசிரியை. தனது பிள்ளைகள் இருவரையும் வழமைபோன்று அன்றைய தினமும் தான் கடமை புரிகின்ற முன்பள்ளிக்கு கொண்டு சென்றபோதே, இந்த படகு அனர்த்தம் ஏற்பட்டு இருக்கிறது.

படகு கவிழும் போது, இரு பிள்ளைகளையும் இவர் கட்டியணைத்தபடி இருந்ததை கரையில் சற்று தூரத்தில் பார்த்து, இவர்களை காப்பாற்ற ஓடி வந்த மக்கள் சிந்திய கண்ணீர் காட்சியை எவ்வாறு சொல்வது?

பாதை கவிழ்ந்து சில நிமிடங்களில், தனது 5 வயதான மகளை கரைக்கு கொண்டு வந்து உயிரை காப்பாற்றிவிட்டு, மீண்டும் அந்தத் தாய் தனது மூன்றரை வயதான மகனை காப்பாற்றச் சென்று , உயிர் பிரிந்து சடலமாக மீட்கப்பட்ட காட்சியை யாரும் இலகுவாக மறந்து விட முடியாது.

இதைவிட துயரம் என்னவென்றால் அந்தத் தாயும் பிள்ளையும் கட்டி அணைத்தவாறு இருந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டமையாகும்.

குறிஞ்சாக்கேணியைச் சேர்ந்த ஒரு தாயும் மகனும் இந்த விபத்தில் சிக்குண்ட பரிதாபம் ஊரையே சோகமயமாக்கியது.

மூன்று பிள்ளைகளின் தாயான 39 வயதான முகம்மது சக்கரியா தாஜிஸா என்ற இந்தத் தாய், தனது 6 வயது நிரம்பிய இளைய மகனான பரீஸ் பஹியை வழமை போன்று அன்றைய தினமும் படகில் ஏற்றி முன் பள்ளிக்கு அழைத்துச் சென்ற வேளையிலேயே அனர்த்தம் ஏற்பட்டிருக்கின்றது.

இந்த பிள்ளையும் உயிரிழந்த நிலையில் மீட்கப்பட்டது. தாய் தலையில் பலத்த காயங்களுடன், மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி வைத்தியசாலைக்கு கிண்ணியா தள வைத்தியசாலையில் இருந்து உடனடியாக அனுப்பிவைக்கப்பட்டார். இந்த கட்டுரை எழுதும் போது கூட இவர் சாதாரண நிலைக்கு திரும்பவில்லை என்று வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

நீண்ட காலமாக வெளிநாட்டில் வேலை புரிந்த இவரது கணவர், வைத்தியசாலையில் இருக்கின்ற தனது மனைவியை பார்க்க வேண்டும் என்ற ஆவலோடு, பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் கடந்த வியாழக்கிழமை(25) நாடு திரும்பி இருக்கிறார்.

மேலும், இந்தப் படகில் தனது பேரப் பிள்ளையை முன் பள்ளிக்காக அழைத்துச் சென்ற 70 வயதான சேக் அப்துல் காதர் என்பவர் படகு கவிழ்ந்த இடத்திலிருந்து உயிர் பிரிந்த நிலையில் மீட்கப்பட்டார்.

இவர் கூட்டிச் சென்ற 5 வயதுடைய பேரப் பிள்ளை உயிருடன் காப்பாற்றப்பட்டு, கிண்ணியா தள வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டார் .

வைத்தியசாலையில் அப்பா..... அப்பா..... என்று அழுது கொண்டிருந்த இந்தப் பிள்ளையின் ஏக்கத்தையும் துயரத்தையும் எப்படி சொல்லுவது?

இவ்வாறு எந்தப் பாவமும் அறியாத நான்கு பிள்ளைகளோடு, ஆறு உயிர்களை இந்த விபத்து பலி எடுத்திருக்கின்றது. மேலும் 11 மாணவர்கள் பாதிப்புக்கு உள்ளாகி உயிர் தப்பியிருக்கிறார்கள். இந்த ஆறாத்துயரில் இருந்து இன்னும் மீளமுடியாமல் ஊர் உறங்கிக் கொண்டிருக்கின்றது.

இந்தப் படகில் தனது மகளை முன் பள்ளிக்கு அழைத்துச் சென்று உயிர்தப்பிய எம். ஆர்.பஸீர் ஆசிரியர் விபத்து குறித்து தனது அனுபவத்தை இவ்வாறு பகிர்ந்து கொண்டார்.

"அன்றைய தினம் இதில் பயணித்தவர்கள் பெரும்பாலும் மாணவர்களாகவே இருந்தார்கள்.15 பேர் அளவில் இருக்கும் என நினைக்கிறேன். என்னோடு சேர்த்து ஐந்து பெரியவர்கள் இருந்தார்கள்.

நான் எனது மகளோடு மோட்டார் சைக்கிளில் அமர்ந்திருந்த போது, ஆற்றின் ஆழமான பகுதியை படகு நெருங்கியதும் எனது வலது பக்கமாக படகு சாயத் தொடங்கியது. அப்போது செய்வதறியாது மோட்டார் சைக்கிளை விடுத்து, எனது பிள்ளையை இறுகக் கட்டி அணைத்துக் கொண்டேன். சில நிமிடங்களில் எல்லோரும் படிப்படியாக ஆற்றினுள் சாய்ந்து விழ ஆரம்பித்தோம்...... என்று இந்த பரிதாப நிலையை தெரிவித்தார்,

கரைக்கு நீந்திச் சென்று தனது பிள்ளையின் உயிரைக் காப்பாற்ற கடும் பிரயத்தனம் செய்ததாகவும் அவர் சொன்னார்.

ஊரை மாத்திரமன்றி தேசத்தையே ஆறாத் துயரத்தில் ஆழ்த்திய இந்த படகு விபத்து குறித்து பல்வேறு வகையிலும் பலவாறான கருத்துக்கள் தற்போது முன்வைக்கப்பட்டு வருகின்றன.

இந்த பாலம் கிண்ணியா நகர சபையையும் கிண்ணியா பிரதேச சபையும் இணைக்கின்ற பாலமாகும். இது 1977 ஆம் ஆண்டு கட்டப்பட்டது. பழமை வாய்ந்த இந்த பாலம் பல வருடங்களாக போக்குவரத்துக்கு உகந்ததல்லாத இடிந்து விழும் நிலையில் இருந்தது.

இதனால் இதனை புனரமைத்து தருமாறு காலாகாலமாக அந்தப் பிரதேச மக்கள் கவனயீர்ப்பு போராட்டங்களையும், கோரிக்கைகளையும் முன்வைத்து வந்திருந்தனர்.

இந்த நிலையில் தற்போதைய அரசாங்கம் இதற்கான நிதியை ஒதுக்கீடு செய்திருந்தது. திருகோணமலை வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பொறியியலாளர் மேற்பார்வையின் கீழ், 226.7 மில்லியன் ரூபா செலவில் மீள் கட்டுமானப் பணிகள் 2021.04.22 திகதி முதல் ஆரம்பிக்கப்பட்டன. ஒப்பந்த காலம் 245 நாட்களாகும்.

இந்தப் பால கட்டுமான பணிகள் ஆரம்பிக்கப்பட்டு அனர்த்தம் நிகழ்ந்த அன்றுடன் சுமார் 215 நாட்களை கடந்துள்ளன. ஆனால் இன்னும் பத்து வீதமான கட்டுமான பணிகளும் நடைபெறவில்லை. இந்தத் தாமதமும் இந்த அனர்த்தம் நிகழ்ந்ததற்கான காரணங்களில் ஒன்று என பொதுமக்கள் கூறுகின்றனர்.

இதேவேளை, பாலம் குறித்த காலத்தில் நிர்மாணிக்கப்படாமை குறித்து விசாரணைகள் துரிதப்படுத்தப்பட்டிருப்பதாகவும் 6 முதல் 9 மாதங்களுக்குள் காலத்தைப் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகவும் கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை பணிப்பாளர் எஸ். வி. வீரக்கோன் தெரிவித்தார்.

பாலம் குறித்த காலத்தில் நிர்மாணிக்கப்படாமைக்கு ஒப்பந்தகாரரின் பலவீனமே காரணம் என்றும் வேறொரு ஒப்பந்தக்காரரிடம் கையளித்து நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு இருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இந்தப் படகை செலுத்துவதற்கு அனுமதி வழங்கியது யார் என்ற ஒரு கேள்வியும் பொதுமக்கள் எழுப்புகின்றனர்?

ஆற்றில் கவிழ்ந்த படகு சேவைக்கு 2021.10.28 ஆம் திகதி கிண்ணியா நகர சபை தவிசாளர் பெரியார் டு முனையை சேர்ந்த எம். ஏ. எம். றியாஸ் என்பவருக்கு அனுமதி வழங்கியுள்ளார்.

தொடர் 04ஆம் பக்கம்...

**தனது குழந்தையை இறுகப் பிடித்தவாறு மீட்கப்பட்ட தாயின் ஜனாஸா!!!!**

**கைகளை இறுகப் பிடித்தவாறு மீட்கப்பட்ட இரு சகோதரிகளின் ஜனாஸாக்கள்!!!!**









தினகரன் வாரமஞ்சரி
THINAKARAN VAARAMANJARI

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429294, 2429296
பெக்ஸ் : 2429329

பிலவ வருடம் கார்த்திகை மாதம் 12ம் நாள் ஞாயிற்றுக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1443 ரபீஉனில் ஆகிர் பிறை 22

# உரத்துக்கு மானியம் வழங்க வேண்டும்

கடந்த ஏழு மாதங்களாக நீடித்த விவசாயிகளின் போராட்டம் முடிவுக்கு வந்திருப்பது மகிழ்ச்சி அளிப்பதாக உள்ளது. மனிதனுக்கும் மண்ணுக்கும் கேடு விளைவிக்கும் இரசாயன பசளை மற்றும் கிருமி நாசினிகளின் பாவனைக்குத் தடை விதித்து இயற்கை பசளையை மீளவும் அறிமுகம் செய்யும் திட்டத்தை அரசு அறிவித்ததையடுத்தே கோட்பாடு வேறு நடைமுறை வேறு என்று தெரிவித்த விவசாய பெருங்குடியினர் தமது அடுத்த நெல் விவசாயத்துக்கும் மரக்கறி செய்கைக்கும் இரசாயன பசளையின் அவசியத்தை வலியுறுத்தி ஆவேசமான போராட்டங்களை நாடெங்கும் மேற்கொண்டனர். இப்போராட்டங்கள் வரவரத் தீவிரமடைந்தன. ஒரு கட்டத்தில் எதிர்க்கட்சி தரப்பினரின் ஆசியோடும் இவை உக்கிரமடைந்தன.

இலங்கை ஒரு விவசாய நாடு. நெல்லரிசி சோறு உண்பது இலங்கையரின் பாரம்பரியம். எமக்கான அரிசியையும், காய்கறிகளையும் நாம் அப்போதிருந்தே உள் நாட்டிலேயே உற்பத்தி செய்து வந்துள்ளோம். அந்நியராட்சிக்குள் நாடு சென்ற பின்னர்தான் உள்ளூர் விவசாயம் வீழ்ச்சி அடையத் தொடங்கியது. காலனித்துவ நிர்வாகிகளுக்கு இலங்கை மக்களின் உணவு தன்னிறைவில் எந்த அக்கறையும் இருக்கவில்லை. அவர்கள் வந்தது அவர்களுக்கான ஏற்றுமதிப் பயிர்களை வளர்க்கவும் ஏற்றுமதி செய்யவுமே என்பதால் அரிசியையும் ஏனைய உப உணவுப் பொருட்களையும் இறக்குமதி செய்வது அவர்களுக்கு எளிதானதாக இருந்தது. அரிசி உற்பத்தி வீழ்ச்சி கண்டமைக்கு, இளைஞர்களுக்கு அதாவது இளந்தலைமுறையினருக்கு வேறு தொழில் வாய்ப்புகள் கிடைத்தமையும் ஒரு காரணமாகக் குறிப்பிட முடியும்.

இலங்கை சுதந்திரம் பெற்ற பின்னரேயே புதிய விவசாய திட்டங்களும் நீர்பாசன வசதிகளும் ஏற்படுத்தப்பட்டு விவசாய புரட்சி ஆரம்பித்து வைக்கப்பட்டது. ஐம்பது அறுபதுகளில் வெளிநாடுகளில் அரிசி உற்பத்தி பாதிக்கப்படவே அரிசியை இறக்குமதி செய்வதில் பிரச்சினை ஏற்பட்டது. அச்சமயம் இலங்கை தேசிய அரசியலில் ஒரு தீர்மானிக்கும் சக்தியாக அரிசி திகழ்ந்தது என்பது குறிப்பிடத்தக்கது. தேர்தலில் வெற்றி பெறுவதற்கு இனவாதத்தைப் பயன்படுத்துவதைப் போல அன்று அரிசி பயன்படுத்தப்பட்டது.

ஒரு கட்டத்தில் அதிக விலைக்கு அரிசி வாங்கி குறைந்த விலைக்கு அல்லது இலவசமாக மக்களுக்கு அரிசி வழங்கப்பட்டது. அரிசி பங்கீட்டுக்கு கூப்பன் கார்ட் முறையும் அறிமுகம் செய்யப்பட்டது. இவை அனைத்தும் அரிசி உற்பத்தியில் தன்னிறைவு அடைவதற்கு அரசுகள் போதிய நடவடிக்கைகளை எடுக்கவில்லை என்பதைக் காட்டுவதாகக் கொள்ளலாம் என்றாலும் சனத்தொகை அதிகரிப்புக்கு ஏற்ற வகையில் புதிய வயல் காணிகளை ஏற்படுத்தவும் அதற்கான நீர்ப்பாசன வசதிகளைச் செய்யவும் காலம் தேவைப்பட்டது என்பதையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். அன்றைய நிலைமைகளோடு ஒப்பிடும் போது அரிசி உற்பத்தியில் இன்று இந்நாடு பெருமளவில் முன்னேற்றம் கண்டுள்ளதோடு காய்கறி மற்றும் பழ உற்பத்தியிலும் தன்னிறவை அடைந்துள்ளது. சில விவசாய உற்பத்திகள் வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதியாகின்றன.

நாம் முன்னர் பாரம்பரிய நெல்லினங்களை பாரம்பரிய விவசாய நடைமுறைகளில் இயற்கை உரப்பாவனையுடன் நட்டு வளர்த்து அறுவடையும் செய்து வந்தோம். எனினும் சனத்தொகை அதிகரிப்பு, தன்னிறைவு இலட்சியம் என்பனவற்றை கருத்தில் கொள்ள வேண்டிய அவசியம் இருந்ததால் புதிய வெளிநாட்டு நெல்லினங்களையும் அவற்றுக்கான இரசாயன பசளைகளையும் புதிய புதிய பயிர்ப்பீடைகளை அழிக்கக்கூடிய கிருமி நாசினிகளையும் இறக்குமதி செய்ய வேண்டிய அவசியம் எழுந்தது. காய்கறிகளுக்கான விதைகள் முன்னர் உள்ளூரில் உற்பத்தி மூலம் பெறப்பட்டது. பின்னர் வெளிநாட்டு விதைகள், அதிக விளைச்சல் காரணமாக, பெறப்பட்டு அவற்றுக்கு இசைவான பசளைகளையும் கிருமி நாசினிகளையும் உபயோசிக்க வேண்டியதாயிற்று.

இலங்கைக்குள் ஏன் இரசாயன பசளைகளும், கிருமி நாசினிகளும் கொண்டுவரப்பட்டன என்பதற்கு இவையே காரணங்கள். இது தவிர்க்க முடியாதது. அதேசமயம் அதிகப்படியான இரசாயன உரங்களும் கிருமி நாசினிகளும் உபயோகிக்கப்படுவது மண்ணுக்கும் மனிதருக்கும் தீங்குகள் விளைவிக்கும் என்பதில் எவருக்குமே மாற்றுக் கருத்து இருக்க முடியாது. ஆனால் இரண்டு கோடி மக்களின் பசியாற்ற வேண்டும். வேலை வாய்ப்புகள் வழங்க வேண்டும். விவசாய பெருங்குடியினரின் குறைகள் போக்கி அவர்களை மகிழ்ச்சியாக வைத்திருக்க வேண்டும். இவ்வகையில் அரசு பசளை விடயத்தில் கொண்டிருந்த இறுக்கமான நிலையில் இருந்த தளர்வு நிலைக்கு வந்திருப்பது சரியான சமயத்தில் எடுக்கப்பட்ட முடிவாகவே பார்க்கப்படுகிறது. அரசு எதிர்கொண்டிருக்கும் சில தலைவலிகளை இம் முடிவு தீர்க்கக்கூடும்.

எனினும் இன்று காய்கறிகள், அரிசி போன்ற அத்தியாவசிய பண்டங்களின் விலைகள் குறைய வேண்டுமானால் உற்பத்திச் செலவு குறைய வேண்டும். விளை பொருட்களின் உற்பத்திச் செலவில் பெரும் பங்கு வகிப்பது பசளை மற்றும் கிருமிநாசினிகளே. ஆனால் தற்போது தனியார்த்துறையினருக்கு இரசாயன உரங்களை இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டிருப்பதாலும் அவற்றின் மீதான மானியம் விலக்கப்பட்டிருப்பதாலும் விளை பொருட்களின் உற்பத்திச் செலவு பன்மடங்கு அதிகரிப்பதற்கான வாய்ப்பு காணப்படுகிறது. உரமானியம் இலங்கையில் தொடர்ச்சியாக வழங்கப்பட்டு வந்தமைக்கான காரணம் விளை பொருட்களின் சில்லறை விலைகளை மக்களின் கைக்கு எட்டும் வகையில் பேணுவதற்காகவே.

எனவே, வாக்காளர்களின் பேராதரவுடன் ஆட்சிக்கு வந்துள்ள இந்த மக்கள் அரசு, உரம் மற்றும் கிருமிநாசினிகள் பேரிலான அரசு மானியத்தைத் தொடர்ந்து வழங்க முன்வர வேண்டியது அவசியம். அதே சமயம் இயற்கை உரப் பாவனையை விவசாயிகள் மத்தியில் ஊக்குவிக்கும் நடவடிக்கைகளைத் தொடர்ந்தும் மேற்கொள்ள வேண்டும். போஷனையான இயற்கை உரங்களைத் தயாரிப்பது. இவ்விடயத்தில் பின்பற்றப்படக்கூடிய குறுக்கு வழிகளைத் தவிர்ப்பது தொடர்பில் மக்களுக்கு விழிப்புணர்வை ஊட்டவும் வேண்டும்.

தினகரன் விளம்பரம் : 0112429367 | விற்பனை பிரிவு : 0112429444, 0112429378 | விளம்பர முகாமையாளர் : 0112429673 | தினகரன் ஆசிரியபீடம் : editor.vm@lakehouse.lk

# மீண்டுமொரு தடவை நிரூபிக்கப்பட்ட அரசாங்கத்தின் பெரும்பான்மை பலம்!

**ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட 2022ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்டத்தின் இரண்டாவது வாசிப்பு பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்பட்டதன் மூலம் அரசாங்கத்துக்குப் பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலம் உள்ளமை மீண்டும் ஒருமுறை நிரூபிக்கப்பட்டுள்ளது.**

கொவிட்19 உலகத் தொற்றுநோயினால் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி போன்ற பல்வேறு சவால்களுக்கு மத்தியில் நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்லும் பொறுப்பை ஏற்றுக் கொண்ட நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷவின் கன்னி வரவுசெலவுத் திட்டமாக இது அமைந்திருந்தது.

கடந்த 22ஆம் திகதி நடைபெற்ற இரண்டாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பில் ஆதரவாக 153 வாக்குகளும், எதிராக 60 வாக்குகளும் அளிக்கப்பட்டு 93 மேலதிக வாக்குகளால் வரவுசெலவுத் திட்டத்தின் இரண்டாவது வாசிப்பு நிறைவேற்றப்பட்டது.

அரசாங்கத்தினால் முன்வைக்கப்பட்ட வரவுசெலவுத் திட்டத்துக்கு ஆளும் கட்சியின் பங்காளிக் கட்சிகள் ஆதரவாக வாக்களித்திருந்த அதேநேரம், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் உறுப்பினர்கள் மூன்று பேரும், அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் மூன்று உறுப்பினர்களும் ஆதரவாக வாக்களித்திருந்தனர்.

தமது உறுப்பினர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுத்திருந்தாலும், அரசாங்கம் பாராளுமன்றத்தில் வலுவான நிலையில் உள்ளது என்பதே வரவுசெலவுத் திட்டத்தின் இரண்டாவது வாசிப்பு நிறைவேற்றப்பட்டதன் மூலம் புலப்படுகிறது. விவசாயத்துக்கான பசளை நெருக்கடி, விலைவாசி அதிகரிப்பு போன்ற விடயங்களை முன்னிலைப்படுத்தி அரசாங்கத்தை வீழ்த்துவதற்கு எதிர்க் கட்சிகள் முயற்சிகளை மேற்கொண்டிருந்தாலும், பாராளுமன்றத்தைப் பொறுத்த வரையில் அரசாங்கம் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் தொடர்ந்தும் பலமான நிலையிலேயே உள்ளது.

அரசாங்கத்தின் பங்காளிக் கட்சிகளுக்கிடையில் முரண்பாடுகள் தோன்றியிருப்பதால் அரசு இக்கட்டான நிலையில் உள்ளது எனக் காண்பிப்பதற்கு எதிர்க்கட்சி கடும் பிரயத்தனங்களை மேற்கொண்டு வருகிறது. குறிப்பாக யுகதனவி அனல் மின்நிலையம் தொடர்பில் அமெரிக்காவுடன் ஏற்படுத்திய ஒப்பந்தம் தொடர்பில் அரசின் பங்காளிக் கட்சித் தலைவர்கள் அதிருப்தியடைந்துள்ளனர். இதனால் அரசாங்கம் வரவுசெலவுத் திட்டத்தை நிறைவேற்றுவதில் சிக்கல்களை எதிர்கொள்ளும் என்பது போன்ற மாயை தோற்றுவிக்கப்பட்டிருந்தாலும் அதனை முறியடித்து அரசாங்கம் தனது பலத்தை பாராளுமன்றத்தில் நிரூபித்துள்ளது.

அரசுக்கு எதிரான பிரசாரங்களின் மூலம் குழப்பத்தை ஏற்படுத்தி ஆட்சியைக் கைப்பற்றி விட முடியும் என பிரதான எதிர்க்கட்சி தப்புக் கணக்குப் போட்டிருப்பதும் தற்பொழுது புலனாகியுள்ளது. ஐக்கிய மக்கள் சக்தியில் அங்கம் வகிக்கும் பங்காளிக் கட்சிகளுக்கிடையில் முரண்பாடும் வலுத்துள்ளன. அடுத்த தேர்தலை இலக்கு வைத்து எதிர்க் கட்சிக்குள் தலைமைத்துவ முரண்பாடு ஏற்பட்டுள்ளமையும் புலப்பட்டுள்ளது.

குறிப்பாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, பீல்ட்மார்ஷல் சரத் பொன்சேகா, பாட்டலி சம்பிக ரணவக்க ஆகியோருக்கிடையில் தலைமைத்துவத்துக்கான பனிப் போர் இடம்பெற்று வருகின்றமையும் அவ்வப்போது புலப்பட்டுள்ளது.



**நாடு எதிர்கொண்டுள்ள கொவிட் பிரச்சினையிலிருந்து மீள்வதற்கும் நாட்டை மீண்டும் சரியான பாதையில் கொண்டு வருவதை நோக்காகக் கொண்டும் வரவுசெலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருப்பதாக அரசாங்கத்தின் அமைச்சர்கள் பலரும் கருத்துத் தெரிவித்துள்ளனர். அதேநேரம், விலைவாசி அதிகரிப்பு போன்று மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்குத் தீர்வுகள் பற்றி எந்த விடயங்களையும் வரவுசெலவுத் திட்டம் உள்ளடக்கியிருக்கவில்லையென எதிர்க் கட்சியினர் விமர்சனம்**

அரசாங்கம் முன்வைத்துள்ள வரவுசெலவுத் திட்டத்தில் விசேட ஏற்பாடுகள் எதுவும் இல்லையென குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்ற போதும், அரசின் வருமானத்தை அதிகரிப்பதற்கான வழிகள் பல முன்மொழியப்பட்டுள்ளன. கொவிட் நெருக்கடி போன்றவற்றினால் அரசாங்கத்தின் வருமானத்திலும் பின்னடைவுகள் ஏற்பட்டிருப்பதை நாம் அறிவோம்.

இவ்வாறான நிலையில் அரசின் வருமானத்தை அதிகரிப்பதற்கான யோசனைகள் பலவும் முன்வைக்கப்பட்டுள்ளன. குறிப்பாக சுங்கத் திணைக்களத்தின் ஊடாகப் பெறப்படும் வருமானத்தை அதிகரிப்பதற்காக ஏற்கனவே அறிமுகப்படுத்தப்பட்டுள்ள கணினிக் கட்டமைப்பான ரமிஸ் கட்டமைப்பை சரியான முறையில் நடைமுறைப்படுத்துவதற்கும்,

சம்பந்தப்பட்ட ஏனைய அரசாங்க நிறுவனங்களை இதனுடன் இணைத்து வினைத்திறனான முறையில் வருமானத்தைப் பெற்றுக் கொள்வதற்கும் முன்மொழிவுகள் செய்யப்பட்டுள்ளன. இது தவிரவும் ஜனவரி மாதம் முதல் பொருட்கள் மற்றும் சேவைக்கான வரியையும் அரசாங்கம் அறிமுகப்படுத்தவுள்ளது.

நாடு எதிர்கொண்டுள்ள கொவிட் பிரச்சினையிலிருந்து மீள்வதற்கும் நாட்டை மீண்டும் சரியான பாதையில் கொண்டு வருவதை நோக்காகக் கொண்டும் வரவுசெலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருப்பதாக அரசாங்கத்தின் அமைச்சர்கள் பலரும் கருத்துத் தெரிவித்துள்ளனர். அதேநேரம், விலைவாசி அதிகரிப்புப் போன்று மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்குத் தீர்வுகள் பற்றி எந்த விடயங்களையும் வரவுசெலவுத் திட்டம் உள்ளடக்கியிருக்கவில்லையென எதிர்க் கட்சியினர் விமர்சித்துள்ளனர். வாழ்க்கைச் செலவு அதிகரிப்புக்கு நிவாரணங்கள் எதுவும் முன்வைக்கப்படவில்லையென்பது அவர்களின் கருத்தாகவுள்ளது.

இருந்த போதும் உடனடிப் பிரச்சினைகளுக்கு அப்பால் தற்பொழுது எதிர்கொண்டுள்ள நெருக்கடி நிலையிலிருந்து நாட்டை மீட்கும் தொலைநோக்குப் பார்வையே இந்த வரவுசெலவுத் திட்டத்தின் நோக்கம் என அமைச்சர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர். நாட்டை சரியான பாதையில் கொண்டு செல்வதற்கான வழிகாட்டியாக இந்த வரவுசெலவுத் திட்டம் அமையும் என்பது அவர்களின் நிலைப்பாடாகவுள்ளது.

## தலைமைத்துவத்தை இலக்கு வைத்து எதிர்க்கட்சிக்குள் ஆரம்பமானது பனிப்போர்!

பிரதான எதிர்க் கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்து தேசிய மக்கள் சக்தி, இலங்கைத் தமிழரசுக் கட்சி, அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் உள்ளிட்ட கட்சிகள் வரவு செலவுத் திட்டத்தின் இரண்டாவது வாசிப்புக்கு எதிராக வாக்களித்திருந்தன. 20ஆவது திருத்தச் சட்டமூலம் உள்ளிட்ட கடந்த கால சட்டங்களுக்கு ஆதரவு தெரிவித்த முஸ்லிம் உறுப்பினர்களே இம்முறையும் அரசுக்கு தமது ஆதரவுக் கரத்தை நீட்டியுள்ளனர்.

ஶ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவர் மற்றும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவர் ஆகியோர் தவிர்ந்த அக் கட்சியின் ஏனைய உறுப்பினர்கள் அரசாங்கத்துக்கு சார்பான நிலைப்பாட்டில் இருந்து வருகின்றனர். இதனையடுத்து வரவுசெலவுத் திட்டத்துக்கு ஆதரவாக வாக்களித்த உறுப்பினர்களுக்கு எதிராக அந்த இரு கட்சிகளின் தலைமைப் பீடங்களும் நடவடிக்கை எடுத்துள்ளன.

மேற்படி அரசியல் கட்சிகள்







பி.ஹர்ஷன்...

# இலங்கைத் தமிழர்களின் விவகாரத்தில் குளிர்காயும் புலம்பெயர் அமைப்புகள்!




**வடக்கு, கிழக்குத் தமிழர்களின் அரசியலுக்கும் புலம்பெயர்ந்து மேற்குலகில் வாழ்ந்து வருகின்ற தமிழர்களுக்கும் இடையில் தவிர்க்க முடியாத வகையில் தொடர்ச்சியான உறவுகள் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன. நீண்ட கால யுத்தம் நிலவிய அசாதாரண சூழல் காரணமாக நாட்டை விட்டு வெளியேறும் நிலைமைக்குத் தள்ளப்பட்ட வடக்கு, கிழக்கு பிரதேச தமிழர்கள் உலகின் பல்வேறு நாடுகளில் பரந்து வாழ்ந்து வருகின்றனர்.**



அந்நாடுகளில் அவர்கள் அரசியலிலும் பொருளாதாரத்திலும் பெரும் பலமுள்ளவர்களாகத் திகழ்கின்றனர். கனடா போன்ற நாடுகளில் இலங்கையைச் சேர்ந்த புலம்பெயர்ந்து வாழ் தமிழர்களின் எண்ணிக்கை ஒப்பீட்டளவில் அதிகமாகவிருப்பதுடன், அந்நாட்டின் அரசியலிலும் அவர்களின் பங்களிப்பும் செல்வாக்கும் அதிகமாகக் காணப்படுகிறது.

புலம்பெயர்துவாழ் தமிழர்கள் இலங்கையில் இடம்பெறும் அரசியல் விடயங்களில் எப்பொழுதும் தமது அக்கறையைக் காண்பித்து வருபவர்களாகக் காணப்படும் அதேநேரம், வடக்கு கிழக்கைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பெரும்பாலான தமிழ் அரசியல் கட்சிகள் தமக்கான ஆதரவையும் அனுசரணைகளையும் புலம்பெயர்ந்து வாழும் தமிழ் சமூகத்திடமிருந்து பெற்றுக் கொள்ளும் நிலைமையும் காணப்படுகிறது.

**வடக்கு, கிழக்கு அரசியல் களமானது என்றும் கொதிநிலையில் இருக்க வேண்டுமென்பது புலம்பெயர் தமிழர்களில் ஒரு பிரிவினரின் எதிர்பார்ப்பு ஆகும். பாராளுமன்ற உறுப்பினர்களான சுமந்திரன், சாணக்கியன் ஆகியோர் மீதான எதிர்ப்பு நடவடிக்கைகள் அதனையே வெளிப்படுத்துகின்றன**







இவ்வாறான பின்னணியில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் இராசமாணிக்கம் ஆகியோர் கனடாவில் கலந்து கொண்ட நிகழ்வில் புலம்பெயர்ந்து வாழ் தமிழர்கள் குழப்பம் விளைவித்த விடயம் பரபரப்பாகப் பேசப்பட்டு வருகிறது. இலங்கையில் தமிழர் அரசியலில் மாத்திரமன்றி, பெரும்பான்மை அரசியலிலும் இந்த விடயம் முக்கியமாகப் பேசப்பட்டது.

பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் வெளிநாட்டில் கலந்து கொண்ட கூட்டத்தில் குழப்பம் விளைவிக்கப்பட்ட சம்பவம் இது முதற் தடவையல்ல. இதற்கு முன்னர் அவுஸ்திரேலியாவிலும் இவ்வாறான சம்பவம் அவருக்கு எதிராக இடம் பெற்றுள்ளது.

அவ்வாறானதொரு சம்பவம்தான் கனடாவிலும் நடந்துள்ளது. அமெரிக்காவின் அழைப்பையேற்று உயர் மட்ட சந்திப்புக்களை நடத்துவதற்காகச் சென்றிருந்த பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், கனடாவிலும் சில கூட்டங்களில் கலந்து கொண்டார். கனேடியக் கூட்டங்களில் பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியனும் இணைந்து கொண்டிருந்தார்.

கனடாவில் நடைபெற்ற கூட்டமொன்றில் சுமந்திரன் உரைநிகழ்த்திக் கொண்டிருந்த போது கூட்டத்திலிருந்த சிலர் அவர் மீது சரிமாரியான கேள்விகளைக் கேட்டு குழப்பம் விளைவித்தனர். சுமந்திரன் மற்றும் சாணக்கியம் நிலைகுலைந்து தடுமாறும்படியாக வார்த்தைப் பிரயோகங்கள் அவர்களை நோக்கி பிரயோகிக்கப்பட்டன.

அவர்கள் மோசமான வார்த்தைகளைக் கூறி சுமந்திரனையும், சாணக்கியனையும் வெளியேறுமாறு கோஷம் எழுப்பினர். இதனால் அவர்கள் இருவரையும் வெளியேற்ற வேண்டிய நிலைமைக்கு ஏற்பாட்டாளர்கள் தள்ளப்பட்டனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மாறுபட்ட கருத்துகள் வெளியிடப்பட்டு வருகின்றன. ஒருசிலர் தங்களது தனிப்பட்ட காழ்ப்புணர்ச்சிகளை வெளிப்படுத்தும் வகையில் இவ்வாறு நடந்து கொள்கின்றனர் என்றும் பரவலாக கருத்துகள் தெரிவிக்கப்படுகின்றன. புலம்பெயர் தமிழர்களில் ஒரு தரப்பினர் தமிழர்களின் அரசியலை கொதிநிலையில் தொடர்ந்தும் வைத்திருக்கவே விரும்புவதாக அத்தரப்பினர் கூறுகின்றனர்.

நடைபெற்று முடிந்த பாராளுமன்றத் தேர்தலின் போதும் சுமந்திரனுக்கு எதிரான விமர்சனங்கள் அதிகமாக முன்வைக்கப் பட்டிருந்தன. அவர் மக்களின் வாக்குகளால் தெரிவு செய்யப் பட்டிருந்தாரென்பதில் சந்தேகமில்லை. ஆனால் எப்பொழுதும் மக்களின் உணர்வுகளைக் கிளர்ந்தெழச் செய்து உசுப்பேற்றும் அரசியலில் ஈடுபடும் தரப்பினர் சுமந்திரன் என்ற தனிப்பட்ட ஒரு நபருக்கு எதிரான பிரசாரத்தை முன்னெடுத்திருந்தனர். இதற்கு புலம்பெயர்ந்துவாழ் சமூகத்தின் ஆதரவும் வெகுவாக இருந்தது.

**மேற்குலகில் புலம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்களில் ஒரு தரப்பினர் இலங்கையில் உண்மையான அமைதி நிலவுவதையே விரும்புகின்றனர். எனினும் மற்றொரு தரப்பினர் இலங்கையில் எக்காலமும் தீர்க்கப்படாத முரண்பாடுகள் தொடர வேண்டுமென்றே எதிர்பார்க்கின்றனர். வடக்கு, கிழக்கு தமிழர்களின் பிரச்சினைகள் முடிவின்றித் தொடர்வதன் மூலம், மேற்குலகில் தங்களது இருப்பை தக்கவைத்துக் கொள்வது அவர்களது உத்தியாகும்**



இச்சம்பவங்களின் தொடர்ச்சியாகவே கனடாவில் வாழ்கின்ற இலங்கைத் தமிழர்களில் ஒரு குழுவினர் அவருக்கு எதிர்ப்பினை வெளிப்படுத்தியுள்ளனர். புலம்பெயர்ந்துவாழ் இலங்கைத் தமிழர் சமூகத்தைப் பொறுத்த வரையில் அவர்களுக்கிடையில் எந்த விடயத்திலும் எப்போதும் ஒற்றுமை இருந்ததில்லை. எப்பொழுதும் குழுக்களாகப் பிரிந்து நின்றே செயற்பட்டுள்ளனர். இலங்கையின் வடக்கு கிழக்கு அரசியல் விடயத்திலும் அவர்களிடம் ஒற்றுமை இல்லை.

இலங்கையின் வடக்கு, கிழக்கின் அபிவிருத்தியில் புலம்பெயர்ந்து வாழ் தமிழர்களின் பங்களிப்பு கணிசமானதாக இல்லாவிட்டாலும் ஒரு பகுதியினர் இங்குள்ள மக்களுக்கு உதவிகளை வழங்கி வருகின்றனர். இருந்தபோதும், இலங்கையில் எப்பொழுதும் குறிப்பாக தமிழர்களுக்கு ஏதாவது பிரச்சினை இருந்தாலேயே தமக்கான இருப்பை உறுதிப்படுத்த முடியும் என்பது அங்குள்ள பலருடைய நிலைப்பாடு ஆகும்.

இதனால் இலங்கை அரசாங்கத்துடன் பிரச்சினையை ஏற்படுத்தக் கூடிய தரப்பினர் இலங்கை அரசியலில் இருப்பதையே அவர்கள் விரும்புகின்றனர். எந்தவொரு விடயத்தையும் முற்போக்கு சிந்தனையுடன் அணுகக் கூடியவர்களை துரோகிகளாக்குவது அவர்களுக்கு சித்தாந்தமாக உள்ளது. தமது தேவைக்காக இலங்கையில் உள்ள மக்களை தூண்டி விடுவதையும் கடந்த காலங்களில் காண முடிந்தது.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அபிவிருத்திப் பணிகளை முன்னெடுப்பதற்கும், பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதாரத்தைக் கட்டியெழுப்பக் கூடிய வகையில் முதலீடுகளை மேற்கொள்வதற்கும் காணப்படும் சந்தர்ப்பங்களை புலம்பெயர்ந்துவாழ் தமிழ் சமூகத்தினர் எந்தளவுக்குப் பயன்படுத்தினார்கள் என்ற கேள்வி காணப்படுகிறது.

தமது மக்களுக்காக உதவும் உள்ளம் படைத்த புலம்பெயர்ந்துவாழ் சமூகத்தினர் தனிப்பட்ட ரீதியில் உதவிகளை மேற்கொண்டு வந்தாலும், பாரிய முதலீடுகள் எதுவும் அவர்களால் இதுவரை கொண்டு வரப்படவில்லை என்பதே உண்மை. வடக்கு, கிழக்கில் உள்ள மக்களின் முன்னேற்றம் குறித்து இலங்கை அரசியல்வாதிகளுக்கு அக்கறை இல்லை என அவர்கள் கருதுவார்களாயின், அரசியல்வாதிகளை பார்த்துக் கொண்டிருக்காமல் அவர்களே நேரடியான உதவிகளை வழங்க முடியும்.

அதனை விடுத்து முற்போக்காகக் சிந்திக்கக் கூடிய அரசியல்வாதிகளை தமது காழ்ப்புணர்ச்சிக்காக விமர்சித்து துரோகிப் பட்டம் கட்டுவதன் ஊடாக புலம்பெயர்ந்துவாழ் சமூகத்தினர் எதனை சாதிக்கப் பார்க்கின்றனர். என்பது முக்கிய வினா ஆகும்.

மறுபக்கத்தில் தமிழ் சமூகத்துக்கிடையில் ஏற்படக் கூடிய இவ்வாறான முரண்பாடுகள் மற்றும் முட்டிமோதும் சம்பவங்கள் ஆட்சியாளர்களுக்கு ஒட்டுமொத்த சமூகம் குறித்து தவறான செய்தியை வழங்குவதற்கான வாய்ப்பாகவும் அமைந்து விடுவதற்கு இடமுண்டு. இந்த முரண்பாடுகளைப் பயன்படுத்தி தென்னிலங்களை அரசியல் சக்திகள் தமது அரசியல் காய்நகர்த்தல்களை மேற்கொள்வதற்கு வழிவகுத்து விடும் என்பதையும் நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

வெளிநாடுகளிலிருந்து கூக்குரல் இடுபவர்களுக்கு இதனால் ஏற்படக் கூடிய தாக்கங்கள் புரியாவிட்டாலும், கள நிலைமைகளுக்கு முகங்கொடுக்கும் தமிழ் சமூகம் இது விடயத்தில் அக்கறையுடன் இருக்க வேண்டும்.

அதேநேரம், தற்பொழுது நாடு எதிர்கொண்டிருக்கும் பொருளாதார நெருக்கடி சூழ்நிலையில் வடக்கு, கிழக்கு உள்ளிட்ட அனைத்துப் பகுதிகளிலும் உள்ள மக்கள் தமது அன்றாட வாழ்வாதாரத்தை எவ்வாறு முன்கொண்டு செல்வது என்பதிலேயே அதிக அக்கறை காண்பிக்கின்றனர். எனினும், சுயாட்சி, தனிநாடு போன்ற வார்த்தைகளால் உசுப்பேற்றும் சில அரசியல்வாதிகளின் உசுப்பேற்றல்களுக்கு எடுபடும் நிலையில் மக்கள் இல்லை என்பதே உண்மையாகும். இதுபோன்ற சில அரசியல்வாதிகளுக்கு ஆதரவு வழங்கும் வகையில் புலம்பெயர்ந்துவாழ் சமூகத்தினர் சிந்திப்பதை இனியாவது நிறுத்திக் கொள்ள வேண்டும்.

இது இவ்விதமிருக்க, புலம்பெயர்ந்து வாழ் சமூகத்துடன் பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்குத் தயாராக இருப்பதாக அண்மையில் நியூயோர்க் சென்றிருந்த ஜனாதிபதி கோட்டாபாய ராஜபக்ஷ, ஐ.நா பொதுச் செயலாளரிடம் கூறியிருந்தார். பெரும்பான்மை சிங்களவர்களின் ஆதரவுடன் ஆட்சிக்கு வந்த அரசாங்கமாக இருக்கின்ற போதும் தமிழர்களின் பிரச்சினை குறித்து புலம்பெயர்ந்துவாழ் சமூகத்துடன் கலந்துரையாடத் தயார் என்ற ஜனாதிபதியின் செய்தி வரவேற்கும் விதமாக இருந்தது. புலம்பெயர்ந்து வாழ் தமிழர்கள் மற்றும் அமைப்புக்கள் பல தடை செய்யப்பட்டுள்ள நிலையில் இவ்வாறான அழைப்பு எந்தளவுக்கு நடைமுறைச் சாத்தியமாக இருக்கும் என்பது விவாதத்துக்கு உரியதாக இருந்தாலும், சில புலம்பெயர் அமைப்புக்கள் இந்த அழைப்பை சாதகமாகப் பார்த்துள்ளன. தடைகளை நீக்கும் பட்சத்தில் பேச்சுக்களுக்குத் தயார் என்றும் அந்த அமைப்புக்கள் கூறியுள்ளன.

இதுபோன்ற பின்னணியில் நாட்டில் தேவையற்ற குழப்பங்கள் ஏற்படும் விதத்தில் நடந்து கொள்ளாது நீண்ட கால யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கு சாதகமான ஒத்துழைப்புக்களை வழங்குவதே காலத்தின் தேவையாகும்.

## பென்றித் தோட்ட குளோரின் வாயு வெடிப்பு அனர்த்தம்

# பாதிப்புக்குள்ளானவர்களுக்கு எட்டு வருடங்களாகியும் வீடுகள் இல்லை

### ஜீவன் தொண்டமான் நிறைவேற்றி வைக்க முன்வருவாரா?

அவிசாவளை தேர்தல் தொகுதி கொழும்பு மாவட்டத்தின் கீழ்வரும் 15 தேர்தல் தொகுதிகளில் ஒன்றாகும். அத்துடன் கொழும்பு மாவட்டத்தில் தோட்டப்புறங்களை உள்ளடக்கிய ஒரேயொரு தொகுதியும் இதுவேயாகும்.

சாலாவ, எலிஸ்டன், ஆதர்பீல்ட், தூரம்பிட்டிய, பார்ணம், தல்துவ, பென்றித் இன்னும் பல தோட்டங்கள் இத்தொகுதியினுள் அடங்குகின்றன. கொழும்பு அவிசாவளை ஹைலெவல் வீதி வழியாகப் பயணிக்கும்போது தோட்டங்களில் பயிரிடப்பட்டுள்ள இறப்பர் பயிர்ச்செய்கை கண்ணுக்கு ரம்மியமாக காட்சியளிக்கும்.

தோட்டங்களுக்குள் நுழைந்து செல்லும்போது தோட்ட உத்தியோகத்தர்களினதும் தோட்ட அதிகாரிகளினதும் உத்தியோகபூர்வ வாசஸ்தலங்கள், தோட்ட அலுவலகங்கள் மற்றும் கட்டடங்கள் குறைபாடுகள் எதுவுமேயின்றி காட்சியளிக்கும்.

இத்தனையையும் கடந்து சென்றால் எங்கே காலம்காலமாக பாடுபட்டு உழைத்துவரும்


பென்றித் தோட்ட லயன் அறைகள்

தோட்டத் தொழிலாளரின் குடியிருப்புகள் எவ்வித மாற்றமுமின்றி அடிப்படை வசதிகளற்ற நிலையிலேயே அந்த மக்கள் வாழ்ந்து வருவதையும் நீங்கள் காணலாம்.

விஞ்ஞானம் முன்னேறிச் செல்லும் இக்கால கட்டத்தில் மனித வாழ்வில் எத்தனையோ மாற்றங்களும் அதிசயங்களும் முன்னேற்றமும் ஏற்பட்டு வருகின்றபோதிலும் பெரும்பாலான தோட்டத் தொழிலாளரின் குடியிருப்புக்களிலும் அவர்களின் வாழ்க்கை தரத்திலும் மாற்றங்கள் ஏதுவும் ஏற்படாது இன்றும் அந்த மக்கள் அதே நிலையிலேயே இருந்து வருகின்றனர் என்பதே உண்மையாகும்.

அந்தவகையில் அவிசாவளை பென்றித் தோட்டத் தொழிலாளர் மட்டும் இதற்கு விதிவிலக்கல்ல. அவர்களின் வாழ்க்கை நிலையும் அதே கதிதான். கீழ்ப்பிரிவு, மேற்பிரிவு, இளங்கோஸ், லோகன் என நான்கு பிரிவுகளைக் கொண்ட பென்றித் தோட்டத்தில் சுமார் ஆயிரம் ஏக்கர் வரையிலான இறப்பர் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. புஸல்லாவ பிளாண்டேசன்ஸ் கம்பனியின் கீழ்வரும் இத்தோட்டம் தம்ரோ கம்பனியின் நிர்வாகத்தின் கீழ் இயங்கி வருகின்றது.

2013ம் ஆண்டு ஒக்டோபர் 9ஆம் திகதி பென்றித் தோட்ட மக்கள் வாழ்வில் மறக்கமுடியாத ஒரு துயர நாளாகும். ஆம்! அன்றைய தினம் இரவு 7.00 மணியளவில் பென்றித் தோட்டம் கீழ்ப்பிரிவில் அமைந்திருந்த லயன் குடியிருப்புகளுக்கு அருகில் இயங்கிவந்த தேசிய நீர் வழங்கல் வடிகால் அமைப்புச் சபைக்குச் சொந்தமான குடிநீர்த் திட்டத்தில் ஏற்பட்ட குளோரின் வாயு வெடித்ததையடுத்து மொத்த நாட்டின் பார்வையும் பென்றித் மக்களின் பக்கம் திரும்பியமை நினைவிருக்கலாம்.

இங்கு ஏற்பட்ட பாரிய வெடிப்புச் சம்பவத்தினால் லயன் குடியிருப்புகளில் வசித்துவந்த 36 குடும்பங்களைச் சேர்ந்தவர்களும் சுற்றுப்புறங்களில் வசித்தவர்களுமாக குழந்தைகள் முதல் பெரியோர் வரையிலான சுமார் 300 பேர் வரையில் மூச்சுத்திணறி மயக்கமுற்று உடனடியாக ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்லப்பட்டனர். தெய்வாதீனமாக உயிராபத்து எதுவும் ஏற்படவில்லை.



சம்பவத்தில் அப்போது 43 வயதான எஸ். சந்திரகுமார் (கணவன்), 38 வயதான ஏ. விஜேலட்சுமி (மனைவி) இவர்களின் 6, 4, ஒரு வயதான மூன்று பிள்ளைகளும் மிகவும் பாதிப்புக்குள்ளாகி இன்றுவரையில் உடல் நலிவுற்றவர்களாக பல்வேறு சுகாதாரப் பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்த நிலையிலேயே இருந்து வருகின்றனர். சம்பவம் ஏற்பட்டவுடனே பிரதேச அரசியல்வாதிகள்,

**இங்கிரிய மூர்த்தி...**

தமிழ் அரசியல்வாதிகள், தொழிற்சங்கவாதிகள் என ஏட்டிக்குப் போட்டியாக பலரும் படையெடுத்து வந்து பார்வையிட்டு ஆறுதல் வார்த்தைகள் கூறி தேவையான அவசர நடவடிக்கைகளை மேற்கொண்டதுடன் பின்னர் அரிசி, பருப்பு, மா என உலர் உணவுப் பொருட்களையும், சட்டிமுட்டிகள் சிலவற்றையும் கொடுத்து தேற்றி ஆறுதல்படுத்திவிட்டு பாதிப்புக்குள்ளானவர்களை வேறு இடத்தில் குடியமர்த்த நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதியளித்துச் சென்றனர்.

மாதமொரு தடவை சிகிச்சை முகாம் நடத்தி தேவையான மருத்துவ உதவிகள் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என பிரபல தொழிற்சங்கம் ஒன்று தெரிவித்திருந்த போதிலும் எந்தவொரு சிகிச்சை முகாமும் நடத்தப்படவில்லையென்பது கவலைக்குரியதாகும். பாதிப்புக்குள்ளானவர்கள் தாமாகவே ஆஸ்பத்திரிக்கு அலைந்து திரிந்து சிகிச்சை பெற்றுக்கொண்டனர்.

அப்போது படையெடுத்து வந்து ஆறுதல் கூறிச்சென்றவர்கள் இன்றும் இந்த மக்கள் மத்தியில்தான் இருக்கின்றனர். அவர்கள் சொன்ன வார்த்தைகளையும் விடுத்த அறிக்கைகளையும் அவர்கள் மறந்து போயிருக்கலாம். ஆனால் இந்த மக்களால் எளிதில் மறந்துவிடவே முடியாது.

அன்று பலம் வாய்ந்த பிரதேச அரசியல்வாதிகள், ஆட்சியில் பங்காளர்களாக இருந்த தமிழ் அரசியல்வாதிகளும் பாதிப்புக்குள்ளான மக்களுக்குரிய தேவைகளை நிறைவேற்றி வைக்கக்கூடிய வாய்ப்பிருந்த போதிலும் எதுவுமே முன்னெடுக்கப்படவில்லை.

எதிரணியினரும் தாங்கள் எதிர்க்கட்சியில் இருப்பதால் எங்களுக்கு பவர் இல்லையென்றனர். இருந்தும் இந்த விவகாரம் மனித உரிமைகள் ஆணைக்குழு வரையில் கொண்டு செல்லப்பட்டது. ஆனால் என்ன நடந்தது? ஏது நடந்தது பற்றிய


சம்பவம் இடம்பெற்ற பின்னர் ஸ்தலத்தில் ஜ.ம.மு முக்கியஸ்தர்கள்

விளக்கம் எதுவும் தெரியவில்லையென பாதிப்புக்குள்ளான மக்கள் தெரிவித்தனர்.

2015ல் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு பதவிக்கு வந்த நல்லாட்சியில் அமைச்சரவை அந்தஸ்து முன்னாள் அமைச்சர் மனோ கணேசன் பாதிப்புக்குள்ளான மக்களுக்கு காணி ஒதுக்கப்பட்டு வீட்டுத் திட்டம் ஏற்படுத்திக் கொடுக்கப்படும் என தெரிவித்திருந்தார்.

தோட்டக்காணி 5 ஏக்கர் அடையாளங்காணப்பட்டு அங்கு பயிரிடப்பட்டிருந்த இறப்பர் மரங்கள் அகற்றப்பட்டன. இது ஒன்று மட்டுமே நடந்துள்ளது. எட்டு வருடங்கள் கடந்துவிட்டன. இவர்களுக்கான வீட்டுத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படாமல் இழுபறியாகி கைவிடப்பட்டுள்ளது.

தோட்டக் காரியாலயம் மற்றும் சீத்தாவக்கபுர பிரதேச செயலகக் காரியாலயத்துடன் தொடர்புகொண்டு கேட்டபோது தேவையான காணி ஒதுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தனர். சுமார் ஒன்றரை ஏக்கர் தோட்டக் காணி ஒதுக்கப்பட்டு தேசிய நீர்வழங்கல் வடிகால் அமைப்புச் சபையினால் அமைக்கப்பட்ட நீர்விநியோகத் திட்டத்தில் சீத்தாவங்க கங்கைநீர் பெறப்பட்டு அங்கு நீர் சுத்திகரிக்கப்பட்டு அவிசாவளை நகர் மற்றும் சீத்தாவக்கபுர கைத்தொழில் பேட்டைக்கு 2009ம் ஆண்டு முதல் நீர் விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

தோட்டத்துக்குள் இத்திட்டம் அமைக்கப்பட்டுள்ள போதிலும் தொழிலாளர்கள் குடிநீரைப் பெற வேண்டுமாயின் ஒவ்வொரு குடும்பமும் 23 ஆயிரம் ரூபாவை ஒரே தடவையில் செலுத்த வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளதாக குடியிருப்பாளர்கள் தெரிவித்தனர்.

இதற்கு முகங்கொடுக்க முடியாத காரணத்தால் குடியிருப்பாளர்கள் பாழுங்கிணறுகளிலிருந்தே குடிநீர்த் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்கின்றனர். இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டபோது குடியிருப்பாளர்கள் பாதுகாப்பு கருதி வேறு இடத்தில் குடியமர்த்தப்படுவர் என அதிகாரிகளால் உறுதிமொழி வழங்கப்பட்டபோதிலும் அது நிறைவேற்றப்படவில்லை. உறுதியளித்ததுபோல குடியமர்த்தப்பட்டிருந்தால் இத்தகையதொரு அனர்த்தத்துக்கு முகங்கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்காது. இதற்கு அதிகாரிகளே பொறுப்பு கூற வேண்டும்.

மீரியபெத்த மண்சரிவில் பலர் மண்ணோடு மண்ணாய் புதையுண்டு போனார்கள். உயிர்தப்பியவர்களுக்கு அமைத்துக் கொடுக்கப்பட்ட வீட்டுத் திட்டம் சுலபமாகவும் எளிதாகவும் கிடைத்ததொன்றல்ல.

போராட்டங்களையும் ஆர்ப்பாட்டங்களையும் நடத்தி இரண்டு வருடங்களின் பின்னரே அமைத்துக் கொடுக்கப்பட்டது என்பதை மறந்துவிட முடியாது. ஆனால் பென்றித் தோட்ட மக்களுக்கு எட்டு வருடங்கள் கடந்துவிட்ட போதிலும் இதுவரையில் அவர்களுக்கான வீட்டுத்திட்டம் பெற்றுக் கொடுக்கப்படவில்லை. எமது பிரதிநிதியாக இருந்த மனோ கணேசன் நல்லாட்சியில் அமைச்சராகி விட்டதால் வீட்டுத்திட்டம் கிடைக்கும். நட்டஈடும் கிடைக்கும் என முழு நம்பிக்கை கொண்டிருந்த மக்களுக்கு ஏமாற்றமே கிடைத்தது.

ஊவா மாகாண முன்னாள் அமைச்சர் செந்தில் தொண்டமான் தலைமையில் இ.தொ.கா.வின் அவிசாவளை காரியாலயத்தில் நடைபெற்ற கூட்டத்தில் இப்பிரச்சினை குறித்து பேசப்பட்டது. பிரச்சினைக்கு தீர்வு கிட்டும் என எதிர்பார்த்த போதிலும் அங்கும் ஏமாற்றமே கிடைத்தது.

இதுபோன்றதொரு அனர்த்தம் மீண்டும் எந்த நேரத்தில் ஏற்படுமா என்ற அச்சத்துடனேயே இந்த மக்கள் இரவு பகலாய் சிந்தித்தவாறு


வெடிப்பு சம்பவத்தின்போது மிகமோசமாக பாதிப்புக்குள்ளான குடும்பம்

குழந்தை குட்டிகள், சிறுவர், பெரியோர் மற்றும் நோயாளிகளுடன் கடந்த ஏழு வருடங்களாக பொழுதைக் கழித்து வருகின்றனர்.

மனோ கணேசன் அமைச்சராக இருந்தபோது அவரது அமைச்சின் ஏற்பாட்டில் களுத்துறை, தொடங்கொடையில் நடைபெற்ற நடமாடும் சேவையில் கலந்துகொண்டிருந்தபோது பென்றித் தோட்ட வீட்டுத்திட்டம் தொடர்பாக செய்தியாளர் ஒருவர் கேள்வியெழுப்பியபோது தமது அரசாங்கத்தின் வீடமைப்பு தொடர்பான ஏதோவொரு அமைச்சினுளடாக வீட்டுத்திட்டம் நிச்சயம் அமைக்கப்படும் என தெரிவித்திருந்தார்.

அந்தஸ்துள்ள அமைச்சராக இருந்தபோது நிறைவேற்ற முடியாமல்போன நிலையில் தற்போது பாராளுமன்ற உறுப்பினராக எதிரணியில் இருந்துகொண்டு என்ன செய்யப் போகின்றார் மனோ? இப்பிரச்சினைக்கு தீர்வே கிடையாதா என ஏங்கித்தவித்துக் கொண்டிருந்த மக்களுக்கான வீட்டுத்திட்டத்தை காலஞ்சென்ற ஆறுமுகன் தொண்டமானாலும் ஏற்படுத்திக் கொடுக்க முடியாமல் போய்விட்டது.

இனி இந்த மக்களின் பிரச்சினைக்கு தீர்வு பெற்றுக்கொடுக்கப்போது யார்? பிரதேச அரசியல்வாதிகள் முன்வருவார்கள் என நம்புவதற்கில்லை. அப்படியாயின் ஆட்சியின் பங்காளியாக இருந்துவரும் இ.தொ.கா.வினால் மட்டுமே இது சாத்தியமாகும்.

எனவே தற்போதைய இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் இப்பிரச்சினைக்கு தீர்வை பெற்றுக்கொடுக்க முன்வருவார் என முழுமையாக நம்புவதாக பாதிப்புக்குள்ளான மக்கள் கூறுகின்றனர். தந்தையின் பணியை முன்னெடுத்துச் செல்ல முன்வந்திருக்கும் இளம் தலைவர் ஜீவன் தொண்டமான் இப்பொறுப்பை ஏற்க முன்வரவேண்டும்.

# பட்டணம் பி.ஆர். பெரியசாமியின் தோட்டத் தொழிலாளரின் வீரப் போராட்டம்

அமரர் பீ.ஆர். பெரியசாமியின் 'தோட்டத்தொழிலாளரின் வீரப் போராட்டம்' எனும்நூலின்மீள்பிரசுரம் பிரசவமாகியிருக்கிறது. இதற்கு மருத்துவச்சியாக வினையாற்றிய கலை, இலக்கிய மலையக ஆய்வாளர் எச். விக்கிரமசிங்கவின் பணி பாராட்டத்தக்கது.

நூலின் தலைப்பே உற்சாக வீச்சாக மிளிர்கின்றது. துன்பக் கேணியில் துவண்டு நடுங்கும் தொழிலாளர் படை துடித்தெழுந்து போராடிய வரலாற்று தொகுப்பாகவுள்ளது இந்நூல். நூலொன்று எதனைக் கூறுகின்றது. எவ்வாறு கூறுகின்றது என்ற இரு விமர்சன அளவீட்டில் இந்நூலில் கூடிய மதிப்பெண்ணைப் பெறுகின்றது. இதற்கு வலுசேர்க்கும் காரணிகள் சுட்டிக்காட்டத்தக்கவை.

1914ல் தமிழ் நாட்டில் பிறந்த பெரியசாமி தனது 14 வயதில் 1928ல் இலங்கைக்கு வந்தார். முதலாம் போர்க்களத்தில் உதித்து உலகப் பொருளாதார பின்னடைவுக் கட்டத்தில் புலம்பெயர்ந்து, தனது பதின்மபராயத்துகள நிலைமைகளை அனுபவித்தவர். இந்த அனுபவம் அவரது வாழ்நிலை அவரது சிந்தனைத் தூண்டலாக செயற்பட்டுள்ளது.

தொழிலாளர் வர்க்கத்தின் வாழ்க்கைப் போராட்டத்திலே கடந்தகால நிகழ்ச்சிகளைக் கவனத்திற் கொண்டுவந்து, நிகழ்கால சம்பவங்களை மனதில் எடுத்துக்காட்டி, வருங்காலத்தின் இலட்சியப் போராட்டத்திற்கு வழிகாட்டிச் செல்வதே எழுத்தாளனின் கடமைஎன்ற ஆசிரியரின் பிரகடனம் இந்நூல் எழுதப்பட்டதற்கான தூண்டலை வெளிப்படுத்துகின்றது.

துரைமாரின் கெடுபிடிகளுக்கெதிராக செயற்பட்டு தூக்குமேடை ஏறிய வேலாயுதம், வீராசாமி ஆகியோரை உச்சியில் வைத்துப் பேசும் ஆசிரியர், இந்நூலின் மூலம் தொழிலாளர்களுக்கு சிறிதளவு பயன் கிட்டுமாயின் அதுவே என் பெருமுயற்சிக்கு மகிழ்ச்சியைத் தரும் என கூறுவதனூடாக தனது நோக்கினைத் தெளிவாக்கியுள்ளார்.



சமுதாயத்தினை இயக்குகின்ற, தூக்கிநிறுத்தும் தூண்களான பாட்டாளிகளின் மீட்சிக்கு தனது எழுத்து பயனுள்ளதாக இருக்க வேண்டும் என்ற வேட்கை அவரை ஆட்கொண்டுள்ளது. இதன் வழியாக அவர் ஒரு செயற்பாட்டு வெளிக்குத் தள்ளப்பட்டுள்ளார். பெருந்தோட்டத் தொழிலாளரின் மீட்சிக்காக தொழிற்சங்க இயக்கத்திற்கு வித்திட்ட கோ. நடேசஐயரோடு சங்கமிக்கின்றார்.

பெருந்தோட்டத் தொழிலாளரின் உரிமைக் குரலுக்கும், போராட்ட உணர்விற்கும் நெம்புகோலாக செயலாற்றிய கோ. நடேசஐயர் இன்று கூட பீறிட்டெலாத பிரகடனத்தினை 1930களில் எழுப்பியுள்ளார். கண்டியைக் கைப்பற்றியதனூடாக முழு இலங்கைக்கும் சொத்தக்காரர்களான ஆங்கிலேயர், மனித சஞ்சாரமற்ற மத்திய மலைநாட்டில் பாதைகளை அமைத்தவேளையில் ஆள் அரவமற்ற சூழ்நிலை நிலவியதாக குறிப்பிட்டுள்ளனர்.

குறிப்பாக, மேஜர் ஸ்கின்னர் இலங்கையில் ஐம்பது ஆண்டுகள் என்ற அவரது நூலில் குறிப்பிடுகின்றார். இத்தகைய ஈர வலய அடர்காட்டினை வர்த்தகப் பயிர்களின் பசுமை மேடாக மாற்றியோர் பெருந்தோட்டத் தொழிலாளர்கள். இதனை மனதிற் கொண்டு நடேச ஐயர் பெருந்தோட்டப் பயிர்ச்செய்கைப் பிரதேசங்களின் ஒவ்வொரு அங்குல நிலமும் எம் சமூகத்தாருக்கு உரியது எல்லா கட்டடங்களும் அவர்களுக்குரியவை என்று குறிப்பிட்டுள்ளார்.

இத்தகைய ஆளுமை ஒன்றின் ஆற்றுப்படுத்தலில் செயலாற்றிய பெரியசாமி, லங்கா சமஸமாஜக் கட்சியின் தொழிற்சங்க செயற்பாட்டாளராகப் பரிணாமம் பெறுகின்றார். இதன் வழியாக வர்க்க அரசியல் போதனை பெற்று புடம்பெறுகின்றார். இதுவே லேபர் கமிஷனரும், பொலிஸாரும், நீதிவானும், சட்டமும், அவைகளைப் புரட்டும் நியாயத் துரத்திரரென செப்பித்திரியும் அட்வகேட்டும், பிற்போக்கு சட்

**பீ. மரியதாஸ் ...**

டஞ்செய்து பிரஜைகளின் உரிமையைக் கருவறுக்கும் பார்லிமென்டும் முதலாளி வர்க்கத்தின் சொத்துரிமையை பாதுகாக்கும் சத்தான சாதனங்கள்என்று மிகத் தெளிவாக முதலாளித்துவ அரசின் தன்மையை அவரால் விளக்க முடிந்துள்ளது.

இன, மத, நிற, தேச பேதங்களைக் கடந்து, கிராமிய, நகர, தோட்டத் தொழிலாளர்களின் ஒன்றிணைந்த திரட்சியே மீட்சிக்கு வழி என குறிப்பிடும் அவர், வர்க்க போதனையின் அணியிலே மக்களுக்கு அறிவூட்டி தயார் செய்யவேண்டும். அதுதான் சமுதாய மாற்றத்தை உண்டாக்கும். சமுதாய மாற்றத்தை உண்டாக்க சமர் புரியாதவரை தொழிலாளர்களின் துயர் போக்க முடியாது என்று கூறுவதன் மூலம் போராட்டமே பாட்டாளி வர்க்கத்தின் திறவுகோள் என்ற உண்மையைத் தெளிவாக்குகின்றார்.

வர்க்க அடிப்படையிலான அரசின் சாராம்சத்தை விளக்கிய அவர், முதலாளித்துவ அரசின் தன்மை, அது இயங்கும் விதிமுறைகளை தெளிவுபடுத்தும் இன்றைய சமுதாய அமைப்பு முறையானது சொத்துரிமையை ஆதாரமாகக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. முதலாளி வர்க்க அரசாங்க அமைப்பென்றால் அது தனித்தனி சொத்துரிமையைப் பாதுகாக்கும் சட்டதிட்டங்களால் ஆளப்படுவது என விளக்குவதோடு, சோஷலிச அரசாங்க அமைப்பைத் தோற்றுவிக்காத வரையில் தொழிலாளர் வர்க்கத்தின் துன்பமும், துயரமும் நீங்கவே நீங்காது என்று முழங்கியுள்ளார்.

நகரப்புறத் தொழிலாளர்களை முதன்முதலாக அணிதிரட்டி ஸ்தாபனப்படுத்திய ஏ.ஈ. குணசிங்க, அடுத்த கட்டத்தில் இந்திய (மலையாள) தொழிலாளருக்கெதிராக கோஷம் எழுப்பியபோது, இலங்கைவாழ் ஒட்டுமொத்த தமிழ்த் தொழிலாளர்களும் இந்தியாவின் ஆதரவினை யாசிக்க, தொழிலாளர்கள் ஓரமைப்பின் கீழ் செயற்படுவது பாதுகாப்பானது என ஜவகர்லால் நேரு ஆலோசனை கூறினார். இதன் அடிப்படையில் பிறந்ததே இலங்கை இந்திய காங்கிரஸ். சமூகப் பிரக்ஞையும், முற்போக்கு நோக்கும் கொண்ட இளைஞர் படை இதில் இணைந்து வீறுநடை போட்ட வரலாற்றினை பெருமிதத்தோடு குறிப்பிடும் பெரியசாமி, காலவோட்டத்தில் குள்ளமதியுடையோரால் முடக்கப்பட்ட விதத்தினை வேதனையோடு குறிப்பிடுகின்றார்.

தொழிலாளரின் விமோசனத்திற்காகப் போராட்டப் பாதையில் பயணித்த ஓர் அமைப்பினை குறுமதியினர் முடமாக்கிய விதத்தினை ஆவேசத்தோடு எடுத்துரைத்த பெரியசாமியின் செயற்பாட்டிலிருந்து நாம் பல போதனைகளைப் பெற்றுக் கொள்கின்றோம்.

பெருந்தோட்டத் துறைதொழிற்சங்க இயக்கத்திற்கும், அரசியலுக்கும் இடதுசாரி கண்ணோட்டத்தினைக்கொடுத்ததாகபேராசிரியர் குமாரிஜெயவர்தன குறிப்பிடும் ஏ.அகிஸ் நேர்மையான தொழிற்சங்கப் பணியினை சிலாகிக்கும் பெரியசாமி சேவையாளர்களையும், போராட்டக்காரர்களையும் சரியாக இனங்காட்டுகின்றார்.

இத்தகைய விழிப்புணர்வு போராட்டங்களைப் பட்டியலிடும் பெரியசாமி, கம்பளையில் முதன்முதல் கூட்டப்பட்ட மாநாடு பின்னர் கண்டி, பதுளை, ஹட்டன், கொழும்பு, நுவரெலியா, நாவலப்பிட்டி, இரத்தினபுரி, மாத்தளை, வத்துகாமம் ஆகிய இடங்களில் 1955வரை நடத்தப்பட்ட மாநாடுகளைப் பற்றி உற்சாகத்தோடு குறிப்பிடுகின்றார்.

ஒடுக்குமுறையால் துவண்ட தொழிலாளர்கள் போராடத் தொடங்கிய 1940களில் அவர்களுக்கு ஆதரவுக் குரல் எழுப்பிய பாவாணர் குழுவொன்று தோற்றம் பெற்றது. பாட்டாளிகளின் போராட்டங்களுக்குப் பரணிபாடிய பாவாணர்களில் பெரியசாமியும் ஒருவர். நவஜீவன், வீரகேசரி, தினகரன், சுதந்திரன் ஆகிய பத்திரிகைகளில் அவரது கவிதைகள் (பாடல்கள்) பிரசுரிக்கப்பட்டுள்ளன. பாரதிதாசனின் கம்பீரக் குரலாக ஒலிக்கும் இக்கவிதைகள் ஆவேசத் தொனி கொண்டவை.

ஐம்பத்திரெண்டுஆண்டுகளே வாழ்ந்துள்ள பெரியசாமி பெருந்தோட்டப் பகுதிகளின் பல பகுதிகளிலும் தொண்டாற்றியுள்ளார். இதன் மூலம் தொழிலாளர்களின் துன்ப துயரங்களையும், தன்னெழுச்சிப் போராட்டங்களையும் களங்களில் நேரடி அனுபவங்களாகப் பெற்றுள்ளார். அவர் யாசித்த, எதிர்பார்த்த சமத்துவ சமூக மலர்ச்சிக்கான குரல் ஒலித்துக் கொண்டே இருக்கின்றது.



# தேசப்பற்றில் சமூகங்களை இணைக்கும் கட்சியின் பயணம் நிச்சயம் வெற்றியளிக்கும்

## பாராளுமன்ற உறுப்பினர் மர்ஜான் பளீல்

பிரதமர் மஹிந்தவின் மீதான விசுவாசம், தனிப்பட்ட நட்புக்களின் பலத்தில் சமூகத்துக்கு தேவையானதை சாதித்து வருவதாக பாராளுமன்ற உறுப்பினர் மர்ஜான் பளீல் தெரிவித்தார். தினகரன் வார மஞ்சரிக்கு அவர் வழங்கிய நேர்காணலில் தெரிவித்ததாவது ....

**கேள்வி; ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தேசியப்பட்டியல் உங்களுக்கு வழங்கப்பட்டதன் பின்புலம் என்ன? எதற்காக, இப்பதவி உங்களுக்கு தரப்பட்டது?**

**பதில்;**நான், பிரதமர் மஹிந்தவின் விசுவாசி. அவரது நீண்டகால நட்பினால் இந்த விசுவாசம் வளர்ந்துவிட்டது. அரசியலில் எவரிடமும் விசுவாசத்தை,குறிப்பாக முஸ்லிம் தலைவர்களிடம் அண்மைக்காலமாக இந்த விசுவாசம் இல்லாமற்போனது பற்றிக் கவலையடைந்த அவர், அன்பின் அடையாளத்துக்காக இப்பதவியை எனக்குத் தந்தார்.

**கேள்வி; கட்சி தாவிச்சென்ற, அல்லது அணி மாறிய முஸ்லிம் தலைவர்கள் பற்றித்தான், அவர் இவ்வாறு சொல்கிறார்.அவ்வாறானால், இவ்வாறு மாறிச்சென்றோரிடம் நியாயமான காரணங்கள் இருந்ததாக நீங்கள் கருதவில்லையா?**

**பதில்;** நியாயங்கள் இருக்கலாம். அந்த நியாயங்களைச் சரிப்படுத்த துரோகம் செய்யக் கூடாதில்லையா. பிடிக்கவில்லை என்றால், பதவிகளை துறந்துவிட்டுத்தானே செல்ல வேண்டும். அமைச்சு, சொகுசு, பதவிகளை அனுபவிப்பது கடைசியில் கழுத்தறுத்துவிட்டு கட்சி தாவுவது இதைத்தான் துரோகம் என்கிறோம்.

**கேள்வி; முஸ்லிம் தலைமைகள் அதாவது முஸ்லிம்களுக்கென்று தனிக்கட்சிகள் அவசியம்தானா இந்த காலகட்டத்தில்?**

**பதில்;** அதைப்பற்றி நான், கருத்துச் சொல்ல விரும்பவில்லை. இக்கட்சிகளில் இணையுமாறு என்னை எவரும் அழைக்கவுமில்லை.

**கேள்வி? எம்.பியான பின்னர்,எதைச் சாதித்திருக்கிறீர்கள்?**

**பதில்;** பாராளுமன்ற உறுப்பினர் பதவியேற்று ஒரு வருடம் பூர்த்தியாவதற்குள் களுத்துறை மாவட்டத்திலுள்ள எட்டு முஸ்லிம் பாடசாலைகளை தேசிய பாடசாலையாக தரமுயர்த்தி உள்ளேன்.

கடந்த இருபது வருடங்களில்,எந்த முஸ்லிம் தலைவர்களாலும் முடியாதுபோன காரியமிது. அரசியல் பலத்தால் அல்ல, பிரதமர் மஹிந்தவுக்கு என்னிடமுள்ள அன்பால் அடைந்த சாதனை இது.

**ராஜபக்ஷக்களை அகற்ற வேண்டிய தேவை (2015) சர்வதேச சக்திகளுக்கும், நமது நாட்டில் சிலருக்கும் இருந்திருக்கலாம். இந்த சக்திகள்தான், இந்த அசம்பாவிதங்களை அரசியல் சந்தையில் மூலதனமாக்கின.**

**கேள்வி; பிரதமர்,உங்களுடன் இவ்வளவு அன்பாக இருக்கிறார் என்கிறீர்கள், இந்த அன்பை வைத்து,கொரோனா ஜனாஸாக்கள் எரிக்கப்பட்டதையும் நிறுத்தியிருக்கலாமே?**

**பதில்;**இந்த விடயம்பற்றி பல தடவைகள் பிரதமரிடம் பேசினேன். பயன் உடனடியாகக் கிடைக்காதிருந்தது அப்போது. இதனால், அரசியல் உறவை விலக்கி, தனிப்பட்ட உறவை மாத்திரம் பிரதமருடன் பேணிக்கொள்ள முடிவு செய்தேன். அந்த நேரம், இதுபற்றிக் கேள்வியுற்ற எனது முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் என்னைச் சந்தித்து பல ஆலோசனைகள் கூறினார். சமூகத்துக்கு எதையாவது செய்வதற்கு நீங்கள்,அரசாங்கத் தில் இருங்கள் என்றனர்.பிரதமரின் உறவில் இன்னும் பலதை உங்களால் சாதிக்க கிடைத்தால் நன்மைதானே என்று விளக்கினர்.

**கேள்வி; பத்து வருடங்கள் பூரணமான எம்பிக்களுக்குத்தான் ஓய்வூதியம் என்று பட்ஜட்டில் அறிவிக்கப்பட்டுள்ளதே, இது பற்றி என்ன சொல்கிறீர்?**

**பதில்;** மக்களுக்கு சேவைகள் செய்ய வந்தோருக்கு எதற்கு சலுகைகளும், ஓய்வூதியமும்.அரசியல் களத்தில் ஓயாது உழைத்துக்கொண்டிருப்பதே எமது பணி. சொந்தச் சொத்துக்களை மக்களுக்கு செலவு செய்வதுதான் மக்கள் தொண்டு.

## சொந்தச் சொத்துக்களை மக்களுக்கு செலவுசெய்வதுதான் மக்கள் தொண்டு

இதைத்தான்,மூத்த முஸ்லிம் தலைவர்கள் செய்துகாட்டிச் சென்றுள்ளனர்.

**கேள்வி; உங்கள் பிரதேசத்தில் நடந்த அசம்பாவிதங்களை வைத்துத்தான், முஸ்லிம்களின் எதிரிகளாக ராஜபக்ஷக்கள் காட்டப்பட்டுள்ளனர், இருந்தபோதும் பேருவளை நகர சபை,நீங்கள் நிறுத்திய சுயேச்சை அணியின் வசம் வந்திருக்கிறதே?**


**பதில்;** இங்கு நடந்த சில அசம்பாவிதங்களுக்கு அரசியல் சாயம் பூசம்பட்டது. ஆட்சியிலிருந்து ராஜபக்ஷக்களை அகற்ற வேண்டிய தேவை (2015) சர்வதேச சக்திகளுக்கும்,நமது நாட்டில் சிலருக்கும் இருந்திருக்கலாம். இந்த சக்திகள்தான், இந்த அசம்பாவிதங்களை அரசியல் சந்தையில் மூலதனமாக்கின. இதை, எனது மக்களுக்கு நன்கு விளங்க வைத்தேன். என்னை மக்களும் நம்பினர். வெற்றியும் கிட்டியது.

**கேள்வி? ஸ்ரீலங்கா பொதுஜனபெரமுன பற்றி சுருக்கமாக,சொல்ல என்ன இருக்கிறது?**

**பதில்;**உண்மையில்,நாட்டுப்பற்றுக்கு அர்ப்பணிக்கும் கட்சி இது.வேற்றுமைவாதங்க ளை ஒழித்து,தேசப்பற்றில் சமூகங்களை இணைக்கும் இந்தக் கட்சியின் பயணம் நிச்சயம் வெற்றியளிக்கும்.

ஏ.ஜீ.எம்.தௌபீக்...

# எழுச்சி அரசியலிலுள்ள யதார்த்தங்கள் எடுகோள்களால் தீர்மானிக்கப்படுகின்றனவா?



சமூக எழுச்சி அரசியலுக்கு தடையாக இருப்பது எது? தனித்துவ கட்சிகளா? அல்லது பிரதேச அபிலாஷைகளா? இன்றைய நிலைமைகள் இதைத்தான் சிந்திக்கத் தூண்டுகின்றன. சில எம்.பிக்களின் பிரதேச அபிலாஷைகள், ஏன் தலைமைகளை பல வீனப்படுத்துகின்றன? இனமாக, சமூகமாக மக்களை ஒன்றுதிரட்டிய இந்த தலைமைகளுக்கு, பிராந்திய அபிலாஷைகளையும் அரவணைத்துப் பயணிக்க முடியாது போய்விட்டதா? இவைகள்தான் இன்றைய கேள்விகள்.

சில எம்.பிக்களுக்குள்ள தனிப்பட்ட அல்லது பிரதேச அபிலாஷைகள்தான், அடையாள அரசியலை மலினப்படுத்துவதாக சிலர் கருதுகின்றனர். அரசியலமைப்பின் இருபதாவது திருத்தம், இரட்டைப்பிரஜாவுரிமை, பட்ஜட் வாக்களிப்புக்களின் பின்னரே இந்தக் கருத்துக்கள் நிழலாடத் தொடங்கி உள்ளன. இதனால், இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின்னர், அடையாள அரசியல் அழிந்துவிடுமென்ற ஐயம் தலைமைகளுக்கு ஏற்பட்டுள்ளது. எனவே, மக்கள்தான் இந்த ஐயத்தை போக்க வேண்டியுள்ளது. தேசிய அரசியல் கணிப்பீடுகளில், தலைமைகள் விட்ட தவறுகள் எழுச்சியரசியலை வீழ்த்தி உள்ளதாகத்தான் இந்த வினைகளைக் கருத நேரிடுகிறது. ஏனெனில், உரிமை, எழுச்சி அரசியலுக்காக எந்த இழப்புக்களையும் சகித்துக்கொள்ளும் மனநிலைகளில் மக்கள் இல்லையே! இருந்தால் தலைமைகளுக்கு எம்.பிக்கள் கட்டுப்பட்டிருப்பரே. ஆகவே, சமூக அரசியலில் விலகி, அபிவிருத்தி அரசியலுக்கு முன்னுரிமை வழங்கும் அரசியலைத்தான் தலைமைகள் தெரிவுசெய்ய வேண்டி வருமோ? இழப்புக்களைப் பொறுத்துக்கொண்டு பயணிக்கும் மனநிலைகள் மக்களுக்கு இல்லாத நிலையில், தலைமைகளுக்கு இருந்து என்ன பலன்? சிறுபான்மை தளங்களில் எதிரொலிப்பது இவைகள்தான்.





எதிர்ப்புக்களை வெளிப்படுத்தி, என்ன அரசாங்கத்தையா கவிழ்க்க முடியும்? வாக்களிப்பில் பங்கேற்று, வரப்போவதை அள்ளிக் கொள்ளத்தான் இந்த வியூகம் என்கின்றனர் ஆதரவளித்த எம்.பிக்கள். மறுபுறமோ, சிறுபான்மை சமூகங்களுக்கு எதிரான சிந்தனைகளை இயன்றவரை எதிர்ப்பதுதான், சர்வதேச மட்டத்தில் சில செய்திகளைச் சொல்ல உதவும் என்கின்றன சிறுபான்மை தலைமைகள். இந்த இயங்கு தளத்துக்கு அவசியப்படுவது கட்சிகளின் கட்டுக்கோப்புக்கள்தான். இதில்தான், சமூகத்தின் எழுச்சி அடையாளப்படுவதாகவும் இந்த மிதவாதத் தலைமைகள் சொல்கின்றன. அரசாங்கத்தின் பலம் மூன்றிலிரண்டு கெட்டியுடனுள்ளதை, களனிப்பாலத்தை திறந்து வைத்து உரையாற்றிய ஜனாதிபதியின் உரையும், பட்ஜட் வாக்கெடுப்பும் நிரூபித்துள்ளதால், அரசு விழும் அல்லது கவிழும் என்ற சிலரின் அங்கலாய்ப்புக்கள், அர்த்தமிழக்கும் சந்தர்ப்பங்கள்தான் அதிகமாகி வருகின்றன.

மறுபுறம், ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 14 ஆசனங்களையும் சேர்த்தே அரசுக்கு இந்தப் பலம் என்கிறார் முன்னாள் ஜனாதிபதி. இவ்வாறு, இருபுறங்களிலும் சமப்படும் விவாதங்கள், எடுகோள்கள் மற்றும் யதார்த்தங்களே, முஸ்லிம் தலைமைகளையும் எம்.பிக்களையும் எதிரும் புதிருமாக புறப்பட வைத்துள்ளன. இது இப்போதைக்கு ஆரோக்கியமாக இருப்பினும், எப்போ ஒரு நாள் அதலபாதாளத்தில் சமூகத்தை தள்ளும் என்ற தலைமைகளின் வியாக்கியானங்கள் இப்போதைக்கு எடுபடப்போவதும் இல்லை.

மக்கள் இல்லாத மாநிலம் எதற்கு? அபிவிருத்தி இல்லாத அரசியல் யாருக்கு? என்று மக்களும் பொது அமைப்புக்களும் கூறிய அறிவுரைக்கு ஏற்ப செயற்பட்டுள்ளதாக, இந்த எம்.பிக்கள் கூறுவது தலைமைகளை சமாதானப் படுத்தவா? அல்லது அரசாங்கத்திடம் தங்கள் பலங்களை வெளிப்படுத்தவா? இவ்வாறு, மக்களது பலங்களை இந்த எம்.பிக்களல்லாது தலைமைகள்தான் நிரூபிக்க வேண்டும். இவ்வாறு செய்யத் தவறின், தனித்துவ தலைமைகள் தனிமைப்படுவது தவிர்க்க முடியாது போகும். இத்தலைமைகள் இவ்வாறு தனிமைப் படுவது, அரசுக்கு வாக்களித்த எம்.பிக்களின் கரங்களையே பலப்படுத்தும்.

ஏன், அரசாங்கமும் இவர்களையே பலப்படுத்தும். கடந்த காலங்களில், இந்தத் தலைமைகளால் இந்த அரசு அனுபவிக்க நேர்ந்தவைகளை இனவாதிகள் அடிக்கடி தூக்கிப்பிடிப்பதை நிறுத்தும் வரைக்கும், பேரம் பேசும் அரசியல் பேசாமடந்தையாகத்தான் போகுமோ தெரியாது!

இன்னுமொன்றும் இதில் உள்ளது. கொள்கை மாறி, கட்சி தாவி, கடைசியாக தனித்துவமும் இழந்து வரும் இந்த எம்.பிக்களுக்கு, தேர்தல் காலத்தில் மக்கள் வழங்கும் சன்மானமிருக்கிறதே! அதுதான் இவர்களின் அரசியலையும் தீர்மானிக்கும். இதற்காகத்தான் இவர்கள் உழைக்க வேண்டியிருக்கும்.

சார்ந்து செல்லும் அரசியலும், சமயோசித சிந்தனையுமா சமூகத்துக்கு தேவையானவை? அல்லது தனித்துவமும், சமூக அடையாளமுமா? என்பதை, அவரவர் தளத்திலிருந்து முஸ்லிம் எம்.பிக்களும், தலைமைகளும் உணர்த்த வேண்டியிருக்கும். எதுவாக இருந்தாலும், இவர்கள் செய்யப்போவது, இருப்பதையும் இல்லாமலாக்காதிருக்க வேண்டும் என்பதுதான் பொதுவானோரின் பிரார்த்தனை.

# அரசுசார் வெளிக்கள உத்தியோகத்தர்களின் ஆற்றலை மேம்படுத்தும் மட்டு. மாவட்ட மனித உரிமைக்கும் அபிவிருத்திக்குமான நிலையம்

மட்டக்களப்பு மாவட்ட மனித உரிமைக்கும் அபிவிருத்திக்குமான நிலையம், அரசுசார் வெளிக்கள உத்தியோகஸதர்களின் ஆற்றலை மேம்படச் செய்தல் என்ற தொனிப் பொருளில் வாகரைப் பிரதேச செயலகத்தில் ஒரு பயற்சிப்பட்டறையை நடத்தியது. வாகரைப் பிரதேசத்தில் இடம்பெறும் சட்டவிரோத மண் அகழ்வு, பிற மாவட்டத்தவர்கனை திடுதிப்பென்று குடியேற்றும் நிகழ்வுகள் ஆகியன இப்பயிற்சிப்பட்டறையில் முக்கிய இடத்தை பிடித்துள்ளது.

இதன் பிரதான நோக்கம் வாகரை பிரதேச செயலத்தின் வெளிக்கள உத்தியோகத்தர்களின் அறிவையும் ஆற்றலையும் மேம்படச் செய்வதாகும். வாகரை பிரதேச செயலகத்தின் வெளிக்கள உத்தியோகத்தர்கள் தங்களது பிரிவுக்குட்பட்ட மக்கள் அவ்வப்போது சந்திக்கும் அல்லது எதிர்பார்க்கும் பிரச்சினைகள் தொடர்பாகவும் அதன் நியாயாதிக்க வரைமுறைகள், வரையறைகள் தொடர்பாகவும் அதற்கான நடவடக்கைகள் பற்றியும் அறிய முற்படுகிறார்கள். அவர்களின் தேவையை பூர்த்தி செய்வது மட்டக்களப்பு மாவட்ட மனித உரிமைக்கும் அபிவிருத்திக்குமான நிலையத்தின் கடப்பாடு.

கிராமிய மட்டத்தில் மக்களுக்கு சேவைகளை வழங்கி வருகின்ற கிராம சேவகர்கள் சமுர்த்தி உத்தியோகத்தர்கள், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள, காணி உத்தியோகத்தர்ள், சிறுவர் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பெண்கள் அபிவிருத்தி உத்தியோகஸ்தர்கள், வெளிநாட்டு வேலைவாயப்பு அபிவிருத்தி உத்தியோஸ்தர்கள் என்போர் அடங்குவர்

இபயிற்சிப்பட்டறை ஒரு நாள் காலஅளவைக் கொண்டதாகும் காலையில் தொடங்கி பின்னேரம் முடிவடைந்துவிடும். இதனால் அவர்களின் நாளாந்தக் கடமைகளுக்கு எந்தவொரு இடைஞ்சலும் ஏற்பட இடமில்லை. அத்தோடு நிர்வாகச் சிக்கலையும் ஏற்படுத்த மாட்டாது

**எடுத்தாளப்பட்ட விடயங்கள்**

இப்போதைய காலத்தில் சிறுவர்கள் பல்வேறு அடக்கு முறைக்குள்ளும்,துஷ் பிரயோகங்களுக்கும் உட்பட்டு அவஸ்தைப்படுவதை ஊடகங்கள் படம்பிடித்துக் காடடி வருகின்றன. சிறுவர்களின் பிரச்சினைகள் பிரதேசத்திற்குப் பிரதேசம் வேறுபட்டவை. ஆதலால் சிறுவர்களின் உரிமைகளும் அது தொடர்பாக எழும் பிரச்சினைகளும் அதற்குரிய தீர்வுக்கான செயற்பாடுகளும் முக்கியமானவை.

வாகரைப் பிரதேசத்தைப் பொறுத்தவரையில் மகப்பேறும், குடும்ப வன்முறையும் தொடர்பான பிரச்சினைகள் அதிகம் தலைதூக்குகின்றன ஆதலால் அது தொடர்பான சட்டத் தேவைகளையும், அதனோடு தொடர்புபட்ட நியமங்களையும் வெளிக்கள உத்தியோகத்தர் எவ்வாறு பிரயோகிக்க முடியும் என்பதை எடுத்துக்காட்ட வேண்டிய தேவைப்பாடு அங்கே தோன்றியிருக்கிறது ஆதலால், மகப்பேறும், குடும்ப வன்முறையும் அதற்குப் பின்னரான செயற்பாடுகளும். அது தொடர்பாக எழும் பிரச்சினைகளும் அவற்றின் தீர்வுக்கான செயற்பாடுகளும் என்ற விடயதானம் புகுத்தப்பட்டுள்ளது.

இப்பயிற்சிப்பட்டறைக்கு வளவாளராக வந்து அறிவூட்டிய உயர் நீதிமன்ற சட்டத்தரணி வி.எஸ்.நிரஞ்சன். சிறந்த ஆற்றல், அனுபவம் கொண்டவர். ஒரு பிரச்சினை ஒரே நேரத்தில் சமூக ரீதியாகவும், சட்ட ரீதியாகவும் எவ்வாறு கையாளப்பட வேண்டும் என்று நுணுக்கமாக அறிவூட்டினார்.

வளவாளர் நிகழ்வில் பங்கு பற்றியோரிடமிருந்து அவர்கள் சந்திக்கின்ற பிரச்சனைகளை அறிந்து அவற்றை தொகுத்தெடுத்து அவை ஒவ்வொன்றிற்குமான செயற்பாடுகளை சட்டத்தின் வரைமுறைகளுக்கும், வரையறைக்கும் ஏற்ப அவர்களுக்கு விளக்கினார். இதனூடாக, நிர்வாக அறிவும், சட்ட அறிவும் அவர்களுக்கு ஒருங்கே ஊட்டப்பட்டது.

மகவேற்பு, மகப்பேறு தொடர்பாக எப்போதும் குழந்தையின் எதிர்காலம் தொடர்பாகவே நீதி முன்னுரிமைப்படுத்தப்படும், குழந்தையின் பிறப்பை பதிவதற்கு, தாயினதும், தகப்பனினதும் பெயர்கள் தேவை. அதனை குழந்தையின் தாயே வழங்க வேண்டும். பிறப்பு நடந்து 42 நாட்களுக்குள் பிறப்பு பதியப்படுதல் வேண்டும். குழந்தையின் தாயும் தந்தையும் 21வயதுக்கு மேற்பட்டவராய் இருத்தல் வேண்டும்.

எஸ்.எஸ்.தவபாலன்...
புளியந்தீவு குறூப் நிருபர்.

# புலம்பெயர் முதலீடுகளை இலகுவாக்க சிறப்புப் பொறிமுறைகள் அவசியம்

**ஜனாதிபதியோ அரசாங்கத்தின் சிறப்புக்குழுவொன்றோ கண்காணிக்கும் பொறிமுறைகள் அவசியம்**

**உதவிப் பங்களிப்பாளர்களைப் பக்குவமாக வழிப்படுத்தி, அவர்களுடைய பங்களிப்புகளை முதலீடுகளாக மாற்றுவதற்கு முயற்சிக்க வேண்டும்.**

நாடு பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ளது என்பது எல்லோரும் அறிந்ததே. இதை எப்படி எதிர்கொள்வது? எப்படிச் சீர்செய்வது என்பதே இன்றைய முதல் பிரச்சினை. ஏனென்றால், பொருளாதார நெருக்கடியை நாம் சரியான முறையில் எதிர்கொண்டு அதைக் கடக்கவில்லை என்றால் மிக மோசமான எதிர்விளைவுகளையே சந்திக்க வேண்டியிருக்கும். பஞ்சமும் பட்டினியும் கூடத் தலைவிரித்தாடத் தொடங்கி விடும். உற்பத்தித்துறைகள் வீழ்ச்சியடையும். ஆகவே இதற்கு பல வகையான மாற்றுத்திட்டங்கள் உடனடியாகத் தேவை. முக்கியமாக முதலீடுகளும் உற்பத்திகளும் மிகமிக அவசியமானவை.

இதை மனதிற் கொண்டோ என்னவோ அரசாங்கமும் முதலீட்டாளர்களை அழைத்துக் கொண்டிருக்கிறது. முக்கியமாக "புலம்பெயர்ந்திருக்கும் மக்கள் நாட்டுக்கு வந்து முதலீடுகளைச் செய்யுங்கள். அதற்கு வேண்டிய ஏற்பாடுகளையும் அனுசரணைகளையும் அரசாங்கம் செய்து தரும்" என்று ஜனாதிபதி தொடக்கம் அமைச்சர்கள் வரையில் அழைப்பு விடுத்திருக்கிறார்கள். இந்த அழைப்பை 2009 க்குப் பின்னர் ஆட்சியிலிருந்த ஒவ்வொரு அரசாங்கமும் விடுத்திருக்கிறது. ஒவ்வொரு ஜனாதிபதியும் விடுத்திருக்கிறார்கள்.

ஆனால் இந்த அழைப்பை ஏற்று இங்கே வந்து முதலீடுகளில் ஈடுபட்டிருப்போர் மிகமிகக் குறைவு. விரல் விட்டு எண்ணி விடக்கூடியவர்கள் என்று சொல்வார்களே, அந்தளவு தொகையினர்தான் வந்து சிறிய அளவிலான முதலீடுகளைச் செய்திருக்கிறார்கள். இவர்களும் பல நெருக்கடிகளை எதிர்கொண்டவாறே தமது முயற்சிகளைத் தொடர்கிறார்கள்.

இவர்கள் உற்சாகமாக இங்கே இயங்கக் கூடிய ஒரு நிலை – அரசாங்கம் அழைக்கும்போது சொல்வதைப்போல இலகுவான நடைமுறைகள் – இருக்குமானால் அதைப் பார்த்து விட்டு ஏனையவர்களும் நாட்டுக்கு முதலீடுகளுடன் வரக்கூடியதாக இருக்கும்.

ஆனால், துரதிருஷ்டவசமாக அந்த மாதிரி ஒரு சுமுக நிலை இல்லை. இங்கே ஏகப்பட்ட பிரச்சினைகள், குழப்பங்கள், நெருக்கடிகள், அலைச்சல்கள், அல்லற்படுத்தல்கள், கேள்விகள், விசாரணைகள், தடைகள்

முதலீட்டுக்கான அனுமதியைப் பெறுவது தொடக்கம் அதற்கான இடத்தைத் தெரிவு செய்வது வரையில் சகல மட்டங்களிலும் பிரச்சினைகள், இழுத்தடிப்புகள், பொருத்தமற்ற காரணங்கூறுதல்கள்...

மேலும் கொமிசன் எதிர்பார்க்கைகள் வரையில்..

சில சிறிய உதாரணங்களை இங்கே சொல்லலாம். புலம்பெயர்ந்த மக்களின் கட்டமைப்பொன்று இலங்கையில் கடந்த பத்து ஆண்டுகளாகப் பல்வேறு வாழ்வாதார உதவித்திட்டங்களை மேற்கொண்டு வந்தது. கூடவே ஆதரவற்ற நிலையில் உள்ளோருக்கான வீடமைப்பு, பின்தங்கிய பிரதேசங்களில் மற்றும் வறிய நிலையில் உள்ளோருக்கான கல்விக்கான நிதியளிப்புகள் என. இதை அந்தக் கட்டமைப்பு முறைப்படி இலங்கையில் பதிவு செய்யப்பட்ட வழிமுறைகளுக்கூடாகவே செய்து வந்தது. இன்னும் செய்து கொண்டிருக்கிறது.


புலம்பெயர் தமிழர்களுடன் சுரேன் ராகவன் எம்.பி

இதன் அடுத்த கட்டமாக அவர்கள் (இந்தக் கட்டமைப்பினர்) இலங்கையில் முதலீடுகளைச் செய்ய விரும்பினர். அந்த முதலீடானது இங்கே சூழலில் காணப்படும் வளங்களைப் பயன்படுத்தும் உற்பத்தி முயற்சியாகும். இதில் இரண்டு நன்மைகள் உருவாகும் எனத் திட்டமிடப்பட்டது. ஒன்று, வளங்களை உற்பத்திப் பெறுமானமாக்குவது. இரண்டாவது, தொழில்வாய்ப்புகளை உருவாக்குவது. வேலை வழங்குவது.

இவ்வளவுக்கும் இதனுடைய லாபம் முழுவதும் இந்த மண்ணிலேயே – இந்த நாட்டிலேயே செலவழிக்கப்படும். இந்த உற்பத்தி மையத்தை மேலும் விரிவாக்குவது. கூடவே இதில் பெறப்படும் வருவாயின் மூலமாக சமூகத் தேவைகளை நிறைவேற்றுவது.

ஆக முதலீட்டுக்கான தொடக்க நிலை நிதியையும் அதன் இயங்கு நிலையை உருவாக்குவதுமே இவர்களுடைய – அந்தக் கட்டமைப்பின் – பணியாகும்.

இதற்காக நிலம் ஒன்று தனியாரிடமோ அரச நிலமாகவோ எதிர்பார்க்கப்பட்டது. அதன்படி விண்ணப்பங்களை மாவட்ட செயலர்கள், ஆளுனர், பிரதேச செயலர்கள் என சம்மந்தப்பட்ட பல தரப்பினரிடத்திலும் அவர்கள் கொடுத்தனர்.

காணி வழங்கப்படலாம் என்ற நற்சமிக்ஞையும் காட்டப்பட்டது. ஆனால் இரண்டு ஆண்டுகளுக்கு மேலாகியும் இன்னும் காணி வழங்கப்படவில்லை. இந்த மாதிரியான இழுத்தடிப்புகளின் பின்னணி, அதற்

**கருணாகரன்...**

கான காரணங்களை நாம் இங்கே விளக்கத் தேவையில்லை. அதைப் புரிந்து கொள்ள முடியும்.

ஆனால், பிரச்சினை – நடைமுறை இப்படித்தான் உள்ளது.

இதைப்போல இன்னொரு முதலீட்டாளரின் கதையையும் இங்கே கூறலாம்.

கனடாவிலிருந்து வந்து இங்கே நாட்டில் உற்பத்தித்துறையில் முதலீட்டைச் செய்வதற்கு முயற்சித்தார். குறிப்பாகப் பனை, தென்னை வள மூலப்பொருட்களில் உற்பத்திகளைச் செய்வது. ஆனால், நடைமுறையில் அதை மேற்கொள்வதற்கு ஏகப்பட்ட பிரச்சினைகள். பனை அபிவிருத்திச் சபையின் அனுமதி, பனை ஆய்வு நிறுவனத்தின் அனுமதி, தென்னைச் சபையின் அனுமதி, பிரதேச சபை, பிரதேச செயலகம், மாவட்டச் செயலகப் பிரிவு,

கைத்தொழில் அமைச்சக அனுமதி, சுற்றுச்சூழல், பொதுச்சுகாதாரத் தரப்பு போன்றவற்றின் அனுமதி, உற்பத்தித் தரச் சான்றிதழ்கள்... இப்பப் பல தரப்புகளோடு தொடர்பு கொண்டு செயற்பட வேண்டியிருந்தது. இதில் அவர் பல நெருக்கடிகளைச் சந்தித்தார். சில தரப்புகள் முறையற்ற காரணங்களைச் சொல்லி இழுத்தடிப்புகளைச் செய்துள்ளன.

இவை நிர்வாக நடைமுறைகள் என்பதில் சந்தேகமில்லை. எந்த நாட்டிலும் இதிருக்கும். ஆனால், ஒரு திட்டத்தை மேற்கொள்வதற்கான File விரைவாக Move பண்ண வேண்டுமே.

16ஆம் பக்க தொடர்...

# சுமந்திரனுக்கெதிரான புலம்பெயர் தமிழர்களின் எதிர்ப்பு

சூழ்நிலைகளை புரிந்துகொண்டு வரும் நிலையில், தமிழ் தேசிய அரசியல் தலைமைகளின், வெற்று உணர்ச்சி அரசியல் பேச்சுக்களை நிராகரித்தும், தமிழ்

எதிர்க் கட்சி தலைவர் என்ற பதவிகளை ஒவ்வொன்றாக இழக்க ஆரம்பித்தனர்.

இதன் காணமாக வடக்கில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற ஆசனம் ஆறு என்ற நிலையை அடைந்துள்ளது.

ஈழத்தமிழர்களின் அரசியல் பரப்பில் பல ஏமாற்று வித்தைகளை காட்டி அரசியல் செய்த தமிழ் தேசிய கூட்டமைப்பு தமிழ் மக்களுக்கு அரசியல் விழிப்புணர்வகளை செய்ய தயங்கிய

பமுனை, இவ் அரசியல் நகர்வு தொடர்பாக தமிழ் மக்களுக்கு விளக்கம் அழிக்கப்படவில்லை இதன் தொடர்ச்சியே, எம்.ஏ.சுமந்திரன் தலைமையிலான குழு

பிற்கு கடிதம் வரைந்த கூட்டமைப்பு தமிழர் ஒன்றாக ஒற்றுமையாக செயற்படுவதாக தனது தந்திர அரசியலூடாக காட்டிக் கொண்டது.

தமிழ் மக்களின் அரசியல் தீர்வு பேச்சவார்த்தைக்கு தமிழ் தேசிய கூட்டமைப்பு அமெரிக்கா நோக்கி பயணமாகிய விவகாரம் மற்றைய தமிழ் கட்சிகளுக்கோ மற்றும் சிவில் அமைப்புக்களுக்கோ தெரியாத



## சர்வதேச நிகழ்ச்சி நிரலுக்குள் பலியாகிபோன

# இராஜதந்திரமற்ற தமிழரின் அரசியல்!!

இலங்கையில் தமிழ் மக்களின் உரிமைப் போராட்டம் அகிம்சை ரீதியாகவும், ஆயுதப்போரட்டம் ஊடாகவும், ஆரம்பித்து 70 வருடங்கள் கடந்து விட்ட போதும், தமிழ் அரசியல் தலைமைகள் எந்த விதமான தீர்வையும் தமிழ் மக்களுக்கு பெற்றுக் கொடுக்க முடியாத இராசதந்திரமற்ற அரசியலையே முன்னெடுத்து வருகின்றனர்.

இலங்கை மற்றும் சர்வதேச நாடுகளின் தந்திர அரசியல் நிகழ்ச்சி நிரலுக்கு எதிராக இராசதந்திர அரசியல் திட்டங்களை வகுக்க முடியாத தமிழ் அரசியல் தலைமைகள், அரசியல் களத்தில் தொடர் தோல்விகளையும், அரசியல் ஏமாற்றங்களையும், அவமானங்களையும் சந்தித்து வருகின்றார்கள்.

தமிழ் மக்களை பொறுத்தவரையில் புலிகளின் காலத்தில் அரசியல் குறித்து அலட்டிக்கொள்ளாத ஒரு நிலைமையே காணப்பட்டது. காரணம் புலிகளின் தமிழீழக் கொள்கையும் அதன் காரணமாக நடைபெற்ற தொடர் யுத்தம் மற்றும் படுகொலைகள், ஜனநாயக அடக்குமுறை காரணமாக தமிழ் மக்கள் தங்கள் அரசியல் குறித்து சிந்தித்திருக்கவில்லை.

ஆனால், இலங்கையில் உள்நாட்டு போர் 2009 இல் முடிவுக்கு கொண்டுவரப்பட்டதிலிருந்து கடந்த பன்னிரண்டு வருட காலத்தில் தமிழ் மக்கள் இலங்கை அரசியலின் சாத்தியமான யதார்த்தத்தையும் புரிந்துகொண்டு செயற்பட ஆரம்பித்துள்ளனர்.

ஈழத்தில் தமிழ் மக்கள் அரசியல் தலைமைகளின் சாத்தியமற்ற வாக்குறுதிகளை நம்பமறுத்து சமூகவலைத் தளங்களில் மக்கள் எதிர்வினையாற்றி வருவதும், தமிழ் தலைமைகளின் குறுந்தேசிய அரசியல் மரணத்தை தழுவி வருகின்றது.

தமிழ் தேசிய அரசியல் தலைமைகள் உரிமைகளை பெற்றுக்கொடுப்பதாக கூறி, தமிழ் மக்களின் அவலங்களிலிருந்து முன்னெடுத்த தந்திர அரசியல் அவர்களுக்கு 22 ஆசனங்களுக்கு மேல் பெற்றுக்கொடுத்து எதிர்க்கட்சி என்ற அந்தஸ்தையும் இலங்கை அரசியலில் பெற்றுக்கொடுத்திருந்தது.

இருந்தபோதும் இலங்கை மற்றும் சர்வதேச நிகழ்ச்சி நிரலுக்குள் அகப்பட்ட தமிழ் தேசிய தலைமைகள், தங்கள் சுயநல அரசியலை முன்னிறுத்திய காரணத்தினால், தமிழ் மக்களின் எந்தப் பிரச்சினைகளுக்கும் தீர்வினை பெற்றுக்கொடுக்க முடியவில்லை.

சர்வதேச இராசதந்திர நெருக்குவாரங்களுக்குள் காய்நகர்த்த முடியாத தமிழ் தேசிய தலைமைகள் தமிழ் மக்களுக்கு பொய்யான வாக்குறுதிகளை வழங்கியதன் காரணமாக தமது பாராளுமன்ற உறுப்பினர் மற்றும் தன் விளைவு தமிழ் தேசிய அரசியல் முடக்கத்தை நோக்கி பயணிப்பதையும், சர்வதேச அரசியல் சக்திகள் தமிழ் மக்களை வைத்து அரசியல் செய்து அதில் குளிர்காய்வதையும் காணக்கூடியதாக உள்ளது.

அமெரிக்கா மற்றும் இந்தியா இணைந்து ஏற்பாடு செய்த நிகழ்ச்சி நிரலுக்கு இலங்கையிலிருந்து தமிழ் சட்டநிபுணர் குழு ஒன்று இலங்கை பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தலைமையில் அமெரிக்கா நோக்கி பயணமாகியிருந்தது. இந்த விவகாரமானது சர்வதேச தமிழர் அரசியல் பரப்பில் முக்கிய விவகாரமாக மாறியுள்ளது.

இலங்கைத் தமிழ் மக்களின் அரசியல் தீர்வுகுறித்து, அமெரிக்கா மற்றும் இந்தியாவின் தலைமையில் பேச இருப்பதான கருத்தை சுமந்திரன் முன்வைத்திருக்கிறார்.

இங்கேதான் தமிழ் மக்களின் அரசியல் கேள்விக்குள்ளாக்கப்பட்டுள்ளது. தமிழ் மக்களின் அரசியல் தீர்வு என்பது கடந்த எழுபது வருட காலமாக எட்டப்படாத நிலையில், தமிழ் அரசியல் பரப்பில் சுமந்திரன் குழுவினரின் அமெரிக்கா பயணம் குறித்த பேச்சுவார்த்தைகள் நடைபெற்றிருக்கவில்லை, தமிழ் மக்களை நீக்கி புலிகள் எவ்வாறு தன்னிச்சையாக தமிழரின் அரசியலை கையிலெடுத்து அழித்தார்களோ, அதே போல் தற்போது தமிழருக்கான தீர்வை பெற்றுத்தரப்போவதாக சொல்லும் அரசியல் தலைமைகள் தான் தோன்றித்தனமாக செயற்பட்டு தமிழ் மக்களின் அரசியல் தீர்வை எதிரிகளின் தளத்தில் கையளிக்க முனைந்து நிற்கின்றனர்.

**ஏம்.ஜி.ரெட்னகாந்தன்...**

தமிழ் மக்களின் அரசியல் என்பது தமிழ் மக்களுக்கானது அது ஒரு கட்சிக்கோ ஒரு போராட்ட இயக்கத்திற்கோ சொந்தமானது இல்லை, அமெரிக்கா சென்று தமிழருக்கான அரசியல் தீர்வு குறித்து பேச்சுவார்த்தை நடத்த முனைந்துள்ள தமிழ் தலைமைகள் இலங்கையில் மாற்று அரசியல் கட்சிகளுடனோ அல்லது சிவில் சமூகமட்ட அமைப்புக்கள், புத்திஜீவிகளுடன் எந்தவிதமான கலந்துரையாடலிலும் ஈடுபட்டிருக்கவில்லை.

தமிழ் மக்களின் உரிமைகள் குறித்து அமெரிக்கா மற்றும் இந்தியாவின் தலைமையில் பேச்சு என்பது தமிழ் மக்களின் அரசியல்பாதையில் ஒரு மிகப்பெரும் அரசியல் திருப்பு கனடாவில் சந்தித்த அவமானத்திற்கு காரணமாக அமைந்துள்ளது.

புலிகளின் சாத்தியமற்ற தனித்தமிழீழம் தான் தமிழர்களுக்கான தீர்வு என்ற கொள்கையை வலிந்துள்ள புலம்பெயர் அமைப்புக்கள் சிலது, தற்போதைய சர்வதேச மற்றும் உள்நாட்டு அரசியல் சூழ்நிலைகளை கருத்தில் கொள்ளாது, பிற்போக்குத்தனமாக செயற்படுவதற்கு காரணமாக அமைந்துள்ளதானது, தமிழ் அரசியல் தலைமைகள் மக்கள் மத்தியில் அரசியல் விழிப்புணர்வு செய்யாமையும், மக்களின் கருத்துக்களை கேட்காமையும் காரணமாக அமைந்துள்ளது.

தமிழ் தேசிய கூட்டமைப்பிற்குள் ஒரு ஜனநாயக முறைமையற்ற நடைமுறையே இதுவரை காலமும் கையாளப்பட்டது. இதன் விளைவாக சில தமிழ் கட்சிகள் கூட்டமைப்பை விட்டு பிரிந்து சென்று தனி கட்சிகளை உருவாக்கி கொண்டனர். சர்வதேசத்தையும் தமிழ் மக்களையும் ஏமாற்றுவதற்காக தமிழ் கட்சிகள் சிலதை இணைத்துக்கொண்டு ஜெனிவா மனித உரிமைகள் அமைப் நிலையில், தமிழ் தேசிய கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் இதர கட்சிகளும் தங்களுக்கு இச்சம்பவம் குறித்து தெரிவிக்கப்படவில்லை என கைவிரிக்கின்றனர்.

தமிழ் மக்களின் தீர்வு தொடர்பாக புலிகள் ஆயுதமுனையில் எதிர் தரப்புக்களை எவ்வாறு துரோகி பட்டம் சுமத்தி அடக்கி, அழித்து செயல்பட்டார்களோ அதே போல் ஜனநாயக ரீதியாக செயற்படும் தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைமை சர்வதிகார போக்கில் தான்தோன்றித்தனமாக செயற்படுவதானது மீண்டுமொரு அரசியல் முட்டுச்சந்தை உருவாக்கும்.

தமிழ் தேசிய கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கூட்டுக்கட்சிகளுக்கு அமெரிக்க வெள்ளை மாளிகை பயணம் குறித்து அறிவிக்கப்படவில்லை என்றால் தமிழரசுக் கட்சி தன்னிச்சையாக இந்த முடிவை எடுத்துள்ளது என்ற முடிவிற்கு வர முடியும், ஆனால் தமிழரசுக்கட்சியை சேர்ந்த மக்கள் பிரதிநிகள் கூறுகிறார்கள், தங்களுக்கும் இந்த அரசியல் தீர்வு தொடர்பான பயணம் குறித்து அறிவிக்கப்படவில்லை என்று,

தொடர் 21ஆம் பக்கம் ...



# எஞ்சியிருக்கும் சுவாசத்தை பாதுகாக்கும் வனப் பாதுகாப்புக் கொள்கை

முன்னேற்றம் காணாதவர்கள் என்று கூறும் பண்டைக் கால மனிதர்கள், மரம் செடி கொடிகள், விலங்குகள் உட்பட இந்த பூமிக்கு அன்பு செலுத்தியது அசாதாரணமான பிணைப்புடனாகும்.

சுற்றுச்சூழலுடன் அந்த பிணைப்பின் தொடர்புகள் தவிர அழிவை ஏற்படுத்தும் எந்த ஒன்றும் அவர்களால் மேற்கொள்ளப்படவில்லை. தெரிந்து அல்லது தெரியாமல் அது உண்மையாகவே வனப் பாதுகாப்பிற்கே உதவிய நிலப் பயன்பாடாக இருந்தது.

அப்போது உலர் வலயத்தில் குடியேற்றங்கள் பொதுவாக இடம்பெற்றதோடு, அதற்கு இணையாக ஈர வலயங்கள் மற்றும் மலையகத்தில் குடியேற்றங்கள் குறைவாகவே இருந்தது. அதனால் அந்த பிராந்தியங்களின் காடுகள் மற்றும் நீர்ப்பிடிப்பு அதிகம் பாதுகாக்கப்பட்டது.

பிந்தைய காலத்தில் நாட்டின் இராச்சியம் ஈர வலய பிரதேசங்களுக்கு மாறிய சந்தர்ப்பத்தில் கூட பாதுகாப்பிற்கு காடுகள் அவசியமாக இருந்ததால் மலையக பிரதேசங்களில், பாரிய காடுகள் சூழப்பட்டு இருந்தது இதற்காக தாக்கம் செலுத்திய மற்றும் உதவிய மற்றொரு முக்கிய காரணமாக உள்ளது. காடுகள் என்பது அடிப்படையில் மன்னருக்கு சொந்தமான காணியாக இருந்ததாகும். என்றாலும் பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் பயிர்ச் செய்கைக்காக காடுகள் வெட்டவெளியாக்கப்பட்டதோடு, அரசின் தேவைக்காக மரக்கட்டைகள் பெற்றுக்கொள்வதும் நாடு முழுவதும் இடம்பெற்றது. பெறுமதி மிக்க மரக்கட்டைகளின் ஏற்றுமதி, அன்றைய காலத்தில் இந்த நாட்டுக்கு வருமானம் ஈட்டிய ஒரு முறையாகும்.

அன்று வரையில் பாதுகாப்பாக இருந்த ஈர வலயத்தின் காடுகள் வெட்டவெளியாக்கப்படுவது வேகப்படுத்தப்பட்டது மலை சார்ந்த பகுதிகளில் கோப்பி, தேயிலை மற்றும் இறப்பர் போன்ற பயிர்கள் விரிவடைய ஆரம்பித்த உடனாகும். அத்துடன் ஏற்பட்ட மாற்றங்கள் காரணமாக காடுகள் வெட்டவெளியாக்கப்படுவது கட்டுப்படுத்தப்பட வேண்டும் என்று பிரிட்டிஷ் ஆட்சியாளர்களுக்கு புரிந்தது. அதற்காக அரச அதிபர்களின் கீழ் வன அதிகாரிகள் நியமிப்பது 1870 காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டது. பின்னர் இலங்கை காடுகள் தொடர்பில் தயாரிக்கப்பட்ட காடுகள் தொடர்பான பரிந்துரைக்கு அமைய 1887 ஆம் ஆண்டு வனக் காப்பாளர் ஒருவர் நியமிக்கப்பட்டதுடன் வனத் திணைக்களம் அமைக்கப்பட்டு இது இடம்பெற்றது. இன்றாகும்போது, வன பாதுகாப்பு திணைக்களம் சார்ந்த சட்டமாக, வன கட்டளைச் சட்டம் உள்ளது. இன்று பயன்படுத்தப்படுகின்ற வன கட்டளைச் சட்டம் நிறைவேற்றப்பட்டது 1907 ஆம் ஆண்டிலாகும்.

எவ்வாறாயினும் அதற்கு முன்னர் இருந்த கொள்கைகளை விட எதிர்கால சந்ததியின் நன்மைக்காக காடுகளை பாதுகாப்பதை அடிப்படை நோக்கமாகக் கொண்டு "தேசிய வன பாதுகாப்பு கொள்கை" நிறைவேற்றப்பட்டது 1995 ஆம் ஆண்டில். தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டிருப்பதும் அந்த தேசிய வனப் பாதுகாப்பு கொள்கையாகும்.

ஆரம்பத்தில் காடுகளின் ஒரு பகுதி வனக் காப்பாளரின் பொறுப்பிலும், மற்றொரு பகுதி அரச அதிபரின் பொறுப்பிலும் இருந்துள்ளது. அதன் பின் 1904 ஆம் ஆண்டு சட்டவாக்க சபையின் அங்கீகாரத்துடன் இந்நாட்டின் அனைத்து காடுகளின் பொறுப்பு வன பாதுகாப்பாளரின் கீழ் வழங்கப்பட்டது.

இந்த முறை 1934 ஆம் ஆண்டில் மாற்றப்பட்டதோடு, அரச அதிபர் மற்றும் வனக் காப்பாளர் என்ற இரு தரப்புக்கும் வன நிர்வாகம் வழங்கப்பட்டது. என்றாலும் அவைகளின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக சட்டத்தை செயற்படுத்துவது அந்த இரு தரப்புகளினாலும் மேற்கொள்ளப்பட்டதால் சிக்கல்கள் ஏற்படவில்லை.



அதன் பின் 1952 ஆம் ஆண்டு உலர் வலயத்தின் 500 ஏக்கர் (200 ஹெக்டேயார்) மற்றும் ஏனைய பகுதிகளில் 50 ஏக்கர் (20 ஹெக்டேயார்) விடவும் அளவில் குறைந்த காடுகளை நிர்வகிப்பது, அரச அதிபரின் கீழ் வைக்கப்பட்டு எஞ்சிய அனைத்து காடுகளும் வனக் காப்பாளரின் கட்டுப்பாட்டின் கொண்டுவரப்பட்டது.

சுதந்திரத்தின் பின் இலங்கையில் காடுகளை வெட்டவெளி ஆக்குவதற்கு அபிவிருத்தித் திட்டங்களும் காரணமானது. விவசாய குடியேற்றங்கள் திட்டம், மகாவலி அபிவிருத்தித் திட்டம் போன்ற திட்டங்கள் இதில் அடங்கும். அதேபோன்று சேனைப் பயிர்ச்செய்கை உட்பட விவசாய செயற்பாடுகளுக்காக காட்டு நிலங்களை பயன்படுத்தியதும் அடங்கும். அதனால் எமது நாட்டின் காடுகளை பாதுகாப்பதற்கு பாதுகாப்பு இலக்குகளுக்கு அதிக அவதானம் செலுத்தப்படும் பிரதேசம் ஒன்று முக்கியமானதாகும்.

1995 இல் நிறைவேற்றப்பட்ட தேசிய வனத் துறை கொள்கைகள் தற்போது நடைமுறையில் இருந்தபோதும், 1998 ஆகும்போது வன நிர்வாகத்தில் ஏற்பட்டிருக்கும் சிக்கல்கள் காரணமாக, அப்போதைய ஜனாதிபதியின் ஆலோசனைக்கு அமைய பிரதேச செயலாளர்களின் கட்டுப்பாட்டில் இருந்த காட்டு நிலங்களின் அளவு மட்டுப்படுத்தப்பட்டது. அதன்படி, உலர் வலயத்தில் 200 ஏக்கர் (80 ஹெக்டேயார்) மற்றும் ஈர வலயத்தில் 20 ஏக்கர் (8 ஹெக்டேயார்) விட அளவில் குறைந்த காடுகள் மாத்திரம் பிரதேச செயலாளர்களின் கட்டுப்பாட்டில் கொண்டுவரும் 05/98 ஆம் இலக்கம் கொண்ட சுற்றுநிருபம் 1998.07.01 ஆம் திகதிய வனங்கள் மற்றும் சுற்றுச்சூழல் அமைச்சினால் வெளியிடப்பட்டது.

பின்னர் வனப் பாதுகாப்பிற்காக 5/2001 சுற்றுநிருபத்தின் மூலம் பிரதேச செயலாளர்களின் கட்டுப்பாட்டில் இருந்த அனைத்து எஞ்சிய காடுகளின் நிர்வாகம், வன பாதுகாப்பு திணைக்களத்திடம் வழங்கப்பட்டது. அதன்படி எஞ்சிய காடுகள் தேசிய வனக் கொள்கைகளை சார்ந்து நிர்வகிப்பது, மேம்படுத்தல் மற்றும் பாதுகாப்பது வனப் பாதுகாப்பு திணைக்களத்தில் வழங்கப்பட்டது. அந்தக் காடுகளின் அறிவுபூர்வமான முகாமைத்துவம், வனப் பாதுகாப்பு திணைக்களத்திற்கு வழங்கப்பட்டபோதும் அவைகளின் பாதுகாப்பிற்காக மாவட்டச் செயலாளர் மற்றும் பிரதேச செயலாளர்களுக்கு வன கட்டளைச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களை செயற்படுத்த முடியுமாக இருந்தது.

அதேபோன்று அபிவிருத்தி செயற்பாடுகளுக்காக அவைகளுக்கு சொந்தமான ஏதாவது ஒரு காணியை விடுவிப்பது அவசியமாக இருந்தால், அதற்காக எடுக்க வேண்டிய நடவடிக்கைகளும் அறிமுகம் செய்யப்பட்டிருந்தது.

2006 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட 02/2006 சுற்றுநிருபத்தின் மூலம், அபிவிருத்தி செயற்பாட்டுக்காக தேவையான காணியை விடுவிக்கும் முறை அறிமுகம் செய்யப்பட்டிருந்தது.

**எஞ்சிய காடுகள் தொடர்பிலான புதிய சுற்றுநிருபம்**

மேற்குறிப்பிட்ட சுற்றுநிருபத்திற்கு பதில் 2020 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட 1/2020 கொண்ட சுற்றுநிருபத்திற்கு அமைய வனப் பாதுகாப்புத் திணைக்களம் மற்றும் வன ஜீவராசிகள் திணைக்களம் அல்லது வேறு அரச நிறுவனம் ஒன்றின் கீழ் சொந்தமாகாத எஞ்சிய காடுகள் பொருளாதார மற்றும் வேறு நன்மை பயக்கும் செயற்பாடுகளுக்கு பயன்படுத்துவதற்கு மாவட்ட மற்றும் பிரதேச செயலாளர்களுக்கு முடியுமான வகையில் சட்டத்தில் திருத்தம் கொண்டுவரப்பட்டுள்ளது.

இவ்வாறு வேறு பணிகளுக்காக பயன்படுத்த முடியாத நிலப் பகுதிகள் பத்து பிரிவுகளாக வெளியிடப்பட்டுள்ளன. அவைகளில், நதி, குளங்கள்... போன்ற சுற்றுச்சூழல் உணர்வுபூர்வ நிலப்பகுதிகள், அதிக சாய்வுகள் கொண்ட பகுதிகள், நீர்ப்பிடிப்புப் பகுதி, காட்டு யானை பாதுகாப்பு பகுதி மற்றும் வரலாற்று, நாகரிக அல்லது தொல்பொருள் முக்கியத்துவம் கொண்ட பகுதிகளும் தேர்வு செய்ய முடியாது.

இந்த முறை 1934 ஆம் ஆண்டில் மாற்றப்பட்டதோடு, அரச அதிபர் மற்றும் வனக் காப்பாளர் என்ற இரு தரப்புக்கும் வன நிர்வாகம் வழங்கப்பட்டது. என்றாலும் அவைகளின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக சட்டத்தை செயற்படுத்துவது அந்த இரு தரப்புகளினாலும் மேற்கொள்ளப்பட்டதால் சிக்கல்கள் ஏற்படவில்லை.

அதேபோன்று மேலும் ஐந்து பிரிவுகளுக்கு உரித்தான நிலப் பகுதிகளும் தேர்வு செய்ய முடியாது என குறிப்பிடப்பட்டுள்ளது. அவைகள்,

- அரசின் சுற்றுச்சூழல் கொள்கைக்கு அமைய உயிரியல் பல்வகைமையை பாதுகாக்கும் பணிகள் மற்றும் காட்டு பகுதியை அதிகரிக்கும் இலக்கை பூர்த்தி செய்ய முன்மொழியப்பட்டிருக்கும் நிலங்கள்.
- அழிவுறும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகி உள்ள மரங்கள் மற்றும் விலங்குகளை பாதுகாக்கும் பணிக்காக பாதுகாக்கப்பட வேண்டிய பகுதிகள்.
- அரசாங்கத்தின் எதிர்கால அபிவிருத்தி பணிக்காக அடையாளம் காணப்பட்டிருக்கும் பகுதிகள்.
- வேறு முக்கியத்துவம் வாய்ந்த விடயங்களின் கீழ் அபிவிருத்தி செயற்பாட்டுக்காக பயன்படுத்த தகுதியற்ற பகுதிகள்.
- எதிர்காலத்தில் மக்கள் பங்கேற்பு மற்றும் சமூக வன அறிவுபூர்வமான பணிகளுக்கு பயன்படுத்துவதற்கு முன்மொழியப்பட்ட பகுதி ஆகியவையாகும்.

**நாட்டின் வனப்பகுதி**

அறிவிக்கப்பட்டிருக்கும் வகையில், 20 ஆம் நூற்றாண்டு ஆரம்பத்தில் இலங்கையின் இருந்த காடுகளின் அளவு, மொத்த நிலப்பகுதியில் 80% அளவானதாகும். தற்போது இந்நாட்டு நிலப்பகுதியில் காடுகளாக இருப்பது 29.2% அளவு குறைவான பகுதியாகும். அதனை ஹெக்டேயார்களின் மாத்திரம் இரண்டு மில்லியன் அளவாகும்.

இதன் வனப் பாதுகாப்பு திணைக்களத்தின் கீழ் இருக்கின்ற காடுகளின் அளவு 1,335,400 ஹெக்டேயார் அளவு என்பதோடு, அதில் வன பாதுகாப்பு திணைக்களத்தின் வன ஒதுக்குக் காடுகள், 65 பாதுகாக்கப்பட்ட காடுகள், ஒரு தேசிய உரிமைத் தளத்தையும் நிர்வகிக்கிறது.

அடர் காடுகள், புல் கொண்ட நிலப்பகுதி, புல்வெளி மற்றும் ஈர நிலமும் உள்ளடங்கிய மேலும் 1,136,440 ஹெக்டேயார் அளவான வன ஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தின் பல்வேறு பாதுகாப்பு பிரதேசங்களின் கீழ் வருகிறது. அவைகளுக்குள் தேசிய பூங்காக்கள், சரணாலயங்கள், இயற்கை வன ஒதுக்குப் பிரதேசம், மற்றும் ஆனைவழியும் உள்ளடங்குகின்றன. இந்த இரு திணைக்களத்திற்கும் கீழ் வருகின்ற நிலப் பகுதியும் உள்ளது. அதன் எஞ்சிய காடுகள் வகைக்கு சொந்தமான காட்டு நிலங்களையும் பார்க்க முடியும்.

ஆனால் இந்தக் காணிகள் மேல் குறிப்பிட்ட அளவுகோல்களுக்கு அமைய மேற்கொள்ளப்படும் சிறந்த ஆய்வுக்குப் பின்னர் பொருத்தமான பகுதிகள் மாத்திரம் விடுவிப்பது மிக முக்கியம். அதேபோன்று அரசாங்கத்தின் கொள்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ள 30% வரை அதிகரிக்கும் இலக்கை கையகப்படுத்துவதற்கு தேவையான காணிகளை வைத்திருப்பதற்கும் இது தடையாக இருக்கக் கூடாது என சுற்றுநிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த சுற்றுநிருபத்தை செயற்படுத்தும்போது வெளிப்படைத்தன்மையுடன் அவைகளை செயற்படுத்துவது மற்றும் அதிகாரத்தை தவறாகப் பயன்படுத்தி தொடர்ச்சியாக இடம்பெறுகின்ற காடழிப்பு தொடர்ந்து இடம்பெறாதிருக்கும் வகையில், சட்டத்தை செயற்படுத்தும் இடங்களை பலப்படுத்துவது முக்கியமானதாகும்.

- இனோகா

**நிகழ்வைக் காண QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும்**



வனஜீவராசிகள் மற்றும் வன பாதுகாப்பு அமைச்சு

வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களம்

வன பாதுகாப்பு திணைக்களம்

சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவ திட்டம்

இது தான், நீங்கள் எமக்கு எழுத வேண்டிய முகவரி:
ESCAMP திட்டப் பணிப்பாளர்,
இலக்கம் 82, ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை.
escamp.pd@gmail.com

பொருளாதார அரசியல்

# நாட்டின் பொருளாதார சிக்கல்களுக்கு கோவிட் மட்டும்தான் காரணமா?



கலாநிதி
எம்.கணேசமூர்த்தி
பொருளியல்துறை,
கொழும்பு பல்கலைக்கழகம்

இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள தீவிரமான டொலர் பற்றாக்குறையும் அதன் காரணமாக பொருளாதாரம் எதிர்நோக்கும் நெருக்கடி நிலைமையும் கோவிட் பெருந்தொற்றின் விளைவாக ஏற்பட்ட ஒன்றல்ல. மாறாக சுதந்திரம் பெற்ற காலந் தொட்டே நாட்டின்பொருளாதாரத்தை முறையாக வழிப்படுத்தி முகாமை செய்யத் தவறியதன் காரணமாக ஏற்பட்ட ஒன்றாகும்.

தற்போது வெறும் 84 பில்லியன் டொலர் பெறுமதியான ஒரு பொருளாதாரத்தை தொடர்ந்து இயங்கச் செய்வதில் திக்கித்திணற வேண்டியிருக்கிறது. கோவிட் பெருந்தொற்றின் விளைவாக நெருக்கடிகள் உருவாகியதாகக் காரணம் கற்பிக்கவும் முயற்சிக்கின்றனர். ஆனால் இலங்கைப் பொருளாதாரம் தொடர்ச்சியாகவே தனது சக்திக்கு அப்பாற்பட்டு வாழ முயற்சித்ததன் (living beyond means) விளைவாகவே இன்றைய நிலை உக்கிரமடைந்திருக்கிறது.

குறிப்பாக, எந்த ஒரு பொருளாதாரத்தையும் ஆட்டிப்படைக்கவல்ல இரட்டைக்குறை நிலைகள் (twin deficits) இலங்கையின் பொருளாதாரத்தைத் தொடர்ச்சியாக முடக்க நிலையில் வைத்திருப்பதை நாம் பார்க்க முடியும். ஒன்று, வரவு செலவுத்திட்டக் குறைநிலை மற்றையது வர்த்தகக் குறைநிலை.

சுதந்திரத்தின் பின்னரான இற்றை வரையிலான காலப்பகுதியில் இலங்கையின் உத்தியோகபூர்வப் புள்ளி விபரங்களை ஆராயுமிடத்து நாடு தொடர்ச்சியாக பற்றாக்குறை வரவு செலவுத்திட்டத்தைப் பின்பற்றி வருவதையும் இதன் காரணமாக உள்நாட்டில் மேற்கொள்ளப்படும் உற்பத்தியைவிட நாட்டில் மேற்கொள்ளப்படும் செலவுகள் உயர்வாக இருப்பதையும் அந்தச் செலவுகள் இறக்குமதிகள் மீது மேற்கொள்ளப்பட்டிருப்பதையும் காணமுடியும்.

அதாவது, நாட்டின் பொருள் ஏற்றுமதி வருவாயைவிட இறக்குமதிச் செலவினங்கள் உயர்வாகக் காணப்படுகின்றன. நாட்டின் வர்த்தக நிலுவை எனப்படும் ஏற்றுமதிகளுக்கும் இறக்குமதிகளுக்கும் இடையிலான இடைவெளி குறைநிலையில் உள்ளது. எனவே தான் தனது உள்நாட்டு உற்பத்தியைவிட அதிகம் செலவிடும் எந்த ஒரு நாடும் வர்த்தகக் கணக்கு குறைநிலையை அனுபவிக்கும் எனக்கூறப்படுகிறது. வேறு வகையில் கூறினால் ஒரு நாட்டின் வரவுசெலவுத்திட்டக் குறைநிலைக்கும் வர்த்தக நிலுவையில் குறைநிலைக்கும் இடையில் தொடர்பு உண்டெனக் கூறப்படுகிறது.

இலங்கையைப் பொறுத்தமட்டில் இவை இரண்டும் தொடர்ச்சியாகக் குறைநிலையில் உள்ளமை இன்றைய டொலர் நெருக்கடிக்கான முக்கியமான காரணமாகக் கொள்ளப்படலாம். கடந்த பத்து வருட காலப்பகுதியில் இவற்றின் போக்குகள் அட்டவணையிற் காட்டப்பட்டுள்ளன.

| ஆண்டு | மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக வரவு செலவுத்திட்டக் குறைநிலை (%) | மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக வர்த்தக நிலுவைக் குறைநிலை (%) | வர்த்தக நிலுவைக் குறைநிலை பில்லியன் டொலர்களில் | டொலர் ரூபா நாணய மாற்று வீதம் (ஆண்டுச் சராசரி) | மொத்த உத்தியோகபூர்வ ஒதுக்குகள் (பில்லியன் டொலர்களில்) |
|---|---|---|---|---|---|
| 2010 | -7.0 | -7.26 | -4.91 | 113 | 7.1 |
| 2011 | -6.2 | -13.19 | -10.03 | 111 | 6.7 |
| 2012 | -5.6 | -11.86 | -9.81 | 128 | 7.1 |
| 2013 | -5.4 | -8.62 | -7.79 | 129 | 7.4 |
| 2014 | -5.7 | -8.07 | -8.12 | 131 | 8.2 |
| 2015 | -7.6 | -7.53 | -8.39 | 136 | 7.3 |
| 2016 | -5.3 | -7.29 | -8.87 | 146 | 6.0 |
| 2017 | -5.5 | -7.22 | -9.62 | 152 | 7.9 |
| 2018 | -5.3 | -7.43 | -10.34 | 163 | 6.9 |
| 2019 | -9.6 | -6.12 | -8.00 | 179 | 7.6 |
| 2020 | -11.1 | -6.36 | -5.86 | 186 | 5.6 |

அட்டவணையில் 2019 மற்றும் 2020 ஆண்டுகளில் வரவு செலவுத் திட்டக் குறைநிலை அதிகரித்திருப்பதையும் அதேவேளை வர்த்தக நிலுவை குறைவடைந்து சென்றிருப்பதையும் அவதானிக்க முடிகிறது.

கோவிட் கொள்ளை நோய் காரணமாக ஏற்பட்ட செலவின அதிகரிப்பு மற்றும் கடன் சேவைகள் போன்றன செலவின அதிகரிப்புக்கு காரணமாகக் கொள்ளப்படலாம். மறுபுறம் பொருள் இறக்குமதிகள் மீது விதிக்கப்பட்ட தீவிரமான கட்டுப்பாடுகள் காரணமாக வர்த்தக நிலுவைக் குறைநிலை வீழ்ச்சியடைந்திருந்தது. ஆனால் 2021 இல் ஒகஸ்ட் மாதம் வரையிலான எட்டு மாத காலப்பகுதியில் இந்த நிலை மாறி வர்த்தக நிலுவைக் குறைநிலை விரிவடைந்து சென்றுள்ளது.

2020 இல் முதல் எட்டு மாதகாலப் பகுதியில் 3.5 பில்லியன் டொலர்களாகக் காணப்பட்ட குறைநிலை 2021 இன் இதே காலப்பகுதியில் 5.5 பில்லியன் டொலராக அதிகரித்துள்ளது. அதேவேளை தொடர்ச்சியாகத் தேய்வடைந்த சென்ற இலங்கை ரூபாவின் நாணயமாற்று வீதம் 2020 இல் 186 ரூபா மட்டத்திலிருந்து 203 ரூபாவை அண்மிய மட்டத்தில் தற்போது உத்தியோகபூர்வமாக (officially pegged) நிலைப்படுத்தப்பட்டுள்ளது. இது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் சுமார் 9 சதவீதத் தேய்வாகும். 2019 இல் சுமார் 7.6 பில்லியன் டொலராக இருந்த உத்தியோகபூர்வ ஒதுக்குகள் 2020 இல் 5.6 பில்லியனாக வீழ்ச்சியடைந்தன. 2021 ஒக்டோபர் மாதத்தில் இது 2.2 பில்லியன் டொலர்களாக கடும் வீழ்ச்சியைச் சந்தித்தது. 2019 ஆகஸ்ட் மாதத்துடன் ஒப்பிடுகையில் இது சுமார் 73 சதவீத வீழ்ச்சியாகும். முதிர்ச்சியடைந்த பொதுப்படுகடன்களை மீளச்செலுத்த நேர்ந்தமையே இதற்கான மூல காரணம் என்று அரசாங்கம் கூறுகிறது.

ஆனால் ஏற்றுமதிகளின் அதிகரிப்பை விட இறக்குமதிகள் கூடிய வேகத்தில் அதிகரித்துச் செல்கின்றமை நீண்டகால அடிப்படைக் காரணமாகும். ஏற்றுமதிகள் பன்முகப்படுத்தப்படாமை. உயர்பெறுமதி கொண்ட பொருளுற்பத்திகள் ஊக்குவிக்கப்படாமை வெளிநாட்டு முதலீடுகளைக் கவர்வதில் நாடு தோல்வியடைந்தமை சுற்றுலாத்துறைக்கு அதீத முக்கியத்துவம் கொடுக்கப்பட்ட அதேவேளை உயர் பெறுமதி சேர்க்கை கொண்ட வியாபாரச் செயன்முறை வெளிமூலாதார (business process outsourcing) நடவடிக்கை அறிவுச் செயன்முறை வெளிமூலாதார நடவடிக்கைகள் போன்றவறறை போதியளவு ஊக்குவித்து அந்நியச் செலாவணியை பெறமுயற்சிப்பதில் தோல்வியடைந்தமை, உள்நாட்டில் மனித மூலதனத்தை உள்நாட்டில் பயன்படுத்த வாய்ப்பின்றி நாட்டை விட்டும் தொடர்ச்சியாக மூளைசாலிகள் வெளியேறிச் செல்கின்றமை வெளிநாடுகளுடன் உற்பத்தி வலையமைப்பு (production networks) மற்றும் பெறுமதிச் சங்கிலி (value chain) என்பவற்றின் ஊடாக தொடர்புபட்டு இடைநிலைப் பொருள்களின் ஏற்றுமதியை ஊக்குவித்து நாட்டுக்குள் அந்நியச் செலாவணியை உட்பாச்சுவதை விடுத்து மோட்டார் வாகன உற்பத்தி போன்றவற்றை ஆரம்பிக்கும். (உதாரணமாக குளியாப்பிட்டியில் போல்க்ஸ்வாஹன் இலங்கைச் சந்தைக்கு உற்பத்தி மேற்கொள்ள வருவதாக) யதார்த்தபூர்வமற்ற கனவுகளில் மிதந்தமை போன்ற இன்னோரன்ன குறைபாடுகள் இலங்கையின் ஏற்றுமதிகள் குறைவாக இருப்பதற்கான முக்கிய காரணமாகும்.

அதேவேளை அதிக உள்நாட்டு பெறுமதிச் சேர்க்கை கொண்ட ஏற்றுமதிகளை மேற்கொள்ள முடியாதவாறு ஏற்றுமதிப்பொருள்களின் இறக்குமதி உள்ளடக்கம் (import content of exports) செறிவானதாக இருக்கிறது. அதனால் ஏற்றுமதிகளை அதிகரிப்பதில் கட்டமைப்பு ரீதியான குறைபாடுகள் நிலவுகின்றன. மறுபுறம் கேள்விப்பக்க அதிகரிப்பு காரணமாக இறக்குமதிகள் தொடர்ந்து அதிகரித்துச் செல்கின்றன. குறிப்பாக உள்ளீடுகள் மற்றும் இடைநிலைப்பொருள் இறக்குமதிகள் மொத்த இறக்குமதிகளில் 80 சதவீதத்திற்கும் மேற்பட்ட பங்கினை வகிக்கின்றன. இவை அத்தனையும் ஒன்றிணைந்து வர்த்தக நிலுவையின் தொடர்ச்சியான குறைநிலைக்கு பங்களித்துள்ளன. வர்த்தக நிலுவையில் நிலவும் குறைநிலை நாணய மாற்றுவீதத்தைத் தேய்வடையச் செய்துள்ளது.

மறுபுறம் தொடர்ந்தவந்த இலங்கை அரசாங்கங்கள் குறைநிலை வரவு செலவுதிட்டங்களையே தொடர்ச்சியாக இயக்கியதுடன் நாட்டின் வரிக்கட்டமைப்பில் நிலவும் குறைபாடுகள் காரணமாக துண்டுவிழும் தொகையைக் குறைப்பதில் வெற்றியடையவில்லை. அதனால் வருடாந்தம் பற்றாக்குறை நிதியீட்டத்திற்காகக் கடன் பெறும் நிலை அதிகரித்ததுடன் வெளிநாட்டுக் கடன்களின் அளவும் தொடர்ச்சியாக அதிகரித்துச் சென்றது. கடன் பெறுவதும் பெற்றகடனை மீளச்செலுத்த அதைவிடப் பெரிய கடனைப் பெறுவதும் என மாறிமாறித் தொடர்ந்தமையால் நாட்டின் டொலர் கையிருப்புகளில் பாதிப்பேற்பட்டு நாணயமாற்று வீதத் தேய்வுக்கு இட்டுச்சென்றது.

இன்றைய நிலையில் போதியளவு டொலர் கிடைத்தால் பிரச்சினை தற்காலிகமாகத் தீர்ந்து விடலாம். எனினும் இன்றைய 203 ரூபா மட்டத்தில் ரூபாவுக்கான உத்தியோகபூர்வ நாணய மாற்றுவீதம் அமையப்போவதில்லை. மறுபுறம் மேலே சொன்ன அடிப்படைப் பலவீனங்களுக்கு உறுதியான தீர்வுகள் காணப்படாதவரையில் இலங்கையின் பிரச்சினை நிரந்தரமாகத் தீரப்போவதில்லை.

இப்போதைய நெருக்கடி தொடர்ந்து தீவிரமடையும் பட்சத்தில் இப்போது சர்வதேச நாணய நிதியத்தை வெறுக்கும் நபர்கள் அதன் உதவியை நாடவேண்டிய வலுகட்டாயத்திற்கு தள்ளப்படுவர். அதன் போது விதிக்கப்படும் கடன் நிபந்தனைகளில் அத்தகைய தீர்வுகளுக்கான முன்மொழிவுகளும் உள்ளடக்கப்பட்டிருக்கும். அதற்கான சாத்தியக்கூறுகளே அதிகம் தென்படுகின்றன.

**'ஒரு நாட்டின் வரவுசெலவுத்திட்டக் குறைநிலைக்கும் வர்த்தக நிலுவையின் குறைநிலைக்கும் இடையில் தொடர்பு உண்டெனக் கூறப்படுகிறது. இலங்கை–யைப் பொறுத்தமட்டில் இவை இரண்டும் தொடர்ச்சி–யாகக் குறைநிலையில் உள்ளமை இன்றைய டொலர் நெருக்கடிக்கான முக்கியமான காரணமாகக் கொள்–ளப்படலாம்'**

**'உள்ளீடுகள் மற்றும் இடைநிலைப்பொருள் இறக்கு–மதிகள் மொத்த இறக்குமதிகளில் 80 சதவீதத்திற்–கும் மேற்பட்ட பங்கினை வகிக்கின்றன. இவை அத்–தனையும் ஒன்றிணைந்து வர்த்தக நிலுவையின் தொடர்ச்சியான குறைநிலைக்கு பங்களித்துள்ளன. வர்த்தக நிலுவையில் நிலவும் குறைநிலை நாணய மாற்று வீதத்தைத் தேய்வடையச் செய்துள்ளது'**

# போரற்ற உலகை நோக்கிய அமெரிக்காவின் தந்திரோபாயம்



பேராசிரியர்
கே.ரீ.கணேசலிங்கம்
யாழ். பல்கலைக்கழகம்

உலக அரசியலில் அமெரிக்க தனித்துவம் என்பது முடிவுக்கு வந்து பலதுருவ ஒழுங்குக்கான போக்கொன்றை கொவிட்19 தொற்றின் காலம் வரை காண முடிகிறது. அத்தகைய உலக ஒழுங்கும் கொவிட்19 தொற்றுக்கு பின்னர் குழப்பமடைந்ததோடு மட்டுமன்றி அமெரிக்கா எதிர் சீனா போட்டி என்பது குழப்பகரமான சூழலுக்குள்ளால் நகர்வதை அவதானிக்க முடிகிறது. அதாவது உல ஒழுங்கு தெளிவானதொரு வடிவத்தை உறுதிப்படுத்த முடியாத குழப்பகரமான சூழலுக்குள் அகப்பட்டுள்ளது. இத்தகை குழப்பம் குறிப்பிட்ட காலப்பகுதி உலக அரசியலில் நிலைத்திருப்பதற்கான சூழலை உருவாக்கியுள்ளது. ஆனால், அத்தகைய போட்டியில் அமெரிக்கா முழுமையாக பின்வாங்காதமையையும் சீனா முழுமையாக முன்னிலைப்படாத சூழலையும் கண்டுகொள்ள முடிகிறது. இக்கட்டுரையும் ஜோ பைடன் தலைமைக்கு பின்னரான அமெரிக்காவின் சமகாலத்தில் நிகழும் போட்டிக்கான முனைப்புக்களை தேடுவதாக உள்ளது.

அமெரிக்கா ஜனாதிபதி ஜோ பைடன் டிசம்பர் 9, 10 (2021)ஆம் திகதிகளில் மெய்நிகர் வழியில் ஜனநாயகம் தொடர்பிலான மாநாடொன்றை நடாத்த திட்டமிட்டுள்ளார். அம் மாநாட்டில் சீன மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகள் அழைக்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டும் நிலவுவதோடு அமெரிக்காவின் நெருங்கிய நட்புறவில் உள்ள அநேகமான நாடுகள் இம்மாநாட்டுக்கு அழைக்கப்படவில்லை என்றும் குறிப்பிடப்படுகிறது. குறிப்பாக, நேட்டோவில் அங்கத்தும் வகிக்கும் நாடான துருக்கி, சவுதி அரேபியா போன்ற நாடுகள் விலக்கழிக்கப்பட்டதோடு மேற்காசியாவில் இஸ்ரேல் முதன்மைப்படுத்தப்பட்டுள்ளது. இது அமெரிக்கா சர்வதேச அரசியல் பரப்பில் ஒரு புதிய வியூகத்தை வகுப்பதாக தெரிகின்றது. குறிப்பாக, வன் அதிகாரத்தை முதன்மைப் படுத்திய அமெரிக்கா, சீனாவின் பாணியில் மென் அதிகார தளத்தை முதன்மைப்படுத்த திட்டமிடுகிறது. மனித உரிமைகளை முன்னிறுத்தி வெளியுறவுக்கொள்கையை வகைப் படுத்த முயலும் அமெரிக்கா பொருளாதார ஒத்துழைப்புக்களையும் உதவிகளையும் உட்கட்டமைப்பு விருத்தியினையும் செய்வதன் மூலம் உலக நாடுகளோடு நெருக்கமான ஒத்துழைப்பை அதிகரிக்க திட்டமிடுகின்றது. சீனாவின் Win Win உபாயமும், பட்டி மற்றும் சாலை முன்முயற்சியும் உலக நாடுகளை ஈர்த்துக்கொள்ளவே வெற்றிகரமாக செயற்பாட்டை முன்னெடுத்து வருகிறது. எனவே இதனை முறியடிக்க அமெரிக்கா பைடன் நிர்வாகத்திற்கு குழப்பமான சர்வதேச ஒழுங்கில் அமெரிக்காவை நிலைநிறுத்துவதற்கான நகர்வுகளை மேற்கொண்டு வருகிறது.

போரும் படையெடுப்பு அச்சுறுத்தலும் கொண்ட உலகம் முடிவுக்கு வந்த போதிலும், அமெரிக்கா மென் அதிகாரத்தையும் வன் அதிகாரத்ரைதயும் இணைத்த Smart Power என்று அழைக்கப்பட்ட ஒரு உபாயத்தின் மூலம் பனிப்போர் காலத்தை எதிர்கொண்டது. ஆனால் சீனாவின் வீரியமான பாய்ச்சலும் விவேகமான நகர்வும், அமெரிக்கா உட்பட்ட மேற்கு நாடுகளை நெருக்கடிக்கு தள்ளியதோடு தவிர்க்க முடியாது மென் அதிகாரம் நோக்கி செயற்படவேண்டிய நிர்ப்பந்தத்துக்கும் தள்ளியது. எனவே, அமெரிக்க நிர்வாகம் உலகளாவிய போரியல் முறைகளையும் படைக் குறைப்பையும் வன்அதிகாரமற்ற சூழலையும் உருவாக்கும் நடவடிக்கைகளை முதன்மைப்படுத்த ஆரம்பித்துள்ளது.



அமெரிக்கா ஜனாதிபதி ஜோ பைடன் சீன ஜனாதிபதி ஜின் பிங்கை 16 நவம்பர்(2021) மெய்நிகர்வழியில் சந்தித்து உரையாடிய உரையாடல்களும் சீனாவுடன் ஓர் இராஜதந்திர ரீதியிலான நகர்வை முன்னெடுப்பதற்கு தயாராவதை காணமுடிந்தது. அதனையே அம்மாநாட்டில் இரு தலைவர்களும் அடைய முயன்றதாகவும், அதில் அமெரிக்காவின் பங்கு அதிக எதிர்பார்க்கை உடையது என்றும் கருதப்படுகிறது.

ஆனால், தைவான் விவகாரம் இருநாட்டுக்குமான புரிதலை பல வீனப்படுத்தியதோடு சீனாவின் எச்சரிக்கையை அமெரிக்கா எதிர்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தத்தையும் இது ஏற்படுத்தியது. ஆனால் அமெரிக்காவை பொறுத்தவரை ஜின்பிங்கின் எத்தனம் அமெரிக்காவின் உலக அரசியலை நிலைநிறுத்துவதோடு போர் அற்ற உலக ஒழுங்குக்கான நிபந்தனைகளை ஏற்படுத்துவதாக உள்ளது. அத்தகைய முயற்சியில் சீனாவிடம் அமெரிக்கா தோற்றாலும், உலக அரசியலில் ஏற்பட்டுள்ள நிலைமாறு காலத்தை அமெரிக்காவிற்கு இயைபாக்குவதில் தொடர்ந்து முயன்று வருகிறது. இந்தோ பசுபிக் உபாயத்தினூடாக குவாட் கட்டமைப்பையும், தெற்கு குவாட் கட்டமைப்பையும் விருத்தி செய்ததோடு ஆக்கஸ் பாதுகாப்பு உடன்படிக்கைகளையும் அண்மைக் காலங்களில் அமெரிக்கா முதன்மைப்படுத்தியுள்ளது. சீனாவோடு அமெரிக்காவிற்கு ஏற்பட்டுள்ள விரிசலை தணிக்கும் முயற்சியில் தொடர்ச்சியாக ஜோ பைடன் செயற்பட்டு வருகிறார்.

இதனூடாக சீனாவிற்கும் அமெரிக்காவிற்குமான போரை தவிர்ப்பதுவும், போருக்கான எத்தனங்களை முடிவுக்கு கொண்டு வருவதும், இராணுவ ரீதியிலான நடவடிக்கைகளை கட்டுப்படுத்துவதும் அதனூடாக தைவான், ஹொங்கொங் போன்ற விவகாரங்களை அமெரிக்கா சீனாவுடன் அணுக திட்டமிடுகிறது. இவை அனைத்தும் போரற்ற நகர்வாகவே காணப்படுகிறது.

மேற்குறித்த அணுகுமுறையை ரஷ்யாவுடன் பின்பற்ற முயலும் பைடன் ரஷ்யா ஜனாதிபதி புடினுடன் உரையாடலை மேற்கொள்வதற்கான அழைப்பினை விடுத்துள்ளார். இத்தகைய உரையாடலின் உள் நோக்கங்கள் அதிகமாக உள்ளது. குறிப்பாக உக்ரைனை மையப்படுத்தி ரஷ்யாவின் படைக்குவிப்பும், ஆயுதங்களின் பரிசோதனையும், இராணுவங்களின் நடமாட்டமும் பாரிய யுத்தமொன்றுக்கு ரஷ்யா தயாராகுவதை கோடிட்டு காட்டுகிறது. அதுமட்டுமன்றி முடிந்த ஆண்டிலிருந்து ஹைப்பர்சொனிக் விமானங்களையும் ஏவுகணைகளையும் பாரிய அளவில் பரிசோதித்து வருகிறது. அத்தோடு அணுவாயுதத்தின் பிந்திய வளர்ச்சியையும் போரியல் ஆயுதங்களின் தொழில்நுட்ப ரீதியிலான உருவாக்கங்களையும் ரஷ்யா அதிகரித்து வருவதுடன் செயற்கைகோள்களை தாக்கி அழிக்கும் ஏவுகணை பரிசோதனைகளையும் அண்மைக்காலத்தில் மேற்கொண்டுள்ளது.

கிழக்கு ஐரோப்பா முதல் மேற்கு ஆசியா வரை ரஷ்யாவின் போக்கு என்பது அதீத அச்சுறுத்தலை இராணுவ ரீதியில் அமெரிக்காவிற்கு ஏற்படுத்தி வருகிறது. குழம்பி இருக்கும் உலக ஒழுங்கில் அமெரிக்காவிற்கு எதிரான இராணுவ உபாயங்களை அதிகம் பிரயோகிக்கும் நாடாக ரஷ்யாவே விளங்குகின்றது. புடினுடனான ஜெனிவா சந்திப்பிலும் அதன் பின்னரான காலப்பகுதியிவும் ரஷ்யாவை அமெரிக்கா இராஜதந்திர ரீதியில் அணுகுவதற்கு முயலுகிறது.

எனவே இத்தகைய செயல்முறையில், அமெரிக்காவையும் புடினையும் ஒன்று சேர்த்து வைப்பதற்கான உரையாடல் களமாகவும் போரற்ற முனைப்புக்களை ஏற்படுத்துவதற்கான எண்ணமாகவும் பைடனுடைய இரஜதந்திர உரையாடல் அழைப்பும் காணப்படுகிறது.

இதேநேரம், புடினது அணுகுமுறை சீனாவோடு மட்டுமன்றி இந்தியாவோடும் முதன்மைப்படுத்தப்படுகிறது. எஸ்400 ஏவுகணைகளை இந்தியா ரஷ்யாவிடமிருந்து கொள்வனவு செய்ய உடன்பட்டிருப்பது அமெரிக்காஇந்திய உறவை நெருக்கடியாகவும், சீன, ரஷ்ய உறவின் முரண்பாட்டுக்கான பின்புலமாகவும் அமைய வாய்ப்புள்ளதென மேற்குலக ஊடகங்கள் கருதுகின்றன. எதிர்வரும் வாரங்களில் புடினது இந்திய விஜயம் அத்தகைய சூழலை மேலும் பலப்படுத்த வழி வகுக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால் குழம்பி இருக்கும் உலக ஒழுங்கில் சீனா பொருளாதார ரீதியாக அமெரிக்காவையும் மேற்கையும் கையாள, ரஷ்யா இராணுவ ரீதியாக அமெரிக்காவையும் மேற்கையும் கையாள முயலுகிறது. இத்தகைய அரசியல் சூழலை எதிர்கொள்வதற்கான உத்திகளுடனேயே அமெரிக்க ஜனாதிபதி பைடன் சீன, ரஷ்ய ஜனாதிபதிகளுடனான சந்திப்பு, ஜனநாயகத்துக்கான மாநாடு மற்றும் காலநிலை மாநாட்டு பிரதிபலிப்புக்களை ஒரே கோட்டில் அமெரிக்க நலனுக்குள் நெறிப்படுத்த திட்டமிடுகிறார்.

எனினும் அவ்வகை திட்டங்கள் ஒவ்வொன்றையும் ரஷ்யாவும், சீனாவும் இணைந்தும் தனித்தும் முறியடித்து வருகின்றன. அமெரிக்காவை பொறுத்தவரை போரற்ற சூழல் ஒன்றுக்கான உலகை உருவாக்குவதே பிரதான நோக்கமாக உள்ளது. அதற்கு பின்னால் அமெரிக்கா ஒரு போரை எதிர்கொள்ள தயாரில்லை என்பதுவும், அவ்வாறானதொரு போர் ஏற்படுமாக இருந்தால் அத்தகைய போரை நிகழ்த்தும் சக்திகள் உலக ஒழுங்கின் சக்திகளாக மாறுவார்கள் என்ற மதிப்பீடும் அமெரிக்காவிற்கு உண்டு.






சைவத் தமிழர்களுக்கென்று ஒரு மதிப்புமிகு அடையாளம் தந்த ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமானின் 142 ஆவது குருபூஜை நன்னாளை இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம் நாடளாவிய ரீதியிலே அனுஷ்டிப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டமைக்கிணங்க எமது லேக்ஹவுஸ் நிறுவனத்தின் தினகரன் ஆசிரியர் பீடம் நேற்று சனிக்கிழமை காலை எம் பெருமானாரின் குருபூஜையை சிறப்பாக நடத்தியது. லேக்ஹவுஸ் இந்து மன்றத்துடன் இணைந்து தினகரன் ஆசிரியர் பீடம் இதனை ஏற்பாடுசெய்திருந்தது.

( படங்கள் – ருக்மல் கமகே)

# கவிஞர் அஸ்மின் எழுதிய "Happy Birthday Dad" பாடல் வெளியீடு




இலங்கையின் பிரபல தொழிலதிபர் தேசமான்ய , டாக்டர். எம் சீ. பஹ்ருதீனின் 64 ஆவது பிறந்த நிகழ்வு அண்மையில் சினமன் லேக் சைட் ஹோட்டலில் நடைபெற்றது.

அதனை முன்னிட்டு இசையமைப்பாளர் ஹிமேஸ் ரேஸ்மியா இசையமைப்பில் கவிஞரும் தமிழ் திரைப்பட பாடலாசிரியருமான பொத்துவில் அஸ்மின் எழுதிய "Happy Birthday Dad" பாடல் வெளியீட்டு வைக்கப்பட்டது.

சாதீர் மற்றும் ஹரிஸ்மிதா செந்தூரன் ஆகியோர் பாடியுள்ள இப்பாடலினை இசையமைப்பாளர் செந்தூரன் ஒலிக்கலவை செய்துள்ளார்.

இப்பாடலினை முன்னாள் அமைச்சர் A.H.M.பௌஸி மற்றும் சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் SSP நவாஸ் ஆகியோர் இணைந்து வெளியிட்டு வைத்தனர்.

# மக்கள் மத்தியில் பிரபல்யம் பெற்றுள்ள 'அலோவேரா ஹெயர் ஒயில்'

அக்கரைப்பற்று அம்பாறை வீதியில் ஆறாம் மைல்கல்லில் அமைந்துள்ள கற்றாளை மாதிரிப் பயிர்ச்செய்கைத் திட்டக் காரியாலயம் அறிமுகம் செய்துள்ள மற்றுமொரு உற்பத்திப்பொருளான "அலோவேரா ஹெயர் ஒயில்" மிகவும் பிரபல்யமடைந்து வருகின்றது. சென்ற வருடம் கிழக்கு மாகாண ஆளுநர் அனுராத யஹம்பத்தினால் அம்பாறை மாவட்டத்தில் கற்றாழை செய்கையை வீட்டுத் தோட்டமாக அறிமுகப்படுத்தும் செயற்திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. சமுர்த்தி பயனாளிகளுக்கென பசுமைப் பொருளாதார புரட்சியின் ஊடான வறுமை ஒழிப்பு திட்டமாக வடிவமைக்கப்பட்ட இத்திட்டம் நாளடைவில் அரச உத்தியோகத்தகர்கள், தனியார் மற்றும் பொதுமக்களையும் கவர்ந்திடும் ஒரு திட்டமாகவும் அமைந்துள்ளது.



இதனால் பலதரப்பினரும் கற்றாளை மாதிரிப் பயிர்ச்செய்கைத் திட்டக் காரியாலயத்திற்கு வருகை தரத் தொடங்கியுள்ளனர். இங்கு தற்போது கற்றாழை மாதிரிப் பயிர்ச்செய்கை தொடர்பான விழிப்புணர்வு கருத்தரங்குகளும் செய்கை முறைப் பயிற்சிகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

இதேவேளை, சென்ற வாரம் அறிமுகம் செய்து வைக்கப்பட்ட "அலோவேரா ஹெயர் ஒயில்" மக்கள் மத்தியில் மிகவும் பிரபல்யம் அடைந்து வருகின்றது. இயற்கையான முறையில் எதுவித சேர்க்கைகளுமின்றி கற்றாழையால் தயாரிக்கப்பட்ட கூந்தலுக்கான எண்ணையைப் பயன்படுத்துவதன் மூலம் கூந்தல் உதிர்வதை தடுத்து மயிரக் கால்ககளை வலுவாக்கும்.

அத்தோடு சேதமடைந்த முடியின் வளர்ச்சியை தூண்டுகின்றது. பொடுகைக் கட்டுப்படுத்த உதவுகின்றது என திட்டப்பணிப்பாளர் ஆசாத் அலியார் தெரிவித்தார்

இது தொடர்பான நன்மைகளை தொடர்ந்து விளக்குகையில் இது முடி உதிர்தல் மற்றும் மந்தமான முடி வளர்ச்சி ஆகியவற்றை தடுக்க நீண்ட கால தீர்வை வழங்குவதோடு தலைவலி, ஒவ்வாமையைக் கட்டுப்படுத்தி ரத்த ஓட்டத்தை மேம்படுத்தும். தலைமுடியை வேர்முதல் நுனிவரை பலப்படுத்தும் என்றும் அவர் தெரிவித்தார்.

நாட்டின் இன்றைய அந்நிய செலவாணி சம்பந்தமாக ஏற்பட்டுள்ள இறக்குமதிப் பிரச்சினைகளுக்கு மத்தியில் வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டு சந்தையில் விநியோகம் செய்யப்பட்டிருக்கும் அனைத்து விதமான தலைமுடி எண்ணெய்களுக்கும் மாற்றீடான ஒரு தீர்வாக இது அமைவதால் எமது அன்னியசெலவானி வர்த்தகத்திற்கு இது மேலும் வலுவூட்டுவதாக அமையுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

**எம்.எ.பகுர்டீன்**
**(அட்டாளைச்சேனை குரூப் நிருபர்)**

# முஸ்லிம் சேவை பணிப்பாளர் பாத்திமா ரினூஸியாவுக்கு கௌரவம்



அகில இலங்கை வை.எம்.எம். ஏ. பேரவையின் 71 வது வருடாந்த மகாநாடு இலங்கை மன்றக் கல்லூரியில், பேரவையின் தேசிய தலைவர், சஹீட் எம். ரிஸ்மி தலைமையில் நடந்தது.

பிரதம அதிதியாக நீதியமைச்சர் அலி சப்ரிகலந்துகொண்டார். இந்நிகழ்வில் சிறப்பதிதியாக, இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபன முஸ்லிம் சேவையின் வரலாற்றில், முதல் பெண் பணிப்பாளராகி சாதனைபடைத்துள்ள

எம். ஜே. பாத்திமா ரினூஸியா கலந்துகொண்டார். அவர் வை.எம்.எம்.ஏ. வினால் நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

# அரசாங்கத்தின் இரசாயன கொள்கை பசுமை விவசாயம் மாத்திரமே

வடமத்திய மாகாணம் உள்ளிட்ட நாட்டின் 12 அளவிலான மாவட்டங்களில் சிறுநீரக மற்றும் புற்று நோயாளர்களின் எண்ணிக்கை தினம் தினம் அதிகரித்துச் செல்லும் நிலையில் இதற்குக் காரணமாக இருப்பதாக இனங்காணப்பட்டுள்ள விவசாய இரசாயனங்களை இந்நாட்டிற்கு இறக்குமதி செய்வதற்குத் தடையினை ஏற்படுத்துவதற்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நடவடிக்கை மேற்கொண்டது இந்நாட்டு மக்களும், நாட்டின் சுற்றாடலும் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற தூய்மையான நோக்கத்துடனாகும். இதற்கு மேலாக இரசாயன உரங்கள் மற்றும் இரசாயன களைகொல்லிகள், கிருமிநாசினிகளை வெளிநாடுகளிலிருந்து கொண்டு வருவதற்காகவும், உர மானியங்களை வழங்குவதற்காகவும் செலவிடப்பட்ட 12000 கோடி பணத்தினை இந்நாட்டில் மீதப்படுத்தி அவற்றை விவசாயிகளுக்கு வழங்குவதும் இந்த சிறப்பான முயற்சியின் எதிர்பார்ப்பாகும்.

அந்த இரசாயன பொருட்கள் இல்லாத இயற்கை விவசாய வேலைத்திட்டத்தினை விரிவாக்குவதற்கு ஜனாதிபதி, பிரதமர் மற்றும் அமைச்சரவை இணைந்து செயற்பட்டாலும் விவசாய மற்றும் பெருந்தோட்ட அமைச்சுக்களின் சில அதிகாரிகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய திணைக்களங்கள், சில மாகாண அதிகாரிகள் மற்றும் சில பிரதேச அதிகாரிகளும் இந்த வேலைத்திட்டத்திற்கு கூடியளவு ஒத்துழைப்புக்களை வழங்கவில்லை. இதனால் இம்முறை பெரும்போகத்தின் போது நாட்டிற்குத் தேவையானளவுக்கு காபனிக் உரம் மற்றும் இயற்கை கிருமிநாசினிகள், களைகொல்லிகள் உற்பத்தியை ஊக்கப்படுத்தும் வேலைத்திட்டமும் எதிர்பார்க்கப்பட்டளவுக்கு வெற்றியளிக்கவில்லை. எனவே ஜனாதிபதியின் எதிர்பார்ப்பை இந்த பெரும்போகத்தில் நிறைவேற்றிக் கொள்ள முடியாத நிலையினைக் காணக் கூடியதாக உள்ளது.

பாரியளவில் இயற்கை உர உற்பத்தியினை பாதுகாப்பு படையினர், சிவில் பாதுகாப்பு திணைக்களம், காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு மற்றும் சில தனியார் துறையினரும் மேற்கொண்டு சென்ற போதிலும் கிராமங்களின் சாதாரண விவசாய மக்களை அதற்காக ஊக்கப்படுத்தி ஈடுபடச் செய்யும் வேலைத்திட்டங்கள் உரிய முறையில் நடைமுறைப்படுத்தப்படவில்லை.

கடந்த தினங்களில் இடம்பெற்ற வெள்ள அனர்த்தம் மற்றும் அதிக மழையினால் நாட்டிற்கும், சுற்றாடலுக்கும் சார்பானவர்களால் உற்பத்தி செய்யப்பட்ட இயற்கை உரம் அழிந்து போனது. இதற்குப் புறம்பாக சில சந்தர்ப்பவாத அரசியல்வாதிகள் ஏராளமாக நகரங்களில் ஆர்ப்பாட்டங்களை ஏற்பாடு செய்து அப்பாவி விவசாயிகளை தமது அரசியல் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காகப் பயன்படுத்திக் கொண்டனர்.

இவ்வாறான நிலையின் கீழ் மக்களுக்குத் தமது விவசாய நடவடிக்கைகளைப் பிரச்சினைகளின்றி முன்னெடுத்துச் செல்வதற்கு அரசாங்கம் தற்போது நிலையான தீர்மானங்கள் சிலவற்றை மேற்கொண்டுள்ளது. இதனடிப்படையில் தனியார் துறைக்கு மாத்திரம் இரசாயன உரம், கிருமிநாசினிகள் மற்றும் களைகொல்லிகளை மீண்டும் இந்நாட்டிற்குக் கொண்டு வருவதற்கு அனுமதியினை வழங்குவதற்கு விவசாய அமைச்சு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே, விவசாயிகளின் கோரிக்கைக்கு செவிசாய்த்து இவ்வாறு இரசாயன உரத்தினை இந்நாட்டிற்கு கொண்டு வருவதற்கு மீண்டும் சந்தர்ப்பத்தை வழங்கிய போதிலும், அரசாங்கத்தின் இரசாயன கொள்கையானது பசுமை விவசாயம் மாத்திரமேயாகும் எனத் தெரிவித்துள்ளார். அத்துடன் அரசாங்கத்தினால் வழங்கப்படும் அனைத்து


விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே


அமைச்சு செயலாளர் பேராசிரியர் உதித் ஜெயசிங்க


கிருமிநாசினிகள் பதிவாளர் கலாநிதி ஜே. ஏ. சுமித்

கப்பட இருப்பது பசுமை விவசாயத்தில் ஈடுபடும் இயற்கை விவசாயிகளுக்கு மாத்திரமே என்றும், இம்முறை பெரும்போகத்தில் இடம்பெற்ற காபனிக் முறையின் குறைபாடுகளை நிவர்த்தி செய்து ளர் சிரேஷ்ட பேராசிரியர் உதித கே. ஜயசிங்க தெரிவித்துள்ளார்.

நவம்பர் 22ம் திகதி இடம்பெற்றது இதற்கு மாற்றான செயலாகும். அது கிருமிநாசினிகள் பதிவாளரின் பெயரில் புதிய வர்த்தமானி அறி ஆண்டில் வெளியிடப்பட வேண்டியிருந்த வர்த்தமானி அறிவித்தல் சில திணைக்களங்கள் மற்றும் அரச நிறுவனங்களின் தாமதங்களினால் கடந்த 22ம் திகதி வெளியிடப்பட்டதாக கிருமிநாசினிகள் பதிவாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது. இங்கு 2021 நவம்பர் 22ம் திகதி வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் 2014ம் ஆண்டு டிசம்பர் 22ம் திகதியின் 1894/4ம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் இரத்துச் செய்யப்பட்டது 2016ம் ஆண்டு டிசம்பர் 28ம் திகதியின் 1999/33ம் இலக்க வர்த்தமானி அறிவித்தலுக்கு அமைய மற்றும் 2018 ஆகஸ்ட் 13ம் திகதி வெளியிடப்பட்ட 2089/37ம் இலக்க வர்த்தமானி அறிவித்தலினால் இடம்பெற்ற தொழில்நுட்ப பிரச்சினை நீக்குவதற்காகவேயாகும் என சட்ட

## அனைத்து விவசாய மானியங்களும் பசுமை – விவசாயத்திற்கு அமைவாக செய்கைகளில் ஈடுபடும் விவசாயிகளுக்கு மாத்திரமே

விவசாய மானியங்களும் இதன் பின்னர் வழங்கப்பட இருப்பது பசுமை இயற்கை விவசாயத்திற்கு அமைவாக செய்கைகளில் ஈடுபடும் விவசாயிகளுக்கு மாத்திரமேயாகும் என்றும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். இதனடிப்படையில் உர மானியங்கள், இலவச விதை நெல் வழங்குதல், புதிய விவசாய தொழில்நுட்ப முறைகள் தொடர்பான அறிவினை வழங்குதல் மற்றும் உறுதிப்பாட்டு விலைக்கு நெல் கொள்வனவு செய்தல் போன்ற பிரதிபலன்கள் இதன் பின்னர் பசுமை விவசாயத்தினைக் கடைப்பிடிக்கும் விவசாயிகளுக்கு மாத்திரமே கிடைக்கும் என்றும் விவசாய அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதனிடையே ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் சுட்டிக் காட்டியிருப்பது, அரசாங்கம் தொடர்ந்தும் கடைபிடிக்கும் விவசாயக் கொள்கையாக இருப்பது நாட்டு மக்களும், சுற்றாடலும் பாதுகாக்கப்படும் பசுமை விவசாயக் கொள்கை மாத்திரமேயாகும் என்றேயாகும். இனிவரும் காலங்களில் விவசாயத் துறைக்கான அனைத்து நிவாரணங்களும் வழங் கொண்டு அடுத்த போகத்திற்கு ஆயத்தமாக வேண்டும் என்றும் ஜனாதிபதி சுட்டிக் காட்டியுள்ளார். இதற்காக விவசாயிகளுக்குச் சரியான முறையில் தெளிவினை வழங்க வேண்டும். அத்துடன் அதனை நடைமுறைப்படுத்தும் போது இருக்கும் இரசாயன உர மாபியா தொடர்பில் அறிந்து கொள்ள வேண்டும். அந்த மாபியாவுடன் போராடி சரியானதை வெற்றி கொள்வதற்கு அதிகாரிகளது அர்ப்பணிப்பு அத்தியாவசியமானது என்றும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார். மனசாட்சிக்கு விரோதமின்றி பணியாற்றும் குழுவினரின் ஒத்துழைப்பு இந்த வேலைத்திட்டத்தின் வெற்றிக்காக அவசியமாகும் என்றும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

இவ்வாறான நிலையின் கீழ் பெரும் போகத்தில் நெற் செய்கை, சோளச் செய்கை மற்றும் மரக்கறிகளுக்காகவும் பெருந்தோட்ட பயிர்களுக்காகவும் தேவையான தாவர ஊட்டச்சத்து மற்றும் தாவரப் பாதுகாப்பு உரங்களை இந்நாட்டிற்கு கொண்டு வருவதற்கான அனுமதி கிடைத்திருப்பதாக கடந்த திங்கட்கிழமை விவசாய அமைச்சின் செயலாவித்தல் வெளியிடப்பட்டதாகும். இதில் குறிப்பிடப்பட்ட விடயம் என்னவெனில், 2014 டிசம்பர் 22ம் திகதி க்ளைபோசெட், ப்ரோபனில், காபோபியுரான், காபரில் மற்றும் க்ளோபைரிபொஸ் போன்ற கிருமிநாசினிகளைத் தடை செய்து வெளியிடப்பட்ட அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் இரத்துச் செய்யப்படுகின்றது என்றேயாகும்.

இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டதைத் தொடர்ந்து கிருமிநாசினிகள் பதிவாளர் அனுமதியின்றி, அறிவிக்காமல் செய்த இச்செயற்பாட்டின் காரணமாக அவரை அப்பதவியிலிருந்து நீக்கியதாக விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

அவ்வாறிருந்தும் இந்த வர்த்தமானி வெளியிடும் செயற்பாடு இடம்பெற்றது தனது விவசாய திணைக்களம் மற்றும் சட்ட நகல் திணைக்களத்தின் அனுமதியுடனேயேயாகும் என இது தொடர்பில் கருத்து தெரிவித்த கிருமிநாசினிகள் பதிவாளர் கலாநிதி ஜே. ஏ. சுமித் தெரிவித்துள்ளார்.

இங்கு இடம்பெற்றிருப்பது 2018ம் நகல் திணைக்களம் மற்றும் கிருமிநாசினிகள் பதிவாளர் அலுவலகம் என்பன தெரிவித்துள்ளன.

இது 2018ம் ஆண்டில் இருந்த அரசாங்கத்தின் அமைச்சரவை மற்றும் கிருமிநாசினிகள் தொழில்நுட்ப ஆலோசனைக் குழுவின் அனுமதியுடன் மேற்கொண்ட தீர்மானம் என்றும், அது உள்ளடக்கப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டது தாமதத்தின் பின்னர் என்றும் இங்கு தான் எந்த தவறையும் செய்யவில்லை என்றும் கிருமிநாசினிகள் பதிவாளர் தெரிவித்துள்ளார். 2014 டிசம்பர் 22ம் திகதியின் வர்த்தமானி அறிவித்தலை இரத்துச் செய்து 2021 நவம்பர் 22ம் திகதி வெளியிடப்பட்ட 2255/5ம் இலக்க புதிய வர்த்தமானியின் அறிவித்தலுக்கு அமைய கிருமிநாசினிகள் பதிவாளர் செய்திருப்பது ஆரம்பத்தில் தடை செய்யப்பட்ட கிருமிநாசினிகளை இந்நாட்டிற்கு கொண்டு வருவதற்காக வழங்கப்பட்ட அனுமதி அல்ல என இலங்கை விவசாய சேவை விவசாய பட்டதாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

2014 டிசம்பர் 22ம் திகதி வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் மூலம் அப்போது இருந்த பொதுபெரமுண அரசாங்கம் முதலில் செய்தது க்ளைபோசெட், ப்ரோபனில், காபரில், க்ளோபைரிபொஸ் மற்றும் காபோபியுரான் போன்ற கிருமிநாசினிகளை எமது நாட்டினுள் விற்பனை செய்தல் மற்றும் பயன்படுத்தலுக்கு தடை செய்ததாகும். அதன் பின்னர் 2016ம் ஆண்டு டிசம்பர் 28ம் திகதி காபரில், க்ளோபைரிபொஸ் மற்றும் காபோபியுரான் உள்ளடங்கிய கிருமிநாசினிகள் மாத்திரம் இந்நாட்டிற்குக் கொண்டு வருவதற்கு வழங்கப்பட்டிருந்த அனுமதிப்பத்திரம் இரத்துச் செய்யப்பட்டது. இதன் பின்னர் 2018 ஒக்டோபர் 02ம் திகதி 2019/13ம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் மூலம் க்ளைபோசெட் களைக் கொல்லி மாத்திரம் தேயிலை, இறப்பர் செய்கைகளுக்காக வரையறுப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இங்கு ப்ரோபனில் தடை 2016ல் நீக்கப்பட்டது.

இதனடிப்படையில் 2021 நவம்பவர் 22ம் திகதி வெளியிடப்பட்டிருப்பது 2018 ஒக்டோபர் மாத்தில் வெளியிட வேண்டிய அரசாங்க சில சில திணைக்களங்களது தாமதங்களால் வெளியிடுவதற்கு காலதாமதம் ஏற்பட்ட வர்த்தமானி அறிவித்தலே என அச்சங்கம் சுட்டிக் காட்டியுள்ளது.

இதனடிப்படையில் தற்போதைய அரசாங்கத்திற்கு சிலர் அபத்தமான குற்றச்சாட்டுக்களைச் சுமத்தினாலும் உண்மையிலேயே சுற்றாடலுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் இரண்டு நச்சு இரசாயனங்களான க்ளைபோசெட் மற்றும் ப்ரோபனில் ஆகியவற்றிற்கான தடை நீக்கப்பட்டிருப்பது 2016 மற்றும் 2018ம் ஆண்டில் நல்லாட்சி அரசாங்கத்தினால் என்பது இவ்விடயங்களின் மூலம் தெளிவாகின்றது. எவ்வாறாயினும் விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகேவின் ஆலோசனைக்கு அமைவாக வெளியிடப்பட்டுள்ள புதிய வர்த்தமானி அறிவித்தலுக்கு அமைய தற்போது மேற்குறிப்பிட்ட ஐந்து கிருமிநாசினிகளும் தடை செய்யப்பட்டவைகளாகப் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளன.

**நிஹால் பீ. அபேசிங்க**
தமிழில் எம். எஸ். முஸப்பிர்
(புத்தளம் விசேட நிருபர்)




# உறங்காத இரவுகள்



**ஜலீலா முஸம்மில் ஏறாவூர்**

கண்ணுறங்கும் சாமத்திலே
கண்ணயராக் கண்கள் இரண்டு
கன்னியவள் நெஞ்சத்திலே
உன் நினைவைச் சுமந்து கொண்டு
முள் போன்ற மஞ்சத்திலே
மருகி உருகி நான் கிடக்கிறேன்
வரட்சி கண்ட நிலத்தினிலே
மழையாய் பெய்ய வருவாயா?

கண்களிலே அருவியாய் கண்ணீர் ஒழுக
நினைவுகள் எல்லாம் பிரளயமாக
கனக்கும் என்னிதயம் திறந்து படிக்க
கணப்பொழுதில் நீ வாராயோ
ஊனிலும் உயிரிலும் கலந்து விட்டாய்
உன்மத்தம் எனும் பரிசைத் தந்து விட்டாய்
பித்துப் பிடித்தாலும் பிரியவனை
பிரிந்து வாழ முடியவில்லை

உறவாடும் உனது நினைவலைகள்
உரிமையோடு என்னை துரத்துகிறதே
கனவு மட்டும் காண்பது சரிதானா?
உன் காதல் பரிசு இதுதானா?
மீதியைத்தேடி ஒரு பாதி
நதியாய் ஓடி வருகிறது
நதியும் ஒருநாள் கடல் சேரும்
நாடியே வருவாய் எனை உணர்ந்து

அவஸ்தை அல்லல் ஒளிந்து விட
அன்புடன் அழகாய் வாழ்ந்து விட
அன்பே அருகில் வாராயோ
அழகுக்கதைகள் பேசாயோ
உனைப்பிரிய முடிந்தது உடலால் தான்
உயிரோடு உயிர் சேர்ந்து
ஒன்றாகிப் போனது தெரியாதா?
உயிலொன்று எழுதிச்சென்றது புரியாதா?

மனதுக்குள்ளே மறவாமல்
மன்னனாய் ஆட்சி புரிகின்றாய்
பிரிவின் துயரில் கதறுகிறேன்
இயன்ற மட்டும் உரைக்கிறேன்
மரணம் வந்து மன்றாடும் முன்
மறுதலிக்காது நீ வர வேண்டும்
இதயக் கண்ணீர் துடைத்து விடு
இன்ப அதிர்ச்சி தந்து விடு

# இப்பதான் நினைச்சன்

**பெரியமடு நிஹ்ரி**

புயலை விட வேகமாக
போகின்ற பொழுதுகளில்
உறவுகளின் தூரத்தை
உணர்வதற்கும் நேரமில்லை
எப்போதோ
எங்கேயே என்ற
அந்தக் கடைசிக் காட்சியும்
மனத்திரையில் சிலபோது
மறந்து விடுகிறது
தொடுதிரை அழுத்தி
உரையாடும் எண்ணமும்
தொலைதூரம்
வேண்டுமென்று யாரும்
இடைவெளியை
வேண்டிக் கொள்வதில்லை
எங்களை அறியாமலே
கடந்து போகும் காலத்தை
எப்படி நிறுத்த முடியும்
காலத்தை சேமித்து
கதையாட நினைத்தாலும்
கண்டு கொள்ள நினைத்தாலும்
காலிடையில் பூனையாய்
ஏதோ ஒரு வேலை
கைப்பிடித்து இழுக்கும்
கோபப்படுவதிலும் நியாயமில்லை
கோபத்திலும் இலாபமில்லை
எவ்வளவு தூரமான
இடைவெளியையும்
எப்படியோ சமாளிக்கிறது
இப்பதான் நினைச்சன் என்ற
இரண்டு வார்த்தைகள்தான்
இந்த வார்த்தைகளே
இப்போது
உறவுகளின் பாலமாக
உணர முடிகின்றது
கடிகார ஊசிகள்
காலிரண்டில் குத்தும் போது
நொடியும் நிற்பதெங்கே
ஓடுகின்ற வேகத்தில்
எப்போதோ
ஒய்வெடுக்கும் நிழலாய்
இப்பதான் நினைச்சன்
பொய்யென்று தெரிந்தாலும்
புன்னகைத்து விட்டுப் போவதைத்
தவிர என்ன செய்ய முடியும்

# மந்தாரம்

**ஜோசுவா செல்வராசா மன்னார்.**

மாரியின் மந்தாரம்
மார்கழியை மணம்முடிக்க
கார்த்திகையில் கால்பதித்தே
வான வேடிக்கையோடு
வானிலே வலம் வருகிறாள்...!

அடைமழையை அலங்கரிக்க
பேய்யிருளை பெண்தோழியாய்
குளைச்சல் சத்தம் குழல்லூத
கூதல்காற்றை கூட்டிக்கொண்டே
கோடிவரை வந்துவிட்டாள்...!

சாமப் பொழுதை
சலனம் ஆக்கிட
சாரல் காற்றின்
சார் பதிவாளர்
பாதகி அவளை
பதிவு செய்து
பார் அனுப்பி வைத்தானோ...!

# வாழ்வெனும் சுற்றுவட்டம்

**மொழிவரதன், கொட்டகலை**

வாழ்வெனும் சுற்றுவட்டம்
பிறப்பு இறப்பென
காலமெலாம் தொடரும்...
உறங்கும் மனிதன்
ஓர்நாள் இறப்பான்
ஆனால்
உண்மைகள் பலகாலம்
உறக்கத்திலிருப்பினும்
ஒருபொழுதும் இறவாது
உடலினுள்ளே உள்ள
உயிர்க்காற்று வெளியேறிட
உறவினர்கள் ஒன்று கூடுவர்
ஒன்றுக்கும் உதவா
உடலை உறவினர்கள்
நண்பர்கள் சுமந்து செல்வர்
எரியூட்டி எரிப்பர்
திரும்பி பாராமலேகடன்
திரும்பிட எச்சரிப்பர்
நாளை எரியூட்டியவரும்
இறப்பார்...
நாளை மறு நாள் ஒன்று
நாளை மறுநாளுக்கும் மறுநாள்
மற்றொன்று
இறப்புக்கு கூடியோர்களுள்ளும்
சிலர் இறப்பர்...
வாழ்வெனும் சுற்றுவட்டம்
காலமெலாம் இப்படியே தொடர
பிறப்புக்களும் இறப்புகளும்
தொடர்ந்த வண்ணமேயிருக்கும்!



# நெஞ்சம் பதறுதையா!

**வேலணையூர் ரஜிந்தன்**

தண்ணீரே உனக்கென்ன
கண்ணீரின் தாகமோ
கனவுகளைக் கரைத்தாயே
இதுதான் உன் ஈரமோ!

கல்விக்கரை தேடியே
கைவீசிப் போன சிறார்கள்
கைக்கெட்டா நீரில் உயிர்
பிரிந்த நிலை கொடியதையா!

வெள்ளைச் சீருடையை
மகிழ்ந்தணிந்து நடைபோட்டோர்
வெள்ளைத் துணி மூடிக்
கிடக்க நெஞ்சம் பதறுதையா!

புன்னகை பூத்த முகம்
இழந்த வெண் சீருடையும்
அலங்கோலமாய்த் தொங்கக்
காணும் கண்கள் குமுறுதையா!

எழுதுகோலும் புத்தகமும்
அனாதரவாய்க் கிடக்கையிலே
பெத்த மனம் படும்பாட்டை
நினைக்க உயிர் வேகுதையா!

உணர்வும் செத்துப் போகுதையா
உயிரில் வலி கூடுதையா
இனியோர் நிலை நேராவண்ணம்
உரியோரே செயலாற்றுமையா!!

திருகோணமலை கிண்ணியா
படகுப் பாதை கவிழ்ந்து நீரில் மூழ்கி
உயிர் நீத்த மாணவருக்கும் மக்களுக்கும்
ஆழ்ந்த இரங்கலும் அஞ்சலிகளும்.

# அவளும் அம்மாதான்

**காரையன் கதன்**

கண்களில் கழிவும்
வாய் ஓடிய தடமும்
அப்படியே இருக்க
அவள் எதையோ உற்று பார்க்கிறாள்

அந்த புகைப்படத்தில் இருப்பவர்கள்
அவளுக்கு
முக்கியமானவர்கள் போல்

அவளை இன்றும் நான்தான் குளிப்பாட்ட வந்தேன்
எனக்கு அவள் உறவில்லை
குளிப்பாட்டி உணவூட்டி செல்வேன்

மாத சம்பளம் வேண்டுகையில்
ஒரு கவலை உண்டுதான்
அவள் அடிக்கடி சொல்லும்
பெயர் யாருடையது என்று தெரியாமல்
இருக்கிறேன் என்பது

காப்பக குழியறையில்
அவள் அங்கம் தொட்டு குழிப்பாட்டும் போது
ஒரு திருப்திதான்
எனை சுமந்தவள் இறந்து நீண்ட ஆண்டுகள்

# இலைகளின் இடையினில்

**ரதிதேவி, மானிப்பாய்**

இலைகளின் இடையினில்
இரு உயிர் ஆனோம்
காடென வேடம் தாங்கிக்
காற்றினில் வாழ்ந்தோம்

உன் குரல்தான்
என் சுவாசம்
அது ஓய்ந்திடும் கணம்
என் உயிர் பிரியும்

அடி எவர் எனைக் கைது
செய்தால் என்ன
என் நிரந்தர சிறை
உன் நெஞ்சம் தானே

அந்த துப்பாக்கியில் இருந்து
புறப்படும் சன்னத்தைவிட
வேகமாக நான் ஓடிவருகிறேன்
காத்திரு கண்ணே

இடியாய் ஒலித்தது
அந்த வெடிச்சத்தம்
காடே எரிந்து
எனை பஸ்பமாக்கியது

"ஏழு கழுதை வயசாகுது
ஆனா நீதான் என்னோட
முதல் காதல்
எனக்கு இது என்ன
செய்யணும்னு தெரியல்ல
ஒண்ணா சமைக்கணும்னா
உடுப்போட அப்பிடியே
அலையுல குத்திக்கணும்னா
இப்பிடித்தான் காதலிக்கிறன்னு
கத்துட்டு இருக்கன்
என்ன மன்னிச்சுருடி"

காதிடம் கடன் வாங்கிக்
கண்கள் காட்சிகள் அமைத்தன
கண்ணீரா குருதியா
எனத் தெரியா வண்ணம்
என் கண்கள் எரிந்து ஏதோ சுரந்தன

சொர்க்கத்தை உடைத்து
அந்த இறைவனையே
பணயக் கைதி ஆக்கி
உன் உயிரைக் கொள்ளையடித்து வர
என் மனம் திட்டம் தீட்டுகிறது

இனி நான் வாழ்வதற்கு எந்த
அர்த்தமும் இல்லை என
மண்டியிட்டு வானைப் பார்த்து
அழுதுகொண்டிருந்த நேரம்
ஒரு மலர் உதிர்ந்து
என் நெற்றியில் முத்தமிட்டது



# விலை பேசப்படாத சிலைகள்

**பிரகாசன், வள்ளுவர்புரம்**

நேற்று நான்
கருங்கல்லாய் இருந்தேன்
இரண்டு உளிகள்
சந்தித்து கொண்டன
தலையுருவாய் ஆனேன்

வர்ண விளக்குகளால்
அலங்கரிக்கப்பட்டேன்
வாசத் திரவியத்தில்
மூழ்கடிக்கப்பட்டேன்
என்னை சுற்றி எங்கும்
ஒளி இருந்தது
எனக்குள் மட்டும் ஏனோ
இருள் இருந்தது

எத்தனையோ பேர் வந்து
ஏதேதோ பேசுகின்றார்
சிலைபேசும் நேரம் பார்த்து
வேறு சிலை மாற்றுகின்றார்

கலையோடு செய்தவனோ
கலங்கி போய் நிற்கின்றான்
உளியோடு பந்தம் என்ன
ஏதேதோ நினைக்கின்றான்

விலைபேசா பொருளுக்கு
மலரென்ன? மாலையென்ன?
பூக்காத செடிமீது
நீறூற்றி லாபமென்ன?

வரம்பு மீறிய சிலைகள்
கடைகளில்
விற்கப்படுவதில்லை – அவற்றின்
காலம் கடந்து போனால் கூட
சாபம் தீர்வதில்லை

# எங்கும் இருக்கின்றாய்

**பசறையூர் மல்லிகா பத்மநாதன்**

கனவாய் என்றும் வருகின்றாய்
கனிவாய் இன்பம் தருகின்றாய்
நிழலாய் பின்னால் வருகின்றாய்
நித்தம் நினைவில் இருக்கின்றாய்
மலராய் பொழிலில் மலர்கின்றாய்
மாறா மணமும் தருகின்றாய்
பயிராய் விளைந்து நிற்கின்றாய்
பாரில் பசுமை நிறைக்கின்றாய்
தருவாய் வானில் மிளிர்கின்றாய்
தரணி மகிழ வைக்கின்றாய்
அன்பாய் மனதில் ஒளிர்கின்றாய்
அகமும் மலர அருள்கின்றாய்
எங்கும் எதிலும் இருக்கின்றாய்
எல்லாம் இயங்க செய்கின்றாய்
துன்பம் போக்கி நிற்கின்றாய்
தூயவனே நீ தெய்வமன்றோ!

# உயிரில் கலந்த நேசம்

**ஷப்ரா இல்முத்தீன் அட்டாளைச்சேனை**



அடிக்கடி தவிர்க்கப் படும்
சந்திப்புக்களும்
என்றாவது உரசப் படும்
தொலைபேசிக்கிடையேயான
உரையாடலும்
எப்போதுமல்லாமல்
என்றைக்காவது
மீட்டப் படும் நினைவுகளும்
நேரமெடுத்து பேச வேண்டும்
என்ற எண்ணங்களெல்லாம்
துகள்களாக சிதறப் படும்
நொடிகளும்
உண்மையான நேசங்களுக்கிடையிலான
அன்றாட அழையா விருந்தாளிகள் தான்..

அதற்காக தவிர்க்கப் படும்
சந்திப்பிலும்
என்றாவது பேசப் படும்
தொலைபேசி உரையாடலிலும்
நேரமெடுத்துப் பேச முடியாத
அவலத்துக்குள்ளும்
ஒரு நேசத்தை எடை போட்டிட
முடியுமா என்ன..

புரிதல்கள் சில வேளைகளில்
கசப்பானதாக இருந்தாலும்
அதன் உயிரோட்டம் கலந்த நேசம்
என்றைக்குமே இனிமை தான்..

# நகராத ஞாபகங்கள்...!

**சி.எம். சங்கர் பண்டாரவளை**

ஓடிச்சென்று ஒதுக்கிக்கொள்ளும்முன்
வந்த மழையில் நனைந்த
உலர்ந்த ஆடைகள் போலானது
உன்னால் என் வாழ்க்கை...
மறுபடி வரும் வெயிலில்
வேண்டுமெனில் நனைந்தஆடைகள்
உலரலாம்...
ஆனால் இந்த வாழ்க்கை...?

பிரியமானவளே...
புயல் வேளை
படகேறி கடற்தொழிலுக்கால்
கடலுக்குப் போய் காணாமல் போன
மீனவனின் வருகையில்
வைக்கக் கூடிய நம்பிக்கைகளையே
நான் என் வருகையிலும்
வைத்திருக்கிறேன்...
தனிமையையும் அதை
தனித்தே வாழும் நிலைமையையும்
நீ கற்றுத் தந்தமையால்
தானே பின்னியவலையில்
தனியே வாழும் சிலந்தியின்
வாழ்க்கை முறையாய்
என் வாழ்வும்!

மன்னர் அரசும்
போர் முரசும்
அருகிப் போன நவீன உலகிலும்
அதன் நகைச்சுவைகளை
இன்றும் நிசித்திக்கொள்ளாமல் தரும்
வார இதழ்கள் போல்
நானும் உன் ஞாபகங்களிலிருந்து
நகர முடியாமல் இன்றும்...!



# அழிவின் விளிம்பில் அகிலம்!

**கிண்ணியா, ஜெனீரா ஹைரூல் அமான்**

கானகத்தை அழித்தனர்
கட்டடங்கள் அமைத்தனர்
மரங்களை வெட்டினர்
மாடி மனை அமைத்தனர்

கடற்கரையை மூடியே
கடைத்தெருவாய் மாற்றின்
வயற்பரப்பை நீக்கியே
வளங்களைக் குறைத்தனர்

காய்கறித் தோட்டத்தில்
கிருமி நாசினி தெளித்தனர்
காய்பிஞ்சுகளை வினாடிக்குள்
கனியாக மாற்றினார்!

உணவுக்குள் கலப்படம்
உண்பதால் நோயாளியாகினர்!
உயிரினங்களை வேட்டையாடினர்
உயிராபத்தைத் தேடினர்!

அனல்மின் உற்பத்தியாக்கினர்
அகிலத்தை அழிவுக்குள்ளாக்கினர்!
மழைவீழ்ச்சியும் குறைந்தது
வறட்சியும் அதிகரித்தது!

இயற்கையை அழித்ததனால்
இறைசீற்றம் அனர்த்தமானது!
அகிலத்தை அழிவின்
விளிம்பில் அணைக்கிறது!

# என் இதயம்



**என். பாரத், மானிப்பாய்**

மௌனத்தோடு
பேசிக்கொண்டிருக்கின்றேன்
ஒவ்வொரு நிமிஷமும்
என்
இதயத்தை
துடிக்க வைத்தவள்
வருவாளா?
என்
துடிக்காத இதயத்தோடு
பேசுவதற்கு

# பெண்ணின் மனதைத் தொட்டு....

**மயிலிறகு மனசு சிபானா அஸீம்**

ஒவ்வொருத்தியும் சொல்கிறார்கள்
நாங்கள் புன்னகைப்பதில்
அநேக புன்னகைகள்
போலியென்பதாக..

ஒவ்வொருத்தியும் சொல்கிறார்கள்
நாங்கள் அழுவதேயில்லையென
நினைப்பதெல்லாம்
தவறென்பதாக...

ஒவ்வொருத்தியும்
நினைவு கூர்கிறார்கள்
ஆயிரக்கணக்கிலெல்லாம்
எங்களுக்கு ஆசை
இருக்கவில்லையென்பதாக

ஒவ்வொருத்தியும்
சொல்லிப் புலம்புகிறார்கள்
மலையளவு கற்பனைகளெல்லாம்
நாங்கள்
கொண்டிருக்கவில்லையென்பதாக

ஒவ்வொருத்தியும் சொல்கிறார்கள்
கனவுகளைக்கூட
அளவோடுதான் கண்டதாக

இருந்துமென்ன பயன்
சின்னச்சின்ன ஆசைகளையும்
கடுகளவு கற்பனைகளையும்
அளவாய்க் கண்ட கனவுகளையும்
கூட

நிறைவேற்றிக்கொள்ள முடியாமல்
போனதை

ஒவ்வொருத்தியும் சொல்லிச்சொல்லி
சிரிக்கிறார்கள்

இந்த சிரிப்புக்கள் கூட
எங்கள் ஏமாற்றங்களை மறைக்கும்
பெரும் முயற்சித்திரைகள்
என்பதே உண்மையென்பதாகவும்

எங்கள் கண்ணீரெல்லாம்
நூற்றாண்டு மர்மங்களைப் போல்
மறைந்தே கிடப்பதாகவும்

## பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு
## பல்கலைக்கழக அனுமதி - கல்வியாண்டு 2020/2021

## விளையாட்டுக்களில் தனிச் சிறப்பு வாய்ந்த திறமைகளை / திறன்களைக் கொண்ட விண்ணப்பதாரிகளுக்கான விஷேட உள்ளெடுப்பின் கீழான பல்கலைக்கழக அனுமதி

இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம், ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம், மற்றும் களனிய பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்படும் விளையாட்டு விஞ்ஞானமும் முகாமைத்துவமும் மற்றும் இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம், யாழ்ப்பான பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்படும் உடற்றொழில் கல்வி ஆகிய பட்ட பாடநெறிகளைத் தொடர்வதற்காக விளையாட்டுத் துறையில் தமது திறமையினை வெளிப்படுத்திய மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்களை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு வரவேற்கிறது.

**விஷேட அனுமதிக்காக பூரணப்படுத்தப்பட வேண்டிய தேவைப்பாடுகள்:**

- ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளில் பதக்கம் வென்றிருத்தல் அல்லது பங்கு பற்றி இருத்தல்.
- பொதுநலவாய விளையாட்டுப் போட்டிகளில், ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் அல்லது ‘சார்க்’ விளையாட்டுப் போட்டிகளில் குறைந்தது தங்கம், வெள்ளி அல்லது வெண்கலப் பதக்கங்களைப் வென்றிருத்தல்.
- பொதுநலவாய விளையாட்டுக்கள், ஆசிய விளையாட்டுக்கள், சார்க் விளையாட்டுக்கள் ஆகியவற்றிலோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட உலகக் கிண்ணத்திற்கான கிரிக்கெட், காற்பந்தாட்டம், றகர், கூடைப்பந்து மற்றும் கரப்பந்தாட்டம் அல்லது வேறு ஏதாவது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் முடிவு செய்யப்பட்ட விளையாட்டில் இலங்கையைப் பிரதிநிதிப்படுத்தும் தேசிய அணிகளில் அங்கத்தவராக இருத்தல்.

இவ் விஷேட அனுமதியின் கீழ் குறித்த கற்கை நெறிக்கு தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள், உரிய கற்கை நெறியை ஆரம்பிப்பதற்கு முன்பு, கட்டாயமாக இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் மேற்கொள்ளப்படும் ஒரு வருட காலத்துக்கான அடிப்படைக் கற்கைநெறியைப் பூர்த்தி செய்தல் வேண்டும்.

மேற்கூறிய தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்த விண்ணப்பதாரிகளிடமிருந்து 2021 டிசம்பர் மாதம் 28ம் திகதி வரை விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

பின்வரும் மாதிரியில் உள்ளவாறு நிரப்பப்பட்ட விண்ணப்ப் படிவத்தை சம்பந்தப்பட்ட சான்றுப் பத்திரங்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளுடன் இணைத்து 2021 டிசம்பர் மாதம் 28ம் திகதி அன்று அல்லது அதற்கு முன்பாக சிரேஷ்ட உதவிச் செயலாளர்/ பல்கலைக்கழக அனுமதி, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, இல. 20, வோட் பிளேஸ், கொழும்பு 07 என்ற விலாசத்திற்கு முகவரியிட்டு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கவும்.

முடிவு திகதிக்குப் பின்னர் கிடைக்கப் பெறும் விண்ணப்பப்படிவங்களும், உரியவாறு பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பப்படிவங்களும் நிராகரிக்கப்படும்.

விண்ணப்பங்களுக்கான முடிவு திகதி 2021 டிசம்பர் மாதம் 28ம் திகதி ஆகும்.

இல. 20, வோட் பிளேஸ்,
கொழும்பு 07.

தலைவர்
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு

28-நவம்பர்-2021

### பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு
### விளையாட்டுக்களில் தனிச்சிறப்பு வாய்ந்த திறமைகளுடனான / திறன்களுடனான விண்ணப்பதாரிகளுக்கு பல்கலைக்கழக அனுமதிக்கான விண்ணப்பப் படிவம் - கல்வியாண்டு 2020/2021

1. விண்ணப்பதாரியின் பெயர் (முதலெழுத்துக்களுடன்) : ……………………………………………..
   முதலெழுத்துக்களினால் குறிக்கப்படும் பெயர்கள் : ……………………………………………..
   முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கிலத்தில்) : ……………………………………………..
2. நிரந்தர முகவரி : ……………………………………………...
3. பிறந்த திகதி : …………………… வயது: ……………..
4. தேசியம் : …………………… பால்: ………………
5. தேசிய அடையாள அட்டை இலக்கம் : ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐
6. தொலைபேசி இலக்கம் : (நிலையான) ☐☐☐☐☐☐☐☐☐☐ (கையடக்க) ☐☐☐☐☐☐☐☐☐☐
7. கல்விசார் தகைமைகள் : ……………………………………………...

க.பொ.த. (சா/த.) சுட்டெண்: ……………………… ஆண்டு: ………………………

| பாடம் | தரம் |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |

க.பொ.த. (உ/த.) சுட்டெண்: ……………………… ஆண்டு: ………………………

| பாடம் | தரம் |
|---|---|
| | |
| | |
| | |
| | |

8. விளையாட்டுத் துறையில் தகுதிகள்: (சம்பந்தப்பட்ட சான்றிதழ்களின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதிகளை இணைக்கவும்)

| ஆண்டு | பங்குபற்றிய விளையாட்டு/ நிகழ்ச்சி | நடைபெற்ற நாடு | பங்குபற்றிய நாடுகளது எண்ணிக்கை | இளைய/ முதிய | பெற்ற இடம் / பதக்கம் |
|---|---|---|---|---|---|
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |

9. நீங்கள் பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்டால் தொடர விரும்பும் கற்கை நெறிகளின் ஒழுங்கு முறையைக் குறிப்பிடவும். (விளையாட்டு விஞ்ஞானமும் முகாமைத்துவமும் மற்றும் உடற்றொழில் கல்வி ஆகிய கற்கை நெறிகள் மட்டும்)

| கற்கைநெறி | பல்கலைக்கழகம் |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |

10. விண்ணப்பதாரியின் உறுதியுரை
    இவ்விண்ணப்பப்படிவத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள விபரங்கள் உண்மையானவை என்றும் செம்மையானவை என்றும் இத்தால் உறுதியளிக்கின்றேன். மேலும், இவ்விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் பொய்யானவை அல்லது தவறானவை எனக் கண்டறியப்பட்டால் எனது விண்ணப்பப்படிவம் நிராகரிக்கப்படும் அல்லது குறித்த கற்கைநெறிக்கு தகுதியற்றவராக கருதப்பட்டு சம்பந்தப்பட்ட உயர் கல்வி நிறுவகத்திலிருந்து நீக்கப்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

    சம்பந்தப்பட்ட உயர் கல்வி நிறுவகத்தின் எழுத்துமூல அரசியலமைப்பினாலும், சட்டங்களினாலும், விதிகளினாலும் மற்றும் ஒழுங்கு விதிகளினாலும் நான் கட்டுப்படுவேன் என்றும், சம்பந்தப்பட்ட உயர் கல்வி நிறுவகத்தின் விரிவுரையாளர்களையும், மற்றும் உத்தியோகத்தர்களையும் நோக்கி ஒழுக்கத்துடன் நடப்பேன் என்றும், சம்பந்தப்பட்ட உயர் கல்வி நிறுவகத்தின் பெயரைக் களங்கப்படுத்தும் விதமாக நடக்கமாட்டேன் என்றும் இத்தால் நான் உறுதி மொழியளிக்கின்றேன்.

திகதி: …………………… ……………………………………………..
விண்ணப்பதாரியின் கையொப்பம்

---

## සතොස தேசிய போட்டிரீதியான விலைமனுகோரல்

வர்த்தக அமைச்சு

### லங்கா சதொச லிமிட்டடுக்கு பொருள் கொள்வனவுப் பை (சொப்பின் பேக்) வழங்கல்

லங்கா சதொச லிமிடெட்டுக்கு (நுளுடு) பொருள் கொள்வனவுப் பை (சொப்பின் பேக்) வழங்கலுக்கான உள்நாட்டு உற்பத்தியாளர்களிடம் இருந்து, 06 மாத காலத்திற்காக தலைவர், லங்கா சதொச லிமிடெட் மூலம் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

விபரக்குறிப்புகள்: விலைமனு ஆவணத்தில் காட்டப்பட்டுள்ளவாறு

தேவைப்பாடுகள்:

| இலக்கம் | பொருட்களின் விபரம் | அளவு | அங்கீகரிக்கப்பட்ட உச்ச எடை | மதிப்பிடப்பட்ட அளவு | அளவி (Gauge) | உற்பத்தி பொருள் | அச்சிடப்பட்டது/ அச்சிடப்படாதது |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | பொருள் கொள்வனவுப் பை (சொப்பின் பேக்) - பெரியது | (13" + 6" x 21") | 06 கி.கி | 60,000,000 | மைக்ரோன் 29 அல்லது அதற்கு மேல் (116GSM) | குறைந்த அடர்த்தி கொண்ட பொலித்தீன் (LDPE) | அச்சிடப்படாதது |
| 2 | பொருள் கொள்வனவுப் பை (சொப்பின் பேக்) - நடுத்தரம் | (10" + 5" x 18") | 04 கி.கி | 67,000,000 | மைக்ரோன் 28 அல்லது அதற்கு மேல் (112GSM) | குறைந்த அடர்த்தி கொண்ட பொலித்தீன் (LDPE) | அச்சிடப்படாதது |
| 3 | பொருள் கொள்வனவுப் பை (சொப்பின் பேக்) - சிறியது | (9" x 12") | 02 கி.கி | 68,000,000 | மைக்ரோன் 27 அல்லது அதற்கு மேல் (108GSM) | குறைந்த அடர்த்தி கொண்ட பொலித்தீன் (LDPE) | அச்சிடப்படாதது |

விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கு ஆர்வம் காட்டுகின்ற விலைமனுதாரர்களால் அதிகாரம் வழங்கப்பட்ட கடிதம் ஒன்றை சமர்ப்பிப்பதன் மூலம் குறித்த விலைமனு ஆவணத்தை, 5,000.00 ரூபா தொகையை (மீளளிக்கப்படாதது) செலுத்தி **2021 நவம்பர் 29 ஆம் திகதி தொடக்கம் 2021 டிசம்பர் 20 ஆம் திகதி வரையான காலத்தில்** இலக்கம் 27, சதொச பொதுச் செயலகக் கட்டிடம், வொக்ஷோல் வீதி, கொழும்பு 02 இல் அமைந்துள்ள லங்கா சதொச தலைமை அலுவலகத்தின் பெறுகைப் பிரிவில் (3ஆவது மாடி) பெற்றுக்கொள்ள முடியும்.

விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு **2021 டிசம்பர் 13 ஆம் திகதி மு.ப. 11.00க்கு** இடம்பெறும்.

சமர்ப்பிக்கப்படும் விலைமனுக்கள் **2021 டிசம்பர் 20 ஆம் திகதி பி.ப. 01.00க்கு அல்லது அதற்கு முன்னர்,** லங்கா சதொச லிமிடட், இலக்கம் 27, சதொச பொதுச் செயலகக் கட்டிடம், வொக்ஷோல் வீதி, கொழும்பு 02 என்ற முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். இல்லையேல் அந்த முகவரியின், பெறுகைப் பிரிவில் (3ஆவது மாடி) வைக்கப்பட்டுள்ள விலைக்கேட்புப் பெட்டிக்கு இட வேண்டும். முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுவை இடும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **"லங்கா சதொச லிமிட்டிற்கு பொருள் கொள்வனவுப் பை (சொப்பின் பேக்) வழங்கல்"** என்று குறிப்பிடுதல் வேண்டும்.

அனைத்து விலைமனுதாரர்கள் மூலமும் விலைமனு ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு விலைமனு பிணை ஒன்றை (மீளளிக்கப்படுகின்ற) விலைமனுவுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

விலைமனுக்களை ஏற்பது **2021 டிசம்பர் 20 ஆம் திகதி பி.ப. 01.00க்கு** முடிவுறுவதோடு விலைமனுக்களை திறப்பது, விலைமனுக்கள் ஏற்கப்படுவது முடிவுற்ற உடன் விலைமனுதாரர்கள் முன்னிலையில் மேற்கொள்ளப்படும். **வெற்றிகரமான விலைமனுதாரரினால்** (பதிவுசெய்யப்பட்ட வழங்குனர்கள் தவிர்த்து) **பதிவுக் கட்டணமாக 5,000 ரூபா தொகை மற்றும் 8% வெட் தொகையை (மீளளிக்கபடாதது)** செலுத்த வேண்டும் என்பதோடு **மதிப்பிடப்பட்ட ஒப்பந்தப் பெறுமதியில் 10% தொகையை** செயல்திறன் உத்தரவாதம் ஒன்றாக **(மீளளிக்கப்படும்)** செலுத்துதல் வேண்டும்.

மேலதிக விபரங்களுக்கு கீழுள்ள அதிகாரியை அழைக்கவும்.

நிறைவேற்று அதிகாரி (செ.ப) பெறுகை (LSL) – 0701560428

கேள்விமனு/ ஒப்பந்தம் வழங்கப்படும் இறுதி முடிவு **லங்கா சதொச லிமிட்ட் அமைச்சு பெறுகைக் குழு தலைவர்** வசமானது.

தலைவர், லங்கா சதொச லிமிடட்
இல.27, சதொச பொதுச் செயலகக் கட்டிடம்,
வொக்ஷோல் வீதி, கொழும்பு 02.

---

## ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்
## வெளியக பட்டப்படிப்புக்கள் மற்றும் நீடித்தல் கற்கை நெறிகள் பணிமனை

# வெளியக பட்டப்படிப்புக்களுக்கான பரீட்சைகள் – 2021

ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் பின்வரும் வெளியக பட்டப்படிப்புக்கள் மற்றும் நீடித்தல் பணிமனையின் பரீட்சைகள் சுகாதார வழிகாட்டிகளுக்கு அமைந்தொழுகும் வகையில் 2021 டிசம்பர் 1 ஆம் திகதியன்று ஆரம்பமாகும்.

| | பரீட்சை | காலப்பகுதி |
|---|---|---|
| 1 | 2014 Bachelor of Humanities and Social Sciences (General) External Degree Part III (Repeat) Examination – New Syllabus | 01.12.2021 – 09.12.2021 |
| 2 | 2018 Bachelor of Commerce (General) External Degree Part II Examination – New Syllabus | 04.12.2021 – 18.12.2021 |
| 3 | 2017 Bachelor of Commerce (General) External Degree Part III Examination – New Syllabus | 05.12.2021 – 19.12.2021 |
| 4 | Bachelor of Business Administration (General) External Degree Part II (Repeat) Examination – New Syllabus (Including students who have been absorbed into the New Syllabus from the Old Syllabus) | 11.12.2021 – 19.12.2021 |
| 5 | 2018 Bachelor of Humanities and Social Sciences (General) External Degree Part I Examination – New Syllabus | 11.12.2021 – 25.01.2022 |

**பரீட்சைகளுக்கான அனுமதிப் பத்திரங்கள் பதிவுத் தபாலில் அனுப்பப்பட மாட்டாது. பரீட்சார்த்திகள் www.external.sjp.ac.lk என்ற எமது இணையதளத்திலிருந்து பரீட்சை அனுமதிப் பத்திரங்களை பதிவிறக்கம் செய்தல் வேண்டும்.**

**www.external.sjp.ac.lk** என்ற எமது இணையதளத்தில் பரீட்சைகளுக்கான நேர அட்டவணைகள் காட்சிப்படுத்தப்படும்.

**பதிவாளர்,**
**ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்,**
**28.11.2021**

SMIB

## அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கி

# அம்பலாந்தோட்டை பிரதான நகரத்தில் அலுவலக வசதிகள் தேவை

அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வழங்கியின் அம்பலாந்தோட்டை கிளைக்காக பின்வரும் வசதிகளைக் கொண்ட அலுவலக இடவசதி வாடகைக்கு / குத்தகைக்குப் பெற்றுக்கொள்ள தேவையாகவுள்ளது.

| கிளை | சதுர அடி |
|---|---|
| அம்பலாந்தோட்டை | 2000-3000 |

**தேவைப்படும் வசதிகள்:**

- தரைத் தளமானது அம்பலாந்தோட்டை நகரத்தின் பிரதான வீதிக்கு முகப்பாக அமைந்திருத்தல் வேண்டும்.
- குறைந்தபட்சம் 4 வாகனங்களுக்கான தரிப்பிட வசதிகள் இருத்தல் வேண்டும்
- காற்றோற்ற வசதியுடன் கூடிய தனியான மின்பிறப்பாக்கி அறை
- தீக் காப்புறுதி மற்றும் மின்சார பொறியியல் சான்றிதழ்
- அங்வீனர்களுக்கான தனியான நுழைவாயில்
- நீர், தொலைபேசி, திரீ பேஸ் மின்சாரம், மின் பிறப்பாக்கி மற்றும் துப்புரவேற்பாட்டு வசதிகளை உள்ளடக்கிய ஏனைய அடிப்படை தேவைப்பாடுகள்
- அவசர வெளியேற்ற வாயில்
- தரையோடு பதிக்கப்பட்ட தரை
- 30 அடி அகலம் கொண்ட முன்பக்க வீதி

சகல விபரங்களையும் உள்ளடக்கிய முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விண்ணப்பங்களை எதிர்பார்க்கும் மாதாந்த வாடகை, சதுர அடிகளின் அளவு, கட்டிட அங்கீகார திட்ட வரைபடம், இணக்கச் சான்றிதழ் (COC), காணி உறுதியின் பிரதிகள் மற்றும் நில அளவை வரைபடம் மற்றும் ஏனைய நிபந்தனைகளையும் உள்ளடக்கி 2021-12-27ஆம் திகதி பி.ப. 3.00 மணிக்கு முன் கிடைக்கும் வகையில் ஒன்றில் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது பின்வரும் முகவரிக்கு ஒப்படைத்தல் வேண்டும்.

**தலைவர் (பெறுகைக் குழு),**
**அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கி,**
**இல. 269, காலி வீதி, கொழும்பு 03.**

மேலதிக விபரங்களுக்கு தயவு செய்து பிரதான முகாமையாளர் (HR & Logistic) அவர்களை 011-7722879/ 011-7722784 எனும் தொலைபேசி இலக்கங்களில் தொடர்புகொள்ளவும்.

**பொது முகாமையாளர்,**
**அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கி,**
**இல. 269, காலி வீதி, கொழும்பு-03.**

## நிதி அமைச்சு

# 2022ஆம் வருடத்திற்கான வழங்குநர்கள் மற்றும் சேவை வழங்குநர்களைப் பதிவு செய்தல்

2022ஆம் வருடத்தில் நிதி அமைச்சிற்கு பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்கும் பொருட்டு 2022ஆம் வருடத்தில் பதிவு செய்துகொள்ள விரும்பும் அங்கீகரிக்கப்பட்ட உற்பத்தியாளர்கள் / உள்நாட்டு முகவர்கள் / வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களிடமிருந்து பின்வரும் பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்காக நிதி அமைச்சில் பதிவு செய்துகொள்வதற்காக 2021 நவம்பர் மாதம் 26ஆம் திகதி முதல் 2021 டிசம்பர் மாதம் 16ஆம் திகதி பி.ப. 2.00 மணி வரை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். விண்ணப்பப் படிவங்கள் 2021 நவம்பர் மாதம் 26ஆம் திகதி முதல் 2021 டிசம்பர் மாதம் 15ஆம் திகதி வரை மாத்திரமே வழங்கப்படும்.
வழங்குநராகப் பதிவு செய்துகொள்வதற்கு இயைபுடைய சகல விபரங்களையும் அலுவலக நேரத்தினுள் நிதி அமைச்சின் கணக்கிடல் பிரிவிலிருந்து பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி இல. 0112-4845539 மற்றும் 0112-484538

**பொருட்கள்**

1. சகல வகையான காகிதாதிகள் மற்றும் அலுவலகத்தின் பொதுவான தேவைப்பாடுகள்
2. கணனி, கணனி துணைப்பாகங்கள், மென்பொருள், வன்பொருள்
3. அலுவலகம் மற்றும் வீட்டு உபகரணங்கள் (உருக்கு, பிளாஸ்திக், பைபர், மரம், மின்சாரம் போன்றன)
4. இலத்திரனியல் மற்றும் இயந்திராதி உபகரணங்கள் (தட்டச்சுப்பொறி, புகைப்படப் பிரதி இயந்திரம், ரோணியோ இயந்திரம் போன்றன)
5. மின்சாரக் கருவிகள் (வயர், மின்சார பிளக் போன்ற மின்சார உபகரணங்கள்)
6. பிளாஸ்டிக் வேலைகள், பெயர்ப் பலகைகள், இறப்பர் முத்திரைகள், டிஜிட்டல் அச்சுவேலைகள், பைபர் உற்பத்திகள்
7. கனரகப் பொருட்கள்
   - I. சகல வகையான கட்டிட நிர்மாணப் பொருட்கள் (All types of construction materials) பின்வரும் விசேடத்துவ கட்டிட நிர்மாணப் பொருட்கள் உட்பட)
     - a. கல், மணல், சீமெந்து, செங்கல், கம்பி போன்றன (Metal, Sand, Cement, Steel, etc)
     - b. நீர்க்குழாய் மற்றும் வடிகால் துணைப்பாகங்கள் (All types of Plumbing & Drainage items)
     - c. உருக்கு மற்றும் உலோக வேலை துணைப்பாகங்கள் (Metal, Steel & Aluminum construction items)
     - d. கட்டிட முடிவுறுத்தல் தரையில் பதிக்கும் பொருட்கள் (Flooring & Finishing items)
       - i. தரையோடுகள், மார்பள், கிரனைட் உட்பட (Tile, Marble, Granite etc)
       - ii. நிறப்பூச்சு மற்றும் பொட்டி வகைகள் (Paint, Putty, Water proofing materials, etc)
     - e. மரம் மற்றும் மர வேலை உருப்படிகள் (Timber & Timber work items)
     - f. மின்சார உபகரணங்கள் (Electrical items)
     - g. துப்புரவேற்பாட்டு துணைப்பாகங்கள் (Sanitary Fittings)
     - h. கூரைத் தகடுகள் (Roof Covering items)
   - II. கட்டிட நிர்மாண உபகரணங்கள்
8. மின்சார உபகரணங்கள் வழங்குதல் (நீர் மோட்டர்கள், மின் பிறப்பாக்கிகள், வளிச்சீராக்கி உபகரணங்கள் போன்றன)
9. குடிநீர் வழங்குதல்
10. சுத்திகரிப்பு இரசாயனப் பொருட்கள் (சனிடைசர், மாஸ்க் போன்றன)

**சேவைகள்**

1. கட்டிட நிர்மாணம், திருத்தவேலைகள் மற்றும் பராமரிப்பு வேலைகள்
2. அலுவலக சிறிய பராமரிப்பு வேலைகள்
3. பதாகைகள், சுவரொட்டிகள், புத்தகங்களை அச்சிடல் மற்றும் புத்தகம் கட்டும் வேலைகள்
4. அலுவலகம் மற்றும் வீட்டு உபகரணங்களின் திருத்தவேலைகள்
5. மின்சாரம் மற்றும் இலத்திரனியல் உபகரணங்களின் திருத்தவேலைகள்
6. கணனி / கணனி துணைப்பாகங்கள் மற்றும் கணனி அச்சுப்பொறிகளின் திருத்தவேலைகள்
7. வளிச்சீராக்கி திருத்தவேலைகள்
8. நீர்க்குழாய் முறைமை திருத்தவேலைகள்
9. கட்டிட நிர்மாணப் பொருட்களை வாடகை அடிப்படையில் வழங்குதல்
10. CCTV கமரா வழங்கி பொருத்துதல்

சேவையின் கீழ் 01ஆம் இலக்கத்திற்கு பதிவு செய்ய எதிர்பார்க்கும் விண்ணப்பதாரர்கள் கட்டிட நிர்மாணத்தில் ஈடுபடுவதற்காக நிர்மாணப் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தில் (CIDA) பதிவு செய்துகொண்டுள்ள வரையறையைக் காட்டும் சான்றிதழின் பிரதியொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

ஒன்றுக்கு மேற்பட்ட உருப்படிகளுக்காக பதிவுசெய்துகொள்ள எதிர்பார்க்கும் விண்ணப்பதாரர்கள் ஒரு உருப்படியின் பொருட்டு ஒரு விண்ணப்பப் படிவம் வீதம் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன் பதிவு செய்துகொள்ள எதிர்பார்க்கும் ஒவ்வொரு உருப்படியின் பொருட்டும் 1000.00 ரூபா கட்டணத்தை கடமை நாட்களில் மு.ப. 9.00 மணித்தியாலம் முதல் 15.00 மணித்தியாலம் வரையில் நிதி அமைச்சின் சிறாப்பருக்கு ரொக்கப் பணமாகச் செலுத்திய இயைபுடைய பற்றுச்சீட்டை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். (காசோலை மற்றும் காசுக் கட்டளை சகிதம் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.)

சகல விண்ணப்பங்களும் 2021 டிசம்பர் மாதம் 16ஆம் திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கும் வகையில் ‘‘பிரதான கணக்காளர், கணக்கிடல் பிரிவு, தரை தளம், திறைசேரி புதிய கட்டிடம், நிதி அமைச்சு, கொழும்பு-01’’ எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது நேரில் கொண்டுவந்து ஒப்படைத்தல் வேண்டும். விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ‘‘நிதி அமைச்சில் 2022ஆம் வருடத்திற்கான வழங்குநர்களைப் பதிவு செய்தல்’’ எனவும் விண்ணப்பிக்க எதிர்பார்க்கும் உருப்படியை தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும். 2021 டிசம்பர் 16ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என அறிவிக்கப்படுகின்றது. மேற்குறிப்பிடப்பட்ட நிர்ணயிக்கப்பட்ட திகதி மற்றும் நேரத்திற்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் என்பதுடன் தபாலில் தொலைந்துபோகும் கடிதங்கள் தொடர்பில் பொறுப்புகூறப்பட மாட்டாது.

வழங்குநர்களைப் பதிவு செய்துகொள்வதற்கு இயைபான நிபந்தனைகள்

1. வியாபார நிறுவத்தின் பதிவுச் சான்றிதழின் புகைப்படப் பிரதியை சான்றுபடுத்தி விண்ணப்பத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
2. விலைகளைக் கோரப்படும்போது பதில் வழங்குவதற்குத் தவறும் மற்றும் நேர காலத்திற்கு மற்றும் உரிய தரத்தின் பிரகாரம் பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்குத் தவறும் மற்றும் தரம்குறைந்த பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்கும் வழங்குநர்களை எவ்வித அறிவித்தலுமின்றி பதிவேட்டிலிருந்து அகற்றுவதற்கான உரிமையை நிதி அமைச்சு தன்னகத்தே கொண்டுள்ளது.
3. பொருட்கள் மற்றும் சேவைகளைக் கொள்வனவு செய்வதற்காக அமைச்சில் பதிவு செய்துகொண்டுள்ள வழங்குநர்களிடமிருந்து விலைகள் கோரப்படும் என்றாலும், தேவையான போது அமைச்சில் பதிவு செய்திராத வழங்குநர்களிடமிருந்து விலைகளைக் கோரும் முழுமையான உரிமையை அமைச்சு தன்னகத்தே கொண்டுள்ளது.

பதிவு செய்துகொண்டதன் பின் மேற்படி நிபந்தனைகளை மீறும் வழங்குநர்களின் பெயர் பதிவேட்டிலிருந்து அகற்றப்படுவதற்கு காரணமாகலாம்.

**தலைவர்,**
**அமைச்சுப் பெறுகைக் குழு.**
**நிதி அமைச்சு**

## இலங்கையின் தேசிய கப்பல்கள்
### (துறைமுகங்கள் மற்றும் கப்பல்துறை அமைச்சு)
### வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பல் கூட்டுதாபனம்

# கடற்தொழிலாளர்கள் ஆட்சேர்ப்பு

வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பற் கூட்டுதாபனமானது (CSC) முழுமையாக இலங்கை அரசாங்கத்திற்கு சொந்தமானதாகும்.

CSC க்கு சொந்தமான மற்றும் இயக்கப்படும் **63,600DWT** இரண்டு கப்பல்களுக்காக மொத்த கடற்படையினர் அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்வதற்கான பரிசீலனைக்காக கீழே குறிப்பிடப்பட்டுள்ள பொருத்தமான தகுதிகள் மற்றும் அனுபவத்தை கொண்ட தகுதியான விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**அனுபவம் மற்றும் வயதெல்லை**

| பதவி | விண்ணப்பத்தினை சமர்ப்பிக்கும் சந்தர்ப்பத்தில் அதிகூடிய வயதெல்லை | பதவிக்குறிய அனுபவம் (வருடங்களில்) |
|---|---|---|
| பிரதான மாலுமி | 55 வயது | 03 |
| தலைமை அதிகாரி | 55 வயது | 02 |
| 2 ஆம் அதிகாரி | 45 வயது | 02 |
| 3 ஆம் அதிகாரி | 45 வயது | 01 |
| தலைமை பொறியியலாளர் | 55 வயது | 03 |
| 2 ஆம் பொறியியலாளர் | 55 வயது | 03 |
| 3 ஆம் பொறியியலாளர் | 45 வயது | 02 |
| 4 ஆம் பொறியியலாளர் | 45 வயது | 01 |
| மின் பொறியியலாளர் | 55 வயது | 03 |
| போசன் | 55 வயது | 03 |
| திறமிகு | 55 வயது | 03 |
| வெல்டர் பிட்டர் | 55 வயது | 03 |
| எண்ணெய் கப்பல் | 55 வயது | 03 |
| தலைமை சமையற்காரர் | 55 வயது | 03 |
| உதவி சமையற்காரர் | 55 வயது | 02 |
| சிரேஷ்ட பணியாளர் | 55 வயது | 03 |
| பணியாளர் | 55 வயது | 03 |

1. கப்பலை செலுத்தும் அதிகாரிகளுக்கு Supramax / Panamax வகைகளின் Geared Bulkers போன்றவற்றில் அனுபவத்தினை கொண்டிருத்தல் வேண்டும்.
2. பொறியியல் அதிகாரிகள் MAN B&W ME C-8.2 இன் பிரதான என்ஜின்கள் பொருத்தப்பட்ட கப்பல்களில் மற்றும் macGregor Cargo Crane இல் அனுபவம காணப்படின் மேலதிக தகைமையாக கொள்ளப்படும்.
3. மேலதிக சலுகைகள் : வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பல் கூட்டுத்தாபனத்தினால் அடிப்படை சம்பளத்தில் இருந்து 15% EPF மற்றும் 3% ETF க்கு பங்களிப்பு வழங்கப்படும்.

இந்த விளம்பரம் வெளியான **14 நாட்களுக்குள்** கீழ் கையொப்பமிடப்பட்ட நபருக்கு அனுப்பப்பட வேண்டும். அனைத்து விண்ணப்பங்களும், தகுதிகள் மற்றும் அனுபவத்தை உறுதிப்படுத்தும் குறித்த சான்றிதழ்களின் நகல்களுடன், உரவினரல்லாத இரண்டு நபர்களின் முகவரிகள் மற்றும் தொடர்பு விபரங்களுடன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு பதிவுத்தபால் மூலமாக அல்லது **technical _crew@cscl.lk** எனும் மின்னஞ்சல் மூலமாக அனுப்பி வைத்தல் வேண்டும். தயவு செய்து விண்ணப்பிக்கும் பதவியினை கடித உறையின் மேல் இடது மூலையில் அல்லது மின்னஞ்சல் முகவரியின் விபரக் குறிப்பில் குறிப்பிடவும்.

**தலைவர்**
**வரையறுக்கப்பட்ட கப்பற் கூட்டுதாபனம்**
**இல-27, M.I.C.H கட்டிடம்,**
**சேர் ரசீக் ஃபரீட் மாவத்தை,**
**கொழும்பு 01.**
**இணையம் : www.cscl.lk, தொலைபேசி : 011 2497800**

## நகர சபை திருகோணமலை

# 2022 ஆண்டிற்கு குறித்த வழங்குநர்கள் ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல்

திருகோணமலை நகர சபைக்கு 2022ஆம் ஆண்டில் தேவைப்படுகின்ற கீழ்க்காணும் பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்காக வழங்குநர்களாக பதிவு செய்வதற்கு ஆர்வம் காட்டுகின்ற பிரசித்த வழங்குநர்கள் மற்றும் வழங்குநர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

ஒவ்வொரு விடயத்திற்கும் அந்த விடயத்தின் முன்னால் தரப்பட்டுள்ள மீளளக்கப்படாத பதிவுக் கட்டணத்துடன் உறுதி செய்யப்பட்ட வியாபார சான்றிதழின் பிரதி மற்றும் வருடாந்த வியாபார அனுமதிப் பத்திரத்துடன் விண்ணப்பத்தை சமர்ப்பித்தல் வேண்டும். இவ் விண்ணப்பம் உள்ளிடும் உறையின் இடது பக்க மேல் மூலையில் 2022ஆம் ஆண்டுடன் சம்பந்தப்பட்ட வழங்குநர்களைப் பதிவு செய்தல்” என்று குறிப்பிட்டு 2021.12.30 பி.ப. 3.00 இற்கு முன் எமக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் செயலாளர், நகர சபை, திருகோணமலை (Secretary, Urban Council, Trincomalee) என்ற முகவரிக்கு காசோலை மூலம் அல்லது காசுக் கட்டளை மூலம் பதிவிற்கான கட்டணத்தை அனுப்புதல் வேண்டும்.

| இலக்கம் | பொருட்கள் மற்றும் சேவைகள் பற்றிய விபரம் | மீளளிக்கப்படாத வைப்புத் தொகை. ரூபா |
|---|---|---|
| 1 | காகிதாதிகள் எழுத்து உபகரணங்கள், போட்டோப் பிரதி தாள் போன்றவை | 1,000.00 |
| 2 | அலுவலக உபகரணம், மரம் மற்றும் உலோகப் பொருட்கள் போன்றன | 1,000.00 |
| 3 | சீருடை, காற்சட்டை துணி போன்றன | 1,000.00 |
| 4 | தீந்தை வகை மற்றும் அது சம்பந்தமான ஏனைய பொருட்கள் போன்றன | 1,000.00 |
| 5 | லெஜர், மாதிரிப் பத்திரங்கள், ரப்பர் முத்திரை அச்சிடல் மற்றும் விநியோகித்தல் | 1,000.00 |
| 6 | மின் பொருட்கள், மின்கம்பி, மின்விளக்கு, மின் விசிறி போன்றன | 1,000.00 |
| 7 | உலோகப் பொருட்கள், கட்டிடப் பொருட்கள் போன்றன | 1,000.00 |
| 8 | கிருமிநாசினி, பீடைநாசினி, சுத்திகரிப்புப் பொருட்கள் போன்றன | 1,000.00 |
| 9 | வாகன அனுமதிப்பத்திர தகடு | 1,000.00 |
| 10 | கணனி, போட்டோப் பிரதி/ பெக்ஸ் மற்றும் அலுவலக இயந்திரம் மற்றும் அதுபற்றிய துணைப்பாகங்கள் போன்றன | 1,000.00 |
| 11 | PVC பொருட்கள் போன்றன | 1,000.00 |
| 12 | சகல வகையான பலகை போன்ற பொருட்கள் | 1,000.00 |
| 13 | டயர், டியூப் போன்றன | 1,000.00 |
| 14 | டயர், டியூப், வெல்டிங் மற்றும் ஏணி போன்றன | 1,000.00 |
| 15 | சகல வகையான டிரக்டர் இயந்திரத்திற்கான துணைப்பாகங்கள் வழங்குதல் | 1,000.00 |
| 16 | சகல வகையான துணைப்பாகங்கள் | 1,000.00 |
| 17 | நூலக புத்தகம், சஞ்சிகை | 1,000.00 |
| 18 | பொருட்கள் கொண்டு செல்லல் - ஏனைய மாவட்டங்கள் திருகோணமலை | 1,000.00 |
| 19 | வாகன பற்றரி போன்றன | 1,000.00 |
| 20 | மெட்டல், கருங்கல், செங்கல், கிரவல், குளத்து மணல் விறகு போன்றன | 3,000.00 |
| 21 | பாதுகாப்பு சேவைகள் வழங்குதல் | 1,000.00 |
| 22 | மழைஅங்கி, மவுஸ்பூட்ஸ், பாதணி மற்றும் பேஸ் வகைகள் | 1,000.00 |
| 23 | வாகன பழுதுபார்த்தல் | 1,000.00 |
| 24 | வாகன சேர்விஸ் செய்தல் | 1,000.00 |
| 25 | கட்டிட நிர்மாண வேலைகளுக்கு ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல் ரூ. 500,000 (ஐந்து மில்லியன்) வரை (CIDA) நிறுவனத்தில் பதிவு செய்த ஒப்பந்தக்காரர்கள் | 3,000.00 |

தேவைப்பாடொன்று ஏற்படும் வேளையில் பதிவு செய்துள்ள வழங்குநர்கள் தவிர்த்து வேறு வழங்குநர்களிடமிருந்து விலைமனுக்களை ஏற்றுக்கொள்ளும் அதிகாரம் சபைக்கு உண்டு. அவ்வாறே தேவைப்படும் வேளையில் பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்கும் தினம் முதல் குறைந்த பட்சம் 45 நாட்கள் கடன் வசதியொன்றை வழங்குநர்களால் சபைக்கு வழங்குதல் வேண்டும். குறித்த பற்றுச்சீட்டு கிடைத்ததன் பின்னர் காசோலைகள் மூலம் கொடுப்பனவுகள் மேற்கொள்வதற்கு நடவடிக்கையெடுக்கப்படும்.

**மேலதிக விபரங்களுக்கு**

**026-2222074 - தலைவர்**
**026-2222274 - செயலாளர்**
**026-2222458 - கணக்காளர்**
**026-2222275 - அலுவலகம்**
**026-2220552 - பெக்ஸ்**

**என். ராஜநாயகம்**
**தலைவர்**
**நகர சபை, திருகோணமலை**

## புலம்பெயர் முதலீடுகளை...

10ஆம் பக்க தொடர்...

நடைமுறைகளை மீறுங்கள் என்று அவரும் எதிர்பார்க்கவில்லை. விரைவு படுத்துங்கள் என்றே கோருகிறார். ஏனென்றால், இதையெல்லாம் கடப்பதென்பதே பெரிய களைப்பை ஏற்படுத்தி விடக்கூடியது. இதைப்பற்றி இந்தப் பத்தியில் முன்னரும் நாம் பேசியுள்ளோம். ஆனால், நெருக்கடிகள் தணியவில்லை. நல்மாற்றங்கள் நிகழவில்லை. ஆகவேதான் மீளவும் இதைப்பற்றிப் பேச வேண்டியுள்ளது. அடி மேல் அடித்தால் அம்மியும் நகரும் என்று சொல்வார்கள் அல்லவா. அப்படியொரு நம்பிக்கையில்.

அரசாங்கமோ முதலீட்டாளர்களின் வருகையை ஊக்கப்படுத்துவதற்கு ஏராளம் அறிவிப்புகளை விடுத்திருக்கிறது. சலுகைகளைக் கூட வழங்கலாம் என்று சொல்கிறது. முக்கியமாக வரிச்சலுகை, பொருத்தமான இடங்களில் தேவைப்படும் காணிகளை வழங்குவது, நீர் மற்றும் போக்குவரத்து, மின்சாரம் போன்ற அடிப்படைத் தேவைகளை ஏற்படுத்திக் கொடுப்பது வரையில்.

ஆனால், இவற்றைப் பெறுவதில் அதிகாரிகள் மட்டத்தில் உள்ள நெருக்கடிகளும் இழுத்தடிப்புகளும் சாதாரணமானதல்ல. இதைச் சீர்செய்வது யார்? இதைக் கண்காணிப்பது யார்? அதாவது கீழ் மட்டத்தில் உள்ள இந்தத் தடை தாண்டல்களைச் செய்வது எப்படி?

உண்மையில் இதற்கொரு விசேட ஏற்பாடு அவசியம். அதற்கான தனியான ஒரு செயலகப் பிரிவு இயங்க வேண்டும். அது சுயாதீனமாகவும் நேர்மையாகவும் இயங்க வேண்டும். அதைக் கண்காணிப்பதற்கான ஒரு சிறப்புப் பொறிமுறையை நேரடியாக ஜனாதிபதியோ அரசாங்கத்தின் சிறப்புக் குழுவொன்றோ கண்காணிக்கும் வகையில் அமைக்கப்படுவது அவசியம்.

இப்படி நெருக்கடிகளைத் தணிக்கும் வகையில் செய்யவில்லையென்றால் யாரும் இங்கே வரப்போவதுமில்லை. முதலீடுகளைச் செய்யப்போவதுமில்லை. நம்முடைய கஷ்டமும் பிற நாடுகளிடம் கையேந்தும் நிலையும் மாறப்போவதில்லை. பதிலாக கடன் சுமையே ஏறும்.

அல்லது இந்தியா, சீனா, அமெரிக்கா என்று பிற நாடுகளே இங்கே முதலீடுகளைச் செய்யும் நிலை வளரும். இது இந்த மண்ணின் வளங்களால் அந்த நாடுகளை வளர வைப்பதற்கே உதவும்.

இப்பொழுது நடந்து கொண்டிருப்பது இதுதான்.

ஆனால், இலங்கையில் தனியாகவும் கூட்டாகவும் முதலீடுகளைச் செய்வதற்கு புலம்பெயர் நாடுகளில் பலர் ஆர்வமாக உள்ளனர். வலிய வருகின்ற சீதேவியை காலால் தள்ளி விடுகிறோம் என்பார்களே, அதுதான் நடந்து கொண்டிருக்கிறது. இந்த முட்டாள்தனத்தை என்ன செய்வது?

இன்னொரு தரப்பினர் முதலீடுகளைச் செய்யவில்லை. பதிலாக வாழ்வாதார உதவிகள் தொடக்கம் கல்விப் பணிகள், மருத்துவ உதவிகள் எனச் செய்து கொண்டிருக்கிறார்கள். இவர்களை ஒரு பொது அழைப்பிலோ தனிப்பட்ட ரீதியிலோ தொடர்பு கொண்டு முதலீடுகளின் பக்கமாகத் திருப்பலாம். ஆயிரக்கணக்கானோருக்கு உடைகளைக் கொடுத்து அந்த மக்களைக் கையேந்தும் கலாச்சாரத்துக்குப் பழக்குவதை விட அவர்கள் உழைத்து வாழக் கூடிய வழிகளைக் காட்ட வேண்டும். அதைப்போல வாழ்வாதார உதவிகள் என்று தொழில் முயற்சிகளுக்கான வழிகளை ஏற்படுத்த வேண்டுமே தவிர, உணவுப் பொருட்களை வழங்குவது மிகப் பெரிய தவறு.

இருபது ஆண்டுகளுக்கு முன்பு – ஏன் போர் நெருக்கடிக்காலத்தில் கூட யாருக்கும் யாரும் உணவுப் பொதிகளைக் கொடுத்ததில்லை. அதை யாரும் எதிர்பார்த்ததும் இல்லை. யாருக்கும் யாரும் பாவித்த உடுப்புகளையோ பாவிக்காத உடுப்புகளையோ கொடுத்ததும் இல்லை. இதற்காக யாரும் கையேந்தி நின்றதும் இல்லை.

ஆனால் இப்பொழுதுதான் இந்தப் புதிய வியாதி தொடங்கியுள்ளது.

இது ஒரு சமூகத்தை ஈடேற்றுவதற்குப் பதிலாக அதைக் கையேந்தும் நிலைக்குத் தள்ளி இயலாதவர்களாக்குவதாகும்.

ஆகவே இந்த உதவிப் பங்களிப்பாளர்களைப் பக்குவமாக வழிப்படுத்தி, அவர்களுடைய பங்களிப்புகளை முதலீடுகளாக மாற்றுவதற்கு முயற்சிக்க வேண்டும். இதை தமிழ் அரசியற் தரப்பினர் தொடக்கம் அரச அதிகாரிகள், சமூக அக்கறையோடு செயற்படுவோர், சமூகப் பொருளாதார வல்லுனர்கள் போன்றோர் செய்ய வேண்டும். அரசாங்கம் கூட இதற்குப் பொருத்தமான முறையில் சிநேக பூர்வமான முயற்சிகளை மேற்கொள்ளலாம்.

ஏனென்றால் இந்த மாதிரி உதவிப் பணிகளுக்காக பல கோடி ரூபாய்கள் செலவழிக்கப்படுகின்றன. ஆனால் அவை பயனற்றுப் போகின்றன. மட்டுமல்ல, மிக மோசமான தவறான ஒரு வாழ்க்கைப் பண்பாட்டையும் – கையேந்தி நிற்கும் மனநிலையை – தோற்றுவிக்கின்றன. ஆகவே இதை அவசியம் மாற்ற வேண்டும். நமக்கு முன்னே வாய்ப்புகள் தாராளமாக உள்ளன. அவற்றைச் சரியாகப் பயன்படுத்துவதே நமது இன்றைய வேலை.

உலகில் எத்தனையோ நெருக்கடிகளை வரலாறு கடந்து வந்திருக்கிறது. நாமும் நம்முடைய நெருக்கடிகளைக் கடப்பதற்கு சரியாகச் சிந்திக்க வேண்டும். அதுவே சரியான வழிகளைத் திறக்கும். அந்தச் சரியான வழிகளே நெருக்கடிகளைத் தீர்க்கும். அதிலிருந்து நம்மை மீட்கும். இது மீட்பர்களுக்கான காலமாகும்.

## பொன்மனச் செம்மல் எம்.எஸ்.தாஜ்மஹான் தலைமையில் வசந்த கானங்கள்



இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன முனிதாச கலையகத்தில் கலைமாமணி கவிஞர் இலங்கை பொன்மனச் செம்மல் எம்.எஸ். தாஜ்மஹான் தலைமையில் I D M NATIONS CAMPUS தயாரித்து வழங்கும் கவிக்கமல் பாசில் ரஜினி "வீனஸ்" "அக்ஷரா" இசைக் குழுவினரின் இனிய இசையில் இலங்கையின் முன்னணி பாடகிகள் கலந்து சிறப்பிக்கும் "தேனும் பாலும்" கலந்த வசந்த கானங்கள் எதிர் வரும் 05.12.2021 ஞாயிறு மாலை 5.30க்கு நேரடி ஒலிபரப்பாக இடம்பெற உள்ளது.









ஸ்ரீ சத்ய சாயி பாபாவின் 96 ஆவது பிறந்ததினத்தை முன்னிட்டு கடந்த 23 ஆம் திகதி பம்பலப்பிட்டி வஜிரா பிள்ளையார் ஆலய கல்யாண மண்டபத்தில் இலங்கை ஸ்ரீ சத்ய சாயி பாபா சர்வதேச நிறுவனம் ஏற்பாடு செய்த பஜனையில் சாய் லக்ஷ்மி லோகேஸ்வரன் குழுவினர் பஜனை இசைப்பதையும் திருமதி மயூரி உதயநாயகன் விசேட உரையாற்றுவதையும் அவருக்கான நினைவுப்பரிசை சகோதரர் காமினி குணசேகர வழங்குவதையும் காணலாம்.

### இந்திய கலாசாரம் மற்றும் ஜனநாயகம்;

# டில்லி மகாநாட்டில் காயத்திரி விக்கிரமசிங்க



இந்திய கலாசாரம் மற்றும் ஜனநாயகம் குறித்து தற்போது டில்லியில் நடைபெற்று கொண்டிருக்கும் ஏழு நாடுகளின் பிரதிநிதிகள் மகாநாட்டில் கொழும்பு மாநகர சபை உறுப்பினர் காயத்திரி விக்கிரமசிங்க கலந்து கொண்டுள்ளார்.

பூட்டான், சுவிடன் தன்சானியா, ஸ்ரீலங்கா, மலேசியா, உஸ்பகிஸ்தான், போலந்து ஆகிய ஏழு நாடுகளைச் சேர்ந்த 25 இளம் அரசியல் பிரமுகர்கள் இந்த மகா நாட்டில் கலந்து கொள்கின்றனர்.

75 ஆண்டு கால சுதந்திர இந்தியா எதிர்கொள்ளும் சவால்கள் குறித்து இந்த மகாநாடு விரிவாக ஆராய்கிறது. இந்திய நாகரீகத்தின் நீண்டகால பயணம் பற்றியும் இந்திய ஜனநாயக பண்புகள் குறித்தும் ஆய்வுரைகள் இந்த மகா நாட்டில் உரைகள் நிகழ்த்தப்பட உள்ளது. மற்றும் இந்திய விளிம்பு நிலை மக்கள் பற்றியும் பெண்களை வலிமை மிக்கவர்களாக மாற்றுவது பற்றியும் இந்தியாவின் உயர் நிலை பேராசிரியர்களும் சிரேஷ்ட அமைச்சர்களும் இந்த மகாநாட்டில் உரை நிகழ்த்துகின்றனர்.

காயத்திரி விக்கிரமசிங்க மேற்கிந்திய தீவுகளில் ஒன்றான குவாதலூப் (ப்ரான்ஸ்) சர்வதேச இளைஞர் மகாநாட்டில் கலந்து கொண்டு மகாத்மா காந்தி சிறப்பு விருதை பெற்றவர்.

இந்திய வம்சாவழி மக்கள் மகாசபையின் (கோபியோ) பல்வேறு சர்வதேச மகா நாடுகளிலும் கலந்து கொண்டவர். வெளிநாட்டு வாழ் இந்தியர்களுக்கான 'பிரவாசி பாரதி திவாஸ்' எனப்படும் பல்வேறு மாநாடுகளிலும் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டவர். முன்னாள் வெளிநாட்டு வாழ் இந்தியர்களின் நலன் துறை அமைச்சர் வயலார் ரவியின் அழைப்பின் பேரில் 'இந்தியாவை அறிந்துகொள்ளுங்கள்' என்ற நிகழ்ச்சித் திட்டத்தில் கலந்து கொண்டதும் குறிப்பிடத்தக்கதாகும்.

# பேருவளை மரக்கலாவத்தையில் தாய் சேய் நிலைய பிரச்சினைக்கு தீர்வு





பேருவளை மரக்கலாவத்தை கிராம சேவகர் பிரிவில் நீண்ட காலமாக நிலவிவரும் தாய், சேய் நிலையமொன்று இல்லாப் பிரச்சினைக்கு தீர்வு கிடைக்கவுள்ளது.

பேருவளை சீனன் கோட்டை பள்ளிச் சங்கத்தின் வேண்டுகோளின் பேரில் சீனன் கோட்டையைச் சேர்ந்த பாக்கிர் ஹாஜியார் சேனைப் பகுதியில் உள்ள தனது சொந்தக்காணியில் 6 பேர்ச்சஸ் நிலத்தை சீனன் கோட்டை பள்ளிச்சங்கத்திற்கு அன்பளிப்புச் செய்தார்.

மேற்படி காணியில் தாய், சேய் நிலையம் அதனுடன் இணைந்ததாக கிராம சேவகர் அலுவலகம், சமுர்த்தி அலுவலகம் அபிவிருத்தி அதிகாரி அலுவலகம் என்பன அமைக்கப்படவுள்ளன. இப்பணிக்காக 1 கோடி ரூபா வரையில் செலவாகும் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. பெருகமலையைச் சேர்ந்த முஹம்மத் முனாஸ் முஹம்மத் மிஷ்பாக் 20 இலட்சம் ரூபாவை இப்பணிக்காக அன்பளிப்புச் செய்துள்ளார். மிகுதிப் பணத்தை மர்ஸூம் ஜே.எம்.எம் ராஜி ஹாஜியாரின் புதல்வர் இபாம் ராஜி வழங்குவதற்கு முன்வந்துள்ளார்.

இதற்கான அடிகல் நடும் வைபவம் பள்ளிச்சங்கத்தலைவர் ஏ.எச்.எம் முக்தார் ஹாஜியார் தலைமையில் இடம் பெற்றது.

சீனன் கோட்டை பள்ளிச்சங்க இணைச் செயலாளர் எம்.எம்.எம். சிஹாப் ஹாஜியார், அபிவிருத்தி அதிகாரி கே.ஐ.டி பிராபானி அனுருத்திக்கா, பெருகமலை தாக்கிரீன் பள்ளிவாசல் நிர்வாக சபைத் தலைவர் அர்ஷத் ஸவாஹிர், செயலாளர் அஷ்ஷெய்க் மக்கி மன்ஸூர் (நளீமி) மற்றும் கட்டிட நிர்மான குழு உறுப்பினர்களான பாக்கிர் ஹாஜியார், எம். ரிபாக் (நளீமி), எம்.ரிப்கான் (நளீமி) சபீக் ஷாபி, எஸ்.ஐ.எம் புர்ஹான், ஏ.ஆர்.எம் ஸூப்யான், பள்ளிவாசல் இமாம் மௌலவி எஸ்.எச்.எம் இம்ரான் (ரஹ்மானி), சேனை ஸாவியா இமாம் மௌலவி ஹாரிஸ் உட்பட மற்றும் பலரும் கலந்து கொண்டனர்.

**படங்கள்**
**பேருவளை பீ.எம் முக்தார்**



“அரச வானொலி விருது விழா 2021” கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இராஜாங்க அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க தலைமையில் இடம்பெற்றது. புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்நிகழ்வில் 2020ஆம் ஆண்டிற்கான சிறந்த செய்தி வாசிப்பாளருக்குரிய விருதினையும் சிறந்த நிகழ்ச்சி (உன்னருகே நானிருந்தால் நிகழ்ச்சி) முன்னறிவிப்பு குறியிசைக்காக ஊக்குவிப்பு சான்றிதழையும் வசந்தம் எப்.எம். மற்றும் வசந்தம் தொலைக்காட்சி சேவையின் எம். கவிதா பாரதி பெற்றுக்கொண்டார். 37 வானொலி கலைஞர்கள் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்கள். அதில் விருதை பெற்றுக் கொண்ட இளம் கலைஞர் எம். கவிதா பாரதி என்பது குறிப்பிடத்தக்கது.

ருஸைக் பாருக்

# இந்திய வேளாண் சட்டவிலக்கல் ஜெயித்தது யார்...?

**கோவை நந்தன்**

இந்திய அரசியல் வரலாற்றில் நீண்ட நாட்களாக பெரும் சர்ச்சையையும் தொடர் போராடங்களையும் ஏற்படுத்தி பல விவசாயிகளின் உயிரிழப்புக்கும் காரனமாய் அமைந்த, மத்திய அரசின் வேளாண் சட்டங்கள் மீளப் பெறப்படுவதான அண்மைய அறிவிப்பு இந்தியாவையும் தாண்டி சர்வதேச அளவில் தற்போதைய பேசு பொருளாகியுள்ளதுடன், வாதப்பிரதிவாதங்களையும் ஏற்படுத்தி உள்ளது.

நரேந்திர மோடி தலைமையிலான அரசால் இயற்றப்பட்ட இந்த வேளாண் சட்டங்களை எதிர்த்து பல ஆண்டுகளாக முன்னெடுக்கப்பட்ட தொடர் போராட்டம், 700 விவசாயிகளின் மரணம் என்பவற்றின் பிரதிபலிப்பே சர்ச்சைக்குரிய 3 விவசாயச் சட்டங்களை நீக்குவதான அறிவிப்பு என ஒரு சாராரும்,விரைவில் நடக்கவுள்ள உத்தரப் பிரதேசம்,விவசாய மாநிலமான பஞ்சாப் உட்பட்ட ஐந்து முக்கிய மாநில தேர்தல்ககளை கருத்தில் கொண்டே பிரதமரின் இந்த அறிவிப்பு வெளியாகியதாகவும், இது தற்காலிகமானதே என மற்றொரு சாராரும் கருத்துக்களை வெளிப்படுத்தி வருகின்றனர்.

இன்னமும் சில மாதங்களில் இடம் பெறவுள்ள இந்த மாநில தேர்தல்களில் வெற்றிபெற்றால் மட்டுமே, மாநிலங்களவையில் பா.ஜ.கவுக்கு தனிப்பெரும்பான்மையை பெறமுடியும் என்பது குறிப்பிடத்தக்கது. 22கோடிக்கும் மேற்பட்ட மக்கள் தொகையை கொண்ட, தற்போது பிஜேபியின் கோட்டையாக இருக்கும் உத்தரப் பிரதேசத்தில் அண்மையில் எடுக்கப்பட்ட கருத்துக் கணிப்புகள், நூற்றுக்கும் மேற்பட்ட சட்டமன்றத் தொகுதிகளை அது இழக்கும் என்பதை வெளிப்படுத்துவதும், விவசாய மக்களையே அதிகமாக கொண்ட மாநிலமான பஞ்சாபில் பொதுக் கூட்டங்களைக் கூட நடத்தமுடியாத நிலை மோடி அரசுக்கு ஏற்பட்டுள்ளதும் கவனிக்கத்தக்கது.

1. வேளாண் விளைபொருள் வர்த்தக சட்டம்,
2. அத்தியாவசியப் பொருள்கள் அவசர திருத்தச் சட்டம்,
3. விலை உறுதியளிப்பு மற்றும் பண்ணை ஒப்பந்த சட்டம்,

ஆகிய மூன்று முக்கிய சட்டங்களே தற்போது திரும்பப் பெறப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பிஜேபி அரசின் இந்த பின்வாங்கல் முடிவு, விவசாயிகளின் நலனுக்கு மட்டுமல்ல, ஒட்டுமொத்த நாட்டின் நலனுக்கும் உகந்த ஒன்று என்றும்,பல ஆண்டுகளாக முன்னெடுக்கப்பட்ட விவசாயிகளின் போராட்டங்களின்போது உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு இழப்பீட்டுத் தொகை வழங்கப்பட வேண்டும் எனவும் விவசாயிகள் தரப்பில் இருந்தும் பொது அமைப்புகள் பலவற்றில் இருந்தும் கருத்துக்கள் முன் வைக்கப்பட்டு வருகின்றன,

இந்த விவசாயச் சட்டங்கள் தொடர்பில், விவசாயிகளின் ஆலோசனைகளையும் பெற்று, முழுமையாக ஆராய்ந்து, சட்டங்களை நிறைவேற்றியிருந்தால், இத்தனை குழப்பங்களும், இழப்புகளும் ஏற்பட்டிருக்காது என்பதுவும், விவசாயிகளின் செலவை குறைத்து, வருமானத்தை இரட்டிப்பாக்கவே இப்புதிய சட்டங்கள் என அரசு அறிவித்திருந்தாலும், உரம், மற்றும் விவசாய உற்பத்திப் பொருட்களின் விலை ஏற்றத்தையும், விளை பொருட்களை கட்டுப்படியாகும் விலைக்கு விற்க முடியாத நிலையையுமே எதிர்கொண்டனர் விவசாயிகள் என்பதுவுமே யதார்த்த நிலையாக இருந்தது.

தற்போது பிரதமர் மோடி நீக்க உள்ளதாக அறிவித்த இந்த மூன்று விவசாயச் சட்டங்களும், நவம்பர் 29ம் திகதி துவங்க உள்ள பாராளுமன்றத்தின் குளிர்காலக் கூட்டத்தொடரின் போது அதிகாரபூர்வ அறிவிப்பை எட்டும் என அரச தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்திய வரலாற்றில் தொடர் சர்ச்சையை ஏற்படுத்திய இந்த சட்டங்கள் கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் குழப்பமானதொரு சூழ்நிலையில் பாராளுமன்றத்தின் குரல் வாக்கெடுப்பின் மூலம் நிறைவேற்றப்பட்டது.

சர்வதேச நாணய நிதியத்தின் தலைமைப் பொருளாதார நிபுணராக இருக்கும் இந்தியரான கீதா கோபிநாத், அமெரிக்க அரசுத் துறையின் வலதுசாரி பொருளாதார வல்லுனர்கள் சிலர் மற்றும் இந்தியாவின் மோடிக்கு ஆதரவான, தொழில்துறை சார் ஊடகங்கள் என்பவற்றின் ஆதரவுடன், இயற்றப்பட்ட இந்த சட்டங்கள் இந்தியாவின் பாமர மற்றும் விவசாய மக்களிடையே வெகுஜன எதிர்ப்பையே எதிர்கொண்டு அரசை ஆட்டம் காண வைத்தது.

அரசின் வேளாண் சட்டங்களுக்கு எதிரான விவசாயிகளின் போராட்டங்களுக்கு பரந்து பட்ட உண்மையான வெகுஜன ஆதரவு இந்தியா பூராவும் இருந்து கிடைத்தது. பஞ்சாபின் சீக்கிய மற்றும் உத்தரபிரதேசத்தின் ஜாட் சமூகங்களைச் சேர்ந்த விவசாயத் தலைவர்கள் முன்னணியில் இருந்து போராட்டங்களை வழிநடாத்தினர். நாடு முழுவதிலும் இருந்து பெண்கள் உட்பட்ட விவசாயிகள் கூட்டம் தலைநகர் டெல்லிக்கு படையெடுக்க, பயணிக்க முடியாத ஏழைகளும் வயதானவர்களும் உள்ளூரிலேயே ஒற்றுமையுடன் ஆர்ப்பாட்டங்களை நடத்தினர், மாதக்கணக்கில் தெருக்களில் முகாமிட்டிருந்த விவசாயிகள் பலதடவைகள், அரச வன்முறையை எதிர்கொண்டும் இலட்சியத்தில் உறுதியாகவே இருந்தனர். எதிர்ப்பாளர்களின் எண்ணிக்கையும், மன உறுதியும், இந்திய விவசாய சங்கங்களின் ஆழமான வேர்களுக்கு ஒரு சான்றாக அமைந்தது.

போராடங்களின் போது சில எதிர்ப்பாளர்கள் வன்முறையில் ஈடுபட்டபோது, அதற்கெதிரான கண்டனங்கள் தலைமையிடமிருந்து விரைவாக பிறப்பிக்கப்பட்டு வன்முறைகள் மு ளையிலேயே தடுத்து நிறுத்த ப்பட்டன. எதிர்க்கட்சிகள் போராட்டங்களுக்கு வழங்கிய ஆதரவு அவர்களது அரசியல் ஆதாயம் சார்ந்ததாக அமைந்திருக்கும் என்பதால் போராட்டக்காரர்கள் அவர்களை கைக்கெட்டும் தூரத்திலேயே வைத்திருந்தார்கள். இங்கிலாந்து உட்பட உலகெங்கிலும் உள்ள சீக்கிய புலம் பெயர்ந்தோர் போராட்டத்திற்கு பெரும் ஆதரவை வழங்கினர்,.



ஒட்டு மொத்த மக்கள் கருத்தும் தமக்கு ஆதரவாக இருப்பதாக போராட்டக்காரர்கள் நிரூபித்தும், போராட்டங்களை இழிவுபடுத்துவதற்காக மோடி அரசாங்கம் எடுத்த பெரு முயற்சியும் செலவழித்த நேரமும் மக்கள் மத்தியில் பெரும் விரயத்தையே சந்தித்தது. விவசாயிகளின் போராட்டங்களிற்கு பின்னைய நாட்களில் இடம்பெற்ற மாநில தேர்தல்களில் மோடி அரசு தோல்விகளையே சந்தித்தது.

2019ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட இந்திய குடியுரிமை திருத்தச் சட்டமும் (CAA), வேளான் சட்டங்கள் போலவே பெரும் எதிர்ப்பை சந்தித்ததும் அதன் பிரதிபலிப்பும் மோடி அரசு மீதான எதிர்ப்பலையை குறிப்பாக இஸ்லாமிய சமூகத்தின் பெரும் எதிர்ப்பை சந்தித்ததும் குறிப்பிடத்தக்கது.

ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான் மற்றும் பங்களாதேஷ் ஆகிய நாடுகளில் இருந்து மதத் துன்புறுத்தல் காரணமாக தப்பித்து சட்டவிரோதமாக இந்தியாவில் குடியேறியவர்களுக்கு குடியுரிமை வழங்கும் இந்த சட்டமூலத்தில், முஸ்லிம் அல்லாதவர்களுக்கு மட்டுமே இந்த சட்டம் நடைமுறைப் படுத்தப்படும் என குறிப்பிடப் பட்டுள்ளது மோடியின் இந்துத்துவ மேலாதிக்கத்தை வெளிப்படுத்துகிறது என விமர்சனங்கள் எழுந்தன.

இந்த சட்ட மூலங்களால் மட்டுமல்ல கடந்த ஏழு ஆண்டுகளில் இந்து தேசியவாதத்தை ஊக்கப்படுத்தும், பல நடவடிக்கைகளால் மோடி அரசின் மக்கள் ஆதரவு மட்டுமல்ல கருத்து வேறுபாடுகளுக்கான களமும் சுருங்கியே வருகிறது.

இந்துத்துவ கொள்கைகளையும், கோட்பாடுகளையும் எதிர்க்கும் மக்கள் சிறையில் அடைக்கப்படுவதுடன் அரசின் நடவடிக்கைகளை விமர்சிக்கும் ஊடகவியலாளர்கள் பலர் பொலிஸ் நடவடிக்கைகளை எதிர்கொண்டு வருகின்றனர். ஒரு முஸ்லிம் நகைச்சுவை நடிகர் அச்சுறுத்தல்களை எதிர்கொண்டு தனது நிகழ்ச்சிகளை ரத்து செய்ய வேண்டிய நிலை கூட ஏற்பட்டது.

பேச்சு மற்றும் ஊடக சுதந்திரத்தைப் பாதுகாப்பேன் என்று தனது முதல் பதவிக் காலத்தின் ஆரம்பத்தில் நரேந்திர மோடி வாக்குறுதி அளித்த போதிலும், இந்திய ஊடகங்களில் பல இப்போது அரச பிரசாரப் பிரிவை ஒத்த கருத்தை மட்டுமே வெளியிடும் அளவுக்கு மாற்றப் பட்டுள்ளன.

வேளாண் சட்டங்களை மீளப் பெறுதல் என்கிற தற்போதைய அறிவிப்பின் வெற்றி இந்திய விவசாயிகளை சார்ந்தது என்றாலும் இந்த அறிவிப்பின் அறுவடையை நரேந்திர மோடியின் இந்துத்துவ அரசாங்கமே மேற்கொள்வதற்கான வாய்ப்புகளையே இந்திய சூழல் வெளிப்படுத்தி நிற்கிறது.

அதேவேளை சர்வதேச மட்டத்தில் மதச்சார்பற்ற நாடு இந்தியா என போற்றப்பட்ட நிலை மாறி இந்தியா ஒரு இந்துத்துவ நாடு என்கிற நிலை வலுப்பெறுமானால் பாரதிய ஜனதா கட்சியின் ஆட்சி மட்டுமல்ல அதன் இருப்பே கேள்விக் குறியாகும் நிலை எதிர்காலத்தில் ஏற்படவும் வாய்ப்புகள் உள்ளன,

# மருத்துவமனையில் கமல்... பிக்பாஸ் நிகழ்ச்சியை தொகுத்து வழங்க போவது யார்?



கொரோனா தொற்று காரணமாக கமல் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருப்பதால், பிக்பாஸ் நிகழ்ச்சியை தொகுத்து வழங்குபவர் யார் என்ற தகவல் வெளியாகியுள்ளது.

கமல் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் மிகவும் பிரபலமானது பிக்பாஸ் நிகழ்ச்சி. இந்நிகழ்ச்சியை நடிகர் கமல்ஹாசன் தொகுத்து வழங்கி வருகிறார். இதுவரை தமிழில் நான்கு சீசன்கள் முடிந்துள்ளன. தற்போது 5வது சீசன் நடைபெற்று வருகிறது. 4 சீசனை தொடர்ந்து 5வது சீசனையும் கமல் தொகுத்து வழங்கி வருகிறார்.

தற்போது நடிகர் கமலுக்கு கொரோனா தொற்று பாதிப்பு ஏற்பட்டுள்ளதால், தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு தனிமைப்படுத்தப்பட்டுள்ளார். இதனால், சில வாரங்கள் பிக்பாஸ் நிகழ்ச்சியில் இருந்து விலகி, ஓய்வு எடுக்க இருப்பதாக கூறப்படுகிறது. இதையடுத்து வரும் பிக்பாஸ் நிகழ்ச்சியை யார் தொகுத்து வழங்குவார் என்ற கேள்வி எழுந்து இருந்தது.

இந்நிலையில், பிக்பாஸ் நிகழ்ச்சியை விஜய் சேதுபதி தொகுத்து வழங்க இருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளது.

விஜய் சேதுபதி இதற்கு முன் மாஸ்டர் செப் என்ற நிகழ்ச்சியை தொகுத்து வழங்கி இருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

# கவர்ச்சி காட்டிய தர்ஷா குப்தா



இளைஞர்களின் கனவு கன்னியாக வலம் வருபவர் நடிகை தர்ஷா குப்தா. சீரியல்களில் நடித்து வந்த தர்ஷா விஜய் டிவியில் ஒளிபரப்பான குக் வித் கோமாளி சீசன் 2வில் கலந்து கொண்டார்.

இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்ட பிறகு அவருக்கு சினிமாவில் நடிக்கும் வாய்ப்பு கிடைத்தது. இவர் சமீபத்தில் வெளியான ருத்ர தாண்டவம் திரைப்படத்தில் ஹீரோயினாக நடித்தார்.

தற்போது தமிழ் சினிமாவில் நடிப்பதற்கு வாய்ப்பு தேடி வரும் தர்ஷா தன்னுடைய கவர்ச்சி புகைப்படங்களை சோஷியல் மீடியாவில் வெளியிட்டு வருகிறார். அந்த வகையில் தற்போது தர்ஷா குப்தா நீச்சல் உடையில் இருக்கும் புகைப்படத்தை வெளியிட்டுள்ளார்.

அதில் தர்ஷா சிவப்பு நிற பிகினி உடையில் ஈரம் சொட்ட சொட்ட தண்ணீரில் நிற்கிறார். இந்த புகைப்படத்தை பார்க்கும் ரசிகர்கள் பில்லா திரைப்படத்தில் நயன்தாரா பிகினியில் வருவது போன்று உள்ளது என கமெண்ட் கூறுகின்றனர்.

# குடியரசு தினத்தை குறிவைத்த விஷால்



எனிமி படத்தை தொடர்ந்து விஷால் தனது விஷால் பிலிம் பேக்டரி மூலம் தயாரித்திருக்கு படத்தை குடியரசு தினத்தில் வெளியிட இருக்கிறார்.

விஷால் எனிமி படத்தை தொடர்ந்து விஷால் நடிப்பில் தற்போது உருவாகி வரும் படம் 'வீரமே வாகை சூடும்'. இப்படத்தை அறிமுக இயக்குனர் து.ப.சரவணன் இயக்கி உள்ளார். டிம்பிள் ஹயாதி நாயகியாக நடிக்க, யோகிபாபு, மாரிமுத்து, துளசி, கவிதா பாரதி, ஆர்.என்.ஆர்.மனோகர், பாபுராஜ், பில்லி முரளி, ரவீனா, கே.எஸ்.ஜி.வெங்கடேஷ் உள்ளிட்ட பலர் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளார்கள்.

அதிகார பலம் படைத்தவர்களை எதிர்கொள்ளும் சாமானியன் ஒருவனின் கதையில் விஷாலின் மாறுபட்ட நடிப்பில் இப்படம் உருவாகியுள்ளது. ஐதராபாத்தின் பல பகுதிகளிலும், சென்னையை சுற்றியுள்ள பகுதிகளிலும் இப்படத்தின் படப்பிடிப்பு நடைபெற்றது.

தற்போது பின்னணி வேலைகள் மும்முரமாக நடைபெற்று வரும் நிலையில் இப்படத்தை அடுத்த ஆண்டு குடியரசு தினத்தை முன்னிட்டு 2022 ஜனவரி 26ம் திகதி படத்தை வெளியிட இருப்பதாக படக்குழுவினர் அறிவித்துள்ளனர்.



பாடசாலை பெயர் ..............................

பாடசாலை முகவரி ..............................

..............................

.............................. ..............................

மாணவரின் பெயர் வகுப்பாசிரியர் பெற்றோர் கையொப்பம்

### இடமிருந்து வலம்

(01) வளிமண்டலத்தில் உருவாகின்ற குறைந்த காற்றழுத்தப் பகுதியை இச்சொல்லால் குறிப்பிடுவர். இதன் விளைவாக கடும் காற்று, பலத்த மழை போன்ற அனர்த்தங்கள் உருவாகக் கூடும்.
(11) இளைய சகோதரி (தலைகீழான சொல்)
(14) வளியை இவ்வாறும் குறிப்பிடலாம். (தலைகீழான சொல்)
(21) மூவிடப் பெயர்களில் ஒன்று இது. நான், நாம் போன்று தன்னை அல்லது தங்களை சுட்டும் சொற்கள் இதற்குள் அடங்கும்.
(24) அக்காலத்தில் பயன்படுத்தப்பட்ட நரம்பிசை வாத்தியக் கருவி இது. விபுலானந்த அடிகளாருக்கும், இந்த வாத்தியக் கருவிக்கும் தொடர்பு உள்ளது.

### மேலிருந்து கீழ்

(01) உயிரங்கிகளில் ஒருவகை இது. ஆனால் தற்போசனி வகை உயிரங்கி. தனக்குரிய உணவைத் தொகுப்பதுடன், மனிதன் போன்ற மற்றைய உயிரினங்களுக்கும் உணவை வழங்குகின்றது.
(03) கூர்மையானது. காலணி இன்றி நாம் நடந்து சென்றால், உள்ளங்காலில் குத்திவிடும்.
(06) முகத்தைக் குறிக்கும் சொல். (தலைகீழான சொல்)
(11) நல்லுறவுக்கு விரோதமானது இது. (தலைகீழான சொல்)
(16) உழைப்பின்றேல் இதுவும் வந்து சேர்ந்துவிடும். இளமையில் கொடியது இது.
(20) தரைவாழ் உயிரினங்களில் மிகப் பெரியது. (தலைகீழான சொல்)

**போட்டி இல. 338**
**சிறுவர் உலகம்**
**தினகரன் வாரமஞ்சரி**
**த.பெ.இல.834.**
**கொழும்பு**

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 337

### விடைகள்


**இடமிருந்து வலம்**

01. கடலாமை 07. நிம்மதி 11. பசு 13. அகதி
16. இறால் 22. அரிசி 25. மணி

**மேலிருந்து கீழ்**

01. கப்பல் 03. நிலா 04. அம்மை 05. அதிதி
09. மகன் 12. சுறா 18. இஞ்சி 21. ஆணி

தற்போதைய சூழ்நிலை காரணமாக குறுக்கெழுத்துப் போட்டிகளுக்கான பரிசில்கள் வழங்கப்படாது என்பதை எமது சிறார்களுக்கு அறியத் தருகின்றோம். ஆனாலும் ஆர்வம் கொண்ட சிறார்களுக்காக குறுக்கெழுத்துப் போட்டிகள் தொடர்ந்தும் இடம் பெறும். (ஆர்)






குறளமுதம் :

உள்ளியது எல்லாம் உடன்எய்தும் உள்ளத்தால்
உள்ளான் வெகுளி எனின்.

***தெளிவுரை :***
***ஒருவன் தன் மனத்தால் சினத்தை எண்ணாதிருப்பானானால், நினைத்த நன்மைகளை எல்லாம் அவன் ஒருங்கே பெறுவான்.***

# நான் ஒரு கதைப்புத்தகம்

## சுயசரிதை

அந்த மாணவியின் கைகளில் நான் தவழ்ந்து கொண்டிருந்தேன். அவள் ஒவ்வொரு பக்கமாக என்னைப் புரட்டிப் பார்த்துக் கொண்டிருந்தாள். என்னைக் கடையிலிருந்து வாங்கிய நாள் முதல் அவளுக்கு ஓய்வு நேரங்களில் துணையாக நான் மட்டுமே இருந்தேன்.

தலை சிறந்த எழுத்தாளர் ஒருவரின் கற்பனையில் நான் மலர்ந்தேன். நான் சிறுவர்களுக்கான நீதிக் கதைகள் எனப் பெயரிடப்பட்டேன். மொத்தம் 81 பக்கங்களை உள்ளடக்கி பதிக்கப் பட்டிருந்தேன்.




ஒரு நாள் அக்கடைக்கு ஒரு மாணவி தன் தாத்தாவுடன் வந்திருந்தாள். அவள் அங்குள்ள புத்தகங்களை எல்லாம் பார்வையிட்டுக் கொண்டிருந்தாள். அவள் என்னை வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தாள். நான் இவளாவது என்னை வாங்குவாளா என்ற ஏக்கப் பெருமூச்சுடன் அவளையே பார்த்துக் கொண்டிருந்தேன். சிறிது நேரத்திற்குப் பின் என்னை எடுத்துச் சென்று அவள் தாத்தாவிடம் என்னை வாங்கித் தருமாறு கேட்டாள். அவள் தாத்தாவும் அதனை வாங்கித் தந்தார்.

அன்று முதல் அவள் என்னை பத்திரமாகப் பார்த்துக் கொண்டாள். எனக்கு அழகான அட்டையைப் போட்டு என் அழகுக்கு மேலும் அழகு சேர்த்திருந்தாள். ஒருநாள் அவள் என்னைப் படித்துக் கொண்டிருக்கும்போது அவள் தாயார் அவளை அழைக்கும் ஓசை கேட்டு சமையலறைக்கு ஓடினாள். அவ்வேளையில் அங்கு விளையாடிக் கொண்டிருந்த அவளது இளைய தங்கை என்னை தூக்கி வந்தாள்.

என்னைக் கையில் எடுத்து அவள் முன்னும் பின்னும் திருப்பி பார்த்தாள். அவள் என்னை என்ன செய்யப் போகிறா என்று என் உள்ளம் படபடத்தது. நான் என் கண்களை இறுக மூடிக்கொண்டேன். அப்பொழுது யாரோ என்னைப் பிடித்து இழுப்பதை உணர்ந்தேன். கடவுளே! கடவுளே! என்று முணுமுணுத்தேன். அப்பொழுது அம்மாணவியின் குரல் கேட்க மெல்ல கண் திறந்து பார்த்தேன். நல்ல வேளை! எந்த அசம்பாவிதமும் ஏற்படுவதற்கு முன் அவள் என்னைத் தன் தங்கையிடமிருந்து காப்பாற்றிவிட்டாள். அன்று முதல் அவள் என்னை எங்கும் தவறவே விடுவதில்லை. என்னைப் படித்து முடித்ததுமே மறவாமல் கண்ணாடி பேழைக்குள் வைத்துக் கண்ணை இமை காப்பதுபோல் காத்து வருகிறாள்.

ஆ.லங்கேஷ்
நோர்வூட்

# இவ்வார மழலையர்



பிரஷோ டில்ருக்ஷான்,
ஸ்ரீகுமார் - தமிழ்ச்செல்வி, ,
வெல்லம்பிட்டிய.

# ஆசிரியரும் மாணவர்களும்

ஆசிரியர் மாணவர் உறவு இரக்கச் சிந்தையோடு அடைய வேண்டும். மாணவர்களுக்கு வெறுப்பூட்டக்கூடிய செயல்களில் ஆசிரியர் ஈடுபடக்கூடாது. மாணவர்களிடம் கேள்வி கேட்கும்போது பதில் தவறாக இருந்தாலும் அதற்காக அவனை மட்டந்தட்டி, மடையர், முட்டாள் என்றெல்லாம் திட்டக்கூடாது. அது மாணவனை வெகுவாகப் பாதிக்கக்கூடும். சிலவேளை ஆசிரியரையே கூட வெறுப்படையச் செய்யக்கூடும்.

சில மாணவர்கள் குறும்புகளைச் செய்வதில் மகிழ்ச்சியடைகின்றனர். ஆசிரியர் கதிரையில் மைதெளித்தல், குண்டூசி வைத்தல் போன்ற செயல்களில் ஈடுபடுபவதுண்டு. இதுபோன்ற சேஷ்டைகளை எல்லா மாணவர்களும் செய்வதில்லை. பாடசாலையில் குறும்புத்தனம் புரியும் மாணவர்கள் நாளடைவில், தாங்கள் செய்வது தவறு என்பதை உணர்ந்து கொள்கின்றனர். பிற்காலத்தில் இவர்கள் தேசத்தின் நற்பிரஜைகளாகவும் நாட்டுப் பற்றாளர்களாகவும் திகழ்ந்ததுண்டு.

சாரணா கையூம்

# கர்வம் !

ஒரு குளத்தில் ஏராளமான மீன்கள் இருந்தன. அவற்றில் ஒரு தங்க நிற மீனும், ஒரு கெளுத்தி மீனும் நண்பர்களாக இருந்தன. தங்கநிற மீனுக்கு, தான் அழகாய் தங்கம் போல் மினுமினுப்பாய் இருப்பதால் கர்வம் அதிகம். கெளுத்தி மீனிடம் நட்பாக இருந்தாலும் அடிக்கடி அதன் தோற்றத்தைக் கண்டு கேலி செய்யும்.

ஒருநாள், தங்க மீன் மிக ஆனந்தமாய் நீரில் குதித்துக் குதித்து கும்மாளமடித்தது. அப்போது அப்பக்கமாக கெளுத்தி மீன் வந்தது. அதைப் பார்த்ததும் தங்க மீனுக்கு குஷி அதிகமாகிவிட்டது. "

ஹாய்... இன்றும் என் அழகைப் பார். என் மினுமினுப்பைப் பார்; வசீகரத்தைப் பார். நாளுக்கு நாள் என் மெருகு எப்படி கூடிக் கொண்டே போகிறது பார். உலகில் என் போன்ற அழகிய மீன் எங்கு இருக்க முடியும்? ஹூம்... இறைவன் உன்னையும்தான் படைத்திருக்கிறானே... அவலட்சணமாய், கறுமை நிறத்தில் சொரசொரப்பாய்... என்ன பிறவியோ நீ... இந்தக் குளத்தில் என்னைப் போல் வேறு யாரும் இல்லாததால் உன்னுடன் பழகவேண்டிய சூழ்நிலை. எல்லாம் என் தலையெழுத்து'' என்றது.



"தங்க மீனே! நம்மையெல்லாம் படைத்தது இறைவன். உன்னை இத்தனை அழகாய் படைத்ததற்கும், என்னை இத்தனை அவலட்சணமாய்ப் படைத்ததற்கும் ஏதேனும் வலுவான காரணம் இருக்கும். அதனால் இறைவனுடைய செயலைக் குறை சொல்லாதே. என் தோற்றம் இப்படி இருக்கிறதே என்று எண்ணி என்றுமே நான் கவலைப்பட்டதில்லை. எனக்கு இந்த உடலமைப்பே போதும். ஆனால், ஒரு விஷயம்... உனக்கு பெருமை அதிகமாகிவிட்டது. இது நல்லதல்ல. பெருமை உள்ளவர்களை கடவுள் எதிர்த்து நிற்பார். விரைவில் உனக்குப் பாடம் கிடைக்கும்!'' என்று அமைதியாகச் சொன்னது.

"சரிதான்! இது உன் இயலாமையின் வெளிப்பாடு. நிச்சயம் உன்னை உனக்குப் பிடிக்கவில்லை. அதனால் பிடித்தது போல் எதையோ சொல்லி சமாளிக்கிறாய், சரிவிடு. சில சமயங்களில் உன்னை நினைத்தால் எனக்குப் பரிதாபமாகத்தான் இருக்கிறது. சரி...சரி... உன்னுடன் பேசிக் கொண்டிருப்பதால் என் மகிழ்ச்சி கெடுகிறது. நான் வருகிறேன்!'' என்று சொல்லிவிட்டு துள்ளிக் குதித்துத் திரும்பி, ஆனந்தமாகப் பாட்டுப் பாடியபடி நீரின் மேற்பரப்புக்குச் சென்றது.

திடீரென்று, தன்னை யாரோ கவ்விப் பிடிப்பதை உணர்ந்து திடுக்கிட்டு, நிமிர்ந்து பார்த்தது.

ஒரு கொக்கின் அலகில் அது சிக்கிக் கொண்டிருந்தது.

"ஐயோ! கொக்கு!'' என்று அலறியது தங்க மீன்.

"ஆமாம்! கொக்குதான். என் வாழ்நாளில் உன்னைப் போன்ற அழகிய மினுமினுப்பான மீனை நான் பார்த்ததே இல்லை. குளத்தின் ஆழத்திலேயே என்னமாய் ஜொலிக்கிறாய்; பிரமாதம். இன்று எனக்கு நீ அற்புதமான விருந்து!'' என்று கரகர குரலில் பேசியது கொக்கு.

"ஐயோ! என்னை விட்டுவிடு!'' என்று சொல்லிக் கதறித் துடித்தது தங்க மீன்.

"விட்டுவிடவா? அடப் பைத்தியமே!'' என்று அதைக் கொத்தி தின்றது. அக் காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்த கெளுத்தி மீன், "தங்க நிற மினுமினுப்பால் தலைக்கணம் பிடித்துத் திரிந்தாயே. அந்த மினுமினுப்பே இன்று உன் உயிருக்கு உலை வைத்துவிட்டது பார்த்தாயா? என்னுடைய அசிங்கமான கரிய நிறம் கொக்கின் பார்வையில் இருந்து என்னை தப்பிக்க வைத்துவிட்டது" என்று சொல்லிவிட்டு, குளத்தின் ஆழத்திற்குச் சென்றது கெளுத்தி மீன்.

**நீதி :**
**யார் நம்மை புன்படுதினாலும் அதை கண்டு வருந்த வேண்டாம். அதற்கான தண்டனயை அவர் பெறுவார்.**

கே. விஷாலினி,
தலவாக்கலை.

## மாணவர் கழக அனுமதி

மாணவர் பெயர் ..............................
பிறந்த திகதி ..............................
வகுப்பு ..............................
பாடசாலை ..............................
..............................

..............................
வகுப்பாசிரியர் கையொப்பம்

**வர்ணப் புகைப்படம்**

**மாணவர் கழகம்**
**சிறுவர் உலகம்**
**தினகரன் வாரமஞ்சரி**
**த.பெ.இல.834 கொழும்பு.**






ஜெ. கோஷினி,
தரம் 04, சர்பேர்ட் சர்வதேச பாடசாலை,
வத்தளை.



பூ. மோஷிகா,
தரம் 10, கலைமகள் தமிழ் மகா வித்தியாலயம்,
இரத்தினபுரி.



எஸ். திவ்யாணி,
தரம் 12, கம்மடுவ தமிழ் மகா வித்தியாலயம்,
கம்மடுவ,
மாத்தளை.



முகம்மத் ரிசான்,
லிட்டில் பிளவர் பாலர் பாடசாலை,
வெளிமடை.

# விளையாட்டு



**பாலியல் குற்றச்சாட்டு வழக்கு:**

## பென்சிமா குற்றவாளியாக கண்டறியப்பட்டார்



2015 ஆம் ஆண்டு பிரான்ஸ் அணி வீரர் மெத்தியூ வால்புவேனாவை அச்சுறுத்தும் முயற்சியில் ஈடுபட்டதாக பென்சிமா குற்றவாளியாகக் கண்டறியப்பட்டார்.

பிரான்ஸ் மற்றும் ரியல் மெட்ரிட் முன்கள வீரர் கரீம் பென்சிமாவுக்கு புதன்கிழமை 1 ஆண்டு இடைநீக்கம் செய்யப்பட்ட சிறைத்தண்டனையும் 75,000 யூரோக்கள் ($84,000) அபராதமும் பிரெஞ்சு கால்பந்தை உலுக்கிய பாலியல் குற்றச்சாட்டு வழக்கில் புதன்கிழமை தீர்ப்பு வழங்கப்பட்டது.

2015 ஆம் ஆண்டு பிரான்ஸ் அணி வீரர் மெத்தியூ வால்புவேனாவை அச்சுறுத்தும் முயற்சியில் ஈடுபட்டதாக பென்சிமா குற்றவாளியாகக் கண்டறியப்பட்டார்.

வெர்சாய்ஸ் நீதிமன்ற தீர்ப்பு பென்சிமாவின் உடனடி விளையாட்டு எதிர்காலத்தை பாதிக்க வாய்ப்பில்லை. மெட்ரிட் உடனான அற்புதமான பருவத்தைத் தொடர்ந்து பாரிஸில் எதிர்வரும் 29ம் திகதி அன்று பலோன் டி'ஓர் விருதை வெல்வதற்கு முன்னோக்கி பிடித்தவர்களில் ஒருவராகக் கருதப்படுகிறார். பிரான்ஸ் கூட்டமைப்பு தலைவர் நோயல் லு கிரேட் ஏற்கனவே பென்சிமா குற்றவாளி என நிரூபிக்கப்பட்டாலும் பிரான்சுடன் விளையாட அனுமதிக்கப்படுவார் என்று கூறியுள்ளார்.

பென்சிமா மேல்முறையீடு செய்யப்போவதாக அவரது வழக்கறிஞர்கள் தெரிவித்தனர்.

தவறை மறுத்த பென்சிமா, கடந்த மாதம் வெர்சாய்ஸில் நடந்த விசாரணையில் கலந்து கொள்ளவில்லை மற்றும் தீர்ப்புக்கு வரவில்லை. மற்ற நான்கு பிரதிவாதிகளும் குற்றவாளிகள் என நிரூபிக்கப்பட்டு புதன்கிழமை நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை.

**அவுஸ்திரேலிய டெஸ்ட் அணி**

## தலைவர் பெட் கம்மின்ஸ் உப தலைவர் ஸ்மித்



அவிஸ்திரேலியாவின் 47வது டெஸ்ட் தலைவராக வேகப்பந்து வீச்சாளர் பெட் கம்மின்ஸ் நியமிக்கப்பட்டார், அதே நேரத்தில் ஸ்டீவ் ஸ்மித் துணைத் தலைவராக வெள்ளிக்கிழமை நியமிக்கப்பட்டார்.

Cricket.com.au இன் கூற்றுப்படி, ஐந்து பேர் கொண்ட தேர்வுக் குழுவுடனான நேர்காணல் செயல்முறை மற்றும் கிரிக்கெட் அவுஸ்திரேலியாவின் முழு சபையின் சம்மதத்திற்கு பிறகு இந்த அறிவிப்பு வந்தது.

அவுஸ்திரேலிய அணியின் முழுநேர டெஸ்ட் தலைவராக இருக்கும் முதல் வேகப்பந்து வீச்சாளர் கம்மின்ஸ் ஆவார். ரிச்சி பெனாட்டுக்குப் பிறகு அணியை வழிநடத்தும் முதல் பந்து வீச்சாளர் இவர்தான்.

2017 முதல் செக்ஸ்ட்டிங் சம்பவத்தைத் தொடர்ந்து, கடந்த வாரம் பதவியில் இருந்து விலகிய டிம் பெயினுக்குப் பதிலாக கம்மின்ஸ் நியமிக்கப்பட்டார்.

உலகின் முதனிலை டெஸ்ட் பந்துவீச்சாளர், தலைவராக நியமிக்கப்பட்டது எதிர்பாராத மரியாதை என்று கூறினார்.

'ஒரு பெரிய ஆஷஸ் கோடைகாலத்திற்கு முன்னதாக இந்த பாத்திரத்தை ஏற்றுக்கொள்வதில் நான் பெருமைப்படுகிறேன்' என்று கம்மின்ஸ் தெரிவித்துள்ளார்.

'கடந்த சில ஆண்டுகளில் டிம் (பெய்ன்) குழுவிற்கு வழங்கிய அதே தலைமைத்துவத்தை என்னால் வழங்க முடியும் என்று நம்புகிறேன்.

ஸ்டீவ் மற்றும் நான் தலைவர்களாக இருப்பதால், இந்த அணியில் பல மூத்த வீரர்கள் மற்றும் சில சிறந்த இளம் திறமைகள் மூலம் நாங்கள் வலுவான மற்றும் இறுக்கமான குழுவாக இருக்கிறோம்.

இது ஒரு எதிர்பாராத பாக்கியம், இதற்கு நான் மிகவும் நன்றியுள்ளவனாக இருக்கிறேன், மிகவும் ஆவலுடன் காத்திருக்கிறேன்' என்றார்.

மறுபுறம், 2018 ஆம் ஆண்டு கேப்டவுனில் பந்தை சேதப்படுத்திய தொடர்கதையைத் தொடர்ந்து ஸ்மித்தை துணைத் தலைவராக அறிவித்தது குறிப்பிடத்தக்கது.

அந்த நேரத்தில் அவரது துணைத் தலைவர் டேவிட் வோர்னர், ஊழலுக்குப் பிறகு வாழ்நாள் முழுவதும் தலைமைத் தடை விதிக்கப்பட்டார்.

## ஸ்கொஷ் போட்டியில் கலந்துகொள்ள இஸ்ரேலிய வீரர்களுக்கு விசா வழங்க மலேசிய அரசு மறுப்பு

அடுத்த மாதம் நடைபெறவுள்ள உலக ஸ்கொஷ் போட்டியில் கலந்துகொள்ள இஸ்ரேலிய வீரர்களுக்கு விசா கொடுக்க முடியாது என்று மலேசியா கூறியுள்ளது.

ஆண்களுக்கான World Team Championship போட்டி, கோலாலம்பூரில் டிசம்பர் 7ஆம் திகதி முதல் 12ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

ஆனால், மலேசிய அதிகாரிகள் இஸ்ரேலிய வீரர்களுக்கு விசா கொடுக்க மறுத்து வருகின்றனர்.

அதற்குத் தீர்வுகாண, மலேசியாவின் ஸ்கொஷ் அமைப்பைத் தொடர்புகொண்டுள்ளதாக உலக ஸ்கொஷ் சம்மேளனம் கூறியது.

விசா அளிக்கப்படாவிட்டால், சுவிட்ஸர்லந்தின் விளையாட்டுக்கான பஞ்சாயத்து மன்றத்திற்குச் செல்லத் திட்டமிடுவதாக இஸ்ரேலிய ஸ்கொஷ் அமைப்பு சொன்னது.

அந்தப் போட்டி தொடக்கத்தில் நியூஸிலந்தில் நடக்கவிருந்தது.

ஆனால், அங்குக் கிருமித்தொற்று தொடர்பான பயணக் கட்டுப்பாடுகள் நடப்பில் இருந்ததால் போட்டி மலேசியாவிற்கு மாற்றப்பட்டது.

மலேசியாவில் பலஸ்தீனர்களுக்கு அதிக ஆதரவு உண்டு.

இஸ்ரேலியக் கடப்பிதழ் வைத்திருப்போர் அந்நாட்டினுள் நுழையத் தடை விதிக்கப்பட்டுள்ளது.





## லங்கா பிரீமியர் லீக் தொடரின் பங்காளராகும் டயலொக்

இந்த ஆண்டுக்கான லங்கா பிரீமியர் லீக் தொடரின் உத்தியோகபூர்வ தொலைத்தொடர்பு பங்காளர்களாக மாறியிருக்கும் டயலொக் ஆசியாட்டா நிறுவனம், அதன் மூலம் எல்பிஎல் தொடரின் அனுசரணையாளர்களில் ஒருவராகவும் மாறியிருக்கின்றது.2021 ஆம் ஆண்டுக்கான லங்கா பிரீமியர் லீக் தொடரின் போட்டிகள் டிசம்பர் மாதம் 05ஆம் திகதி கொழும்பில் ஆரம்பமாகவுள்ளதோடு, தொடரின் இறுதிப் போட்டி டிசம்பர் மாதம் 23ஆம் திகதி ஹம்பாந்தோட்டையில் நடைபெறவிருக்கின்றது. இந்த எல்பிஎல் தொடரில் இம்முறை ஜப்னா கிங்ஸ், கொழும்பு ஸ்டார்ஸ், தம்புள்ளை ஜயன்ட்ஸ், கோல் கிளேடியேட்டர்ஸ் மற்றும் கண்டி வொரியர்ஸ் என இலங்கையின் வெவ்வேறு மாவட்டங்களை பிரதிநிதித்துவம் செய்யும் ஐந்து அணிகள் பங்கெடுக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

இலங்கையின் முன்னணி தொலைத்தொடர்பு நிறுவனமாக இருக்கும் டயலொக் ஆசியாட்டா, ஏற்கனவே இலங்கை கிரிக்கெட் அணியின் அனுசரணையாளர்களாக கடந்த 10 வருடங்களுக்கு மேல் இருப்பதோடு, தற்போது பல் நாட்டு வீரர்கள் விளையாடும், எல்பிஎல் தொடரிற்கும் அனுசரணை வழங்கி இலங்கையின் கிரிக்கெட் விளையாட்டு வளர்ச்சிக்கு தமது பங்களிப்பினை தொடர்ச்சியாக வழங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

எல்பிஎல் தொடரின் உத்தியோகபூர்வ பாடல் வெளியீட்டு விழாவிற்கும் டயலொக் நிறுவனம் தமது அனுசரணையினை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. "எக்வ ஜயகமு" (ஒன்றாய் வெல்வோம்) எனப் பெயரிடப்பட்டுள்ள இந்த பாடலினை, "பாத்தியா சந்துஷ்", யொஹானி, உமாரியா, ஆர்யன் தினேஷ் கணகரத்தினம், சங்க மற்றும் சஜித ஆகியோர் பாடியிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

எல்பிஎல் தொடரின் பாடல் வெளியீட்டு நிகழ்வில் கருத்து வெளியிட்டிருந்த இலங்கையின் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ இவ்வாறு குறிப்பிட்டிருந்தார்.

"எமது நாட்டின் இளம் கிரிக்கெட் வீரர்களை உருவாக்குவதே நமது முதன்மை நோக்கமாகும். அதற்கமைய நடைபெறவுள்ள எல்பிஎல் போட்டிகளும் நமது இளம்வீரர்களை இனம்காண்பதுடன் அவர்களை மெருகேற்றுவதற்கும் தகுந்த களமாக்கிக் கொள்ளக்கூடியதாக அமைந்துள்ளது எனலாம்.

இப்போட்டிகளுக்கு அனுசரணை வழங்குவதுடன் (பாடல்) வெளியீட்டு நிகழ்வை நடத்துவதற்கும் அனுசரணை வழங்குகின்ற டயலொக் ஆசியாட்டா நிறுவனத்திற்கு எனது நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன். மேலும், ரசிகர்களுக்கு மறக்க முடியாத அனுபவங்களை கொண்டு சேர்க்கும் சிறந்த உயர் தரத்திலான போட்டிகளை கொண்டதான போட்டித் தொடராக இப்போட்டிகள் அமையும் என எதிர்பார்க்கின்றேன்."

மறுமுனையில் எல்பிஎல் தொடருக்கு அனுசரணை வழங்கிய விடயம் தொடர்பில் கருத்து வெளியிட்ட டயலொக் ஆசியாட்டா நிறுவனத்தின் பிரதான நிறைவேற்று அதிகாரியான சுபுன் வீரசிங்க இவ்வாறு தெரிவித்திருந்தார்.

"தெற்காசிய பிராந்தியத்தில் துடிப்பானதும் வரவேற்பும் மதிப்புமிக்கதான போட்டித்தொடராக இருக்கும் எல்பிஎல் போட்டிகளுக்கான உத்தியோகபூர்வ தொலைத்தொடர்பு பங்குதாரராக முன்னோக்கிச் செல்வதையிட்டு டயலொக் மகிழ்ச்சியடைகின்றது."

"கிட்டத்தட்ட பத்து வருடங்களாக இலங்கை தேசிய கிரிக்கெட் அணியின் அனுசரணையாளர்களாக செயற்பட்டு இலங்கையின் கிரிக்கெட் வளர்ச்சிக்கு டயலொக் தீவிர பங்களிப்பை வழங்கி வருன்றது. மேலும், எல்பிஎல் போன்ற போட்டியானது இலங்கையின் தேசிய அணிக்கான எதிர்கால சம்பியன்களை அடையாளம் காணவும் தெரிவு செய்வதற்குமான சிறந்த களமாக அமையும்."

கடந்த ஆண்டு நடைபெற்றிருந்த இந்த தொடரின் முதல் பருவகாலத்திற்கான போட்டிகளில் திசர பெரேரா தலைமையிலான ஜப்னா ஸ்டாலியன்ஸ் அணி சம்பியன் பட்டம் வென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

**13வது இலங்கை ஜுனியர் பகிரங்க கோல்ப் போட்டி:**

## டிசம்பர் 15ம் திகதி கொழும்பில் ஆரம்பம்

ஜுனியர் பகிரங்க கோல்ப் போட்டிக்கு பிறீமா சிலோன் அனுசரணைவழங்குவது இது 13வது ஆண்டாகும். நாட்டில் கோல்ப் விளையாட்டிற்கு தேசிய துணைவராக விளங்கும் இலங்கை கோல்ப் யூனியன் உடனான பங்குடைமையுடன் மகத்தான பல தசாப்தங்களுக்கு மேலாக பிறீமா சிலோன் அதன் தொடர்ச்சியான ஊக்குவிப்பினை ஜுனியர் கோல்ப் குழாமிற்கு வழங்கிவருகின்றது.

தொற்றுபரம்பல் காரணமாக ஒருவருடம் தடைப்பட்டு இருந்தபோட்டிகள் மீண்டும் ஆரம்பிக்கப்படுகின்றன. த ஸ்ரீலங்கன் ஜுனியர் ஓபன் கோல்ப் சம்பியன்சிப் டிசம்பர் 15ஆம் திகதி தொடக்கம் 17ஆம் திகதிக்கும் இடையில் RCGC இல் நடாத்ததிட்டமிடப்பட்டுள்ளது. பிறீமா சிலோன் அனுசரணை வழங்குகின்ற வலயமட்ட ஜுனியர் பகிரங்கம் அத்தோடு வருடம் முழுவதும் நடைபெறும் சில கழக போட்டிகளும் கனிஷ்ட போட்டியாளர்களுக்கு ஆற்றலை தீர்மானிக்கும் போட்டிகளாக அமையும். ஸ்ரீலங்கன் ஜூனியர் பகிரங்க தேசிய தரப்படுத்தலுக்கு நிறுவப்பட்ட ஓர் அளவு கோலாகும். ஸ்ரீலங்கன் ஜூனியர் பகிரங்கத்தில் வெற்றியாளர்கள் ஆண்கள் மற்றும் பெண்கள் இருபாலாரும் தேசிய ஜுனியர் சம்பியன்களாக மகுடம் சூட்டப்படுவர்.

இலங்கை ஜுனியர் கோல்ப் அபிவிருத்தியின் தலைவர் நிலு ஜயதிலக்க கூறுகையில் நாடளாவிய ரீதியில் விளையாட்டினை ஊக்குவித்தல் தொடர்பாக இலங்கை கோல்ப் யூனியனிற்கு பிறீமா வழங்கும் ஜுனியர் கோல்ப் அனுசரணையானது விலைமதிப்பற்றது. அடிமட்டத்தில் இவ்விளையாட்டினை மேம்படுத்துவதில் இலங்கை கோல்ப் யூனியன் மேற்கொள்ளும் கவன ஈர்ப்புதிட்டங்களின் ஊடாக முக்கியமாக இவ்விளையாட்டு பிரபல்யம் அடைந்து வருவதைகாண முடிகின்றது. எதிர்காலத்தில் தேசிய மற்றும் சர்வதேச அளவில் பிரதிநிதித்துவப்படுத்தும் இளம் திறமைசாலிகளை அடையாளம் கண்டு அவர்களை மேம்படுத்தல் மற்றும் ஊக்கப்படுத்தும் நோக்கில் இலங்கை கோல்ப் இன் ஜுனியர் துணைசங்கத்தின் ஓர் ஆரம்பமாக இது அமைந்தது. இவ்வருடம் அனுராதபுர கோல்ப் நிறுவகத்திலிருந்து ஜுனியர்களுக்கான பயிற்சியினை மெதுவாக ஆரம்பித்தோம்'எனக் கூறினார்.

இலங்கை ஜுனியர் கோல்ப் இற்குதனது ஆதரவினைவழங்கும் நீண்டநாள் பங்காளராக இவ்வருடமும் ஜுனியர் கோல்ப் தொடர்களுக்கு அனுசரணை வழங்குவதில் பெருமிதமடைகின்றோம். நாட்டில் வளர்ந்துவரும் மற்றும் இளம் கோல்ப் வீரர்களுக்கு முக்கியதொடராக இருக்கும் இத்தொடரில் இவ்வருடமும் சில உயர் மட்டத்திலான போட்டிகளை எதிர்பார்க்கின்றோம். நாம் இத்தொடரினைமீண்டும் ஒரு முறைநடாத்துவதற்கும் அத்தோடு தொடர்ச்சியாக கோல்ப் விளையாட்டினைவளப்படுத்தும் இலங்கை கோல்ப் யூனியனிற்கு நன்றி கூற கடமைப்பட்டுள்ளோம். என் பிறீமா குரூப் சிலோன் அக்றோ இன்டஸ்றீஸ் பிரைவட் லிமிட்டெட்டின் குழாம் பொது முகாமையாளர் லோரென்ஸ் சான் குறிப்பிட்டார்.




படம்: ஹேபட் பெரேரா

இந் நிகழ்வானது மீண்டும் வயது அடிப்படையில் நான்கு குழுக்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளது. 1518 வயது( தங்கப் பிரிவு) 1214 வயது (வெள்ளிப் பிரிவு) 1011 வயது (வெண்கலப் பிரிவு) மற்றும் 9 வயதிற்குகீழ்ப்பட்டவர்கள் (செப்புப் பிரிவு) எனவகைப்படத்தப்பட்டுள்ளனர். ஆண்கள் பிரிவில் இளம் கோல்ஃப் வீரர்களான ஹரூண் அஸ்லம்இநிரேக் தேஜ்வாணிஇயனிக் குமார, ரெஷான் அலங்கமபோன்றோரும் பெண்கள் பிரிவில் சகோதரிகளான தாணியா ஷெரின் பாலசூர்ய, தெவினிக்கா கனகீஸ்வரன், கயா தளுவத்த மற்றும் கயல் பெரேரா ஆகியோரும் போட்டியிடஉள்ளனர். நாடுதிறந்து இருக்கும் நிலையில் இவ்வாண்டு போட்டிக்குநாம் வெளிநாட்டு வீரர்களை கவர்வதற்கு எண்ணியுள்ளோம். அவர்கள் இலங்கை ஜுனியர்களுக்கு பெரும் போட்டியினை வழங்குவார்கள் என எதிர்பார்க்கின்றோம்.

கனிஷ்ட பிரிவில் கே. தனுஷன், ஷானல் பினுக்ஷ இகேஷவ் அலங்கம, தேஜாஸ் காந்த் மற்றும் கவாண் தேஜ்வாணி ஆகியோர் வளர்ந்து வரும் திறமைசாலிகளாக அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் இது அவர்களுக்கு அவர்களின் திறமையினை வெளிப்படுத்த ஓர் சிறந்த வரப்பிரசாதமாக அமையும் என்பதோடு இளம் வீரர்கள் அவர்களின் முழுமையான திறமையினை வெளிப்படுத்துவார்கள் என நம்புகின்றோம்.

தொடரின் தலைமை அனுசரணையாளரான பிறீமா சன்ரைஸ் நிகழ்வின் போது வீரர்களுக்கு எந்நேரமும் ஊட்டச்சத்தினை வழங்குவார்கள். பரிசுவழங்கல் வைபவமானது டிசம்பர் 17 ஆம் திகதி பி.ப 3.30 இற்கு நடாத்த திட்டமிடப்பட்டுள்ளது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2021 நவம்பர் மாதம் 28ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

# மஞ்சரி களஞ்சியம்

## வாழ்வாதாரமா சேதாரமா 200



தமிழ்க் கவி பேசுகின்றார்

# உறங்கிய கொண்டு கனவுகளை உழைத்துக் கொண்டே காணலாம்

கனவுகள் வருவதை யாராலும் தடுக்க முடியாது. அவை தூங்கும் போதும் வரும். தூங்காத போதும் வரும். கனவுகளை நல்ல கனவுகள் கெட்ட கனவுகள் என்று பகுத்துப் பார்க்க முடியும். சில கனவுகளை பயங்கரமான கனவு என்றும், கூறுவதுண்டு.



உளவியலாளர்கள் கனவுகளைப்பற்றி நிறையவே கருத்துகளை சொல்லியிருக்கிறார்கள். கனவுகள் என்பது மனித மனத்தின் ஆழ்மனப் பிரதி பலிப்புகள்தான் என்பது அவர்கள் பெரும்பாலும் வலியுறுத்தியுள்ள காரணங்களில் ஒன்று. கனவுகளைக்கண்டு அதற்குப் பலன் தேடி அவற்றை நினைத்து அதற்கான பரிகாரங்களை செய்து சீரமைத்துக் கொள்பவர்கள் பல புராண இதிகாச கதைகளில் இருப்பது போலவே இன்றும் இருக்கிறார்கள்.

கனவுகளைக் கண்டு அவை தமது வாழ்வில் நடந்து போய் விடும் என்பதாக நம்பி அவற்றையிட்டுக் கவலைப்படுவதும் மகிழ்வதும். எமக்கு கைவந்த கலை. கனவுகளுக்கு மதம் சாதி எதுவும் இல்லை. கனவுகள் பெரும்பாலும் கருப்பு வெள்ளையாக இருந்தாலும் அதற்கு வண்ணங்களும் உண்டு.

நம்மவர்கள் பயன்படுத்தும் பஞ்சாங்கத்தில் கூட கனவின் பலன் என்றொரு பக்கத்தில் போடப்பட்டு வருகிறது. அந்தப்பலன் அப்படியே நடக்கிறதோ என்னவோ தினமும் கனவு கண்டு விட்டு காலையில் தாம் கண்ட கனவை மற்றவர்களிடம் விபரித்து பலன்கேட்பதோ வருந்துவதோ ஒவ்வொரு வீட்டிலும் நடக்கும் விடயம்தான். நல்ல கனவுகளை யாரிடமும் பகிர்ந்து கொள்ளக்கூடாது. அப்படி யாருக்கும் சொன்னால் பலிக்காது. இரவில் கண்ட கனவை இரவில் சொல்லக்கூடாது. பகல் கனவு பலிக்காது. என ஏராளமான பகுப்பாய்வுகள் கனவுகளைப்பற்றி வழக்கத்தில் உண்டு.

ஒரு அரசன் இருந்தான். அவனுக்கு எதிரிகள் அதிகம். அதனால் அவன் உறங்கும் இடத்தில் ஒரு விசுவாசமான வேலையாளை காவலாளியாக நிறுத்தியிருந்தான். ஒருநாள் அந்த வேலையாள் அரசனிடம் அவனை நகர் வலம் செல்லும் போது பாழடைந்த மண்டபம் எதிலும் நிற்க வேண்டாம், என்றான் அரசன் 'ஏன்' எனக் கேட்டான். அந்த மண்டபம் இடிந்து வீழுவதாக கனவு கண்டேன் என்றான். அரசனும் நகர்வலம் சென்றான். சரியாக ஒரு பாழடைந்த மண்டபத்தின் அருகே நிற்பதற்கு அவருடன் வந்த அமைச்சர் முடிவு செய்தான். அரசன் தனது காவலாளியின் கதையை நினைவு கொண்டு அருகிலிருந்த ஆலமரத்தடியே ஒதுங்கினான். அதே சமயம் அந்த மண்டபம் இடிந்து வீழுந்தது. அரசன் காவலாளியின் கனவால் காப்பாற்றப்பட்டான். அவன் அரண்மனைக்குப் போனதும் அவனுக்கு தன் முத்துமாலையை பரிசாக வழங்கினான். இரண்டு தினங்களின் பின் அரசன் வெளியே புறப்பட்ட போது அதே காவலாளி அரசனிடம் எங்காவது புற்றுகள் இருக்குமிடத்தில் நிற்க வேண்டாம், என்றான் அரசன் ஏன் என்று கேட்டதற்கு அவரை ஒரு பாம்பு தீண்டவிருப்பதாக கூறினான்.

அரசன் அன்றும் மிக அவதானமாக செயற்பட்டு தன்னை தீண்ட முயன்ற பாம்பை அடித்துக் கொன்று ஆபத்திலிருந்து தப்பினான். அன்றும் காவலாளிக்கு பரிசு கிடைத்தது. மூன்றாவது தடவையாக அரசன் வேட்டைக்கு புறப்பட்டான். அன்றும் காவலாளி மன்னனிடம் அவனை புலி அடித்துவிடும் என்று ஆருடம் கூறினான். அதுவும் நடந்தது. அதையும் முன்கூட்டியே தெரிந்ததால் அரசன் தப்பினான். ஆனால் இம்முறை காவலாளிக்கு பரிசு கொடுக்கும் போது 'இதையெல்லாம் எப்படி அறிந்தாய் என்று கேட்டார் காவலாளி அரசனை வணங்கி,

' அரசே இவையெல்லாம் எனது முதல் நாளின் கனவுகளில் நான் கண்டவையே' என்றான். அரசன் அவனுக்கான சன்மானத்தை வழங்கிவிட்டு அவனை வேலையிலிருந்து நீக்கி விட்டான். காரணம் காவலாளி தன் கடமையை செய்யாமல் கடமை நேரத்தில் உறங்கியிருக்கிறான். அவன் உறக்கத்தில் இருந்த போது அரசனுக்கு ஆபத்து நேரலாம் எனவே அவன் நல்ல காவலாளி அல்ல. புரிகிறதா நாமும் இப்படித்தான் கனவுகளை வளர்த்துக் கொண்டு அவற்றுக்காக உழைக்காமல், கற்பனையில் மாங்காய் வீழும் என்று காத்திருக்கிறோம். அண்மைக்காலத்தில் வெளியாகி உலகம் முழுதையும் உலுப்பிய 'தி சீக்ரெட்' என்ற பத்தகம் எமது கற்பனைகள் பற்றியும் அவற்றால் விளையக்கூடிய மகத்தான நன்மைகள் பற்றியும் அருமையான விளக்கத்தை தருகிறது. ஏண்ணங்களின் வலிமைபற்றி எழுதாத அறிஞர்கள் யார் மனமே அனைத்திற்கும் காரணம். கனவுகளை உருவாக்குவது எது என்பது அன்றும் இன்றும் முடியாத ஆய்வுகளாகி நீள்கிறது.

சித்தர்கள் வாழ்க்கையை கனவாகத்தான் சித்தரிக்கிறார்கள். உலகே மாயம் நாம் வாழும் வாழ்க்கை பெரும் மாயக்கனவு. இதையெல்லாம் கலைத்துப் போட சாவு எம்முடன் கூடவே நிற்கிறது. என்பதாக அவர்கள் தமது பாடல்களில் வலியுறுத்தி வந்திருக்கிறார்கள்.

எமது வாழ்க்கையில் நடந்து போன காலங்களை ஒரு கனவாக எண்ணி மறந்து போக நினைப்பவர்கள் மீண்டும் மீண்டும் அந்த நினைவுகளில் மூழ்கி வருந்திக் கொண்டிருப்பார்கள். எம்முடன் வாழ்ந்து கொண்டிருக்கும் எமது உறவுகள் அத்தனையும் அனைவருமே மாயை என்கிற சித்தர்கள்.

'தாயும் தகப்பன் இரவல் தாலி கட்டிக் கொண்ட பெண்டிலும் இரவல் சேயும் பொருளும் இரவல் செகமெட்டுத் திக்கு செங்கோலும் இரவல்....'

என்று எமது வாழ்க்கையில் நாம் தனியானவர்கள் தான் என்பதை வலியுறுத்தியுள்ளனர்.

கடந்து போன கொடுமையான போர்க்காலமும் அதன் தாக்கமும் எங்களுக்கு பயங்கரக் கனவு. அந்த போரில் மீதமிருப்பவர்களுக்கு அதில் மறைந்து போனவர்கள் கனவுதான் இழந்த சொத்துகளும் கனவுதான். கனவுகள் நிஜமாவதுண்டு.

அறிஞர் அப்துல்கலாம் சொன்ன கனவுகள் நிஜமாகும். ஏப்போதும் கற்பனையிலேயே வாழ்வது தவறல்ல. அது நல்ல கற்பனையாக இருக்க வேண்டும். அதற்கு உங்கள் எண்ணத்திலேயே வலுவேற்றி அதற்காகவே உழைத்தால் அவை நடக்கும் என்பதை, அப்துல்கலாமுக்கு முன்பே வள்ளுவர் சொல்லிவிட்டார். 'எண்ணிய எண்ணியாங்கெய்துவர் எண்ணியார் திண்ணியராகப் பெறின்'

நீங்கள் எப்படி நினைத்தாலும் மிக அரிதாக சிலர் காணும் கனவுகள் பலித்து விடுகின்றன. காலங்கள் மாறினாலும் நாகரீகம் வளர்ந்தாலும், எத்தனை வகையாக அறிவியல் வளர்ந்தாலும் கனவுகள் பற்றிய மர்மம் துலங்கவில்லை. பக்திநூல்களில் ஆண்டாள் கண்ட கனவுகள் பற்றிய அழகிய பாடல்களும் வீரபாண்டிய கட்டப்பொம்மனில் வரும், வெள்ளையம்மாளின் கனவும். இன்னும் எத்தனையோ புராண இதிகாச பாத்திரங்களின் கனவும் எமது மூத்தோர்களின் கதைகளில் இன்னும் வாழ்ந்து கொண்டிருக்கின்றன.

கனவுகளில் நாம் காணும் எமது லட்சியக் கனவுகளை ஒரு போதும் கைவிடக்கூடாது. நான் எதுவாக விரும்புகிறேன் என்பதையே நான் கனவாகக் கொண்டு உழைத்தால் நிச்சயம் அந்த நிலையை அடைந்தே தீருவோம். அறிஞர்களுடையது மட்டுமல்லாமல் எனது அனுபவமும் இதைத்தான் சொல்கிறது.

கனவுகளை நாம் உறங்கிக் கொண்டு காண்பதை விட உழைத்துக் கொண்டு காண்பதே உயர்வாக இருக்கும். முதலில் உன்னால் முடியும் என்ற உறுதி எமக்குள் ஒரு கர்வமாக திமிராக வளர்த்துக் கொள்ள வேண்டும். எமது நேர்மையான உழைப்பை கொண்டு நாம் அதை அடைவதை யாராலும் தடுக்க முடியாது. கடின உழைப்புக்கு நிகர் எதுவுமேயில்லை. கனவுகளை வளர்ப்போம் கற்பனைகளில் அதற்கு வடிவம் கொடுப்போம். எட்டித் தொடுவோம் வெற்றிப் படிகளை.







பண்டாரநாயக்க சர்வதேச மண்டபத்தில் கடந்த 22ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெற்ற "வானொலி அரச விருது" விழாவில் இடம்பெற்ற நடன நிகழ்வை காணலாம். இந்நடனம் கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அரச நடன குழு வழங்கியது.

# நினைவின் தாழ்வாரங்கள்

– நபீல்

## இரவ வந்தது

நிலவு வெண் மேகங்களுடன் உறங்கிக் கொண்டிருக்கும் இரவு அது; அந்த ஆழ்ந்த அமைதிக்கிடையே வாசலில் சுருண்டு கிடக்கும் தோட்டுப்பாய் விரித்து அமர்ந்து கொள்வோம்; வானத்தை அண்ணார்ந்தால் பலவண்ண மலை மலர்களும் ரோஜாக்களும் ஏதேதோ மொழி பேசி அலைவது போலவும் ஒன்றித் தோயும்போது மேகங்கள் காதணி, மூக்கணி, கையணி என்று பொன் ஆபரணங்கள் அணிந்து மின்னிக் கொண்டு கொத்துக் கொத்தாக இன்னும் அழகாகத் தோன்றும்; கை நழுவ விட்ட நாணயங்களோ நட்ஷத்திரங்கள்; சீறும் ஓடையாகவும் அகண்ட ஆறாகவும் ஈரமும் சதுப்புமாக மனதில் உருவான ஆகாய வெளி, ஏற்றமும் இறக்கமுமாகத் துலங்கும்...



அந்நேரம் அதே அரக்குப் பட்டுத் துண்டுடனும் திறந்த மார்புடனும் எழுந்து வந்து எங்களுடன் உட்காரும் மக்காப்பா, மெல்ல மெல்லப் பேசும் போதே ஒரு பாடல் கேட்பதுபோல் அவரில் இசைவாகி விடுவோம்; தளர் நடையில் அப்படியே ஒலி வடிவமாக மாறும் அவர் உரையாடல் ஊரைச் சுற்றி வந்து வழியில் குடித்த நீர் மோரும் பானகமும் நெஞ்சில் நெட்டி முறிக்கும்...

எவ்வளவுதான் உடல் வலி இருந்தாலும் சுற்றிலும் இருக்கும் எங்களைப் பார்த்து நோவை மறைத்துச் சிறு புன்னகை உதிர்ப்பார்; குடும்பத்தில் மக்காவுக்குச் சென்று புனித ஹஜ்ஜுக் கடமையை முடித்த முதல் மனிதர் அவர்தான்; அதனால்தான் அவருக்கு மக்காப்பா என்று பெயர் வந்திருக்கிறது; அந்நாளில் தண்ணீர்க் கப்பலில் பயணித்தவரும் அவரே; 'ஆறு மாதங்கள் பிடிக்கும் மக்காவுக்குப் போய் வர.." என்பார்; அவருக்கு அடிக்கடி நடுக்கக் காய்ச்சல் வருவதுண்டு; அப்போதெல்லாம், தன் முந்தானையை அவருக்குப் போர்த்தி அவர் உள்ளங்கையை நன்றாகத் தேய்த்து அச்சூட்டை முகத்திலும் அப்பி வைக்கும் மறைந்துபோன துணைவியை எப்போதும் நினைத்தழுவார்...

அக்காலம், வருடத்தின் நடுப்பகுதி, காற்றும் வெயிலும் கலந்து ஊர் மஞ்சளாக வெம்மை கொண்டுவிடும்; விசிறிகள் தோலை இராவ முற்றத்தில் குழுமி விடும் மனிதப் பட்டாளம் அதிகமே; மழை ஓய்ந்தும் ஓயாமல் குளிர் தொடங்கியும் தொடங்காமலும் இருக்கும் பருவம் பார்த்துக் கச்சான், பயறு விதைத்து மரவள்ளி நடுவோம்; இவை அறுவடை செய்யும் போது கோடை மறையத் தொடங்கும்; இதில் என்பது வயதிலும் அதுவும் சற்று அறிவு மழுங்காமல், "நான் கொஞ்சம் ஏமாந்து போனால் இந்த ஊரை விட்டுப் பச்சைப் பயிர்களும் மரங்களும் களனியும் கரைகளும் காணாமலே போய்விடும்.." இப்படி மக்காப்பா அடிக்கும் குறும்பு எப்போதும் அவரை விட்டு அகன்றதில்லை...

கரடு முரடான பாதை வழியே இறங்கிச் சென்று, எதிரில் கோட்டை மதில்போல எழுந்து நிற்கும் காட்டுமரங்களை அகழிதோண்டி வீழ்த்திக் களனி வெட்டிய கதையைத் திளைக்கத் திளைக்கச் சொல்லுவார்; குதிரை லாடம் போன்று அமைந்த ஒரு பள்ளத்தில், ஒரே படலமாக உறைந்து நின்ற வெள்ள நீரைச் சுமார் கால் மைல் தூரத்துக்கு இரு கிளை ஓடைகளாத் திருப்பிவிடத் தெம்பிழக்காமல் மண்வெட்டியும் ஆளுமாய் சமர் செய்ததை, என் சிறு வயதில் கண்டிருக்கிறேன்; ஒவ்வொரு சொற்களுக்கும் அவரின் முகச்சுழி புதைந்து புதைந்து எழும்; ஒருவர் கதைசொல்ல, மற்றவர் சிந்தனையைக் கிளற, இனியொருவர் நாளையைப் பற்றிக் கனவு கண்டு பொழுதைப் பொன்னாக்கிக் கொண்டிருப்போம்; நேரம் நகர நகர ஆளில் ஆள் சாய்ந்து கொள்வோம்...

ஆழமும் அன்பும் மிகுந்த வெளிப்பாடு; ஊசி மல்லியின் கிறக்கும் மணமும் இருண்ட வெளியில் ஊடுருவும் கண்களும் தொற்றுப் போல் யாவரையும் வியாபித்திழுக்கும் உம்மம்மாவின் சிரிப்பும், எதேர்ச்சையாக வரும் நகைச்சுவைக்கு அதிலுள்ள வாக்கியத்தின் எழுவாய் பயனிலைகளைப் பொறுக்கியெடுத்து மீள மீட்டும் பெரியம்மா; தேவைப்பட்டால் தன் முகத்தையே கோணலாக்கும் கடைசித் தங்கை சுல்பிக்கா; குழந்தைபோல் மூச்சு வாங்கிக் கிரகித்ததைத் தடங்களுடன் ஒப்புவிக்கும் சுலைஹா மாமி; கேள்விக் குரலுடன் ஆண் பாலைப் பெண் பாலாய் மாற்றித் தேநீர் கொண்டுவரும் உம்மா; தடம் பதித்துப் புரண்ட உயிரோட்டங்களை ஞாபகத்தில் ஊன்றி நிகழ்வின் சாரத்தை அலாதியான கதையாகப் பின்னிக் கசந்த அனுபவங்களைச் சுவாரஷ்யமிக்க துணுக்குகளாக்கிப் பரிமாறும் பக்கத்து வீட்டு லைலத்தும்மா; வாழ்க்கையில் தாக்கம் ஏற்படுத்தியவர்களை நினைந்துப் பெருமூச்சு விடும் வாப்பா; வண்ணப் பீலிகளை மறைத்துப் பதுங்கும் மயில்குட்டிபோல் சதா முக்காடிட்டிருக்கும் மருமகள் ராபியா என்று எங்கள் வாசல் நிரம்பி வழியும்...

இடையிடையே வாலைத் தூக்கிக் கொண்டு திரியும் தேள்கள்; காதுகளுக்குள் கின்னாரம் பாடும் நுளம்பு இவை அண்டாதிருக்க மக்காப்பா உரி மட்டை விரித்துத் தீ மூட்டிப் புகை காட்டுவார்; கல்லூரியில் ஒன்றாகப் படித்து அரச உத்தியோகம் வேண்டாமென்று வீட்டிலேயே ஒதுங்கியிருக்கும் கரீம் சாச்சாவுக்கு வேறு வேறு வர்ணிப்புகளில், ராகங்களில் வாத்தி மாமா கவலைகளை வெளியிடுவார்...

ஈர மணலில் குத்தி நடப்பட்ட வாள்போல் மல்லிகை மரம் பளபளப்பாக முன்றலில் நிற்கும்; கண்களைத் திறக்க முடியாமல் காகிதங்கள் ஓரத்தில் மண்ணெண்ணெய் படுத்தி விறகின் மீது போடப்பட்டது புகையாக வெளிப்படத் தட்டு றொட்டியின் அடுக்கு உயர்ந்து கொண்டிருக்கும்; சின்னம்மாவின் கை ருசி என்று ரசம் தட்ட உண்போம்; எதிர் வீட்டின் சதுர வடிவ ஜன்னல் மட்டும் திறந்து கிடக்கும்; அவர் உள்ளங்கையிலிருக்கும் சில றொட்டிகள் அந்த ஜன்னல் வழியே பரிமாறப்படும்; கோடி வீட்டின் புறத்திலிருந்து நள்ளிரவையும் தாண்டி, ஓயாது இயங்கிக் கொண்டிருக்கும் தையல் மெஷினில் மைமூனா ராத்தா அமர்ந்திருப்பார்; நவீன மோஸ்தர் கொண்ட அவரது தையலுக்கு ஆட்கள் மொய்க்காத நாட்களில்லை; சேமிப்பை முதலாகக் கொண்ட வருமானத்திலேயே அவர் பிள்ளைகள் வாழ்வதாகக் கூறுவார்; புற்களைக் குவித்து அடியில் வைக்கப்பட்ட தீபோல் "சரசர சரசர" என்று, நின்று நின்று சத்தம் வரும்போது அந்த வீட்டின் பக்கம் றொட்டித் தட்டங்களோடு சின்னம்மா புறப்படுவார்...

அந்தச் சுற்று வட்டத்தின் வழிகள் ரேகைகள் போல் கலைந்து தெரியும்; அடுத்தாற் போலுள்ள தோட்டங்களிலிருந்து, தூரவுள்ள சந்தைகளுக்குக் கொண்டு செல்லும் தேங்காய் மூட்டைகள் நிறைந்த மாட்டு வண்டிகள் வளவுகளுக்குள் புகுந்து புறப்பட்டு நகரும்; இருட்டுக்குள் ஹரிக்கேன் லாம்பொளி சிதறி விழும்; செடிகளுக்கிடையில் கிடக்கும் காய்ந்த முட்கள் வண்டிச் சில்லுகளிடையே பட்டுச் சுள்ளிபோல் ஒடியும் சத்தம் நெட்டி முறிவதுபோல் கேட்கும்...

சில் வண்டின் ஒலி ஒவ்வொரு மர வேரிலிருந்தும் மாறி மாறி வீரிடும்; தென்னோலைகளின் சன்னமான கீறல்கள் வழியாகப் பனி இறங்கி நிலம் குளிரும்; அங்கே கூடிக் இருப்பவர்களின் முகம் சற்றே சுருங்கிப் பின் சரியாகி விடும்; "நிலா நிலா ஓடி வா, நில்லாமல் ஓடி வா,மலை மேலே ஏறி வா, மல்லிகைப்பூக் கொண்டு வா..." கை தட்டலோடு மடியிலிருக்கும் தம்பியின் திறந்த அவனது வாயினுள் பாட்டி சோறூட்டிக் கொண்டே பாடுவார்; அவனுக்கென்று வைத்திருந்த முட்டையொன்றை எடுத்து வைத்து அவர் ஆட்காட்டி விரலைத் தட்டோடு அழுத்துவார்; பதிலுக்கு அவன் கால் பெருவிரலால் தட்டினை உதைத்து விடுவான்; பிடித்துத் தீத்திய சோற்றைத் துப்பிவிட்டு "ஹோ" என்று குதித்துப் பெருஞ்சத்தத்தோடு சிரிப்பான்; கோபப்படாமல் அவர் சுருங்கிய முகத்தில் வைத்துப் பரிசளித்த முத்தம் பிடிக்கவில்லையோ தெரியாது; நீரையள்ளிப் பாட்டிமீது எறிவான்...

புறங்கழுத்தில் முத்தியபடியே இடுப்பின்மீது ஊர்ந்து சென்ற தங்கையின் கை, வாப்பாவின் கால் ரோமமொன்றைப் பற்றி இழுக்கையில் "ஆ" என அனைவருக்கும் கேட்கும்படி அலறிக் கொண்டு திரும்பிப் பார்த்தார்; அவளின் காரியம், இரவின் ஈரத்தையும் குளிர்ச்சியையும் கடந்து அவரைச் சூடாக்கியது; "எருமை! எருமை! பாரு, இந்த ராவையிலும் புல்லுத் திங்குது..." என்பார்; கன்னத் தசையில் ஊசிகள்போல் குளிர் குத்தத் தொடங்கும் போதே மக்காப்பா நடு விரலை வாயில் வைத்து "ஊ ஊ.." என்று சமிக்ஞை காட்டுவார்; உம்மாவின் தலை முடியை இறுகப்பற்றிக் கொண்டிருந்த நான் பிடரியை நிமிர்த்துவேன்; நிலா வானத்தின் ஓர் ஓரத்தே மொக்கையாகப் பெருத்திருக்கும்.

# வவுனியாவில் உருவாக்கப்பட்ட நீர் சுத்திகரிப்புத் திட்டத்தை மக்கள் பாவனைக்கு வழங்கியது LG

கிராமப்புற மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர் மட்டத்திற்கு கொண்டு செல்லும் நோக்கில் ஆரம்பிக்கப்பட்ட 'LG கிராமத்தை கட்டியெழுப்பும் பிரமுகர்" நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் வவுனியா தரணிக்குளத்தில் உருவாக்கப்பட்ட குடிநீர் சுத்திகரிப்பு மற்றும் வடிகட்டுதல் திட்டம் அண்மையில் மக்கள் மயப்படுத்தப்பட்டது.

உலகப் புகழ்பெற்ற இலத்திரனியல் உற்பத்தி நிறுவனமான LG நிறுவனம், இலங்கையின் முன்னணி வணிகக் குழுமமான அபான்ஸ் மற்றும் Community Chest of Korea mikg;G Korea Friends of Hope International Sri Lanka mikg;G (KFHI) ஆகிய நிறுவனங்களின் கூட்டிணைவில் உருவாக்கப்பட்ட 'LG கிராமத்தை கட்டியெழுப்பும் பிரமுகர்" திட்டத்தின் மூலம் இலங்கை இளைஞர் யுவதிகளுக்கு அவர்களின் கிராமங்களில் உள்ள தேவைகளை இனங்கண்டு அத்தேவைகளை பூர்த்திசெய்துகொள்ளக்கூடிய ஒரு வாய்ப்பு வழங்கப்பட்டது.

அவ்வாறு வழங்கப்பட்ட வாய்ப்புகளின் மூலம் 2021ஆம் ஆண்டில் 4 திட்டங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு பூர்த்திசெய்யப்பட்டுள்ள நிலையில், பூர்த்தி செய்யப்பட்ட திட்டங்களில் முதலாவது திட்டத்தை மக்கள் மயப்படுத்தும் விழா 16.11.2021 ஆம் திகதி வவுனியா தரணிகுளத்தில் இடம்பெற்றது. இத்திட்டமானது வவுனியா தரணிக்குளம் கிராமத்தில் வசிக்கும் 610 குடும்பங்களுக்கு சுத்தமான குடிநீரை வழங்கும் "உயிர் வாழ்வதற்கு ஒருதுளி நீர்" என்ற கருத்தாக்க திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட குடிநீர் சுத்திகரிப்பு மற்றும் வடிகட்டுதல் திட்டமாகும். இந்த பிரதேசத்தின் மக்கள்






இதுவரைக் காலம் குடிநீர் தேவைக்காக பயன்படுத்திய கிணற்றை சுத்தம் செய்து சீரமைத்து அந்த கிணற்றிலிருந்த நீரை சுத்திகரிப்பு செய்வதற்கான குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரம் நிறுவப்பட்டுள்ளது. சுத்தமற்ற குடிநீர் இல்லாத காரணத்தினால் இதுவரை இந்த கிராமத்தில் பலர் சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர். இத்திட்டம் நிறைவடைந்து மக்களுக்கு சுத்தமான குடிநீர் கிடைத்துள்ளமையினால் கிராம மக்கள் பெரும் மகிழ்ச்சியில் உள்ளனர்.

# Allianz World Run நிகழ்வில் இலங்கைக்கு 2ஆவது இடம்



அலியான்ஸ் லங்கா நிறுவனம் மீண்டும் உலகெங்கிலுமுள்ள ஏனைய அலியான்ஸ் அலுவலகங்களுடன் ஒன்றிணைந்து, கொவிட் 19 தொற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ள நாடுகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு தேவையான நிதியைத்திரட்ட, Allianz World Run நிகழ்வின் மூலமாகப் பங்களித்துள்ளது.

இந்நிகழ்வானது உலகளாவில் பாரதூரமான பிரச்சினைகளை சமாளிக்க உதவும் இறுதி இலக்குடன், பொழுதுபோக்கு ரீதியாக உடற்பயிற்சி செயல்பாடுகளை மேற்கொள்ள அலியான்ஸ் அணியின் உறுப்பினர்கள் மற்றும் அவர்களின் நண்பர்கள் மற்றும் குடும்பத்தினரை ஊக்குவிக்கின்ற ஒரு முயற்சியாகும்.

இம்முறை 6 ஆவது தடவையாகவும் நடைபெற்ற Allianz World Run நிகழ்வானது, இம்முறை ஒலிம்பிக் மற்றும் பராலிம்பிக் போட்டிகள் இடம்பெற்ற காலப்பகுதியில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன், இதனால் பங்கேற்பாளர்கள்ஒலிம்பிக்கின்உண்மையான தாற்பரிய உணர்வுக்கு ஏற்றவாறு தங்கள் திறமைகளை சிறப்பாக வெளிப்படுத்துவதற்கு ஊக்குவிக்கப்பட்டனர். 90 நாட்களாக நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் 69 அணிகளைச் சேர்ந்த 12,418 பங்கேற்பாளர்கள் 2,531,091 கிமீ தூரத்தைப் பங்களித்துள்ளதுடன், சராசரியாக ஒவ்வொரு பங்கேற்பாளரும் 203 கி.மீ. தூரத்துடன் மொத்தம் 55,080,546 நிமிடங்கள் உடற்பயிற்சிகளை மேற்கொண்டுள்ளனர்.

இலங்கையின் பங்களிப்பாக, 975 பங்கேற்பாளர்கள் 201,423 கிமீ ஓடியுள்ளதுடன், ஒரு பங்கேற்பாளருக்கு சராசரியாக 207 கிமீ தூரம் என்ற அடிப்படையில் மொத்தம் 118,509 நிமிடங்களாகும். இந்த சாதனையானது எமது நாட்டினை பங்கேற்பாளர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் 2ஆவது ஸ்தானத்திலும், கி.மீகளின் பங்களிப்பின் அடிப்படையில் 3ஆவது ஸ்தானத்திலும் இடம்பெறுவதற்கு வழிவகுத்துள்ளது.







இந்தியாவுக்கான துணை உயர்ஸ்தானிகர் கலாநிதி வெங்கடேஷ்வரன் தலைமையிலான தென்னிந்திய விசைத்தறி மற்றும் கைத்தறி சம்மேளனக் குழுவினர் இலங்கையில் தமது முதலீடுகள் மற்றும் அது தொடர்பான ஏனைய வாய்ப்புகள் தொடர்பாக வெளிவிவகாரச் செயலாளர் பேராசிரியர் அட்மிரல் ஜயநாத் கொலம்பகேவைச் சந்தித்தனர்.

# 1400 சோதனைக் குழாய் குழந்தைகளை பிரசவம் செய்து சாதனை படைத்த லங்கா ஹொஸ்பிட்டல்ஸ்

லங்கா ஹொஸ்பிட்டல்ஸ், கருத்தரித்தல் நிலையம் 2007 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டதை தொடர்ந்து, இதுவரை 1400 சோதனைக் குழாய் குழந்தைகளை வெற்றிகரமாக பிரசவிக்கச் செய்து சாதனை படைத்துள்ளது. 1400 ஆவது சோதனைக் குழாய் குழந்தை பிரசவமானது தமது நிலையத்தின் சாதனைப் பயணத்தின் இன்னுமொரு மைல்கல் என லங்கா ஹொஸ்பிட்டல்ஸ் கருத்தரித்தல் நிலையம் தெரிவித்துள்ளது.

இன்னும் 100 தாய்மார் இதேமுறையில் கருத்தரித்துள்ளனர். சோதனைக் குழாய் குழந்தை பிறப்பு முறையானது, (IVF In Vitro Fertilisation) கருத்தரித்தல் பிரச்சனைகளை கொண்டுள்ள தம்பதியினருக்கு கருத்தரிக்கச் செய்வதற்கு உதவும் ஒரு சிகிச்சை முறையாகும். இதன்போது பெண்ணின் கருமுட்டையைப் பெற்று IVF ஆய்வுகூடத்தில் அந்த பெண்ணின் கணவரின் விந்தணுவுடன் சேர்க்கப்படுகிறது. அதற்கு மேலதிகமாக, ICSI மூலம் நுண்நோக்கி சிகிச்சைக் கருவியின் துணையுடன் கருமுட்டைக்குள் விந்தணுவைச் செலுத்த முடியும். மேலும், கருத்தரித்தல் மற்றும் கருமுட்டைச் செழுமையை மேம்படுத்தும் இன்குபேட்டர் உள்ளான விந்து உட்செலுத்துதல் (IMSI Intracytoplasmic morphologically selected sperm injection) எனும் சிகிச்சை முறையும் காணப்படுகிறது. கலக்கப்பட்ட கருமுட்டையை அடை காக்கும் கருவியொன்றிலிட்டு (incubator) கருவாக்கி மேலதிக வளர்ச்சிக்காக பெண்ணின் கருப்பையில் வைக்கப்படும். எஞ்சிய கருக்களை குளிரூட்டியில் வைத்து ஐந்தாண்டுகள் வரை தேவைப்படும் பட்சத்தில் தொடர்ந்தும் கருத்தரிக்கச் செய்வதற்கு பாதுகாக்க முடியும்.

சோதனைக் குழாய் முறையில் ஆரோக்கியமான கருத்தரித்தலை மேலும் மேம்படுத்தும் இன்னுமொரு செயற்பாடாக கருவை கர்ப்பப்பையில் செலுத்துவதற்கு முன்னரான மரபணுப் பரிசோதனை Preimplantation Genetic Testing (PGT) காணப்படுகிறது.

# SLS சான்று பெற்ற உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் முட் கம்பி அறிமுகம்

உயர் தரம் வாய்ந்த கம்பிகள் உற்பத்தியில் புகழ்பெற்ற உள்நாட்டு வர்த்தக நாமமாகத் திகழும் லங்கா ஸ்பெஷல் ஸ்டீல் லிமிடெட் (லங்கா SSL), இலங்கையின் ஒரே SLS சான்றிதழ் பெற்ற முட் கம்பி (barbed wire) களை அறிமுகம் செய்துள்ளதாக அறிவித்துள்ளது. அதனூடாக இலங்கையில் SLS சான்றிதழ் பெற்ற ஒரே கல்வனைஸ் செய்யப்பட்ட கம்பிகள் (Gi) உற்பத்தியின் முன்னோடி எனும் தனது நிலையை மேலும் உறுதி செய்துள்ளது.

தரம் மற்றும் புத்தாக்கம் தொடர்பில் தொடர்ச்சியாக கவனம் செலுத்தும் நிறுவனம், பல்வேறு ஆய்வுகள் மற்றும் அபிவிருத்தி செயற்பாடுகளில் பெருமளவு முதலீடுகளை மேற்கொண்டுள்ளது. 2019 ஆம் ஆண்டில் மொரட்டுவ பல்கலைக்கழகத்துடன் இணைந்து முன்னெடுத்திருந்த விஞ்ஞானபூர்வ ஆய்வினூடாக, நாட்டின் வெவ்வேறு பகுதிகளில் காணப்படும் துருப்பிடிக்கும் வீதங்களை கவனத்தில் கொண்டு, கல்வனைஸ் செய்யப்பட்ட கம்பிகளின் (Gi)



ஆயுள் காலம் 25 வருடங்களை விட அதிகமானதாக அமைந்திருக்கும் என்பது கண்டறியப்பட்டிருந்தது.

ISO 9001: 2015, ISO 45001:2018 சான்றிதழைப் பெற்ற லங்கா SSL கம்பனி, நாட்டின் கல்வனைஸ் செய்யப்பட்ட கம்பிகள் உற்பத்திப் பிரிவில் முன்னோடியாகத் திகழ்வதுடன், மூன்று தசாப்த காலமாக வாடிக்கையாளர்கள் மத்தியில் தொடர்ச்சியாக நன்மதிப்பையும் வென்றுள்ளது. உலகின் சிறந்த வர்த்தக நாமங்களுக்கு நிகரானதாக இந்நிறுவனத்தின் உற்பத்திகள் அமைந்திருப்பதுடன், சபுகஸ்கந்த பகுதியில் உற்பத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. நிறுவனத்தின் Gi கம்பிகளுக்கு SLS 139:2003 தரச் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளதுடன், அதன் முட் கம்பிகளுக்கும் SLS 31:1988 சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் மாதங்களில் நிறுவனம் தனது தயாரிப்புகளை விரிவாக்கம் செய்யத் திட்டமிட்டுள்ளது. கடந்த ஆண்டில் TATA Steel லிமிடெடின் சர்வதேச கம்பிகள் பிரிவுடனான பங்காண்மையை வலிமைப்படுத்தியிருந்தது. அதனூடாக நாடு முழுவதிலும் தரமான கம்பிகள் விநியோகத்தில் நீண்ட காலமாக பேணியிருந்த ஏக முகவர் மற்றும் விநியோகத்தருக்கான அந்தஸ்த்தை தொடர்ந்தும் தக்க வைத்திருந்தது.

மேலும், லங்கா SSL இனால் 'Permaweld' வர்த்தக நாமத்திலமைந்த வெல்டிங் கம்பிகள் சகல வெல்டிங் பயன்பாட்டுக்கும் அறிமுகம் செய்யப்பட்டிருந்தது. நாடு முழுவதிலும் லக்சபான பற்றரிஸ் பிஎல்சியின் ஹார்ட்வெயார் விநியோக பிரிவினூடாக விநியோக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

ஒப்பற்ற சேவைகளை வழங்குவதற்கான நிறுவனத்தின் அர்ப்பணிப்பான செயற்பாடுகளுக்கு கௌரவிப்புகளும் வழங்கப்பட்டுள்ளன.


# தென் கொரியாவிலுள்ள இலங்கையர்கள் சௌகரியமாக பணம் அனுப்ப STAREMIT உடன் கைகோர்க்கும் செலான் வங்கி



அன்புடன் அரவணைக்கும் வங்கி, செலான் வங்கி, தென் கொரியாவின் STAREMIT உடன் பங்காண்மையை ஏற்படுத்தியுள்ளதாக அறிவித்துள்ளது. இந்தப் பங்காண்மையினூடாக, தென் கொரியாவில் வசிக்கும் இலங்கையர்களுக்கு சௌகரியமாக உடனுக்குடன் இலங்கைக்கு பணத்தை அனுப்பும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. இலங்கைக்கு ஆதரவளிக்க வெளிநாடுகளில் புலம்பெயர்ந்து வசிக்கும் பல இலங்கையர்கள் பணத்தை அனுப்ப முன்வந்துள்ள நிலையில், இந்த பங்காண்மை தொடர்பான அறிவித்தலை செலான் வங்கி வெளியிட்டுள்ளது. செலான் வங்கியின் அர்ப்பணிப்பான பண அனுப்பல் வாய்ப்பினூடாக, நாட்டினுள் பணம் அனுப்புவது பாதுகாப்பானதாகவும் சகாயமானதாகவும் அமைந்துள்ளது.

தென் கொரியாவில் வசிக்கும் இலங்கையர்கள் STAREMIT app ஐ பயன்படுத்தி ஸ்மார்ட் சாதனம் ஒன்றினூடாக 24/7 நேரமும் கொடுக்கல் வாங்கல்களை சௌகரியமாக மேற்கொள்ள முடியும் என்பதுடன், செலான் வங்கியினூடாக பணத்தை அனுப்பும் போது, 2021 நவம்பர் 30 ஆம் திகதி வரை எந்தத் தரப்பினராலும் எந்தவிதமான கட்டணமும் அறவிடப்படமாட்டாது. பணத்தை அனுப்புபவர்களுக்கு போட்டிகரமான நாணயமாற்று விகிதங்களின் அனுகூலத்தைப் பெற்றுக் கொள்ள முடியும் என்பதுடன், அனுப்பும் ஒவ்வொரு டொலருக்கும் மேலதிகமாக 2 ரூபாயை பெற்றுக் கொள்ளும் வசதியும் வழங்கப்படுகின்றது. உடனடியாக பணப் பரிமாற்றம் மேற்கொள்ளப்படும் என்பதுடன், இலங்கையிலுள்ள வங்கிக் கணக்கில் பணம் வைப்புச் செய்யப்படும்.

செலான் வங்கியின் உறுதியான சர்வதேச பண அனுப்பல் பங்காளர்கள் வரிசையில் STAREMIT இணைந்துள்ளது. இதனூடாக வெளிநாட்டில் வசிக்கும் மற்றும் பணியாற்றும் இலங்கையர்களுக்கு சௌகரியமான முறையில் பணத்தை அனுப்பும் வசதியை வங்கி ஏற்படுத்திக் கொடுக்கின்றது. வாடிக்கையாளர்களை மையப்படுத்திய வங்கி எனும் வகையில், வெளிநாடுகளில் வதியும் இலங்கையர்கள் மற்றும் இலங்கையிலுள்ள அவர்களின் அன்புக்குரியவர்கள் தொடர்பில் செலான் வங்கி கவனம் செலுத்தி, அவர்களின் கொடுக்கல் வாங்கல்களுக்கு பல்வேறு அனுகூலங்களை சேர்த்துள்ளது. வங்கியினால் வழங்கப்படும் ஒப்பற்ற வெளிநாட்டு பண அனுப்புகை சேவைகளின் அனுகூலத்தைப் பெற்று பயனடையுமாறு தனது பெறுமதி வாய்ந்த வாடிக்கையாளர்களை செலான் வங்கி அழைப்பதுடன், வெளிநாட்டு பண அனுப்புகைகளை மேற்கொள்வதற்காக Seycash, RIA, Western Union, Transfast, Instant Cash, Unistream, Cash Express, Speed Send, Intel Express, Placid Express போன்ற பல முன்னணி பணப்பரிமாற்று பங்காளர்களுடன் கைகோர்த்துள்ளது.




## மேஷம்

மனதில் பட்டதை மறைக்காமல் சொல்லும் மேஷராசி நேயர்களே! உங்கள் ராசிநாதனாகவும், 8ம் இடத்திற்கு அதிபதியாகவும் விளங்குபவர் செவ்வாய். ராசிநாதன் செவ்வாய் சாரத்தில் குரு சஞ்சரிப்பது யோகம்தான். 'குரு மங்கள் யோகம்' என்ற அடிப்படையில் மங்கல நிகழ்ச்சிகள் மனையில் நடைபெறும். தடைகள் அகலும். தனவரவு திருப்தி தரும். சுபவிரயங்கள் அதிகரிக்கும். நீண்ட நாட்களாக பேசி வந்த வரன்கள் இப்பொழுது முடிவாகலாம்.

## ரிஷபம்

ஆலோசனைகள் சொல்வதில் அசகாய சூரர்கள் என்று பெயர் பெற்ற ரிஷப ராசி அன்பர்களே! செவ்வாய் சாரத்தில் குரு சஞ்சாரம் (13.11.2021 முதல் உங்கள் ராசிக்கு 7, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் செவ்வாய். களத்திர ஸ்தானம் மற்றும் விரய ஸ்தானத்திற்கு அதிபதியான செவ்வாய் சாரத்தில் குரு பகவான் சஞ்சரிக்கும் பொழுது சுபச்செலவுகள் அதிகரிக்கும். படித்து முடித்து வேலையில்லாமல் இருந்த வாழ்க்கைத் துணைக்கு இப்பொழுது வேலை கிடைக்கும். கணவன், மனைவி இருவரும் ஆளுக்கொரு இடத்தில் இருந்து பணிபுரிந்தால், அவர்கள் ஒரே ஊரில் பணிபுரியும் வாய்ப்பு இனி அமையும்.

## மிதுனம்

திட்டங்களைத் திடீர் திடீரென்று மாற்றிக் கொள்ளும் மிதுன ராசி நேயர்களே! உங்கள் ராசிக்கு 6, 11 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் செவ்வாய். அவர் ஜீவன ஸ்தானம் மற்றும் லாப ஸ்தானத்திற்கு அதிபதியானவர். எனவே வாங்கல் கொடுக்கல்கள் ஒழுங்காகும். வளர்ச்சி கூடும். கரைந்த சேமிப்புகளை ஈடுகட்டுவீர்கள். பொருளாதாரப் பற்றாக்குறை இருந்தாலும் அதை சமாளிக்கும்ஆற்றல் உங்களுக்கு உண்டு. வெளிநாடு செல்லும் முயற்சியில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு இப்பொழுது நல்ல தகவல் வரப்போகின்றது.

## கடகம்

எந்த நேரமானாலும் கேட்டவர்க்கு கேட்ட உதவிகளைச் செய்து கொடுக்கும் கடக ராசி நேயர்களே! உங்கள் ராசிக்கு 5, 10 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் செவ்வாய். மேலும் யோக காரகனாகவும் விளங்குபவர். எனவே அவர் சாரத்தில் சஞ்சரிக்கும் இந்த நேரம் யோகமான காலம் தான். எனவே கொடுக்கல்கள் வாங்கல் திருப்தி தரும்.வளர்ச்சி அதிகரிக்கும். தேங்கிய காரியங்கள் சுறுசுறுப்பாக நடைபெறும்.

## சிம்மம்

கேட்ட உதவிகளைக் கேட்ட உடன் செய்து கொடுக்கும் சிம்ம ராசி நேயர்களே! உங்கள் ராசிக்கு 4, 9 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் செவ்வாய். யோக காரகனான செவ்வாய் சாரத்தில் குரு சஞ்சரிப்பது அற்புதமான நேரமாகும். தொட்டது துலங்கும், நினைத்தது நடக்கும். தொழில் வளம் சிறக்கும். தொல்லைகள் அகலும். கடன் சுமை குறையும். கவலைகள் தீரும். தெளிந்த மனநிலையோடு செயல்படுவீர்கள்.

## கன்னி

எதிர்காலத்தைப் பற்றியே எப்போதும் சிந்திக்கும் கன்னி ராசி நேயர்களே! உங்கள் ராசிக்கு 3, 8 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் செவ்வாய். எனவே நிதானத்தோடு செயல்பட வேண்டிய நேரமாகும். நிகழ்காலத் தேவைகள் கடைசி நேரத்தில் தான் பூர்த்தியாகும். தொழில் பங்குதாரர்கள் நம்பிக்கைக்கு பாத்திரமாக நடந்து கொள்ள மாட்டார்கள். எனவே கொஞ்சம் விழிப்புணர்ச்சியோடு இருப்பது நல்லது. உடல் நலனில் கொஞ்சம் கவனம் தேவை.

## துலாம்

மற்றவர்களின் மனதைப் புரிந்து கொண்டு செயல்படும் துலாம் ராசி நேயர்களே!

உங்கள் ராசிக்கு 2, 7 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் செவ்வாய். எனவே குடும்பத்தில் சுப விரயங்கள் அதிகரிக்கும். வீடு, நிலம் வாங்குவது பற்றிச் சிந்திப்பீர்கள். கட்டிய வீட்டைப் பழுது பார்க்கும் யோகமும் ஒருசிலருக்கு வாய்க்கும். வருமானம் திருப்தி தரும்.

## விருச்சிகம்

'வெற்றி' ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு செயல்படும் விருச்சிக ராசி நேயர்களே!

உங்கள் ராசிக்கு அதிபதியாகவும், 6ம் இடத்திற்கு அதிபதியாகவும் விளங்குபவர் செவ்வாய். அதன் சாரத்தில் குரு சஞ்சரிக்கும் பொழுது எதிரிகளை வெல்லும் ஆற்றல் கிடைக்கும். உறவினர் பகை மாறும். உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுபவர்களை இனம் கண்டு கொள்வீர்கள். உடல்நலம் சீராகும்.

## தனுசு

எதையும் சமாளிக்கும் ஆற்றலைப் பெற்ற தனுசு ராசி நேயர்களே! உங்கள் ராசிக்கு 5, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் செவ்வாய். பூர்வ புண்ணிய ஸ்தானம் மற்றும் விரய ஸ்தானத்திற்கு அதிபதியான செவ்வாயின் சாரத்தில் குரு சஞ்சரிக்கும் பொழுது நிதானத்துடன் செயல்படுவது நல்லது. பிள்ளைகளால் பிரச்சினைகள் ஏற்படும். விரயங்கள் அதிகரிக்கும்.

## மகரம்

தனது இன்ப துன்பங்களை மனதிற்குள்ளேயே வைத்திருக்கும் மகர ராசி நேயர்களே!

உங்கள் ராசிக்கு 4, 11 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் செவ்வாய். எனவே சுக லாபாதிபதியான செவ்வாய் காலில் குரு பகவான் சஞ்சரிக்கும் பொழுது நற்பலன்களே வந்து சேரும். பொதுவாக சகோதர ஒற்றுமை பலப்படும். வெளிநாட்டிலிருந்து நல்ல தகவல் வரலாம். பணிபுரியும் இடத்தில் பாராட்டும், புகழும் கூடும். பிள்ளைகளின் மேற்படிப்பு சம்பந்தமாக எடுத்த முயற்சி கைகூடும். இளைய சகோதரத்தோடு இருந்த பகை மாறும்.

## கும்பம்

சந்தர்ப்பம் வரும்போது சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று சொல்லும் கும்ப ராசி நேயர்களே!

உங்கள் ராசிக்கு 3, 10 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் செவ்வாய். எனவே தொழில் வளர்ச்சி சிறப்பாக இருக்கும். துணிவும், தன்னம்பிக்கையும் கூடும். வாடகைக் கட்டிடத்தில் நடைபெற்ற தொழிலை சொந்தக் கட்டிடத்திற்கு மாற்றும் முயற்சி வெற்றி தரும்.

## மீனம்

எந்த வேலையைச் செய்தாலும் அதில் தனது முத்திரையைப் பதிக்கும் மீன ராசி நேயர்களே!

உங்கள் ராசிக்கு 2, 9 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் செவ்வாய். எனவே இக்காலத்தில் குடும்ப முன்னேற்றம் சிறப்பாக இருக்கும். வாழ்க்கைத் தேவைகள் பூர்த்தியாகும். இல்லம் கட்டிக் குடியேற வேண்டும் அல்லது வீடு வாங்கிக் குடியேற வேண்டும் என்று நினைத்தவர்களுக்கு இப்பொழுது அதற்காக எடுத்த முயற்சிகள் கைக்கூடும்.




# தன்முடிவை தானே தேடிக்கொண்ட டச்சு ஆளுநர்

இலங்கையைப் பற்றி டச்சு மொழியில் பதிவு செய்தவர்களில் சிலர் இலங்கையைப் பற்றி இழிவான பதிவுகளை செய்திருக்கக் கூடும். அல்லது அப்படி இழிவாக பதிவு செய்திருப்பதை மட்டும் வுயிஸ்ட் பார்த்திருக்கக் கூடும். எனவே தான் வுயிஸ்ட் இலங்கையர்கள் பற்றிய மட்டமான எண்ணங்களைக் கொண்டிருந்தார்.

பல நூல்களில் வுயிஸ்ட் ஒரு மனநிலை பிறழ்ந்து இருந்ததற்கான அறிகுறிகள் இருந்தன என்றே குறிப்பிடப்பட்டுள்ளன. பிரபல டச்சு வரலாற்றாசிரியர் குடீ மொல்ஸ்பெர்கன் (E.C.Godee Molsbergen) எழுதிய "Tijdens de O.I. Compagnie" என்கிற டச்சு மொழி நூலில் 47 வது அத்தியாயம் வுயிஸ்டின் ஆட்சியைப் பற்றியது. அவ் வத்தியாயத்துக்கு அவர் வைத்திருந்த தலைப்பு "De krankzinnige Gouverneur"(பைத்தியக்கார கவர்னர்) என்பதையும் கவனிக்க வேண்டும். இந்த நூலில் வுயிஸ்ட் மேற்கொண்ட அட்டூழியங்கள், சித்திரவதைகள் பற்றியெல்லாம் விலாவாரியாக மூன்று அத்தியாயங்களில் விளக்கப்பட்டிருக்கிறது.

வுயிஸ்ட் காயங்களில் இருந்து வெளியாகும் இரத்தத்தைப் பார்த்து இன்பமடைந்தவர். இரவு விருந்துக்காக கொண்டுவரப்படும் விலங்குகளை இறைச்சியாக கொண்டு வராமல் உயிருடன் கொண்டு வரச் செய்து அவற்றை தீயில் இடும் போது அவை எழுப்பும் மரண ஓலத்தில் இன்பமடைந்தார். Sadist என்கிற துன்பூட்டுவேட்கை மிகையாகவே அவரிடம் இருந்தது. அது போல பாலியல் இன்பத்தையும் அப்படித்தான் அவர் அனுபவித்தார். ஆளுநர் மாளிகையில் பணிபுரிந்த ஏனையோரும் வுயிஸ்டின் இயல்பையும், போக்கையும் உணர்ந்துகொண்டிருந்தனர்.

தன்னைப் பற்றிய மிகை மதிப்பு அவரிடம் இருந்தது. தனது ஆட்சிக் காலத்தில் கடும் தண்டனைகளை நிறைவேற்றினார். நீதியற்ற முறையில் விசாரணைகளை நடத்தினார்.

டச்சு காலத்தில் 1658 வரை இலங்கையின் தலைநகராக காலி இயங்கியது. 1658லிருந்து தான் கொழும்பை தலைநகராக ஆனது. ஏனென்றால் கொழும்பு 1656 இல் தான் போர்த்துகேயரிடமிருந்து ஒல்லாந்தர் கைப்பற்றினர். அப்போது டச்சு காலத்து ஆளுநர் வாசஸ்தலமாக இருந்தது, இப்போது கொழும்பு கோட்டை புலனாய்வுப்பிரிவு தலைமையகத்துக்கு பின் புறம் புனித பீட்டர் தேவாலயமாக உள்ளது. போர்த்துகேயர் அதுவரை ஒரு தேவாலயமாக பயன்படுத்திவந்த அழகிய கட்டடத்தைத் தான் தமது வாசஸ்தலமாக மாற்றிக்கொண்டார்கள். இன்னும் சரியாகச் சொல்லப்போனால் இன்று கொழும்பு துறைமுகத்தின் பிரதான வாயிற் பகுதிக்கு எதிரில் இருக்கும் Grand Oriental Hotelக்கு வலது புறமாக அந்த தேவாலயம் இன்றும் உள்ளது.

ஆங்கிலேயர் இலங்கையைக் கைப்பற்றிய சில ஆண்டுகளில் 1804 இல் அதனை தமது படையினர் வழிபடுவதற்காக St Peter's Church ஆக ஆக்கினார்கள்.

ஆளுநர் வுயிஸ்ட்டின் வாசஸ்தலமாகவும் இக் கட்டடம் விளங்கியது. இவ் வாசஸ்தலத்துக்கு அருகாமையில் தான் காலிமுகத்திடலும் இருக்கிறது. படைமுகாம்கள், நிர்வாக இயந்திரம் அனைத்தும் அன்றைய கொழும்பு கோட்டைக்குள் தான் இருந்தன. எனவே தண்டனைகளை பகிரங்கமாக நிறைவேற்றும் இடமாக அன்று காலிமுகத்திடலை பயன்படுத்திக்கொண்டார் ஆளுனர்.

அங்கே நிரந்தமாக ஒரு தூக்குமேடை இருந்தது. தூக்கிலிடுவதை நிறைவேற்றும் அலுகோசுமாரும் நிரந்தரமாக அங்கே பணியில் அமர்த்தப்பட்டிருந்தார்கள். கசையடி, சுட்டுக் கொல்வது உட்பட பல அங்கே தண்டனைகள் நிறைவேற்றப்பட்டன. அதை வேடிக்கை பார்ப்பதற்கு பல மனிதர்கள் காலிமுகத்திடலில் கூடுவார்களாம். தூக்கிடப்பட்டவர்களின் பிணங்களை நாய்கள் பிய்த்துத் தின்றன. அழுகி சிதைந்து சின்னாபின்னமாகி நாற்றமெடுக்கவும் செய்தன. அவ்வாறு கொல்லப்பட்டவர்கள் அதே காலிமுகத் திடலிலேயே அடக்கமும் செய்யப்பட்டிருக்கிறார்கள். இதுவெல்லாம் வுயிஸ்டுக்கு முன்னரே நிகழத் தொடங்கிவிட்டன.

வுயிஸ்ட் மிக மோசமான அதிகார துஷ்பிரயோகத்தில் ஈடுபட்டார். அவரின் ஊழலும் துஷ்பிரயோகமும் நீதித்துறையைக் கூட பாதித்தது. ஆளுநரின் பிழையான வழிகாட்டுதலின் மூலம் டச்சு சிவில் அதிகாரிகளும், படையில் அதிகார மட்டத்தில் இருந்தவர்களும் சாதாரணர்களும் கூட மரண தண்டனைக்கு உள்ளாக்கப்பட்டனர்.

டச்சு ஆட்சியில் கொழும்பை மையப்படுத்தி ஆட்சி செய்யத் தொடங்கியபின் குற்றவாளிகளுக்கு தண்டனையளிக்கும் களமாக காலிமுகத் திடல் இருந்தது.

### ஆட்சிக்கவிழ்ப்பு பீதியின் விளைவு

வுயிஸ்ட் தனக்கு எதிராக ஒரு ஆட்சிக் கவிழ்ப்பு சதிமுயற்சி நடைபெறுவதாக கிளம்பிய ஒரு வதந்தியை நம்பினார். அதைப் பற்றிய அதீத பீதியாலும் கற்பனைகளாலும் அவர் இந்த சதி முயற்சி குறித்து சந்தேகப்பட்டவர்களை எல்லாம் கைது செய்து சிறையில் தள்ளினார்.


காலி கோட்டையில் அன்று தளபதியாக இருந்த யொவான் பால் ஷாகென் மீது (Joan paul schaghen)குற்றவியல் விசாரணை நடத்தப்பட்டு மோசடி குற்றமும் சுமத்தப்பட்டது. அவர் பதவி நீக்கம் செய்யப்பட்டு கொழும்பு கோட்டை சிறையில் அடைக்கப்பட்டார். பணியில் இருந்த சில முக்கிய போதகர்களும் இன்னும் சில அதிகாரிகளும் கூட பணிநீக்கம் செய்யப்பட்டு பத்தாவியாவுக்கு அனுப்பப்பட்டனர். அதேவேளை தனது அக்கிரமங்களை அவர் மேலும் அதிகரித்தார். 1729 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் காவலர்களை ஓய்வில்லாமல் வேலை வாங்கினார். இரவுக் காவலுக்கு திடீர் என்று வீரர்கள் எழுப்பப்பட்டு வேலைவாங்குவது வழமைக்கு கொண்டு வரப்பட்டது. அது இரவு நேரக் கொள்ளையைத் தடுப்பதற்காக என்று அவரால் அறிவிக்கப்பட்டது. தூக்கமிழந்த இராணுவத்தினர் தமது எதிர்ப்பை வெளியிடத் தொடங்கினார்கள். அப்படி எதிர்த்தவர்கள் அனைவரும் தடியால் தாக்கப்பட்டார்கள் அதன் பின்னர் கொழும்பு கரையோரத்தில் நங்கூரமிடப்பட்டிருந்த கப்பல்களில் சிறைவைக்கப்பட்டார்கள். அவருக்கு எதிராக வளர்ந்து வந்த எதிர்ப்புகளை காலப்போக்கில் அவர் தனக்கு எதிரான அரச கவிழ்ப்பு சதியென நம்பத் தொடங்கினார். தான் நம்பிய புனைவுக்கு உருவகம் கொடுத்து காண்பவரையெல்லாம் சந்தேகம் கொள்ளும் மனநோய்க்கு ஆட்பட்டார்.

அவருக்கும் கிழக்கிந்திய கம்பனிக்கும் எதிராக சதி செய்வதற்காக ஒரு பரந்த உளவு பார்க்கும் வலையமைப்பு இயங்கியதாக அவர் நம்பினார். அப்படிப்பட்ட சந்தேக நபர்களை வரிசையாக தண்டித்தார்.அவர்களை விசாரிப்பதற்காக ஒரு இராணுவ நீதிமன்றத்தை கொழும்பில் அமைத்தார். கிழக்கிந்திய கம்பனியின் எந்த அனுமதியுமின்றி விசேட இராணுவ நீதிமன்றத்தை (Blood council) அமைத்து அங்கே விசாரணைகளை நடத்தினார். அவரே அந்த விசேட நீதிமன்றத்தின் தலைவராகவும் விளங்கினார். இந்த நீதிமன்றத்தின் மூலம் ஏராளமான டச்சு இராணுவத்தினரும், டச்சு பணியாளர்களும் கூட தண்டிக்கப்பட்டனர்.குறுகிய காலத்தில் அவர் ஒரு மிக மோசமான சித்திரவதைகளை செய்கிற ஒரு சாடிஸ்ட் ஆட்சியாளராக மாறிப்போனார். உண்மைகளை வெளிக்கொணர்வது என்கிற பேரில் அவர் மிகவும் மனிதாபிமானமற்ற சித்திரவதைகளை மேற்கொண்டார். நகங்களைப் பிடுங்குதல் மற்றும் சூடான மெழுகை உடலில் ஊற்றுதல், காயச் சிதைவுகளில் அரிப்புகளைப் பயன்படுத்துதல், கால் எலும்புகளை உடைத்தல் மட்டுமன்றி சந்தேக நபர்களின் தலைகளைத் துண்டிப்பது வரை அவர் அட்டூழியம் செய்தார். காலிமுகத்திடலை ஒரு கொலைக்களமாகவே ஆக்கினார். சில அழகிய யுவதிகள் காணாமல் போனார்கள். குற்றவாளிகள் மர்மமான முறையில் மரணித்தனர். இதை பற்றிய கதைகள் நாட்டுக்குள்ளும் அரசல்புரசலாக உலவின. கேள்வி கேட்ட அதிகாரிகளுக்கு பதவி உயர்வுகளும் சலுகைகளாலும் வழங்கப்பட்டன.

இந்த மூர்க்கத்தனமான நடவடிக்கைகள் பற்றிய விபரங்களும், அறிக்கைகளும் தொடர்ச்சியாக அதிகாரப்பூர்வமற்ற முறையில் ஒல்லாந்தை சென்றடைந்தன. 1727 ஜூன் 7 அன்று இலங்கையின் டச்சு அரசியல் சபையால் இரகசிய முறைப்பாடு அனுப்பப்பட்டிருக்கிறது. ஆனால் பத்தாவியா தலைமையகம் அதைக் கண்டுகொள்ளவில்லை. ஆனால் அதன் பின் அதே மாதம் 30 ஆம் திகதி இன்னொரு முறைப்பாடும் சென்றது. ஆனால் வுயிஸ்ட் தனது ஆட்சியில் ஏற்பட்டிருக்கக்கூடிய வளர்ச்சியை அறிக்கையாக அனுப்பினார். குறிப்பாக, அவர் காலத்தில் மிளகு உற்பத்தி எந்தளவு முன்னேற்றம் கண்டிருக்கிறது என்பது பற்றியெல்லாம் அறிக்கை எழுதினார். அவர் காலத்தில் மிளகு விவசாயிகளின் காணிகளில் ஒரு பகுதியை டச்சுக் கம்பனியிடம் ஒப்படைக்க கட்டாயப்படுத்தப்பட்டனர். இதன் பின்னர் ஒகஸ்ட் மாதமும் விரிவான ஒரு இரகசிய முறைப்பாடு அவருக்கு எதிராக அனுப்பப்பட்டது. அதில் வுயிஸ்ட் நடத்தும் காட்டுத் தர்பார் பற்றிய விபரங்கள் அடங்கியிருந்தன.

(தொடரும்)

கோல்பேஸ் ஹோட்டலின் அன்றைய தோற்றம்






காலிமுகத்திடல்





கொழும்பு கோட்டையை சித்தரிக்கும் வரைபடம்

# ஓயாத மழையே நீ ஓய்வெடுக்க மாட்டாயா...?



கல்ஹின்னை
பஹ்மி ஹலீம்தீன்...

இது மழைக்காலம். மழையினால் பூமிக்கு நன்மை. ஆனால் அதையும் தாண்டி தொடர்ந்து பெய்யும் மழையினால் பாதிப்புக்கள் அதிகமாகிக் கொண்டு போகிறது என அன்றாடத் தரவுகள் கூறுகின்றன. மக்கள் அவதிப்படும் நிலையை இம் மழை ஏற்படுத்தி விட்டது.

பல இடங்களிலும் பயிர்கள் நாசம். இருப்பிடங்கள் பாதிப்பு என தினமும் செய்திகள் வந்து கொண்டே இருக்கின்றன. இதனால் ஒரு பகுதியோ, சில மக்களோ பாதிப்படைந்தார்கள் என்பதை விட முழு நாடும் அவஸ்தைப் படுகிறது என்பதே உண்மை. இயற்கையின் சீற்றம் ஏதோ ஒரு விதத்தில் எல்லோரையும் உரசிப் பார்க்கிறது.ஓயாத மழையே நீ ஓய்வெடுக்க மாட்டாயா எனக் கேட்டுக் கொண்டிருக்கிறான் மனிதன்.

இயற்கை சீற்றத்தோடு சேர்ந்து செயற்கை நிகழ்வுகளும் மனிதர்களை சீண்டிக் கொண்டே தான் இருக்கின்றன. மனிதனின் சக்தியையும் மீறிய செயல்கள் அன்றாடம் நடப்பதை தடுக்கும் நிலையைத் தாண்டி நாளை பற்றிய கேள்விக்குறிகள் அதிகமாகி ஒருவித மனஉளைச்சலில் தத்தளிக்கிறான் மனிதன்.

இயற்கையும் செயற்கையும் சேர்ந்தே மனிதனைத் தாக்குகின்றதோ என எண்ணத் தோன்றுகிறது. மனிதனும் மற்ற உயிரினங்களும் இவ்வுலகில் பிறந்தவை என்பதை விட அவை அனைத்தும் இறைவனால் படைக்கப் பட்டவை என்பதே உண்மை. பிரபஞ்சமே படைக்கப் பட்ட ஒன்று தானே. அதைப் படைத்தவனே பரிபாலனமும் செய்கிறான். அவன் ஆட்சியாளர்களை ஆள்பவன். அரசர்களுக் கெல்லாம் அரசன். அவனின்றி அணுவும் அசையாது. இது எல்லா மதங்களும் ஏற்றுக் கொண்டாலும் ஓரிறை விசுவாசிகளான நாம் இந்த விதி மீது அதிகமாகவே நம்பிக்கை கொண்டுள்ளோம். எனவே, இவ்வாறான இக்கட்டான சூழ்நிலைகளில் எமது நம்பிக்கை மீது நாம் கைவைத்துப் பார்ப்பதும் நம் கடமை.

எனக்கு ஒரு திருமறை வசனம் ஞாபகம் வருகிறது.

"நபியே நீர் கூறுவீராக(மனிதனே) உனக்கு கிடைக்கும் எந்த நன்மையும் அல்லாஹ்விடமிருந்தே கிடைக்கிறது . இன்னும் உனக்குத் ஏதும் தீங்கு ஏற்பட்டால் அது உன்னால் தான் வந்தது."(அல்குர்ஆன் 4:79)

இவ் வசனம் ஒவ்வொரு மனிதனது வாழ்வின் பிறப்பு முதல் இறப்பு வரை அவனுக்கான ஒரு எச்சரிக்கை என்பதை உணரமுடிகிறது.

உலகில் அன்பின் இலக்கணம் தாய் தான். இது மனிதனுக்கு மட்டுமல்ல விலங்குகளுக்கும் பொருந்தும் . மனிதரிலும் விலங்கிலும் தாய்மை எனும் அற்புதத்தில் அதற்கு ஈடுஇணை இல்லை. அந்த தாயை விட பல மடங்கு எம்மைப் படைத்தவன் எம் மீது அன்புள்ளவன். அவன் இரக்கமுள்ளவன் , அன்பாளன், அருளாளன் என்பதே அவனது பண்புகளில் முதன்மையானது.

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:"அல்லாஹ் அன்பை நூறு பாகங்களாகப் பங்கிட்டான். அவற்றில் தொண்ணூற்று ஒன்பது பாகங்களைத் தன்னிடமே வைத்துக்கொண்டான். (மீதியிருக்கும்) ஒன்றையே பூமியில் இறக்கினான். இந்த ஒரு பங்கினால்தான் படைப்பினங்கள் ஒன்றன் மீதொன்று பாசம் காட்டுகின்றன. எந்த அளவுக் கென்றால், மிதித்துவிடுவோமா என்ற அச்சத்தால் பிராணி தனது குட்டியை விட்டுக் கால்குளம்பைத் தூக்கிக் கொள்கிறது."இதை அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள் ஆதாரம் முஸ்லிம் 53:10

இறையன்பின் தொன்னூற்றி ஒன்பது பாகங்களும் அவனிடமே இருக்கின்றன. இறைவன் இரக்கமுள்ளவன் என்பதற்கு இந்த நபிமொழி போதுமானது.

இன்னும் இறைவன் மனிதனுடன் எந்தளவு நெருக்கமாக இருக்கிறான் என்பதற்கு

"நாம் அவனுக்கு பிடரி நரம்பை விட மிக நெருக்கமாக இருக்கிறோம்."(அல்குர்ஆன்:50:16)

எனும் திருமறை வசனம் சாட்சி கூறுகிறது.இதிலிருந்து நாம் தெரிந்து கொள்ள வேண்டியது, மனிதனுக்கு வரும் சோதனைகள் அவனே தேடிக் கொண்டதே அன்றி வேறில்லை .

இன்று உலகில் எங்கு பார்த்தாலும் பிரச்சினைகள். தீவிரவாதம், இனவாதம், யுத்தங்கள் அனைத்தையும் அப்படியே ஒன்றுமில்லாமல் ஆக்கிவிட்டது கொவிட் 19 எனும் தொற்று நோய். ஏழை பணக்காரன் என்ற பாகுபாடின்றி அத்தனை பேரையும் அதிர வைத்தது அது. உலகையே ஆட்டம் காண வைத்தது . சீனாவில் முதலில் இது இனங்காணப்பட்ட போது அது எமது நாட்டுக்கு வந்து எங்கள் வீட்டுக் கதவுகளையும் தட்டும் என்று கனவிலும் எவரும் நினைத்திருக்க மாட்டார்கள் . எமக்கு சம்பந்தமில்லாத எங்கோ ஒரு நாட்டில் நடக்கும் ஒரு ஆச்சரியமாகவே ஆரம்பத்தில் பார்த்தோம்.

உலகை ஆட்டிப் படைத்த வல்லரசுகளும் அவர்களது ஆயுதங்களும் ஆட்டம்கண்டு ஸ்தம்பித்துப் போயின. ஒரு வைரஸ் கிருமி வல்லரசுகளை அச்சுறுத்தியது. அணு ஆயுதங்களையும் அடித்துப் போட்டது. உலகின் மூலை முடுக்கில் வாழ்ந்த ஒவ்வொரு மனிதனையும் தேடிச் சென்றது அதனால் ஏற்பட்ட மரண பயம். படைப்பினங்களை மட்டுமே நம்பி வாழ்ந்த மனிதனுக்கு படைத்தவனை அடிக்கடி ஞாபகப் படுத்தியது.குரோதங்களோடு வாழ்ந்தவர்களுக்கு குடும்ப உறவுகளின் பெறுமதியை உணர்த்தியது. தீய குணங்களை கொஞ்சமாவது மறந்து வாழும் ஒரு சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுத்தது.

ஒன்றுபட்டு ஒற்றுமையாக வாழவேண்டும் என்ற எண்ணம் எல்லோர் மனதிலும் உருவானது. இருப்பவர் இல்லாதார் என்ற பேதமின்றி எல்லோரையும் மரண பயம் ஒன்று சேர்த்தது. கொடுத்துதவும் கரங்கள் கொரோனா பரவிய வேகத்தைவிட அதிக வேகத்தில் இயங்கின. இருப்பவர் இல்லாதவர் என்ற பேதமின்றி பயத்தோடு பசியும் பஞ்சமும் கூடவே குடியிருந்தது.

சமூக இடைவெளி , தனிமைப் படுத்தல், ஊரும் நாடும் முடக்கப் படுதல் என இதுவரை எவருமே அனுபவித்திராத சோதனைகள் இரண்டு வருடங்களாகத் தொடர்ந்தன. தற்பாதுகாப்பும் தடுப்பூசியும் பழைய நிலையிலிருந்து மெதுவாக மாறி இன்று முடக்க நிலை தளர்த்தப் பட்டிருக்கிறது.

ஆனாலும் அன்றாட வாழ்க்கை முறைமட்டும் திரும்பவே இல்லை. அரச ஊழியர்கள் தவிர ஏனைய தொழில்களும் வியாபாரங்களும் இனி பழைய படி மீண்டும் திரும்புமா என்ற சந்தேகம் எல்லோர் மனதிலும் இல்லாமலில்லை. நாளை....? என்ற கேள்விக் குறி தொடர்ந்து கொண்டே போகிறது.

இந்த நிலையில் தான் தொடர் மழையின் பாதிப்பு அடிக்கு மேல் அடியாக அத்துமீறிப் பெய்து கொண்டிருக்கிறது.

மழைக்காக ஏங்குவதும் மழையில் நனைந்து விளையாடுவதும் ஒரு அலாதியான சந்தோசம் தான். அதே மழை வரமாவதும் சாபமாவதும் காலநிலை மாற்றத்தின் இருபக்கங்கள்.தேவைக்கேற்ப அவ்வப்போது பெய்யும் மழையும் கோடைகாலத்தில் பெய்யும் மழையும் ஒரு வரம் தான். அதே மழை அடை மழையாக தொடர்ந்து பெய்தால் அது சோதனையாக மாறி விடுகிறது.

"மனித சமூகம் தங்கள் கரங்களால் எதை சம்பாதிக்கிறார்களோ அதன் காரணமாகவே தரையிலும் (நிலத்திலும்) கடலிலும் அராஜகமும், குழப்பமும் தோன்றுகின்றன."(அல்குர்ஆன் ;30:41)

இத் திருமறை வசனம் மனிதர்களை சிந்திக்கத் தூண்டும் ஒரு வசனம்.

இறைவனின் அருட்கொடைகளில் உயிரினங்களின் அத்தியாவசியத் தேவைகளில் மிக முக்கியமான ஒன்றே நீர்.நீரின்றி எந்த ஒரு உயிரினமும் வாழ இயலாது. அந்த நீர் எனும் இறைவனின் அருட்கொடை தேவைக்கு அதிகமாகும் போது அது வெள்ளப் பெருக்காவும் வேறு அனர்த்தங்களுக்கான காரணியாகவும் மாறி விடுகிறது. இவ்வாறான சந்தர்ப்பங்களில் நாம் அவனிடம் கையேந்துவதைத் தவிர அதைத் தடுக்க எந்த ஒரு மனித சக்தியும் ஆற்றல் பெறுவதில்லை . இறை சோதனைகள் சமூகத்தில் பாவங்கள் அதிகரிக்கும் போது அல்லது பாவங்கள் மலிந்து அவை சகஜமாக நடக்கும் போது தான் இறைவன் புறத்திலிருந்து இறக்கப் படும் என்பது வரலாறு கூறும் உண்மை.

நீர் , நிலம், ஆகாயம், காற்று, நெருப்பு என்ற ஐம்பூதங்களையும் அவன் கொஞ்சம் அசைத்தாலே உலகம் சுக்குநூறாகிப் போகும். இயற்கை அனர்த்தங்கள், தொற்று நோய்கள் , பஞ்சம், அநீதியான ஆட்சி, வன்முறைகள் போன்று இன்னும் பல சோதனைகளையும் கூறிக் கொண்டே போகலாம்.

தற்போது தொடர்ச்சியாக நடக்கும் பல நிகழ்வுகளும் இவ்வாறான சோதனைகள் தான் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. ஆனாலும் அவற்றைப் புரிந்து திருந்தி வாழும் நிலையிலும் மனிதனில்லை. உலகமயப் பட்ட சிந்தனைகளாலும் , தீய குணங்களாலும் மனிதன் தான் இறைவனிடமிருந்து இடைவெளியை உருவாக்கிக் கொண்டான். ஆனாலும் , இறைவன் அவனது திருமறையில்,

"நீங்கள் எங்கே இருந்தாலும் அவன் உங்களுடன் இருக்கிறான்."(அல்குர்ஆன்; 57:4)

என்றும்,

"நிச்சயமாக உங்கள் இறைவன் ( உங்கள் மீது) மிக்க இரக்கமுடையவனாகவும் கிருபையுள்ளவனாகவும் இருக்கிறான்."(அல்குர்ஆன் ; 16:07)

என்றும்,

சர்வ வல்லமை மிக்கவன் தன் படைப்புக்களில் ஒன்றான மனிதன் மீது அளவுகடந்த அன்பும் கருணையும் கொண்டுள்ளான் என்பதையும் மனிதர்கள் மீதான அவனது நெருக்கத்தையும் அழகாகக் கூறிக் காட்டுகிறான். ஆனால் மனிதன் மட்டும் அவனது செயல்பாடுகளால் இறை நேசத்தில் இருந்தும் இறைவனுக்கு நன்றி செலுத்துவதில் இருந்தும் தூரமாகிப் போகிறான்.

# மெஷினா மனைவியா?

கழுத்தை நீட்டிய குற்றம்
பெண்சாதியென்ற பட்டம்
தேவையா இந்த திட்டம்
திருந்துமா மனித மட்டம்
விடியும் முன் எழவேண்டும்
வேலையெலாம் தொடங்கவேண்டும்
விளக்கை அணைக்க வேண்டும்
விறுவிறுப்பாய் இயங்க வேண்டும்
வீட்டைப் பெருக்க வேண்டும்
விறகடுப்பில் சமைக்க வேண்டும்
பாத்திரம் கழுவ வேண்டும்
பயிருக்கு நீர் ஊற்றவேண்டும்
சந்தைக்குப் போக வேண்டும்
சாமான்கள் வாங்கவேண்டும்
பந்திக்கிலை விரிக்க வேண்டும்
பண்பாய் பரி மாறவேண்டும்
சொந்தங்களைப் பார்க்க வேண்டும்
சுகங்கள் விசாரிக்க வேண்டும்
அந்தரித்து வருவோர்க்கு
ஆதரவு கொடுக்க வேண்டும்
அழுக்காடை துவைக்க வேண்டும்
அயன் பண்ணி வைக்க வேண்டும்
பழச்சாறு கலக்க வேண்டும்
பருகக்கையில் கொடுக்க வேண்டும்
விருந்தினரை அழைக்க வேண்டும்
விருந்துபல படைக்க வேண்டும்
மறந்தகதை நினைக்க வேண்டும்
மன்னிப்பு கேட்க வேண்டும்
உப்புப் புளியுறைப்பு
ஒழுங்காய் இருக்க வேண்டும்
தப்பாய் சமைத்து வைத்தால்
தலைக் குட்டு படவும் வேண்டும்
அந்தி படுவதற்குள்
அத்தனையும் நடக்கவேண்டும்
குந்திக்கிருக்கும் நேரம்
குழந்தைகளைப் பார்க்க வேண்டும்
விளக்கை எரிக்க வேண்டும்
வெளிச்சத்தை ஏற்ற வேண்டும்
படுக்கும் முன் பிள்ளைகட்கு
பாடம் சொல்லி கொடுக்க வேண்டும்
எல்லாம் முடிந்தாச்சே
இனியும் என்ன செய்ய வேண்டும்
பாயை விரிக்க வேண்டும்
படுக்கையைப் பகிரவேண்டும்
களைத்துப் போய்இருப்பவரின்
கால்கை அமுக்க வேண்டும்
உடலை வருடி
உறக்கத்தில் ஆழ்த்த வேண்டும்
குழந்தை பெற்று கொடுக்க வேண்டும்
குடும்பம் நடத்தவேண்டும்
மடந்தையாய் இருக்க வேண்டும்
மரியாதை கொடுக்க வேண்டும்
இத்தனையும் செய்ய வேண்டும்
இதைவிடவும் என்ன வேண்டும்
ஆம்
ஊதாரிக் கணவனென்றால்
உழைத்தும் கொடுக்க வேண்டும்

அருட்கவி
அக்கரையூர் அப்துல் குத்தூஸ்

# புலம்பெயர்ந்த மக்களால் கொண்டாடப்பட்ட செஞ்சொற் செல்வர் ஆறு. திருமுருகனின் மணிவிழா

தாய்மண்ணில் தமிழுக்கும் தமிழ் சமூகத்திற்கும் அரும்பணியாற்றும் செஞ்சொற் செல்வர் ஆறு திருமுருகன் அவர்களின் சேவைகளைப் பாராட்டும் முகமாக அவருடைய மணிவிழா ஜெர்மனியில் இம்மாதம் 20ஆம்திகதியன்று கொண்டாடப்பட்டது. இவ்விழா ஜெர்மனியில் வெளியிடப்படும் வெற்றிமணி பத்திரிகை, சிவத்தமிழ் சஞ்சிகையின் ஆசிரியர் டாக்டர் மு.க.சு.சிவகுமாரினால் நடத்தப்பட்டது. பிற்பகல் 4.45 க்கு மங்கள விளக்கேற்றலுடன் ஆரம்பமாகிய இவ்விழாவுக்கு சிவஸ்ரீ பாஸ்கர நாத குருக்கள் ஆசியுரை வழங்கினார். எழுத்தாளர்கள், ஆன்மீகவாதிகள், தமிழ் ஆர்வலர்கள், கலைஞர்கள், மாணவர்கள் கலந்து சிறப்பித்த இவ்விழாவின் நிகழ்ச்சிகளை சகநாயகன் சக்திவேல் தொகுத்து வழங்கியிருந்தார்.

செஞ்சொற் செல்வர் ஆறு. திருமுருகனின் சேவையைப்பாராட்டி மாணவர்களின்உரையும், பெரியோர்களின் வாழ்த்துரைகளும் இடம்பெற்றன. நடன நிகழ்வுகள், கனடா சீனியஸ் நாடகத் தந்தை அ.சிவதாசனும் கலைஞர் வெ.இரவிந்திரனும் வழங்கிய தாளலய நிகழ்வு ஆகியன இவ் விழாவை மேலும் சிறப்பித்தன.

அத்துடன் இந்நிகழ்வில் சிவத்தமிழ் சிறப்பிதழ் வெளியிடப்பட்டது. வெளியீட்டுரையை எழுத்தாளர் நகுலா சிவநாதன் நிகழ்த்தியிருந்தார். முதல் பிரதியை சிவஸ்ரீ. பாஸ்கரகுருக்கள் வழங்க ஈஸ்வரா சலங்கை ஒலி நாட்டியாலய அதிபர் கார்த்திகா ஈஸ்வரலிங்கம் பெற்றுக் கொண்டார். வானதி வாணி நர்த்தனாலயம் சார்பாக தேசிங்குராஜாவும் ஆன்மிகத் தென்றல் த. புவனேந்திரனும் பெற்றுக்கொள்ள சிறப்புப் பிரதிகளை நடனக்கலைஞர்களும், மாணவர்களும் பெற்றுக்கொண்டனர். சிறப்பாக நடைபெற்ற இந்த நிகழ்வு இரவு விருந்துபசாரத்துடன் இனிதே முடிவடைந்தது.

இவ்விழாவின் மூலம் செஞ்சொற் செல்வர் ஆறு திருமுருகனின் சேவையும், பெருமைகளும் ஜெர்மனி மண்ணில் பரவியதுடன் மக்கள் மனதில் அவர் போற்றப்பட்டார் என்பது வெள்ளிடைமலை.

ஜெர்மனியில் இருந்து கௌசி















# வேலை வாய்ப்பு

සතොස

லங்கா சதொச லிமிடட் நாடு முழுவதும் உள்ள தனது சில்லறை வர்த்தக சங்கிலி, அமைப்பை வழிநடத்த விறுவிறுப்பான நபர்களை தேடுகிறது. லங்கா சதொச அரசுக்கு சொந்தமான மிகப்பெரிய சில்லறை வர்த்தக சங்கிலி என்பதோடு 2021/22 இல் அதன் தடம் மற்றும் வருவாயை அதிகரிப்பதற்கும் நவீனப்படுத்துவதற்கும் எதிர்பார்க்கிறது.

## சிரேஷ்ட முகாமையாளர் - சட்டம் (HM-1-1)
(தலைமை சட்ட அதிகாரி)

**தகைமைகள்**

**வெளிவாரி அபேட்சகர்கள்:**

1. ப.மா.ஆ. மூலம் அங்கீகரிக்கப்பட்ட சட்டத் துறையில் இளமாணிப் பட்டம் மற்றும் ஒரு சட்டத்தரணி

அத்துடன்

தொடர்புடைய துறையில் பட்டப்பின்படிப்பு பட்ட தகைமை (முதுமாணி)

மற்றும்

கூட்டுத்தாபனம், சட்டரீதியான சபை/ நிறுவனம் அல்லது புகழ்பெற்ற தனியார் நிறுவனம் ஒன்றில் "முகாமைத்துவ தரம்" ஒன்றில் குறைந்தது 15 ஆண்டுகள் அனுபவம்.

**உள்வாரி அபேட்சகர்கள் (கீழுள்ள 1 அல்லது 2)**

1. மேலுள்ள வெளிவாரி அபேட்சர்களுக்கு தேவையான தகைமைகளை பெற்றிருத்தல்.
2. பதவிக்கு தொடர்புடைய விடயப் பரப்பில் முகாமைத்துவ பிரிவு (MM) தரம் I பதவி ஒன்றில் குறைந்து 05 ஆண்டுகள் திருப்திகரமான சேவையை பூர்த்தி செய்திருத்தல்.

**வயது:**

35 வயதுக்கு குறையாதவராகவும் 55 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். (உள்வாரி அபேட்சகர்களுக்கு உயர் வயதெல்லை பொருந்தாது)

**சம்பள அளவு:**

HM 1-1 ரூபா [80,295 - 15 x 2,270 – 114,345]
அடிப்படைச் சம்பளம் ரூபா: Rs. 80,295/=
(அரசின் மூலம் அனுமதிக்கப்பட்ட மேலதிக கொடுப்பனவுகள் வழங்கப்படும்)
(போக்குவரத்துக் கொடுப்பனவு ரூபா 50,000/= + அரசாங்க சுற்றுநிருபத்திற்கு அமைய மாதாந்த எரிபொருள் கொடுப்பனவு + கையேசி மீள்நிரப்பல் ரூபா 5000/=)

**நியமனத்தின் பண்பு:**

EPF மற்றும் ETF இற்கு உரித்தான நிரந்தர நியமனம்

**பொருத்தமான அபேட்சகர்கள் பின்வருவனவற்றை கொண்டிருத்தல் வேண்டும்**

- நீதிமன்ற வழக்குகளில் தோன்றிய மற்றும் பின்தொடர்ந்த அனுபவம்.
- சிங்களம் மற்றும் ஆங்கில மொழிகளில் நொத்தாரிசு பணியில் அனுபவம்.
- சட்டபூர்வமான மற்றும் சட்ட தேவைகள் தொடர்பில் அனைத்த சட்ட ஆவணங்களையும் தயாரிப்பதில் அனுபவம்.
- நிறுவனத்தின் வர்த்தக நலன் தொடர்பில் முகாமைத்துவத்திற்கு சட்ட ஆலோசனை மற்றும் கருத்துகளை வழங்கியதில் அனுபவம்.
- சிறந்த IT திறன்களை நிரூபிக்க முடியுமாக இருத்தல் வேண்டும்.
- பல தரப்புக் குழுக்களுக்கு தலைமை வகித்த மற்றும் வழிநடத்திய நிரூபிக்கப்பட்ட திறமை. மனித மற்றும் ஏனைய வளங்களை முறையாக அமர்த்திய மற்றும் திறமையாக முகாமைத் துவம் செய்த அனுபவம்.

## முகாமையாளர் - பெறுகை (MM 1-1)

**தகைமைகள்**

**வெளிவாரி அபேட்சகர்கள் (கீழுள்ள 1 அல்லது 2)**

1. ப.மா.ஆ. மூலம் அங்கீகரிக்கப்பட்ட சந்தைப்படுத்தல்/ வர்த்தக முகாமைத்துவம்/ வணிகம்/ வழங்கல்கள் மற்றும் பொருள் முகாமைத்துவம்/ பெறுகை மற்றும் பொருள் முகாமைத்துவம்/ சர்வதேச வர்த்தகம்/ வர்த்தக நிர்வாகம்/ ஏற்பாட்டியல் முகாமைத்துவத்தில் இளமாணிப் பட்டம்.

   அத்துடன்

   பதவியுடன் தொடர்புடைய விடயப் பரப்பதில் 01 ஆண்டு தகைமைக்கு பின்னரான அனுபவம்.
2. பதவிக்கு தொடர்புடைய துறை ஒன்றில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்முறை பட்டய நிறுவனம் ஒன்றின் இடைநிலை பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல்.

   அத்துடன்

   பதவியுடன் தொடர்புடைய விடயப் பரப்பதில் 01 ஆண்டு தகைமைக்கு பின்னரான அனுபவம்

**உள்வாரி அபேட்சகர்கள் (கீழுள்ள 1 அல்லது 2)**

1. மேலுள்ள வெளிவாரி அபேட்சர்களுக்கு தேவையான தகைமைகளை பெற்றிருத்தல்.
2. பதவிக்கு தொடர்புடைய விடயப் பரப்பில் உதவி முகாமைத்துவ தரத்தில் (JM) ஐந்து (05) ஆண்டு திருப்திகரமான சேவையை பூர்த்தி செய்திருத்தல்.

**வயது:**

22 வயதுக்கு குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். (உள்வாரி அபேட்சகர்களுக்கு உயர் வயதெல்லை பொருந்தாது)

**சம்பள மற்றும் ஏனைய கொடுப்பனவுகள்:**

MM 1-1 ரூபா [53,175 - 10 x 1375 - 15 x 1910 - 95,575]
அடிப்படைச் சம்பளம் ரூபா 53,175/= (அரசின் மூலம் அனுமதிக்கப்பட்ட மேலதிக கொடுப்பனவுகள் வழங்கப்படும்)
போக்குவரத்துக் கொடுப்பனவு ரூபா 12,500/= + கையேசி மீள்நிரப்பல் ரூபா 3,000/=

**நியமனத்தின் பண்பு:**

EPF மற்றும் ETF இற்கு உரித்தான நிரந்தர நியமனம்

**பொருத்தமான அபேட்சகர்கள் பின்வருவனவற்றை கொண்டிருத்தல் வேண்டும்**

- மதிப்பீடு, மதிப்பாய்வு மற்றும் தரவை விளக்கும் திறனுடன் சிறந்த பகுப்பாய்வு, சிக்கல்களை தீர்க்கும் பண்பு மற்றும் ஏற்பாட்டுத் திறன்களை பெற்றவராகவும் சிறந்த சுய ஊக்கம் கொண்டவராகவும் இருத்தல் வேண்டும்.
- வலுவான தலைமைத்துவ தகைமைகள், ஒருவருக்கு ஒருவர் தொடர்புகொள்ளும் திறன்களை கொண்டிருத்தல்.
- சிறந்த IT திறன்களை நிரூபிக்க முடியுமாக இருத்தல் வேண்டும்.
- பல தரப்புக் குழுக்களுக்கு தலைமை வகித்த மற்றும் வழிநடத்திய நிரூபிக்கப்பட்ட திறமை. மனித மற்றும் ஏனைய வளங்களை முறையாக அமர்த்திய மற்றும் திறமையாக முகாமைத்துவம் செய்த அனுபவம்

## உதவி முகாமையாளர் - பெறுகை (JM 1-1)

**தகைமைகள்**

**வெளிவாரி அபேட்சகர்கள் (கீழுள்ள 1 அல்லது 2)**

1. ப.மா.ஆ. மூலம் அங்கீகரிக்கப்பட்ட சந்தைப்படுத்தல்/ வர்த்தக முகாமைத்துவம்/ வணிகம்/ வழங்கல்கள் மற்றும் பொருள் முகாமைத்துவம்/ பெறுகை மற்றும் பொருள் முகாமைத்துவம்/ சர்வதேச வர்த்தகம்/ வர்த்தக நிர்வாகம்/ ஏற்பாட்டியல் முகாமைத்துவத்தில் இளமாணிப் பட்டம்.
2. பதவிக்கு தொடர்புடைய துறை ஒன்றில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்முறை பட்டய நிறுவனம் ஒன்றின் இடைநிலை பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல்.

**உள்வாரி அபேட்சகர்கள் (கீழுள்ள 1 அல்லது 2 அல்லது 3)**

1. மேலுள்ள வெளிவாரி அபேட்சர்களுக்கு தேவையான தகைமைகளை பெற்றிருத்தல்.
2. பதவிக்கு தொடர்புடைய விடயப் பரப்பில் MA – 4 / MA – 3 பிரிவு பதவி ஒன்றில் ஐந்து (05) ஆண்டுகள் திருப்திகரமான சேவையை பூர்த்தி செய்திருத்தல்.
3. பதவிக்கு தொடர்புடைய விடயப் பரப்பில் (MA 1-2) தரம் II பிரிவு பதவி ஒன்றில் ஐந்து (05) ஆண்டுகள் திருப்திகரமான சேவையை பூர்த்தி செய்திருத்தல்.

**வயது**

22 வயதுக்கு குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். (உள்வாரி அபேட்சகர்களுக்கு உயர் வயதெல்லை பொருந்தாது)

**சம்பள மற்றும் ஏனைய கொடுப்பனவுகள்**

JM 1-1 ரூபா [42,600 - 10 x 755 - 18 x 1135 – 70,580]
அடிப்படைச் சம்பளம் ரூபா Rs.42,600/=
(அரசின் மூலம் அனுமதிக்கப்பட்ட மேலதிக கொடுப்பனவுகள் வழங்கப்படும்)
கையேசி மீள்நிரப்பல் ரூபா Rs.2,000/=

**நியமனத்தின் பண்பு:**

EPF மற்றும் ETF இற்கு உரித்தான நிரந்தர நியமனம்

**பொருத்தமான அபேட்சகர்கள் பின்வருவனவற்றை கொண்டிருத்தல் வேண்டும்**

- மதிப்பீடு, மதிப்பாய்வு மற்றும் தரவை விளக்கும் திறனுடன் சிறந்த பகுப்பாய்வு, சிக்கல்களை தீர்க்கும் பண்பு மற்றும் ஏற்பாட்டுத் திறன்களை பெற்றவராகவும் சிறந்த சுய ஊக்கம் கொண்டவராகவும் இருத்தல் வேண்டும்.
- வலுவான தலைமைத்துவ தகைமைகள், ஒருவருக்கு ஒருவர் தொடர்புகொள்ளும் திறன்களை கொண்டிருத்தல்.
- சிறந்த IT திறன்களை நிரூபிக்க முடியுமாக இருத்தல் வேண்டும்.
- பல தரப்புக் குழுக்களுக்கு தலைமை வகித்த மற்றும் வழிநடத்திய நிரூபிக்கப்பட்ட திறமை. மனித மற்றும் ஏனைய வளங்களை முறையாக அமர்த்திய மற்றும் திறமையாக முகாமைத்துவம் செய்த அனுபவம்.

## தர உத்தரவாத அதிகாரி (JM 1-1)

**தகைமைகள்**

**வெளிவாரி அபேட்சகர்கள்:**

1. ப.மா.ஆ. மூலம் அங்கீகரிக்கப்பட்ட இரசாயனவியல்/ உணவு விஞ்ஞானம்/ விவசாயம்/ உயிரியல் விஞ்ஞானம்/ ஊட்டச்சத்து துறையில் இளமாணிப் பட்டம்

**உள்வாரி அபேட்சகர்கள்**

1. மேலுள்ள வெளிவாரி அபேட்சர்களுக்கு தேவையான தகைமைகளை பெற்றிருத்தல்.

**வயது:**

22 வயதுக்கு குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். (உள்வாரி அபேட்சகர்களுக்கு உயர் வயதெல்லை பொருந்தாது)

**சம்பள மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் அல்லது ஏனைய நன்மைகள்:**

JM 1-1 ரூபா [42,600 - 10 x 755 - 18 x 1135 – 70,580]
அடிப்படைச் சம்பளம் ரூபா 42,600/=
(அரசின் மூலம் அனுமதிக்கப்பட்ட மேலதிக கொடுப்பனவுகள் வழங்கப்படும்)
கையேசி மீள்நிரப்பல் ரூபா 2,000/=

**நியமனத்தின் பண்பு:**

EPF மற்றும் ETF இற்கு உரித்தான நிரந்தர நியமனம்

**பொருத்தமான அபேட்சகர்கள் பின்வருவனவற்றை கொண்டிருத்தல் வேண்டும்**

- மதிப்பீடு, மதிப்பாய்வு மற்றும் தரவை விளக்கும் திறனுடன் சிறந்த பகுப்பாய்வு, சிக்கல்களை தீர்க்கும் பண்பு மற்றும் ஏற்பாட்டுத் திறன்களை பெற்றவராகவும் சிறந்த சுய ஊக்கம் கொண்டவராகவும் இருத்தல் வேண்டும்.
- வலுவான தலைமைத்துவ தகைமைகள், ஒருவருக்கு ஒருவர் தொடர்புகொள்ளும் திறன்களை கொண்டிருத்தல்.
- சிறந்த IT திறன்களை நிரூபிக்க முடியுமாக இருத்தல் வேண்டும்.
- பல தரப்புக் குழுக்களுக்கு தலைமை வகித்த மற்றும் வழிநடத்திய நிரூபிக்கப்பட்ட திறமை. மனித மற்றும் ஏனைய வளங்களை முறையாக அமர்த்திய மற்றும் திறமையாக முகாமைத் துவம் செய்த அனுபவம்.

**அனைத்து விண்ணப்பதாரர்களும்**

- இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும்.
- நாட்டில் எந்த ஒரு பகுதியிலும் பணியாற்றுவதற்கும் பதவிக்கான பணிகளை மேற்கொள்வதற்கும் உடல் மற்றும் உளத் தகைமையை கொண்டிருத்தல் வேண்டும்.
- சிறந்த பண்புடையவராக இருத்தல் வேண்டும்.

நீங்கள் சரியான தகைமைகள் மற்றும் அனுபவத்தை பெற்றவராக இருந்தால், சான்றிதழ்களின் பிரதிகளுடன் உங்களது சுய விபரக்கோவையை கீழுள்ள முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது vacancies@lankasathosa.org என்ற மின்னஞ்சல் முகவரிக்கு இந்த விளம்பரம் வெளியான 14 நாட்களுக்குள் அனுப்பவும். (கடித உறையின் இடது பக்க மேல் மூலையில்/ மின்னஞ்சலின் "Subject" பகுதியில் விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிடுதல் வேண்டும்)

(தேர்வு செய்யப்பட்ட அபேட்சர்களுடன் மாத்திரமே நிறுவனம் தொடர்புகொள்ளும்)

வர்த்தக அமைச்சு

**தலைவர், லங்கா சதொச லிமிடட்**
**இல. 27, CWE செயலகக் கட்டிடம், வொக்ஷோல் வீதி, கொழும்பு 02.**

සතොස



# ஒரு தாயின் இதயம்

இடி மழை. பெங்காளி வெள்ளைப் புடவையின் சிகப்பு கரையில் நின்று இரண்டு வயதான பாதங்கள் நடந்து செல்கின்றன. தூவானத்தால் ஜன்னலிற்கு அருகில் நிலம் ஈரமாய் இருக்கின்றது. நீரை மிதித்தவுடன் அந்தப் பாதங்கள் நிற்கின்றன. இடப்பக்கம் நடந்து ஒரு சாக்கை காலால் இழுத்து வந்து அங்கு போட்டுவிட்டு, ஜன்னலை இழுத்து சாத்துகின்றன தங்க வளையல்கள் அணிந்த கைகள். ஜன்னலில் அவ் அம்மையாரின் முகத்தின் விம்பத்தைப் பார்க்கின்றோம்.

50 வயதிருக்கும். சில நரைத்த முடிகள். விழாவிற்கு செல்வதுபோல் அலங்காரத்துடன் நிற்கின்றார். அதே விம்பத்தில் பின்னால் கதிரையில் அவர் கணவன், கையில் திறன்பேசியைப் பிடித்து இவரை காணொளிப் பதிவு செய்கிறார். ஜன்னலின் திரைச்சீலையை இழுத்து மூடிவிட்டுத் திரும்பி

அம்மையார் “வேலை செய்யுதா?”

கணவன் “ரெக்கோர்டிங் காட்டுது, சவுண்ட் பிரச்சினை இல்லையானு ஒருக்காப் பார்த்தா சரி“

அப்படியே வரவேற்பறையின் அனைத்து திரைச்சீலைகளையும் சென்று மூடிவிட்டு வந்து கதிரையில் அமர்கிறார்.

திறன்பேசியில் இவர்கள் சில வினாடிகள் முன்பு பேசியது ஒலிக்கின்றது.

கிழியப்போகும் குடையாக
ஜன்னல்கள் காற்றில் ஆடுகின்றன
அவள் நடந்து வருகிறாள்
வாழ்வெனும் நீரில்
நம் வரலாறு எனும்
கணப்பொழுதுக் கவிதையை
எழுதிமுடிப்பதற்கு
காலால் நூலால்
எழுதிமுடிப்பதற்கு
உலகத்தின் கண்களை மூடுகிறாள்
மூட மறுக்கும் சில கண்களின்
இமைகளை
இழுத்துத் தைக்கிறாள்
தாண்டவம் ஆடுகின்றன
மழைத்துளிகள்
ஒரு முழுநிலவு முடிகிறது
பின்னே அவன் கணவன்
விம்பங்களுள் விம்பமாய்
புதைக்கப்பட்டிருக்கிறான்
கையில் திறன்பேசி எனும்
ஊசியைப் பிடித்து
ஒளியெனும் நூலைக்கோர்த்து
கனவையும் நிஜத்தையும்
தைக்க முயல்கிறான்
முட்டாள்
வந்து அமர்கிறாள்
இதழ்கள் விரிக்கும் ஒரு மலரின்
லாவகத்தோடு
இறந்துபோன சிலவினாடிகள்
உயிர்பெறுகின்றன

அம்மையார் “1990க்குத்தானே சொன்னனீங்க? அவங்களிடம்தான் அம்புலன்ஸ்லையே மெடிக்கல் இக்குப்மென்ட்ஸ் இருக்கும்”

கணவன் “ஓம்....ஆனா இன்னொரு பன்னிரண்டு மணித்தியாலம் வெயிட் பண்ணலாமே”

அம்மையார் கோபமா “உந்த விசர் கதைய விடுங்கோ, வெள்ளம் வரும் வரைக்கும் பார்த்திட்டு இருக்கிறதுதான் உங்களுக்கு வேலை. டொக்டர் இன்னும் 24 மணித்தியாலம்தான் சொல்லி இருக்கார். ரெக்கோர்டிங்கை தொடங்குங்கோ”

கணவன் பொத்தானை அழுத்தி விட்டு திறன்பேசியைப் பிடிக்கிறான். ஆனால் அவன் கைகள் நடுங்குகின்றன.

அம்மைார் “ஆட்டாமாப் புடிங்களன்...” கோபமாகக் கத்தத்தொடங்கினவள் அவன் கண்ணீரைப் பார்த்துவிட்டு சாந்தம் அடைகிறாள்.

அம்மையார் “இப்பிடிக்கொண்டு வந்து இந்த போட்டோ பிரேம்ல சாத்தி வையுங்கோ”

அந்த புகைப்படத்தில் இந்த அம்மையார் இளமையாக உள்ளார். ஒரு ஆறு வயது மதிக்கத்தக்க மகன் இவள் பாதங்களில் ஏறி நின்று இவள் கைகளைப் பிடித்த வண்ணம் மேலும் கீலும் சீசோ ஆடுகிறான். ஒரு நான்கு வயது மதிக்கத் தக்க மகள் இவள் தலையில் பேன் பார்க்கிறாள்.

அருகில் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் ஒரு பச்சைக்காரின் கண்ணாடி விம்பத்தில் அந்த புகைப்படத்தை எடுத்துக்கொண்டிருக்கும் கணவன் தெரிகிறான்

“தாமதம் வேண்டாம்
தயக்கம் வேண்டாம்
தைரியம்கொள் நெஞ்சே !
தொடங்கலாம்”
உத்தரவு பிறப்பித்தாள்
பிறப்பித்தவளின் விதியை
மாற்றி எழுதுவதற்காய்
பூமி நடுக்கம் கொண்டதோ
அவன் கைகள் ஏன் நடுங்குகின்றன ?
ஒரு நிழற்படத்தில்
நிஜத்தை ஓய்வெடுக்கச் சொன்னாள்
நேரம் நெஞ்சில்
நெடுதூரம் பாய்கின்றது
நினைவலைகள் கரைவந்து
நெஞ்சை முட்டுகின்றன
பால்கேட்டு முலைகளை முட்டும்
மழலைபோல்
தலைவிரி கோலமாய்
காளியா இவள் ?
இல்லை தலைமகளின்
விளையாட்டு மைதானமாய்
மாறியதோ
இவள் சிரம்
சிரம் மட்டுமா
கரம் கால்
இவள் உடல்முழுதுமே
இவள் பிள்ளைகளின்
விளையாட்டு பூமி
புவியீர்ப்பை மிஞ்சும் அன்பு
முத்தப்பசையில்
உயிர்கள் இணையும்
அவனும்
நிழலென
குடைபிடித்து நின்றான்

அம்மையார் “கண்ணுக்குட்டி இத நான் உனக்காகப் பண்ணல்ல, எனக்காகப் பண்றன்.

இந்த ரெண்டு வருஷமும் நரக வேதனை நான் அனுபவிச்சிட்டன். ஆனா இன்னைக்கு சந்தோஷமாப் போறன்.

கடைசிவரைக்கும் குற்ற உணர்வு என்ற பேச்சுக்கே நீ இடம் கொடுக்கக் கூடாது. என்னோட பயம் அது மட்டும்தான். நீ எனக்கு செய்யக்கூடிய கைமாறு, இந்த பழியத் தூக்கி உன் தலைமேல போட்டுக்காம சந்தோஷமா வாழ்றதுதான்.

அதோட , ராம், அம்மா போய்ட்டன்ற கோபத்தை தங்கச்சி மேல காட்டக் கூடாது. இனிமே அவதான் உன் அம்மா.உனக்கு இப்பிடி ஒரு நிலைமை வந்தாலும் நான் இதைத்தான் செய்வன்.

நீங்க ரெண்டுபெரும் தான் என் வாழ்க்கையோட பொக்கிஷங்க. என் டிகிரி, பீ.எச்.டி, பணம், புகழ் எதுவும் நீங்க தந்த சந்தோஷத்துல கால் பங்கு பெறாது.

சின்ன வாண்டு அப்பம்மா எங்கன்னு கேட்டா உண்மையை சொல்லு இல்லாட்டி அவளே கண்டுபுடிச்சிடுவாள்.

இந்த மருந்துதான் , சோ வலி தெரியாது. உங்க கொப்பர் ஒரு மாதிரி எங்கையோ வாங்கிட்டார். ஆனா மரக்கறி வாங்கிட்டு வார மாறி பழுதாப்போனத வாங்கிட்டு வந்தாரோ தெரியாது.”

கணவரைப் பார்த்து புன்னகைக்கிறாள். கணவன் சுவரில் சாய்ந்து நின்றவண்ணம் கண்ணிலிருந்து கண்ணீர் வழிகிறது.

கடைசி வார்த்தைகள்
மௌனத்தில் மௌனமாய் ஒலிக்கின்றன அந்த வரவேற்பறை முழுதும்
ஒரு மாயசோகம்
கண்களில் விழுந்து
கண்ணீரை வரவைக்கும் தூசிபோல்
நிஜத்திலும் நிஜமாய்
நிரம்பிக்கிடக்கிறது

“நீ ஹொஸ்பிட்டல்ல இருந்த இரண்டு வருசத்துல அவன் ஒரு தரம்கூட வந்து பார்க்கல்ல. அவன் டிவோர்ஸ் தராட்டிப் போறான், நீ அமெரிக்கா ஆஸ்திரேலியா எண்டு எங்கையாவது போய் லிவ்விங் டுகெதர் அப்பிடின்னு சந்தோஷமா இரு.

குழந்தை பெத்துக்கணும் எண்டு நான் உங்கள சொல்லி வளர்க்கல்ல, உங்கள தத்தெடுத்த மாறி நீங்களும் தத்தெடுக்கனும் எண்டுதான் ஆசைப்பட்டன். ஆனா நீ குழந்தை பெத்துக்க, நான் உனக்கு மகளா வந்து பிறக்கனும்”

அம்புலன்ஸ் வரும் சத்தம் கேட்கிறது.

“ஆ சொல்ல மறந்திட்டன், பிரிட்ஜ்ல கேசரி கிண்டி வைச்சிருக்கன். மறக்காம சாப்பிடுங்கோ”

கணவன் இவள் முன் வந்து மண்டியிட்டு கட்டித் தழுவி முத்தமிடுகிறான்.

அம்மையார் “சிவபுராணம் பாடுறீங்களா“

கணவன் “எனக்கு முதல் நாலுவரி தான் தெரியும்”

அம்மையார “என் மேசையோட ரெண்டாவது லார்ச்சி“

கணவன் முதல் நான்கு வரிகளைப் பாடிய வண்ணம் உள்ளே ஓடுகிறான். லார்ச்சியைத் திறந்த வேகத்தில் அது கீழே விழுந்து உடைகிறது.

அதற்குள் இருந்த புத்தகங்களைக் கிளறி சிவபுராணத்தை எடுத்து வாசித்த வண்ணம் வரவேற்பறைக்குள் ஓடி வருகிறான்.

“தாயிற் சிறந்த தயாவான தத்துவனே” என்ற வரிகளை விம்மி விம்மிப் பாடும்பொழுது அவன் மனைவி கதிரையில் இறந்து கிடப்பதைக் காண்கிறான்.

அம்புலன்ஸ் ஒலி
அசரீரி
“சிவபுராணம் பாடுறீங்களா“
அவள் கடைசி ஆசை
ஓடிச்செல்லுகிறான்
அழியாத அவ் எழுத்துக்களைத் தேடி
தெரிந்த நாலு வரிகளை
முணு முணுத்துக்கொண்டு
இருளில் நடக்கும்
ஒரு குழந்தையின்
பயத்தைப் போக்கும்
பாடல்போல்
மேசையின் ஒரு நெஞ்சறையைக்
கிழித்தெடுத்து
அந் நூலின் பக்கங்கள்
விரல்களை வெட்டும் அளவு
வேகமாய்த் திருப்பி
சிவனின் வரலாற்றைப்
பாடிய வண்ணம் திரும்புகிறான்
அங்கே அவள் பல்லில் கடிபட்டு
சிந்திய மாத்திரைத் துண்டுகள்
மார்பின் மீது

சில தினங்கள் கழித்து இந்தக் காணொளியை அவள் மகள் மருத்துவமனை அறையில் ஜன்னல் அருகே நின்று பார்க்கிறாள். கண்ணீர் வழிகிறது. தொடர்ந்து அக்காணொளியில் வீட்டு அழைப்புமணி அடிப்பதும், நோயாளர் காவுவண்டி ஊழியர்கள் வந்து அவளின் உடலைக் காவிச்செல்வதும், வெறிச்சோடிப்போன வீடும் பதிவாகியிருக்கின்றன.காலைச் சூரியன் அவள் முகத்தில் வீச கண்களை மூடி அவள் ஒரு கையை மார்பின் மீது வைத்து அந்த இதயம் துடிக்கும் சத்தத்தைக் கேட்கிறாள்.

மரத்தில் வந்து அமர்கிறது
ஒரு பறவை
அதன் இதயத்துடிப்பு...

(மானிப்பாய்) ரதிதேவி...

---

"இவனைச் சிலுவையில் அறையுங்கள்"

"எழுதுதித்தீரா பிரியங்கள்"

## இரு கவிதை நூல்களின் வெளியீட்டு விழா இன்று

மகுடம் கலை இலக்கிய வட்டம் நடாத்தும் கவிஞர் வி. மைக்கல் கொலினின் இவனைச் சிலுவையில் அறையுங்கள், எழுதித்தீரா பிரியங்கள் ஆகிய இரு கவிதை நூல்களின் வெளியீட்டு விழா இன்று 28.11.2021 ஞாயிறு மாலை 3.45 மணிக்கு மட்டக்களப்பு பொது நூலக கேட்போர் கூடத்தில் கோறளைப்பற்று மேற்கு பிரதேச செயலாளர் . வெ.தவ ராஜா (கவிஞர் ராஜாத்தி) தலைமையில் நடைபெறவுள்ளது.

எழுத்தாளரும், அதிபருமான ச. மணி சேகரனின் வரவேற்புரையுடன் ஆரம்பமாகும் நிகழ்வின் பிரதம அதிதிகளாக மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபரும் மாவட்டச் செயலாளருமான க. கருணாகரனும்,யாழ். மாவட்ட அரசாங்க அதிபரும் மாவட்டச் செயலாளருமான க. மகேசனும் கலந்து சிறப்பித்து நூல்களை வெளியிடவுள்ளனர்.

மட்டக்களப்பு தமிழ்ச்சங்க தலைவர் சைவப் புரவலர் வி. றஞ்சிதமூர்த்தி மற்றும் யுனைட்டட் புத்தக நிலைய உரிமையாளர் பா. செல்வ ராஜாவும் முதல்பிரதிகளைப் பெற்றுக்கொள்ள நூல்தொடர்பான நயவுரையை கிழக்குப் பல்கலைக்கழக ஓய்வு நிலை பேராசிரியர் செ. யோக ராசாவும், அதிபரும், கவிஞருமான கவின் மகள் சுதாகரியும் நிகழ்த்தவுள்ளனர்.

கல்வி மறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சின் பணிப்பாளர் நாயகம் இரா. நெடுஞ்செழியன், ஓய்வு நிலை கிழக்குமாகாண இளைஞர் சேவைகள் மன்ற பணிப்பாளர் பொன். செல்வநாயகம், மட்டக்களப்பு தேசிய சேமிப்பு வங்கி ஓய்வு நிலை முகாமையாளர் எஸ். வி. சுவேந்திரன், கிழக்குப் பல்கலைக்கழக டாக்டர். எஸ். சிவச்செல்வன் ஆகியோர் சிறப்பதிதிகளாக கலந்து கொள்ளும் இந் நிகழ்வில் கவி வாழ்த்தினை கதிரவன் பட்டிமன்ற தலைவரும் மட்டக்களப்பு தமிழ் எழுத்தாளர் சங்க பொருளாளருமான கவிஞர். த. இன்பராசா நிகழ்த்த நன்றியுரையினை நூலாசிரியர் மகுடம். வி. மைக்கல் கொலின் ஆற்றுவார். இந் நிகழ்வை கவிஞர் சோலையூரான் ஆ. தனுஸ்கரன் தொகுத்து வழங்கவுள்ளார்.







---

## புலம்பெயர்ந்த மண்ணில் புகழ்பெற்ற படைப்பாளி முல்லையூரான்..!



இலங்கையிலிருந்து புலம்பெயர்ந்து ஐரோப்பிய நாடுகளில் தஞ்சம் புகுந்த தமிழ் மக்கள் மத்தியில், இலக்கிய வாஞ்சை மிகக்கொண்டு படைப்புகளை அளித்த சிறந்த படைப்பாளிகளில் ஒருவர் முல்லையூரான். சமூக அவலங்களைப் பெரிதும் கவனத்திற்கொண்டு மனிதத்தின் மேம்பாட்டிற்காய்ப் படைப்புகளை அளித்தவர்களில் முல்லையூரான் குறிப்பிடத்தக்கவர்.

முல்லைத்தீவு வற்றாப்பளையைச் சேர்ந்த முருகேசு சிவபாக்கியம் தம்பதிகளின் புதல்வரான இவரின் இயற்பெயர் சிவராசா.

இவர் ஆரம்பக் கல்வியை வற்றாப்பளை றோமன் கத்தோலிக்க பாடசாலையிலும், பின்னர் சாவகச்சேரி இந்துக் கல்லூரி, றிபேக் கல்லூரியிலும் கல்வியைத் தொடர்ந்தார்.

யாழ் பல்கலைக்கழகத்தில் கலைத்துறையில் கற்று இளமாணிப் பட்டத்தைப் பெற்றுக்கொண்டார். பல்கலைக்கழகத்தில் கற்கும் காலத்திலேயே எழுத்துத்துறையில் தீவிரமாக ஈடுபட்டார்.

இவரது படைப்புகள் பத்திரிகைகளிலும் 'மல்லிகை' மற்றும் சில சஞ்சிகைகளிலும் பிரசுரமாகின. 'மல்லிகை' முல்லைத்தீவுச் சிறப்பிதழ் வெளியிட்டது. அச்சிறப்பிதழின் வெளியீட்டு விழா முல்லைத்தீவில் சிறப்பாக நடைபெற்றது.

அவ்விழா சிறப்பாக நடைபெற முல்லையூரான் அயராத உழைப்பை நல்கினார் என மல்லிகை ஆசிரியர் பெரிதும் பராட்டியமை குறிப்பிடத்தக்கது. அக்காலத்தில் முல்லையூரான் 'அக்கினிக் குஞ்சு' என்ற சஞ்சிகையையும் வெளியிட்டு வந்தார். 1981 - 1982 காலப்பகுதியில் இரு கவிதைத் தொகுதிகளையும் இவர் வெளியிட்டார்.

அந்நாட்களில் பல கவியரங்குகளிலும் கலந்துகொண்டு பாராட்டுப் பெற்றார்.

தாயகத்தில் யான் பங்குபற்றிய கவியரங்குகள் சிலவற்றில் இவரும் கலந்துகொண்டு சிறப்பித்தமை ஞாபகத்திலுண்டு.

பண்டாரவளையில் சிறிதுகாலம் ஆசிரியராகக் கடமையாற்றினார். பல்கலைக்கழகத்தில் கற்றவரையே காதலித்து வாழ்க்கைத் துணையாக்கிக் கொண்டார்.

நாட்டு நிலைமை காரணமாக 1983 ம் ஆண்டு புலம்பெயர்ந்து தமிழ்நாடு சென்றார்.

அங்கு சிறிது காலம் பத்திரிகை ஒன்றில் பணி புரிந்தார். தமிழகத்தில் வாழ்ந்த காலத்திலும் ஒரு சில நூல்களை வெளியிட்டார்.

1986 ம் ஆண்டு டென்மார்க் நாட்டிற்கு வந்து சேர்ந்தார். 1993 ல் 'நிர்வாண விழிகள்' என்ற கவிதைத் தொகுதியை வெளியிட்டார். ஐரோப்பாவிலிருந்து ஒலிபரப்பாகிய தமிழ் வானொலிகளில் இவரது படைப்புகள் பல ஒலிபரப்பாகி மக்கள் மனங்களைக் கவர்ந்தன.

இலக்கியத் தாகத்திற்கு ஆட்பட்டு 'காகம்' என்ற பெயரில் ஒரு மாத இதழையும் 1996 வரை வெளியிட்டு வந்தார்.

இந்த இதழில் கதைகள் கட்டுரைகள் எனத் தொடர்ந்து எழுதி வந்தார்.







2002 ம் ஆண்டு கொழும்பில் 'மல்லிகைப் பந்தல்' வெளியீடாக இவரது சிறுகதைத் தொகுதியான 'சேலை' வெளியாகியது.

''முல்லையூரான் கதை சொல்வதில் ஒரு புதுமையிருக்கிறது. புதுப்புனல் ஊற்றின் குளிர்மை பிரவகிக்கின்றது. பலவித 'இசங்'களால் மூளை குழம்பிப் போயிருக்கும் இளைய இலக்கியச் சந்ததிக்கு இது ஒரு மாற்றீடு எனலாம். பல கதைகளில் உருவம் சார்ந்த சில உத்திகளைக் கையாண்டிருக்கிறார். சிலவற்றில் குறிப்பிடக்கூடிய வெற்றியும் அடைந்துள்ளார்.

ஒரு சிறுகதை எப்படி அமைய வேண்டும் என்று சில வார்த்தைகளில் கூறிவிட முடியாது. ஆனால் ஒரு சிறுகதையைப் படித்து முடித்ததும் அது தரும் உணர்வுகள் நல்ல விகிதாசாரத்தில் படிப்பவர்கள் சிந்தனையில் தொற்றி, மனத்தில் தொங்கி நிற்குமாயின் அதுவே சிறந்த சிறுகதை என மதிப்பிட வைக்கிறது. முல்லையூரானின் கதைகளைப் படித்து முடித்ததும் எமது சிந்தனை விரிகின்றது. பல விடயங்களைப் புரிந்து கொள்ள வேண்டுமென்ற ஆவல் தூண்டப்படுகின்றது. வாதப் பிரதிவாதங்கள் எழுகின்றன."

என்றவாறு முல்லையூரானின் 'சேலை' சிறுகதைத் தொகுதிக்கு அணிந்துரை வழங்கிய எழுத்தாளர் டாக்டர் புலோலியூர் க. சதாசிவம் குறிப்பிட்டுள்ளமை மனங்கொள்ளத் தக்கது.

முல்லையூரானின் பார்வையில் சிந்தனைத் தெளிவு இருக்கிறது.

புலம்பெயர் மக்களின் எரியும் பிரச்சினைகள், எதிர்காலம் பற்றிய ஏக்கங்கள், இளைய சந்ததியின் போக்குகள் எனப் புலம்பெயர்ந்து வாழும் சமூகத்தின் வாழ்வியலைப் பல கோணங்களிலும் இவரது படைப்புகள் சுட்டி நிற்கின்றன எனலாம்.

முல்லையூரான் பல்துறை ஆற்றலாளர். சிறந்த ஓவியர். ஓவியக் கண்காட்சியை நடாத்திப் பாராட்டுப் பெற்றவர்.

1990 ம் ஆண்டு ஓவியக் கண்காட்சியில் இவரது ஓவியம் ஒன்று பத்தாயிரம் குரோண் கொடுத்து வாங்கப்பட்டது எனத் தெரிகிறது.டென்மார்க்கிலுள்ள நகரசபை ஒன்று இவரது ஓவியத்தை வாங்கிக் கௌரவித்ததாகத் தெரிகிறது. சிறந்த படைப்பாளியாக வளர்ந்த நண்பர் முல்லையூரான், 2006 ம் ஆண்டு 51 வயதில் காலமாகியமை அவரை அறிந்த படைப்பாளிகள், மக்களுக்கு மிகுந்த கவலையளித்தது. 2000 ஆண்டளவில் ஒரு சில தடவை தொலைபேசியில் தொடர்பு கொண்டு தாயகத்து ஞாபகங்களை நீண்ட நேரம் அவர் என்னுடன் பகிர்ந்துகொண்டமை ஞாபகத்திலுண்டு.

10 10 2010 ல் டென்மார்க் நாட்டில் ''இனி" வாசகர் வட்ட ஏற்பாட்டில் இலக்கிய விழா சிறப்பாக நடைபெற்றது.

''முல்லையூரான்" அரங்கில் நடைபெற்ற இவ்விழாவில் நூல் வெளியீடு கருத்தரங்கு கவியரங்கு புத்தகக் கண்காட்சி என்பன இடம்பெற்றன. இவ்விழாவில் யான் கலந்துகொண்டு நண்பர் முல்லையூரானை நினைவுகூர்ந்து உரையாற்றியமை நினைவில் நிற்கிறது. முல்லையூரான் படைப்புகள் மூலம், அவரது நாமம் நிலைத்து நிற்கும்..!



வி. ரி. இளங்கோவன்...

# கசப்பும்... இனிப்பும்...



தமிழ்மணி மானா மக்கீன்

## கசப்பு

**"ரஜீவன் ராமலிங்கம்"** என்றொரு வவுனியா மைந்தர். ஓர் ஆசிரியராக சேவை செய்திருக்கிறார். இலக்கியத் துறையில், ஈடுபாடுள்ளவரா, ஊடகக்காரரா என்று சரியாகக் கணிக்க இயலாது தவிக்கிறேன்.

புலம்பெயர்ந்து ஃபிரான்ஸ் சென்றவர், இப்பொழுது இலண்டனில் என் முகநூலில் அவ்வப் பொழுது பளிச்சிடுவார்.



"உங்கள் எழுத்துக்களின் அபிமானி" என ஒரு சமயம் பதித்து சிலிர்ப்பை ஏற்படுத்தினார்.

இவர் முகநூலின் பக்கங்களைப் பார்த்த ஒரு சமயம் இப்படியொரு தலைப்பு:

**பேஸ் புக் வாழ்த்துக்கள்!**

அதென்ன சமாசாரம்?

பொறுமையாக முழுதையும் வாசித்து சிரி என்று சிரித்தேன். அபிமானிகளும் சிரிக்கட்டுமே என்று இங்கே மறுபதிப்புச் செய்கிறேன்.

இன்று வாழ்த்துகள் அதிகம் குவிந்துள்ள இடம் நம்ம பேஸ்புக் தான்! இங்கே எல்லாத்துக்குமே வாழ்த்துத்தான்!

★ "ஆறு மாதங்களுக்குப் பிறகு இன்று மாமி வீட்டுக்குப் போயிருந்தேன். மாமி பனங்காய் பணியாரம் சுட்டு தந்தா" என்றொரு பதிவின் கீழே, "வாழ்த்துகள் சகோ. இனிய வாழ்த்துகள் சகோ. மகிழ்ச்சியான வாழ்த்துகள் சகோ!" இப்படி ஏகப்பட்ட வாழ்த்துகள் பனங்காய் பணியாரம் உண்டதற்கு!




"அந்த ரூபாய் நோட்டு தொலைந்து விட்டது என்று தான் நினைத்தேன். ஆனால் வொஷிங் மெசினில் இருந்து உடுப்பை எடுத்துக்காயப்போட்ட சமயத்தில் தான் கவனித்தேன். அது ஜீன்ஸ் பக்கெட்டுக்குள் இருந்ததை...!" எனப் பதிவிட்டதற்கு, "வாழ்த்துகள் அண்ணா, வாழ்த்துகள் சகோதரம்" எனப் பல பல பதிவுகள்.

"ஒரு வழியாக பல் மருத்துவரிடம் அப்பொயிண்ட்மெண்ட் வாங்கி, இன்று மூன்று பற்களையும் கட்டி விட்டேன். இனி யாரும் 'ஓட்டை வாயன்' என்று என்னைக் கூப்பிட முடியாது" எனப் பதிவிட்டதற்கு

"வாழ்த்துகள் சகோ.... வாழ்த்துகள் நண்பா, வாழ்த்துகள் அவனே, இவனே...!"

"எங்கள் வீட்டுத் தோட்டத்தில் கத்தரிக்காய் காய்த்துள்ளது!"

"வாழ்த்துகள், வாழ்த்துகள் சகோதரா...!"

"என் செல்ல நாயான டைகர் இன்று நாலு குட்டி போட்டுள்ளது!" "வாழ்த்துகள் சகோதரா...!'

"வேலை முடிந்து வீடு வந்து பார்த்தால் மனைவி மாற்றாள். ஒருவனுடன் ...!"

" இனிய வாழ்த்துகள் சகோ...!"

பார்த்திபனின் 'பழைய செருப்பு' படம் பார்த்தேன்... பிரமாதம்!"

"உங்களுக்கும் செருப்புக்கும் வாழ்த்துகள்"

"பிச்சை எடுத்தாக வேண்டிய நிலைக்கு வந்து விட்டேன்...!"

"சிறப்பான வாழ்த்துகள் நண்பரே...!"

இவ்வாறே ஒரு பெரிய பட்டியல் இட்டுள்ளார் இலண்டன் **ரஜீவன் ராமலிங்கம்.**

"அவசியமான விடயங்களுக்கு வாழ்த்துவதில் தவறில்லை. ஆனால் தொட்டதற்கெல்லாம் வாழ்த்தினால், அந்த வாழ்த்துக்கே அர்த்தமும் மரியாதையும் இல்லாமல் போய் விடுகிறது" எனப் பதிவுக்கு முத்தாய்ப்பும் இட்டுள்ளார்.

என்ன சொல்கிறீர்கள் அபிமானிகளே?

"வாழ்த்துகள்" என்று தப்பித்தவறியும் சொல்லி விடாதீர்கள்!

## இனிப்பு 1

வருகிற டிச. 04 ஆம் திகதி சனிக்கிழமை கொழும்பு வாழ் இலக்கிய நெஞ்சங்களுக்கு ஒரு வரலாற்று நிகழ்வு காத்திருக்கிறது. அதனை நேரில் பார்த்துப் பரவசப்படக்கூடிய பாக்கியம் குறைந்த எவு தொகையினருக்கே.

இந்தச் சாமான்யனின் இளமைக் கால இருப்பிடமான கொழும்பு 10, மொஹிதின் மஸ்ஜித் வீதி, (பழைய பிச்சர்ஸ் லேனே)க்கு நேர் எதிர்ப்புறம் பஞ்சிகாவத்தைப் பாதையில் **அல் ஹிதாயாதேசியக் கல்லூரி பஹார்தீன் நினைவரங்கத்தில்** அது நடக்க உள்ளது.

ஏற்கெனவே மூன்று ஆண்டுகளுக்கு முன் (11.11.2018) இலங்கை முஸ்லிம் பெண் எழுத்தாளர்கள் 140 பேரை, 460 பக்கங்களில் **'மின்னும் தாரகை'** களாகப் பளிச்சிடச் செய்து அதி முக்கிய வரலாற்று ஏடொன்றைப் பதித்து வழங்கிய சகோதரி **நூருல் அயின் நஜ்முல் ஹுசைன்** மீண்டும் அதே நிகழ்விடத்தில் மற்றுமொரு வரலாற்று ஏட்டைத் திறந்து வைக்கிறார்.

இப்பொழுதும் அதே "மின்னும் தாரகைகள்" தான்! ஆனால் அப்படியே பெரும்பான்மையினர் மொழியில் மாற்றம்! பெயரிலும் வித்தியாசம் இல்லை.

**"திதுலன தாரகா"**

உச்சரிக்கும் பொழுதே ஒரு 'தில்'!

அந்த டிச. 04ஆம் திகதிக்குப் பிறகு, ஆளுமை மிகு தமிழ் மொழி பெண் முஸ்லிம் எழுத்தாளர்களைப் பெரும்பான்மைச் சமூக இலக்கிய வட்டத்தினர் நன்றாக அடையாளங்கண்டு கொள்வார்கள். ஒரு நல்லுறவுப் பாலம் உருவாகிவிடும்.

இந்த வெளியீட்டு வைபவத்தில் மற்றுமொரு புதுமைப் புரட்சி நிகழவும் போகிறது.

இன்றையத் திகதி வரையில் ஒரு நூலின் முதல் பிரதியைப் 'பொற்கிழி' வழங்கிப் பெற்றுக் கொள்வதை **ஆடவர்களே நிறைவேற்றி** புரவலர்கள் பட்டத்தைத் தாங்களே சூட்டிக் கொண்டு வந்த நிலைக்கு ஓர் ஆப்பு!



புரவலர் மதினா உம்மா

**தேனகமாம் கிழக்கின் அக்கரைப் பற்று, இயற்கையின் வெள்ள ஓட்டத்துடன், இலக்கிய வெள்ளோட்டமும் மிகுந்திருப்பது. அங்கிருந்து ஒரு 'மதீனா உம்மா' மிகவும் பாதுகாப்பாக கொழும்பு 10க்கு வந்து சேரப் போகிறார் சனிக்கிழமை காலை 10 மணிக்கு! சம்பிரதாய நிகழ்வுகளின் பின் "திதுலன தாரகா" வின் முதல் (நட்சத்திர) பிரதியை அன்னவர் கரங்களில் ஏந்துகிறார்.**

**இந்த வகையில் வரலாற்றில் முதல் தடவையாக 'ஒரு பெண் புரவலர்' அறிமுகம்! அது அவன் ஒருவன் எண்ணப்படியும் திட்டப்படியும்.**

**மதினா உம்மா மேலும் பலரது நூல்களுக்கு புரவலராகத் திகழ வாழ்த்திப் பாராட்டுகிறேன்.**

அதே நேரம், தமிழில் தான் எழுதிய நூலைத் தானே சிங்களத்தில் மொழியாக்கம் செய்து அதை ஒரு தமிழ்ப்பிரதேசப் பெண்மணியைக் கொண்டு முதல் பிரதி பெற வைக்கும் கண்டி உடுதெனியக் கிராமத்துப் பெண்ணரசி நூறுல் அய்ன் காலமெல்லாம் இலக்கிய வட்டத்தில் பேசப்படுகிறவராக ஆகி விட்டார்.புகழ் இறைவனுக்கே!

அவரையும் பாராட்டி, வாழ்த்தி மகிழும் இந்த 'மூத்த பேனை, அவரே தமிழ்ப் பெண் எழுத்தாளர்களையும் சிங்கள இலக்கிய நெஞ்சங்கள் மத்தியில் தாரகைகளாக ஜொலிக்கச் செய்ய வேண்டும் எனக் கோரிக்கை மனு சமர்ப்பிக்கிறது.

## இனிப்பு 2

இந்த இனிப்பும் நூல் தேட்டம் ஒன்றைப் பற்றியது தான்.


விவரம் தெரிவிக்க முன், கிழக்குத் தேனகத்தில் தேனாக இனிக்கும் மனிதர் **'செங்கதிர்' ஆசிரியர்செங்கதிரோன் த. கோபாலகிருஷ்ணனின்** கருத்தொன்றை வழங்கி விடுகிறேன்!

"புதுக்கவிதை" எனும் போக்கு வந்தபின் மழைக்கு முளைத்த காளான் களைப் போன்று பெருகிய 'புதுக்கவிதைப் புலவர்'களினால் புற்றீசல்கள் போல நாளொன்றும் பொழுதொன்றுமாய் புறப்படும் புதுக்கவிதைத் தொகுதிகளின் குப்பை மேட்டிலே "மறக்க மறந்த மனிதம்" எனும் கவிதை நூல் குண்டுமணியாகும்!"

இப்படி அவர் குறிப்பிடுகிற **ஏறாவூர் தாஹிர்** என்பாரின் **'மறக்க மறந்த மனிதம்'** என் கையிலும் உள்ளது. என்றாலும் அதில் உள்ள அற்புதமான இனிப்பை அடுத்த கிழமை அளிப்பதாக இருக்கிறேன்.

இங்கே வேறொன்று, சிறுகதைத் தொகுப்பு ஒன்றின் சலம்பல்.

800 பக்கங்களைக் கொண்ட 'பென்னாம் பெரிய' சிறுகதைத் தொகுப்பு நூல் அதே தேனகத்திலிருந்து மிகமிகச் சமீபத்தில்!




**"கிழக்கின் 100 சிறுகதைகள்"** எனச் சிங்காரமான தலைப்பில் கிழக்கு மாகாணப் பண்பாட்டு அலுவல்கள் திணைக்களம் கல்முனை மூத்த எழுத்தாளர் **உமாவரதராஜன்** உறுதுணையுடன் திணைக்களப் பணிப்பாளர் **ச. நவநீதன்** இலக்கிய சஞ்சாரிகளுக்குச் சமர்ப்பித்துள்ளார்.

விழாவொன்றும், கடந்த வாரத்தில் திருகோணமலை குளக்கோட்டன் ஒன்று கூடல் மண்டபத்தில் இடம் பெற்றுள்ளது ஓசையின்றி!

ஏன் இப்படிப்பதிகிறேன் என்றால்திணைக்களம் அலட்டிக் கொள்ளாமல் ஆரவாரமில்லாமல் ஊடகச் செய்திகளும் அவ்வளவாக இல்லாமல், எழுத்தாளர்கள், அவர்களது குடும்பத்தார், குறிப்பிட்ட சில இலக்கிய ஆர்வலர்கள் என மட்டுப்படுத்தப்பட்ட அளவில் ஒன்றை அற்புதமாக நடத்தி இருக்கிறது. கொரோனாவுக்கு மதிப்பளித்து.

எனக்கு அளவிடமுடியாத ஆனந்தம் ஏற்பட்டது ஒன்றில்!

அந்த நிகழ்வில் கவிதைத் தொகுப்பு எதனையும் திணைக்களம் வெளியிட்டு வைக்காதது.

இனியவர் **'செங்கதிரோன்',** திணைக்களத்திலும் தன் கருத்தைத் தெளித்திருப்பாரோ என்னவோ, 'மழைக்கு முளைத்த காளான்களைப் போன்று பெருகியுள்ள புதுக்கவிதைப் புலவர்களின்' நூல் எதனையும் ஏறெடுத்துப் பார்க்காமல் போனது!

நமது சிறுகதைகள் இனி துளிர்த்தெழும்.

எதிர்காலத்தில் படைப்பாளிகள் பெருகுவர் விசேடமாக கிழக்கில்!




# இன்ஸ் பெக்டரின் சந்தேகம் கரைகிறது மர்மத்திரை இன்னும் நீண்டு விரிகிறது!

"அவர் நினைப்பதைப் போல் அவர்கள் இருவரும் தங்கள் விருப்பத்திற்கு பாய்ந்து தற்கொலை செய்து கொள்ளவில்லை . இது கொலைதான் என்பது முடிவாகிறது. அதாவது யாராவது இவர்கள் இருவரையைம் அச்சுறுத்தி இந்தக் காரியத்தைச் செய்யச் சொல்லியிருக்கவேண்டும். அப்படியும் இல்லையென்றால் இவர்கள் இருவரையும் யாராவது இந்த இடத்திற்கு அழைத்துச் சென்று அவர்களைப் பிடித்து பாதாளத்தில் தள்ளியிருக்க வேண்டும்! ஆனால் அப்படி தள்ளி விடுவதற்கு வாய்ப்பில்லை. ஏனென்றால் இவர்கள் இருவரும் நன்றாக படித்த புத்திசாலிகள்!"

"ஆமாம்... அதென்றால் உண்மை தான்!" என்றான் சஞ்சை.

நண்பர்கள் மூவரிடமிருந்தும் கிடைத்த தகவல்களை எல்லாம்,

மனனம் செய்து வைத்துக் கொண்டார், இன்ஸ்பெக்டர் ராகவன்.

அடுத்த விசாரணைக்காக, தீபிகாவின் தோழிகளைச் சந்திப்பதற்காக பாணந்துறைக்குச் சென்றார் இன்ஸ்பெக்டர்.

அவர்கள் மூவருடைய பெயர்களையும் பிரதீப்பிடமிருந்து இன்ஸ்பெக்டர் கேட்டுத் தெரிந்து கொண்டார்.

பிரியா,

சந்திரா,

மல்லிகா இது தான் அவர்கள் மூன்று பெயர்களுடைய பெயராகும்.

இன்ஸ்பெக்டர் அங்கே போகும் போது மாலையாகிவிட்டது.

பெண்கள் விடுதிக்கு தனியாக போக முடியாது என்பதால்,

அந்தப்பகுதி பொலிஸ் நிலையத்திற்குச் சென்று விபரத்தைக் கூறி,

அங்கிருந்த இரண்டு பெண் பொலிஸ் அதிகாரிகளையும் அழைத்துக் கொண்டு அங்கே சென்றார்.

திடீரென்று பொலிஸ் அதிகாரிகள் விடுதிற்குள்ளே வந்ததும்,

அங்கே இருந்த பெண்கள் எல்லோரும் பரபரப்படைந்தார்கள்.

அவர்கள் எல்லோரையும் ஓர் இடத்தில் கூடச் செய்த பெண்பொலிஸ் அதிகாரி,

எச்சரிக்கும் தோரணையில் பேசினார்.

'பிரியா... சந்திரா... மல்லிகா இந்த பெயர் உள்ள மூன்று பேர் மட்டும் முன்னால் வாருங்கள் உங்களிடம் விசாரணை ஒன்று செய்ய இருக்கிறது!'

பெயர் குறிப்பிட்ட அந்த மூன்று பெண்களும்,

ஒருர் முகத்தை ஒருவர் பார்த்தபடியே,

முன்னால் வந்தார்கள்.

"தீபிகா, தீபனின் திடீர் மரணம் தொடர்பாக எங்களுக்கு சில தகவல்கள் தெரிந்து கொள்ள வேண்டியிருக்கிறது. அதனால் உங்கள் ஒபீஸ் ரூமுக்கு வாருங்கள்!" என்று சொல்லிவிட்டு,

முன்னால் நடந்தார் இன்ஸ்பெக்டர் ராகவன்.

ஆபிஸ் அறைக்குள் வந்ததும், தனது விசாரணையை ஆரம்பித்தார் இன்ஸ்பெக்டர்.

"நீங்கள் மூவருமே தீபிகாவின் தோழிகள் தானே....?"

ஆ.... ஆமாம்... இன்ஸ்பெக்டர் நாங்கள் நால்வரும் இணைபிரியா தோழிகள்!" என்று சிறிது தடுமாற்றத்துடன் சொன்னாள் பிரியா என்ற தோழி.

"அப்படின்னா கேம்பசில் படிக்கும் பிரதீப், சஞ்சை, ஜீவகன் இவர்கள் மூவரும் உங்கள் நண்பர்களா...?"

இன்ஸ்பெக்டர் இப்படிக் கேட்டதும்,

மூவரும் பதில் எதுவும் சொல்லாமல்,

ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

தீபிகா – தீபன் தற்கொலை சம்பந்தமான உங்களுடைய தனிப்பட்ட கருத்துக்கள் எங்களுக்குத் தேவை இல்லை. ஆனாலும் இந்த மரணம் தொடர்பாக நாம் விசாரணை நடத்துவோம். அதனால் இந்த மரணம் சம்பந்தமாக உங்களுக்குத் தெரிந்த தகவல்களை பயப்படாமல் எங்களிடம் சொல்லுங்கள். நீங்கள் சொல்லும் ரகசியத் தகவல்கள் காப்பாற்றப்படும்.

இன்ஸ் பெக்டரின் இதமான இந்த வார்த்தைகளினால்,

தோழிகள் மூவரும்,

அச்சம் நீங்கி,

மனத்திருப்தி அடைந்தனர்,

அதற்பிறகு,

அவர்கள் மூவரும் இன்ஸ்பெக்டர் கேட்ட கேள்விகளுக்குப் பதில் சொன்னார்கள்.

"பிரதீப் சஞ்சை, ஜீவகன் இவர்கள் மூவரும் எங்களுக்கு மிக நெருக்கமான நண்பர்கள். அதேபோல், தீபிகாவிற்கும் தீபனுக்கும் அவர்கள் நண்பர்கள் தான்.

"நீங்கள் ஆறுபேரும் லீவு நாட்களில் ஒன்றாகத்தான் சுற்றுப் பயணம் போவீர்களா...?"

"ஆமாம் இன்ஸ்பெக்டர்... ஆனால் நாங்கள் போவது வன்டே டிரிப் மட்டும் தான். நாட்கணக்கில் போய் எல்லாம் தங்கி இருக்க மாட்டோம்!"

"சமீபத்தில் நீங்கள் எல்லோரும் வட்டவளவளைவில் இருக்கும் பாதாளத்துக்கும் அதன் அருகில் இருக்கும் மலைமீது ஏறுவதற்கும் போனீர்கள் தானே...?"

"ஆமாம் இன்ஸ்பெக்டர் ஒரு மாத்திற்கு முன்பு நாங்கள் எட்டு பேரும் வட்டவளைக்கு வன்டே டிரிப் ஒன்று போய் வந்தோம்!""எப்படி போனீங்க?"

"டிரெயினில்தான் போனோம்!"

"எப்போது இந்த டிரிப் போனீங்க...?"

"ம் சரியாக ஞாபகம் இல்லை இன்ஸ்பெக்டர்...!" தலையைச் சொறிந்தபடியே சொன்னாள், சந்திரா,

"ம்... எனக்கு ஞாபகம் இருக்கிறது. இன்ஸ்பெக்டர் நாங்கள் இந்த மாதம் ஆறாம் திகதிதான் அங்கு போய் வந்தோம் இப்படிச் சொன்னது பிரியா.

"தீபிகாவும் தீபனும் அன்று மகிழ்ச்சியாகவா இருந்தார்கள்.?"

"ஆமாம் இன்ஸ்பெக்டர்... அவர்கள் இருவரும் மகிழ்ச்சியாக இருந்தாலும் மனத்தளவில் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டுதான் இருந்தார்கள்!"

"ஏன் அப்படி இருந்தார்கள்?"

"அது ஒரு பெரிய கதை இன்ஸ்பெக்டர்!"

"அந்த பெரிய கதைகளைப் பற்றி நான் கொஞ்சம் தெரிந்து கொள்ள வேண்டும்!" என்று சொன்ன இன்ஸ்பெக்டர்,

செல்போனில் எவருடனோ பேசுவதைப் போல் பாவனை செய்து,

தனது போனில் அவர்கள் பேசுவதை பதிவு செய்வதற்கு வேண்டிய ஏற்பாட்டைச் செய்தார்.

"தீபனும் தீபாவும் பள்ளி செல்லும் நாட்களில் இருந்தே காதலித்து வந்தார்கள். இன்னும் சென்னால் அவர்கள் இருவரும் சொந்தக்காரர்கள் ஆனாலும் காணி பங்கீட்டு விஷயத்தில் ஏற்பட்ட தகராறினால் கீரியும் பாம்பும் போல் பகைவர்களாகி விட்டார்கள். தீபிகா எப்போதுமே சொல்லிவந்தது என்ன வென்றால், எப்போதும் தங்கள் பெற்றோரின் சம்மதத்துடன் தீபனைத் திருமணம் செய்து கொள்ள முடியாது என்பது தான். அதே கதையைத்தான் தீபனும் எங்களிடம் சொன்னான்!"

"ம்... பிறகு என்ன நடந்தது?"

"சமீப நாட்களாக அவர்கள் இருவரும் வேறு ஒரு கதையை சொல்ல ஆரம்பித்திருந்தார்கள்!

"அது என்ன கதை?"

"எங்கள் காதல் நிறைவேறா விட்டால் நாங்கள் இருவரும் ஒன்றாகவே தற்கொலை செய்து கொள்வோம் என்பது தான். ஆனாலும் அவர்கள் கேலிக்குத்தான் அப்படி சொல்லுகிறார்கள் என்று நினைத்தோம். ஆனாலும் நாங்கள் யாருமே எதிர்பார்க்காத விதத்தில் அது உண்மையாகி விட்டது!"



"வீட்டில் ஏற்பட்ட எதிர்ப்பினால் தாங்கள் தனியாகப் போய் திருமணம் செய்து கொள்ளப்போவதாக எதுவும் சொன்னார்களா?"

"தீபன்தான் அப்படி ஒரு கருத்தைச் சொன்னான். ஆனால் தீபிகா அப்படிச் சொல்லவில்லை. பெற்றோர்களின் சம்மதத்துடனேயே தீபனை திருமணம் செய்து கொள்வதாகத் தான் அவள் அடிக்கடி சொல்லிக் கொண்டிருந்தாள்!"

"அதெப்படி முடியும்.... இரு குடும்பத்தாரும் பாம்பும் கீரியும் போல் வைரம் கொண்டிருந்தார்கள் பிரியா தானே இப்படி சொன்னாள்!"

"உண்மைதான் இன்ஸ்பெக்டர் அதனால்தான் நாங்கள் இருவரும் சேர்ந்தே தற்கொலை செய்து கொள்ளப்போகிறோம் என்றும் தீபிகா சொல்லிக்கொண்டிருந்தாள்!"

"தீபிகாவை விரும்பிய வேறு எவராவது கெம்பசில் இருந்தார்களா?"

"தீபிகா மிகவும் அழகானவள் என்பதினால் கெம்பசில் இரண்டு மூன்று பேர் அவளிடம் விருப்பத்தைக் கேட்டார்கள். ஆனாலும் தீபன் தன்னை உயிராகக் காதலிப்பதினால் அவள் அதற்குச் சம்மதிக்கவில்லை.

"அப்பீடீன்னா தீபன் இல்லாவிட்டார் விரும்பி இருப்பாள் என்று எடுத்துக் கொள்ளலாமா கேட்டு விட்டு,

பிரியாவின் முகத்தையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தார் இன்ஸ்பெக்டர்.

"ம்... அப்படியும் இருந்திருக்கலாம் இன்ஸ் பெக்டர்!"

பிரியா இப்படிச் சொன்னதும், இன்ஸ்பெக்டர் அவளை வியப்புடன் பார்த்தார்.

**(இளமை வளரும்)**



# யாவரும் கேளீர்

## பல்சுவை இலக்கியத் திரட்டு 67

தமிழறிஞர், டாக்டர் தி.ஞானசேகரன்

**('யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்பது கணியன் பூங்குன்றனது வரிகள். இதில் கேளிர் என்பது உறவினர் எனப் பொருள்படும். இந்த உறவினருக்கு நான் தரும் பத்தி யாவரும் கேளீர்|)**

### 2021ஆம் ஆண்டுக்கான சாகித்திய விருது – எழுத்தாளர் மு. சிவலிங்கம் பெறுகிறார்

இலங்கை அரசின் 2021ஆம் ஆண்டுக்கான உயர் விருதான சாகித்தியரத்னா விருதினை பிரபல எழுத்தாளர் மு. சிவலிங்கம் பெறுகிறார்.

ஐந்து தசாப்த காலமாக எழுதிவரும் இவர,; கலை இலக்கயம் கல்வி, நாடகம், சினிமா, தொழிற்சங்கம், அரசியல் எனப் பலதுறைகளில் தடம் பதித்தவர்.



தலவாக்கலையைச் சேர்ந்த பெரியமல்லிகைப்பூ தோட்டத்தில் முத்து முருகன், அழகன் கண்ணம்மா தம்பதியின் மகனாக 26.08.1946 அன்று பிறந்த சிவலிங்கம் அவர்களின் முதற் சிறுகதை 'சுமைதாங்கி| வீரகேசரியில் பிரசுரமாகியது.

ஆரம்பத்தில் வீரகேசரி தேசியப் பத்திரிகையில் பத்திரிகையாளனாக செயற்பட்ட சிவலிங்கம், பின்பு பாடசாலை ஆசிரியராகவும் பணி புரிந்துள்ளார். பின்னர் அரசியல், தொழிற்சங்கத் துறையில் தன்னை வளர்த்துக் கொண்டவர்.

ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் தொழிற்சங்கத்தின் வெளியீடான 'ஜனநாயக தொழிலாளி'| பத்திரிகையின் ஆசிரியராகப் பணிபுரிந்த சிவலிங்கம் சோஸலிஸ நாடான பல்கேரியா நாட்டில் 'ஜோர்ஜ் திமித்ரவ்| சர்வகலாசாலையில் தொழிற்சங்க கல்வி பயின்று வந்தவர். இப் பயிற்சியின்போது சோஸலிஸ நாடுகளான சோவியத் ருஷ்யா, ருமேனியா, செக்கோஸ்லோவேக்கியா ஆகிய நாடுகளுக்கும் தொழிற்சங்கங்களின் அழைப்பினை ஏற்று சென்று வந்துள்ளார்.

வி.பி. கணேசனின் 'கணேஷ் பிலிம்ஸ்' தயாரித்த 'புதிய காற்று'; படத்தில் சிவலிங்கம் உதவி நெறியாளராகப் பணிபுரிந்து பிரதான பாத்திரம் ஏற்று நடித்துள்ளார்.

சிவலிங்கம் எழுதி வெளியிட்ட முதல் படைப்பு நூல் 'மலைகளின் மக்கள்' என்ற சிறுகதைத் தொகுப்பாகும். இச்சிறுகதைத் தொகுப்பு 1992ஆம் ஆண்டுக்கான, சிறந்த சிறுகதைப் படைப்புக்கான அரச சாகித்திய விருதைப் பெற்றது. அத்தோடு விபவி கலாசார மையத்தின் விருதையும் அதே ஆண்டில் பெற்றது.

ஒரு விதைநெல் என்ற சிறுகதைத் தொகுதி 2004இல் தமிழ்நாடு மணிமேகலை பிரசுரமாக வெளிவந்து பலரது பாராட்டுக்களைப் பெற்றது.

வெந்து தணிந்தது காலம் சிறுகதைத் தொகுதி 2013இல் வெளியாகியது. இத்தொகுதி அவ்வாண்டுக்கான அரச சாகித்திய விருது பெற்றது.

ஒப்பாரிக் கோச்சி என்ற சிறுகதைத் தொகுதி 2010இல் வெளிவந்தது. இச்சிறுகதைத் தொகுதி அவ்வாண்டு அரச சாகித்திய விருதினையும் கனகசெந்திநாதன் விருதினையும் பெற்றது.

'பஞ்சம் பிழைக்கவந்த சீமை' என்ற வரலாற்று நாவல் 2015இல் வெளிவந்தது. இந்நாவல் தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் கரிகாற் சோழன் விருதினைப் பெற்ற சிறப்பினையுடையது. மற்றும் காலி பெயார்வே தேசிய இலக்கிய மன்றத்தின் சிறந்த வரலாற்று நூலுக்கான விருதாக ஐந்து லட்சம் ருபாய் பண முடிப்பை பெற்றது.

மலையக மக்களின் பிரச்சினைகளை வெளிப்படுத்தும் இவரது இலக்கியப் படைப்புகளுக்கு அப்பால் 'உயிர்' என்ற நாவல் சர்வதேச மருத்துவ உலகம் சார்ந்த பிரச்சினைகளைப் பேசுகிறது.

*Born to Labour* என்ற நூலை மிகச் சிறப்பாக மொழிபெயர்த்து 'தேயிலை தேசம்' என்ற பெயரில் தமிழாக்கம் செய்துள்ளார். 2004ஆம் ஆண்டுக்கான சிறந்த மொழிபெயர்ப்பு நூலுக்கான அரச சாகித்திய விருதை இந்நூல் பெற்றது.

மலையகத் தமிழர் நாட்டுப்புறப்பாடல்கள் (2007) இவரது ஆய்வு நூலாகும்.

இவர் சிறுவர் பண்ணைகள் என்ற நூலை 2018இல் வெளியிட்டுள்ளார். மு.சிவலிங்கம் சிறந்த மேடைப் பேச்சாளர் ஆவார்.

தமிழியல் விருது, கலாபூஷணம் விருது என்பன இவரது இலக்கியப்பணிக்காகப் பெற்ற விருதுகளாகும்;. இவருக்கு எமது வாழ்த்துக்கள்.

### எஸ். பொன்னுத்துரை முஸ்லிம்களுடனான உறவும் ஊடாட்டமும் நூல்

எஸ். பொன்னுத்துரை முஸ்லிம்களுடனான உறவும் ஊடாட்டமும் என்ற நூலை எழுத்தாளர் ஏ. பீர் முகம்மது





எழுதியுள்ளார். இந்நூலாசிரியர் ஏ. பீர்முகம்மது கவிதை, சிறுகதை, கட்டுரை, திறன்நோக்கு, கவியரங்கத் தலைமை, ஆய்வு எனப் பல தளங்களில் இயங்கி வருபவர். இவர் 1971இல் அரசாங்க ஆசிரியர் நியமனம் பெற்று பின்னர் பாடசாலை முதல்வராகி பிரதிக்கல்விப் பணிப்பாளராக உயர்ந்து ஓய்வு பெற்றவர.;

மகாகவி பாரதியாரின் மரணம், சுவாமி விபுலானந்தரின் மொழிப்புலமை, எஸ். பொன்னுத் துரையின் சிறுகதை மேதா விலாசம், இலங்கையின் தேசியகீத மொழிபெயர்ப்பு மற்றும் அறபுத் தமிழ் ஆகிய தொடர்பிலான இவரது ஆய்வுக்கட்டுரைகள் முக்கியத்துவம் பெற்றவை. இவர் இதுவரை ஏழு நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார. இவரது இலக்கியப்பணிகளைப் பாராட்டி சர்வோதய தேசிய விருது (2006) கலாபூஷணம் விருது (2011), முதலமைச்சர்; விருது (2011) சுவதம் விருது (2017) ஆகிய விருதுகள் வழங்கப்பட்டுள்ளன.

எஸ்; பொ. எழுதிய சுயசரிதை நூலாகிய வரலாற்றில் வாழ்தல் முக்கிய ஆதார நூலாக இந்நூலி பயன்படுத்தப்பட்டுள்ளது. அத்தோடு எஸ் பொ. எழுதிய நீலாவணன் நினைவுகள், இஸ்லாமும் தமிழும் ஆகிய நூல்கள் துணைச் சான்றுகளாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

இந்நூலுக்கு முன்னுரை எழுதிய பேராசிரியர் செ. யோகராசா, 'இந்நூலின் தலைப்பு மட்டுமன்றி, அத்தியாயப் பகுப்பு முறையிலும் அழகுதமிழ் துள்ளிவிளையாடுகிறது. பிறப்பும் திறப்பும் தொடக்கம் உறைப்பும் முடிப்பும் வரையில் அமைந்துள்ள பதினேழு தலைப்புகளும் இந்நூலாசிரியரது ஆக்கபூர்வமான இலக்கிய நயத்திற்கு ஆதாரமாக அமைந்திருப்பது கண்கூடு. எஸ் பொ. மீது சுமத்தப்பட்டுள்ள எழுத்துலக வசைகள் சிலவற்றினை அகற்றும் பகுதிகளும் இந்நூலில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. தவிர ஈழத்து விமர்சகர்கள் ஒரு சாரரினால் இருட்டடிப்புச் செய்யப்பட்ட இளம்பிறை ரஹ்மானின இலக்கியச் செயற்பாடுகள் எஸ்.பொ. ஊடாக வெளிச்சத்துக்கு வந்துள்ளன.' என விதந்து குறிப்பிட்டுள்ளார. சிறந்த மொழிநடையில் அமைந்த இந்த நூலின் ஆசிரியர் பாராட்டுக்குரியவர் 137 பக்கங்களைக் கொண்ட இந்த நூல் பேஜஸ் புத்தக இல்லம், 117, பட்டினப் பள்ளி வீதி, அக்கரைப்பற்று 02 என்ற முகவரியிலிருந்து வெளியிடப்பட்டுள்ளது. நூலின் விலை ரூபா 350/

### உலகிலேயே அதிபழமைவாய்ந்த மரத்தினால் கட்டப்பட்ட பாலம்

சுவிட்சர்லாந்து நாட்டின் மத்தியில் லூசேர்ண் என்ற நகரம் இருக்கிறது. இந்த நகரம் சுற்றுலாப் பயணிகளைக் கவர்ந்திழுக்கும் இடமாகவும் திகழ்கிறது. லூசேர்ண் நகரின் முக்கிய காட்சியாக சப்பல்பாலம் *Born to Labour* அமைந்திருக்கிறது. இந்தப் பாலத்தின் அருகே செயின்ற் பீற்றர்ஸ் சப்பல் (St. Peters Chapel) என்ற கிறிஸ்தவ தேவாலயம் இருப்பதால் இந்தப் பாலத்துக்கும் சப்பல்பாலம் என்ற பெயர் அமைந்து விட்டது. இந்தப் பாலம் லூசேர்ண் பழைய நகரையும் புதிய நகரையும் தொடுக்கும் வகையில் நதியின் குறுக்காகக் கட்டப்பட்டுள்ளது. மரத்தினால் கட்டப்பட்ட இந்தப்பாலம் உலகிலேயே அதி பழமைவாய்ந்த பாலமாகும். 560 அடி நீளமான இந்தப் பாலத்துக்கு மேலே நெடுகிலும் முக்கோண வடிவிலமைந்த ஆதாரக் கட்டுமானத்துடன் (வுசரளள) கூடிய கூரை இருக்கிறது. 1333ஆம் ஆண்டு கட்டப்பட்ட இந்தப் பாலத்தின் கூரை வளைகளில் 17ஆம் ஆண்டுக்குரிய 100க்கும் அதிகமான ஓவியங்கள் உள்ளன. அவற்றில் பழையநகரின் சரித்திரம், கலை, பண்பாடு, நாகரிகம் முதலியவை வரையப்பட்டுள்ளன. இந்தப்பாலம்



1993ஆம் ஆண்டு ஆகஸ்ட் முதலாம் திகதி தீப்பற்றி எரிந்ததாகவும் அதனால் பாலத்தின் மூன்றில் இரண்டு பகுதி சேதமடைந்ததாகவும் அறியமுடிந்தது. அப்போது ஓவியங்களில் பலவும் தீக்கிரையாகிவிட்டனவாம். மீண்டும் பாலம் புதுப்பிக்கப்பட்டு 1994 முதல் பாவனைக்கு விடப்பட்டுள்ளது.

பாலத்தில் நடந்து சென்றால், நதியின் வலது பக்கக் கரையோரமாக லூசேர்ண் பழையநகரை அடையலாம். அங்கு தற்போதும் நாட்டின் பழங்குடியினரது வீடுகள் இருப்பதைக் காணமுடிகிறது. மரத்தினாலும் கற்களை இணைத்தும் கட்டப்பட்ட அந்த வீடுகள் பலதரப்பட்ட வர்ணங்கள் பூசப்பட்டுக் காணப்படுகின்றன. அவற்றின் அருகே 1350இல் கட்டப்பட்ட பழைய நகரின் சுவர் அமைந்திருக்கிறது. அங்குள்ள கட்டிடம் ஒன்று 16021606 காலப்பகுதியில் கட்டப்பட்டது. இது அந்த நகரின் பழைய நகரமண்டபமாக இருந்ததாம். இந்தப் பழைய நகரிலேதான், செயின்ற் பீற்றஸ் சப்பல் என்ற சிறிய தேவாலயமும் அமைந்துள்ளது. 1178ஆம் ஆண்டில் கட்டப்பட்ட இந்தத் தேவாலயம் 18ஆம் நூற்றாண்டில் புனருத்தாரணம் செய்யப்பட்டது எனவும் அறிய முடிந்தது. இங்குள்ள முதலாவது பெரிய தேவாலம் 1667இல் கட்டப்பட்டதாம். இந்தப்பழைய நகரில் ஒடுக்கமான சாலைகள் பல காணப்படுகின்றன.

சுவிட்சர்லாந்தின் மிகப் பிரபலமான சுற்றுலாத் தலமாகத் திகழும் மரத்தினால் அமைக்கப்பட்ட இந்தப் பாலம் முன்னோர்களின் மூலதனத்தில் வருங்காலத் தலைமுறைக்கும் சுற்றுலாவருமானம் தரும் ஒரு பொருளாதாரப் பாலமாகவும்; திகழ்கிறது.



(இனி அடுத்த இதழில்)





# படித்ததும் பகர்வதும் 72



சிரேஷ்ட சட்டத்தரணி, கலாபூஷணம் ரஷீத் எம் இம்தியாஸ்

## நல்லதை சொல்கிறோம்

### சூழல் சுத்தம் பேணுவோம்!


தமது சூழலை சுத்தமாக வைத்திருப்பது எல்லோர்மீதுமுள்ள தலையாய கடமையாகும். இவ்விடயத்தில் ஒவ்வொருவரும் பொறுப்புணர்ந்து நடந்து கொள்ள வேண்டியது அவசியம்.

தமது வீடுகளிலும், தொழில் செய்யும் இடங்களிலும் சேரும் கழிவுப் பொருட்களை சேகரித்து முறையாக அகற்றுவதற்கு பொருத்தமான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். நகரப்புரங்களிலும், சிறு நகர பிரதேசங்களிலும், சில பிரதேச சபை பகுதிகளிலும் கழிவுப் பொருட்களை சேகரித்து அகற்றும் நடவடிக்கைகள் அவ்வப் பிரதேச உள்ளூராட்சி சபைகள் மூலம் மேற் கொள்ளப்படுகின்றன.

இத்தகைய பகுதிகளில் வசிப்போர் தமது வாழிடங்களிலும், தொழிலிடங்களிலும் சேரும் கழிவுப் பொருட்களை சரியாக, முறையாக சேகரித்து உரிய முறையில் அவற்றை சேகரிப்போரிடம், அல்லது அதற்கென வரும் வாகன ஊழியர்களிடம் கையளித்தல் வேண்டும். இவ்விடயத்தில் பலர் கவனயீனமாக நடந்து கொள்வது பரவலாக அவதானிக்கப்படுகிறது இது கவலைக்குரியது.

தமது சூழலில் கண்ட கண்ட இடங்களில் குப்பைகளை போடு வதும், சேரும் குப்பைகளை அகற்ற நடவடிக்கை எடுக்காது பாரமுகமாக இருப்பதும் கண்டிக்கத்தக்கது. டெங்கு, மலேரியா, வயிற்றோட்டம் உட்பட பல பயங்கர நோய்கள் பரவுவதற்கு சுற்றுப்புறச் சூழல் அசுத்தமாக இருப்பதே காரணம் என சுட்டிக் காட்டப்படுகிறது. குறிப்பாக விட்டு விட்டு மழை பெய்கின்ற காலங்களில் சூழல் அசுத்தமடைவது அதிகரித்து காணப்படுகிறது.

கிராமங்களை விட நகரப் பகுதிகளில் கட்டிடங்கள் மிக நெருக்கமாக அமைந்திருப்பதும், அவற்றில் வாழ்வோரின் எண்ணிக்கை அதிகமாக காணப்படுவதும் இப்பகுதிகளில் குப்பைகள் பெருமளவில் அதிகரிப்பதற்கு காரணமாக உள்ளது எனலாம். இதனால் நகரப் பிரதேச மக்கள் தமது சுற்றுப்புறச் சூழலை எப்போதும் சுத்தமாக வைத்திருப்பதற்கு கூடுதல் முக்கியத்துவம் அளித்தல் வேண்டும்.



பல்வேறு நோய்களிலிருந்து நம்மையும், நமது பிள்ளைகளையும், நம்மோடுவாழும் வயோதிபர்களையும் மற்றவர்களையும் பாதுகாத்துக்கொள்ளவும், நாம் சுகதேகிகளாக வாழ்ந்திடவும் எமது சூழலின் சுத்தம் அதி முக்கியத்துவம் பெறுகிறது. இதனால்தான் 'சுத்தம் சுகம் தரும்' என்று சான்றோர் கூறினர்.

இவற்றை நன்குணர்ந்து, "நோய்களிலிருந்து பாதுகாப்பைப் பெறவும், நலமோடு வாழவும் தாம் வாழும் சூழலை சுத்தமாக வைத்திருக்க வேண்டும்" என்பதை நம் கருத்தில் ஆழமாக பதித்திடுவோம், அதனை அதிமுக்கிய கடமையாக கொண்டு செயல்பட்டு, நாம் மட்டுமன்றி நம் சூழலில் வாழும் அனைவரும் சுகமாக வாழ வழி செய்வோம்.


## நெஞ்சுக்கு நீதி

**ஒரு கை அறியாது மறு கை கொடுக்கும்**
**ஈகையே தரணியில் தானத்தில் சிறக்கும்**
**வறுமையை விரட்ட வழங்கிடும் தருமம்**
**வறியோர் வாழ்வின் துன்பம் துடைக்கும்**

## புது வரவு

### புத்தம் புதிய சஞ்சிகை 'இலக்கிய வெளி'

இன்றைய நவீன யுகத்தில் தமிழ் மொழியில் காத்திரமான புதிய சஞ்சிகைகள் வெளிவருவது மிக அபூர்வமான விடயமாகும். இணையத்திலும், சமூக வலைத்தளங்களிலும் மக்கள் அதிக நேரத்தை



செலவிடுகின்ற, புத்தகங்கள், சஞ்சிகைகளை கையிலெடுத்து வாசிப்பதில் ஆர்வம் குறைந்திருக்கின்ற இன்றைய காலத்தில் துணிவோடு தமிழ் சஞ்சிகையொன்றை அச்சுப்பதிவாக வெளியிடுவது ஓர் இமாலயச்சாதனை என்றால் மிகையல்ல.

இலக்கிய வட்டத்தில் 'அகில்' என அழைக்கப்படும் அகிலேஸ்வரன் சாம்பசிவம் 'இலக்கிய வெளி' என்ற புதிய சஞ்சிகையை வெளியிட்டு இத்தகைய ஒரு சாதனையை நிலைநாட்டியிருக்கிறார்.

இலக்கிய உலகின் புத்தம் புதிய சஞ்சிகையாக 'இலக்கிய வெளி' வெளிவந்துள்ளது. பொதுவாக மாதாந்த இதழ்களாக அல்லது காலாண்டு இதழ்களாக சஞ்சிகைகள் வெளிவருவது வழக்கமாக இருந்த போதிலும் "இலக்கிய வெளி" ஆறு மாதத்துக்கு ஒன்று என்று வருடம் இரு முறை வெளியாகும் விதத்தில் பிரசுரத்தை ஆரம்பித்துள்ளது.

இலக்கிய வெளியின் முதல் இதழே மிகக் கனதியாக 232 பக்கங்களுடன் வெளியாகி இருப்பது வியப்பை தருகிறது. அத்துடன் முதலாவது இதழே ஒரு சிறப்பு மலராக தி. ஜானகிராமன் நூற்றாண்டு சிறப்பு இதழாக வெளிவந்திருக்கிறது இது தமிழ் சஞ்சிகை வரலாற்றில் ஒரு புதுமையாகவே தோன்றுகிறது. தி. ஜானகிராமனின் நூற்றாண்டில் அவருக்கென, அவரை சிறப்பித்து கௌரவிக்கும் வகையில் மிகச்சிரமம் எடுத்து முதல் இதழையே சிறப்பாக வெளிக்கொணர்ந்துள்ளார் ஆசிரியர்.

தி. ஜானகிராமன் பற்றிய கட்டுரைகள், அவரது ஆக்கங்கள் உட்பட பத்தொன்பது கட்டுரைகள், ஒன்பது சிறுகதைகள், பதினொரு கவிதைகள், ஒரு நேர்காணல் என்பன 'இலக்கிய வெளி'யின் முதல் இதழை அலங்கரிக்கின்றன.

"இலக்கிய வெளி"யை அனைவரும் பணம் கொடுத்து வாங்கி, வாசித்து, மற்றவர்களுக்கும் அது பற்றி எடுத்துரைத்து அதன் நீண்டகால, வெற்றிகரமான இலக்கியப் பயணத்துக்கு பங்களிப்பு செய்யவேண்டியது தமிழ் பேசும் ஒவ்வொருவர் மீதுமுள்ள கடமையாகும்.

சஞ்சிகை: **இலக்கிய வெளி**, ஆசிரியர்: **அகிலேஸ்வரன் சாம்பசிவம்** (அகில்), ஆலோசனைக் குழு: **சு. குணேஸ்வரன்** (இலங்கை), **இரா. செல்வி** (இந்தியா), **கங்காதர்சினி அகிலேஸ்வரன்** (கனடா), தொடர்புகளுக்கு: **+14168226316**

## பொன் மொழி அது பொய்யா மொழி

### இல்லறம் நல்லறமாக

இறைஞானி அஹ்மத் பின் ஹம்பல் தனது மகனின் திருமணத்தின் போது மகனுக்கு கூறிய அறிவுரைகள் இவை:

- ❖ பெண்கள் அன்பை விரும்பக் கூடியவர்கள். எனவே உன் அன்பை நீ அவளுக்கு வெளிப்படுத்த வேண்டும். அன்பை வெளிப்படுத்துவதில் ஒருநாளும் நீ கஞ்சனாக இருக்கக் கூடாது.
- ❖ பெண்கள் கடினமான ஆணை வெறுப்பார்கள். மிருதுவான ஆண்களுக்கு பணிவிடை செய்வார்கள். ஆகவே அவளுடைய அன்பை நீ அடைய வேண்டுமெனில் அவளோடு மிருதுவாக நடந்துகொள்.
- ❖ பெண்கள் கணவனிடம் நல்ல பேச்சையும், அழகான தோற்றத்தையும், உடல், உடை பரிசுத்ததையும், எதிர்பார்ப்பாள். எனவே உன் உடலையும் உடையையும், பேச்சையும், தோற்றத்தையும் அழகாக்கிக் கொள்.
- ❖ உன் வீட்டில் உனது மனைவி அரசியாக ஆள்வதற்கு பார்ப்பாள். அவளை அரசியாக ஆள்வதற்கு விட்டுவிடு. அதன் மூலம் நீ சந்தோஷமாக வாழ்வாய்.
- ❖ பெண்கள் கணவரின் உழைப்பை விரும்புவார்கள்.. எனவே நீ சம்பாதித்து கொடுத்து அவளை நல்ல முறையில் வாழவைக்க வேண்டும். அதே சமயம் உன் குடும்பத்தையும் கவனிக்க வேண்டும். அவளையும் நல்ல முறையில் வாழவைக்க வேண்டும்.
- ❖ பெண்கள் வளைவிலிருந்து படைக்கப்பட்டதே அவளின் அழகின் இரகசியம். வளைந்தவள் என்பதற்காக அவசரப்பட்டு அவளை நேராக்க முயற்சிக்காதே. அவளோடு நீயும் வளைந்து நடந்து சரியாக்கிவிடு.
- ❖ பெண் என்பவள் நீ வாழ்க்கை முழுதும் நன்மைகள் செய்தாலும், 'உன்னிடம் ஒரு நலவையும் காணவில்லையே' என்று சொல்லி விடுவாள். அதற்காக நீ அவளை வெறுத்து விடாதே!
- ❖ பெண் உடலாலும் சிந்தனையாலும் பலகீனமானவள், இறைவனே அவளின் மீதுள்ள கட்டாய கடமைகளில் சில விதிவிலக்குகளை வழங்கியுள்ளான். நீயும் அவளுக்கு உனது கட்டளைகளை இலேசாக்கிக் கொள்.
- ❖ பெண் உன்னிடம் கைதிபோல் வந்தவள். அவளின் மீது நீ இரக்கப்படு இறைவன் உன் மீது இரக்கப்படுவான்.

**இவற்றைக் கடைபிடிக்கும் ஆண்களின் இல்லற வாழ்வு மகிழ்ச்சியாக அமையுமல்லவா?**

## சிந்தனை செய் மனமே

### காட்டிக் கொடுத்த கௌதாரி

சந்தையில் வியாபாரி ஒருவர் பெரிய வலையால் மூடப்பட்ட கூடையில் நிறைய கௌதாரி பறவைகளை வைத்து விற்பனை செய்து கொண்டிருந்தார். பக்கத்தில் ஒரு சிறிய கூடையில் ஒரே ஒரு கௌதாரி பறவையை மூடி வைத்திருந்தார்.



வாடிக்கையாளர் ஒருவர், "கௌதாரி ஒன்று எவ்வளவு?" என்று கேட்டார். அதற்கு வியாபாரி, "ஐநூறு ரூபாய்" என்றார்.

வாடிக்கையாளர் அங்கிருந்த சிறிய கூடையப் பார்த்து, "ஏன் இந்த கௌதாரியை தனியான ஒரு கூடையில் அடைத்து வைத்திருக்கிறீர்கள்? இதன் சிறப்பம்சம் என்ன? இதன் விலை எவ்வளவு?" என்று கேட்டார்.

"நான் அதை விற்பனைக்காக வைத்திருக்கவில்லை. வேறு தனிப்பட்ட தேவைக்காக வைத்திருக்கிறேன்" என்று வியாபாரி சொன்னார்.

அந்த வாடிக்கையாளரோவிடவில்லை. ஒற்றையாக இருக்கும் அந்த கௌதாரிதான் வேண்டும் என்று அடம்பிடித்தார். அவரது தொல்லை தாங்க முடியாததால் வியாபாரி, "சரி தருகிறேன். ஆனால் இந்த கௌதாரிக்கு ஐயாயிரம் ரூபாய் தரவேண்டும்." என்று சொன்னார்.

வாடிக்கையாளர் வியப்போடு "ஏன் இவ்வளவு அதிகமாக பத்து மடங்கு விலை சொல்கிறீர்கள்? அப்படி என்னதான் இதில் விசேசம் இருக்கிறது?" வியப்போடு என்று கேட்டார்,

அதற்கு வியாபாரி, "இது என் செல்லப்பிராணி. இதுதான் மற்ற கௌதாரிகளை எனது வீட்டுக்கு வரவைத்து சிக்க வைக்கும் வேலையை செய்கிறது. இது உரத்துக் கத்தும்போது மற்ற கௌதாரிகள், இது இருக்கும் இடத்தைத் தேடி கொஞ்சமும் யோசிக்காமல் கூட்டமாகப் பறந்து வரும். அவை வந்ததும் நான் அனைத்தையும் இலகுவாக வலையில் சிக்க வைத்து பிடித்து கூண்டில் அடைத்து விடுவேன். பின்னர் இந்த கௌதாரிக்கு அது விரும்பும் உணவுகளை அன்பளிப்பாக கொடுப்பேன். அந்த மகிழ்ச்சியில் அது இன்னும் அதிகமாக கூவி அழைத்து கூடுதலான கௌதாரிகளை என்னிடம் சிக்கவைக்கும். அதனால்தான் இதற்கு அதிக விலை!" என்று பதிலளித்தார்.

அந்த வாடிக்கையாளர் ஐயாயிரம் ரூபா பணத்தைக் கொடுத்து, அந்த கௌதாரியை வாங்கி அந்த இடத்திலேயே அதன் கழுத்தை நெரித்துக் கொன்றார்.

வியாபாரி ஆச்சரியத்தோடு, "ஏன் இவ்வளவு பணம் கொடுத்து வாங்கி இப்படி அதனை கொன்று விட்டீர்களே! ஏன் இப்படி செய்தீர்கள்?" என்று கேட்டார்

அதற்கு அந்த வாடிக்கையாளர், "தனது சுய இலாபத்திற்காக, தனது சொந்த சமுதாயத்தை, இனத்தை ஏமாற்றி காட்டிக் கொடுத்துப் பிழைக்கும் இந்த துரோகிக்கு உலகத்தில் வாழ அருகதையே இல்லை!" என்று சாவகாசமாக் கூறிவிட்டு அந்த இடத்தைவிட்டும் நகர்ந்தார் அந்த மனிதர்.

## கைவண்ணம் காணீர்



**இப்பத்தியில் இடம்பெறும் அம்சங்களின் நோக்கை, போக்கை, அமைப்பை, அளவை, அழகை பின்பற்றி எழுத விரும்புவோர், "படித்ததும் பகர்வதும்" பகுதியுடன் தொடர்பு கொள்ள, மின்னஞ்சல் (email): pptknvm@gmail.com, வாட்ஸ்அப் (WhatsApp): 0777314207**

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2021 நவம்பர் மாதம் 28ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.


Senthooram
செந்தூரம்
2021 நவம்பர் 28 ஞாயிற்றுக்கிழமை



கலாபூஷணம்
நூருல் அயின்
நஜ்முல் ஹுசைன்

# வட துருவத்திற்கு பயங்கர பயணம்

1897ஆம் ஆண்டு 3 சுவீடன் நாட்டவர்கள் முதல் மனிதர்களாக வட துருவத்திற்கு செல்ல முயன்றார்கள். அவர் வெப்ப காறு பலூனில் ஏறி தமது பயணத்தை ஆரம்பித்தார்கள். ஆனால் 65 மணி நேர பயணத்தில் அந்த பலூன் கீழே விழுந்துவிட்டது. 33 ஆண்டுகளுக்கு பின்னர் அவர்கள் இறங்கிய இடத்தில் அவர்கள் உடல்களுடன் தங்கி இருந்த முகாம் கண்டுபிடிக்கப்பட்டது. அவர்கள் துருவக் கரடிகளை கொன்று, சாப்பிட்டு சில வாரங்கள் உயிர் வாழ்ந்திருக்கிறார்கள். என்றாலும் கடைசிவரை அவர்களால் வட துருவத்துக்கு போக முடியவில்லை.



# விடுதலை செய்த வினை




கெனத் மக்டெப் அமெரிக்காவின் பயங்கர தொடர் கொலையாளி. 1966 இல் 16 வயது எட்னா சுலிவன் என்ற யுவதி மற்றும் அவரது காதலனான 17 வயது ரொபர்ட் பிரான்ட் மற்றும் பிரான்டின் உறவினரான 15 வயது மார்க் டுன்னம் ஆகிய மூவரை கொலை செய்தார். மக்டெப்பை பொறுத்தவரை இந்த மூன்று சிறுவர்களும் அறிமுகம் இல்லாதவர்கள். இந்த மூவரை கடத்திய மக்டெக் சுலிவனை பல தடவைகள் கற்பழித்து பின்னர் தும்புத்தடியால் கழுத்தை உடைத்து கொடூரமாக கொலை செய்தார்.

இந்த கொலைகளுக்காக அவருக்கு மூன்று மரண தண்டனைகள் வழங்கப்பட்டது. ஆனால் 1972 இல் உச்ச நீதிமன்றம் அவரது தண்டனையை ஆயுள் தண்டனையாக மாற்றியது. 1989 இல் அவர் பிணையில் விடுதலை செய்யப்பட்டார். ஆனால் வெளியே வந்த மக்டெப் சும்மா இருக்கவில்லை தனது பழைய புத்தியை காட்ட ஆரம்பித்தார். விடுதலையான மூன்றாவது நாளிலேயே அவர் தனது கொலைப் படலத்தை ஆரம்பித்து விட்டதாக நம்பப்படுகிறது. 31 வயதான சர்பியா பாரக்கர் என்பவரின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டது. இந்த கொலையின் பின்னணியில் மக்டெப் இருப்பது உறுதியாகத் தெரிந்தது. இவ்வாறு குறைந்தது நால்வரை கொன்றதாக மெக்டெப் மீது சந்தேகிக்கப்பட்டது. 1992 ஆம் ஆண்டு மீண்டும் கைது செய்யப்பட்ட அவர் இம்முறை தப்பவில்லை. 1998 இல் அவர் மீது மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது.

**பூகோள சஞ்சாரம்**

பிர்தௌஸ்

# 46 மணி நேர பிறந்தநாளா!




பிறந்த நாளை நீண்ட நேரம் கொண்டாடியவர் என்று கூட ஒரு கின்னஸ் சாதனை இருக்கிறது. அதனை படைத்தவர் ஜெர்மனியின் ஸ்வேன் ஹகெமிர். நேர வலயங்களை கடந்து பயணித்து அவர் தனது பிறந்த நாளை 46 மணி நேரங்கள் நீடிக்கச் செய்திருக்கிறார். இதற்காக நியூசிலாந்தின் ஒக்லாந்து நகர், அவுஸ்திரேலியாவின் பிரிஸ்பான் மற்றும் ஹவாயியின் ஹொனொலூலூ நகரங்களுக்கு பறந்திருக்கிறார்.

2015 ஆம் ஆண்டு ஓகஸ்ட் 04 ஆம் திகதி தனது 26 ஆவது பிறந்த நாளையே அவர் 46 மணி நேரம் கொண்டாடி இருக்கிறார். அதாவது நியூசிலாந்தில் ஓகஸ்ட் 4 ஆம் திகதி பிறந்து அடுத்த நாளிலேயே அமெரிக்காவின் ஹவாயியில் ஓகஸ்ட் 4 ஆம் திகதி பிறக்கிறது. இந்த இடங்களுக்கும் இடையே 23 மணி நேரம் வித்தியாசம் இருக்கிறது.

இதற்கு முன்னர் 1998 இல் கராச்சியில் இருந்து சிங்கப்பூர் சென்று தொடர்ந்து சான் பிரான்சிஸ்கோவுக்கு சென்ற நார்கிஸ் பிம்ஜி 35 மணி 25 நிமிடங்கள் பிறந்த நாளைக் கொண்டாடிய சாதனையையே ஹகெமிர் முறியடித்திருந்தார்.

இவர்கள் நீண்ட நேரம் பிறந்த நாள் கொண்டாடியதற்கு என்ன அதில் அதிக நேரம் விமானத்திலேயே கழிக்க வேண்டி இருந்தது.

# குத்துக்கல்லாக நிற்கும் கோபுரம்



சீனாவின் ஹேனான் மாகாணத்தில் இருக்கும் 180 அடி உயரமான அடுக்கு தூபி கோபுரத்தை பார்த்தால் இன்று விழும், நாளை விழும் என்று நினைக்கத் தோன்றுகிறது. ஆனால் இந்த கோபுரம் கி.பி. 1049 ஆம் ஆண்டு சொங் அரச வம்சத்தினால் கட்டப்பட்டது. 1847 ஆம் ஆண்டு மஞ்சள் நதி பெருக்கெடுத்தபோது இந்த கோபுரம் இருக்கும் யொகு தேவாலயம் இருக்கும் இடம் தெரியாமல் அழிந்துவிட்டது. ஆனால் கோபுரம் குத்துக்கல்லாக அப்படியே தான் இருந்தது. கிட்டத்தட்ட 1000 ஆண்டுகளை நெருங்கி இருக்கும் இந்த கோபுரம் 38 பூகம்பங்கள், ஆறு பெரு வெள்ளங்கள் மற்றும் மேலும் பல இயற்கை அனர்த்தங்களை சந்தித்தபோதும் ஆடாமல் அசையாமல் அப்படியே தான் இருக்கிறது.



# மசூத் மரணத்தில் மர்மம்

ஆப்கானிஸ்தான் எதிர்ப்புப் படைத் தலைவர் அஹமது ஷாஹ் மசூத் 1980களில் ஆப்கானை ஆக்கிரமித்த சோவியட் படைக்கு எதிராக போர் புரிந்த முக்கியமானவர்களில் ஒருவர். 1990களில் ஆப்கானை தலிபான்கள் கைப்பற்றியபோது அதற்கு எதிராகவும் உறுதியாக நின்று போராடினார்.

இஸ்லாம் தொடர்பில் தலிபான்கள் கூறும் அடிப்படைவாத வியாக்கியானத்தை அவர் கடுமையாக எதிர்த்து வந்தார். அப்போது தலிபான்களுடன் கூட்டுச் சேர்ந்திருந்த ஒசாமா பின் லாடன் மற்றும் அல் கொய்தாவையும் அவர் எதிர்த்தார். 2001 செப்டெம்பர் 11 தாக்குதலுக்கு சரியாக இரண்டு நாட்களுக்கு முன்னரே மசூத் கொல்லப்பட்டார்.

அமெரிக்க மண்ணில் பாரிய பயங்கரவாதத் தாக்குதல் ஒன்று இடம்பெறப் போகிறது என்று அவர் எச்சரித்திருந்த நிலையிலேயே இந்தப் படுகொலை இடம்பெற்றது.

# கறுப்பின மக்களின் விடுதலைக்காக போராடிய மாமனிதர் நெல்சன் மண்டேலா

**தென்னாபிரிக்காவில் கோஸா என்னும் பழங்குடி மக்கள் வாழ்ந்து வந்தனர். இந்தப் பழங்குடி இனத்தின் ஒரு பிரிவினர் தெம்பு மக்கள் என்று அழைக்கப்பட்டனர். தெம்பு இன அரசர், தெம்பு மக்களின் தலைவராக காட்லாவை (Gadla Henry Mphakanyswa) நியமித்திருந்தார். நியமனம் செய்த அரசர் பிரித்தானியாவால் தேர்ந்தெடுக்கப்பட்டு, அங்கீகரிக்கப்பட்டவர். மரியாதைக்குரிய பதவி, செல்வாக்குள்ள மனிதர், தன் இன மக்களோடு நெருக்கமான உறவு கொண்டிருந்த தலைவர் என்றாலும் பிரித்தானியாவுக்குக் கட்டுப்பட்டு நடக்க வேண்டிய நிலைமையிலேயே அவர் இருந்தார்.**

காட்லாவுக்கு நான்கு மனைவிகள் இருந்தனர். ஒரு ஆபிரிக்கர் பல பெண்களை மணந்துகொள்வது ஆபிரிக்காவில் வழமையாக இருந்தது. அவர்களது இன வழக்கப்படி, முதலாவது மனைவி மதிப்புக்குரிய மனைவி என்றும் இரண்டாவது மனைவி வலது கை மனைவி என்றும் மூன்றாவது மனைவி இடது கை மனைவி என்றும் நான்காவது மனைவி பணி செய்யும் மனைவி என்றும் அழைக்கப்பட்டனர். காட்லாவுக்கும் இடது கை மனைவிக்கும் மகனாக 1918 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 18 ஆம் திகதி "குனு" என்னும் கிராமத்தில் பிறந்தவர்தான் நெல்சன் மண்டேலா.

காட்லா, மகன் மண்டேலாவுக்கு வைத்த பெயர் ரோலிலாலா மண்டேலா. (பாட்டனார் பெயர் மண்டேலா). கறுப்பின மக்கள் மத்தியில் வாழ்ந்து வந்த நெல்சன் மண்டேலா ஐந்து வயது சிறுவனாக இருக்கும்போது முதன் முதலில் ஒரு வெள்ளையனைக் கண்டு திகைத்து நின்று விட்டான். நான் அறிந்த யாரும் இத்தனை வெளுப்பாக இருந்ததில்லை , இவர்கள் நிச்சயம் கடவுளாகத்தான் இருக்க வேண்டுமென்று தன் நண்பர்களிடம் பகிர்ந்து கொண்டான். (வெள்ளைக்காரன் கடவுளா? எமனா? என்பது பற்றி பாவம் அந்த ஐந்து வயது பாலகனுக்கு தெரிந்திருக்கவில்லை போலும்.)

ஏழு வயது வரை அவர் ஒரு போர்வையை மட்டுமே ஆடையாக அணிந்திருந்தார். போர்வையை தோள் பக்கமாக போர்த்தி, இடுப்பில் ஊசி செருகியிருப்பார். ஓடினாலும் ஆடினாலும் அவிழாது. சிறு பராயத்தில் துடிப்பு மிக்க சிறுவனாகவே இருந்துள்ளார். கூடுகளில் இருந்து தேன் சேகரித்தார், மாட்டின் மடியிலிருந்து நேரடியாக பால் குடித்தார், கூரான தடியைக் கொண்டு மீன்களைக் குத்திப் பிடித்தார், உண்டி கோல் வைத்து பறவைகளை அடித்து வீழ்த்தினார், குளிரான ஆறுகளில் குதித்து உடல் நடுங்க நடுங்க நீந்தி கரையைத் தொட்டார், தனக்கான பொம்மைகளை களிமண் மரப்பட்டைகள் கொண்டு தானே செய்து கொண்டார். அத்துடன் ஒவ்வொரு ஆபிரிக்க சிறுவனும் தெரிந்துகொள்ள வேண்டிய கம்புச் சண்டையை (தடியால் சண்டை இடுதல்) கற்றுக்கொண்டு சிறு வயதிலேயே வீரமிக்க சிறுவனாக திகழ்ந்தார். ஆரம்ப முதலே அவரது வாழ்க்கை முட்புதர்கள் நிறைந்த ஒன்றாகவே இருந்தது.

கோஸா மக்கள் மானசீக கடவுளாக "கமாடா" எனும் கடவுளையே வணங்கி வந்தனர். கிறிஸ்தவ மதம் அறிமுகப்படுத்தப்பட்ட போது இவர்களில் முதன் முதலில் மண்டேலாவின் தாயாரே கிறிஸ்தவ மதத்தை தழுவிக்கொண்டார். இவருக்கு ஃபேனி என்று பெயர் மாற்றப்பட்டது. இதனையடுத்து மண்டேலாவை மெதடிஸ்ட்,வெஸ்லியன் தேவாலயத்துக்கு அழைத்து செல்லப்பட்டு கிறிஸ்தவ ஞானஸ்நானம் அளிக்கப்பெற்றது. காட்லாவின் வம்சத்தில் யாருக்கும் எழுதப் படிக்கத் தெரியாது. நெல்சன் மண்டேலாவே ஏழு வயதில் முதன் முதலாக பாடசாலைக்கு சென்றார். அவரைப் படிக்க வைத்து கோஸா மக்கள் மத்தியில் ஒரு பெரும்தலைவராக ஆக்க வேண்டுமென்பதே தந்தை காட்லாவின் அவாவாக இருந்தது.

"படிக்கப்போவது ஆங்கிலப் பாடங்களை, கற்கப்போவது பிரிட்டிஷ் சரித்திரத்தை, பழகிக்கொள்ளப் போவது ஆங்கிலேயப் பழக்கவழக்கங்களை, அனாவசியமாக



உனக்கேன் ஆபிரிக்கப் பெயர்?" என்று ஆசிரியர் கடிந்துகொண்டு ரோலிலாலா எனும் பெயரை நெல்சன் என்று மாற்றம் செய்தார். அன்றிலிருந்து இன்றுவரை ரோலிலாலா மண்டேலா, நெல்சன் மண்டேலா எனும் பெயருடனே வாழ்ந்து வந்தார்.

கோஸா வழக்கப்படி விருத்த சேதனம் (circumcision) நடைபெற்ற பிறகே ஒருவன் இளைஞனாகிறான். மண்டேலாவுக்கு பதினாறு வயதில் விருத்தசேதனம் செய்யப்பட்டது.

அந்தக் காலத்தில் கோஸா மக்களை வெள்ளையர்கள் அடிமைகளாகவே நடத்தினர். தங்கச் சுரங்கங்களைப் பெற்றுக் கொள்வதற்காக கறுப்பின மக்களை அடிமைகளாக வேலை வாங்கி, வேலைகேற்ற ஊதியத்தை அவர்களுக்கு கொடுக்காமல் அவர்களை இம்சித்தனர். இவ்வாறான பல இன்னல்களுக்கு மத்தியில் கறுப்பின மக்கள் செய்வதறியாது திண்டாடினர். சொந்த மண்ணில் தம் மக்கள் அடிமைப்படுத்தப்படுவதையும் கேவலமாக நடத்தப்படுவதையும் அவதானித்துக்கொண்டிருந்த இளைஞனான நெல்சன் மண்டேலாவின் இரத்தம் கொதித்தது, விடுதலை வேட்கை உணர்வு மனதில் குடிகொண்டது. வெள்ளையர்களிடமிருந்து கறுப்பின மக்களை காப்பாற்ற வேண்டுமென்ற மனப்பாங்கும் உத்வேகமும் அவருக்கு நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே சென்றது. வெள்ளையர்களால் நெல்சன் மண்டேலா அவமானப்படுத்தப்பட்ட பல சந்தர்ப்பங்களுமுண்டு.

வெள்ளையர்களிடமிருந்து தம்மின மக்களை எவ்வாறு காப்பாற்றலாமென சிந்தித்துக்கொண்டிருந்தபோது அவருக்கு லாஸர் சிடெல்ஸ்கி எனும் ஒரு யூத உயர் அதிகாரியின் நட்பு ஏற்பட்டது. அவரிடம் மண்டேலா தன் இன மக்களின் அடிமை வாழ்க்கை பற்றிய தன் மனக்கவலைகளை பகிர்ந்துகொண்டார். அதற்கு அந்த யூத நண்பர் "நீ ஒரு வழக்கறிஞராக மாறி உன் இன மக்களுக்கு நீ உதவ வேண்டும். அப்போதுதான் வெள்ளையர்களின் ஆதிக்கத்திலிருந்து உன் இன மக்கள் விடுதலை பெற்று சுதந்திரக் காற்றை சுவாசிப்பார்கள். அதற்கு நீ இப்போதிருந்தே போராட வேண்டும்" என்று விடுதலைத் தாகத்தை ஊட்டினார். அதிலிருந்துதான் நெல்சன் மண்டேலாவின் மனதில் விடுதலை வேட்கை வேர் விடத் தொடங்கியது. வெள்ளையர்களின் அடிமைத்தனத்திலிருந்து தம் இன மக்களை விடுவிக்க வேண்டுமென்ற உத்வேகமும் உற்சாகமும் பிறந்து வெறிகொண்ட வேங்கையும் சினங்கொண்ட சிங்கமுமாக செயல்படத் தொடங்கினார்.

1941 ஆம் ஆண்டு ஜொகனஸ்பேர்க்கிற்கு சென்று பகுதி நேரத்தில் சட்டக்கல்வியைக் கற்றார். 1943 ஆம் ஆண்டு ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் கட்சியில் இணைந்து போராடத் தொடங்கினார். 1956 ஆம் ஆண்டு தென்னாபிரிக்க அரசைக் கவிழ்க்க சதி செய்ததாகவும் வன்முறையைத் தூண்டிவிட்டதாகவும் குற்றம் சாற்றப்பட்டு மண்டேலாவுடன் சேர்த்து 155 பேர் கைது செய்யப்பட்டார்கள்.

1960 ஆம் ஆண்டு ஷார்ப்வில் சம்பவத்தில் 69 போராளிகள் கொல்லப்படுகிறார்கள். ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் கட்சி தடை செய்யப்படுகிறது, இனி அஹிம்சை வழி பலன் தராது என்று நம்பிய மண்டேலாவும் அவரது நண்பர்களும் ஆயுதமேந்தி போராட முடிவெடுத்து இரகசியமாக நாட்டை விட்டு வெளியேறினர். மண்டேலா தலைமறைவாகிறார். ஆபிரிக்காவின் ஈட்டி எனும் இயக்கத்தை தொடங்குகிறார்.1961 ஆம் ஆண்டு மண்டேலா வன்முறைப் போராட்டத்திற்கு அழைப்பு விடுக்கிறார். புதிய இயக்கத்தின் தலைவராகிறார். பதினேழு மாத தலைமறைவு வாழ்க்கைக்கு பிறகு 1962 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 5 ஆம் திகதி கைது செய்யப்பட்ட மண்டேலா ஜொகனஸ்பேர்க் கோட்டையில் சிறை வைக்கப்படுகிறார். அக்டோபர் 25 ஆம் திகதி வாசிக்கப்பட்ட தீர்ப்பில் ஐந்தாண்டு சிறைத்தண்டனை கிடைக்கிறது. இராஜதுரோக குற்றம் சுமத்தப்பட்டு 1964 ஆம் ஆண்டு ஜூன் பன்னிரெண்டாம் திகதி ஆயுள் தண்டனை விதிக்கப்படுகிறது. ரோபன் தீவில் 18 ஆண்டுகள் சிறை வைக்க உத்தரவிடப்பட்டது. 1968ஆம் ஆண்டு தாயார் மரணமடைந்தபோது அவரின் இறுதிச் சடங்குகளில் கூட பங்கேற்க அனுமதி மறுக்கப்பட்டது. இனி போராட்டத்தில் ஈடுபடக்கூடாது என்ற நிபந்தனைக்குக் கட்டுப்பட்டால் விடுதலை செய்வதாக 1973 ஆம் ஆண்டும் 1983 ஆம் ஆண்டும் தென்னாபிரிக்க அதிபர் கேட்டும் கூட அதனை ஏற்க மறுத்துவிட்டார் மண்டேலா. அவரது மனவுறுதி கறுப்பினத்தவர்களை ஒன்றுபட ஊக்கமூட்டியது. நாடெங்கும் போராட்டங்கள் வெடித்தன. மண்டேலாவை விடுவிக்க கோரி உலக நாடுகளும் தென்னாபிரிக்காவை நெருக்கத் தொடங்கின. பணிய மறுக்கவே உலக நாடுகள் தென்னாபிரிக்காவின் மீது 1986 ஆம் ஆண்டு கடுமையான பொருளாதார தடைகளை விதித்தன. உலகமே போர்க்கொடி தூக்கிய பிறகு தனது அட்டூழியங்களை உணர்ந்தது தென்னாபிரிக்க அரசு .

இன ஒதுக்கல் என்ற அசிங்கத்தால் இருண்டு போயிருந்த தென்னாபிரிக்காவில் விடிவெள்ளியாக உதித்து அந்த மண்ணின் மைந்தர்களான கறுப்பினத்தவர்களுக்கு சுதந்திரத்தைப் பெற்றுத் தந்த ஒப்பற்ற தலைவர் நெல்சன் மண்டேலா தன் கொள்கைக்காக இருபத்தேழு ஆண்டுகள் சிறைவாசம் அனுபவித்தார். 1990 ஆம் ஆண்டு பெப்ரவரி 11 ஆம் திகதி விடுதலை பெற்றார். அதனை தொடர்ந்து அன்றைய பிரதமர் டி. கிளார்க் ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் கட்சி மீதான தடையை அகற்றினார். ஜனநாயக அமைப்பை தோற்றுவிக்கும் முயற்சியில் அரசாங்கமும் ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் கட்சியும் பேச்சுவார்த்தைகள் நடத்தின. அதே ஆண்டில் இந்தியாவின் "பாரத ரத்னா" விருது வழங்கப்பட்டது. நெல்சன் மண்டேலா 1991 ஆம் ஆண்டு அக் கட்சியின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார். அதே ஆண்டில் இருபத்தொரு ஆண்டுகளாக தென்னாபிரிக்காவுக்கு ஒலிம்பிக் கமிட்டி விதித்திருந்த தடையை நீக்கியது. 1993 ஆம் ஆண்டு உலக அமைதிக்கான நோபல் பரிசு இவருக்கு வழங்கப்பட்டது. 1994 ஆம் ஆண்டு ஏப்ரல் 26 ஆம் திகதி நடைபெற்ற தேர்தலில் முதன்முறையாக கறுப்பின மக்கள் வாக்களித்தார்கள். ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் கட்சி வெற்றி பெற்றது. நெல்சன் மண்டேலா மே மாதம் 10 ஆம் திகதி தென்னாபிரிக்காவின் முதல் கறுப்பின ஜனாதிபதியாக பதவியேற்றார். அன்றுதான் மண்டேலாவின் தந்தை காட்லாவின் கனவு நனவாகிறது.

நெல்சன் மண்டேலா ஒன்றன்பின் ஒன்றாக மூன்று மனைவிகளை மணந்தார். 1944 ஆம் ஆண்டு எவிலின் மேசேயை மணந்தார். இத் தம்பதிகளுக்கு நான்கு பிள்ளைகள். 1958 ஆம் ஆண்டு எவிலினை விவாகரத்து செய்துவிட்டு வின்னியை மணந்தார். இத் தம்பதிகளுக்கு இரண்டு பிள்ளைகள். 1998 ஆம் ஆண்டு வின்னியை விவாகரத்து செய்துவிட்டு மொசாம்பிகா நாட்டின் முன்னாள் அதிபரின் விதவை மனைவியான கிரேக்கா மேச்சலை தனது எண்பதாவது பிறந்த நாளன்று மணந்தார்.

1998 ஆம் ஆண்டு ஜனாதிபதி நெல்சன் மண்டேலா தென்னாபிரிக்க பாடசாலைகளில் தமிழ், உருது, தெலுங்கு, ஹிந்தி, குஜராத்தி ஆகிய மொழிகளை கற்றுக் கொடுக்க ஏற்பாடு செய்தார்.

1999 ஆம் ஆண்டு நெல்சன் மண்டேலா ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டு பதவி வகித்ததன் பின் பதவியை விட்டு விலகினார். மண்டேலா நுரையீரல் பாதிக்கப்பட்ட நிலையில் பிரிட்டோரியாவிலுள்ள மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். பின்னர் தனது வீட்டில் தங்கி தொடர்ந்து சிகிச்சை பெற்று வந்த மண்டேலா, 2013 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் ஐந்தாம் திகதி தனது 95 ஆவது வயதில் காலமானார். அவர் மறைந்து சென்றாலும் அவர் செய்த தியாகங்களும் போராட்டங்களும் கறுப்பின மக்களின் மனங்களின் நீங்காத நினைவுகளாக என்றென்றும் நிலைத்திருக்கும் என்பது நிச்சயம்.



**பரீட் இக்பால்**
**யாழ்ப்பாணம்**



பிரவீன் சதா விஷ்ணு கோயில் தரிசனம்



கஜீவன் சர்மா



கோகில வாணி—உஸ்வத்த கெய்யாவ

# செல்ஃபி உலா



இல்மத் ஸாரா — அட்டாளைச்சேனை

தினகரனின் செந்தூரம் இதழின் செல்பிஉலா பக்கத்தில் உங்களது செல்பிக்களும் இடம்பெற விரும்பினால் selfiulla@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு படத்தையும் விபரங்களையும் அனுப்பி வையுங்கள். செல்பிக்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.



ஷிமாஸ் ஏ.ஜிப்ரி



# தமிழ்த் திரைப்பட நடிகர் எஸ். ஏ. அசோகன்

**எஸ். ஏ. அசோகன் ஒரு தமிழ்த் திரைப்பட நடிகராவார். 1931.05.20 அன்று திருச்சியில் பிறந்தவர் அசோகன். தமிழ்த் திரைப்படவுலகில் சிறந்த வில்லன் நடிகராகவும், சில படங்களில் கதாநாயகனாகவும், குணசித்திர நடிகராகவும் நடித்து புகழ் கண்டவர்.**

பட்டப்படிப்பு முடித்த பின்னர் இயக்குநர் டி. ஆர். ராமண்ணாவைச் சந்தித்தார். அவர் அசோகனை திரையுலகிற்கு அறிமுகப்படுத்தினார். ராமண்ணாவின் விருப்பப்படி, ஆன்டனி என்ற தன் பெயரை அசோகன் என திரையுலகிற்காக மாற்றிக் கொண்டார். முதன்முதலில் ஔவையார் என்ற தமிழ்த் திரைப்படத்தில் அறிமுகமானார். 1961 ஆம் ஆண்டில் வெளியான கப்பலோட்டிய தமிழன் திரைப்படத்தின் மூலம் திரையுலகில் முன்னேறத் தொடங்கினார். இத் திரைப்படத்தில் ஆஷ் துரை வேடமேற்று நடித்திருந்தார். 1960 மற்றும் 1970 களில் பெரும்பாலும் வில்லன் கதாபாத்திரங்களிலேயே நடித்தாலும் பல குணசித்திர வேடங்களிலும் நடித்திருக்கிறார். திரைப்படங்களில் இவரது குரலின் தொனியும், வசனங்களை இவர் உச்சரித்த பாணியும் இவருக்கு நல்லபெயரைப் பெற்றுத்தந்தன. சிவாஜி கணேசன், எம்ஜிஆர், ஜெமினி கணேசன், எஸ்.எஸ். ராஜேந்திரன், முத்துராமன், ஜெய்சங்கர், கமல், ரஜினி போன்ற பல தலைமுறை கலைஞர்களுடன் நடித்தவர் அசோகன்.

## இவரது நடிப்புக்கு தீனி போட்ட படங்கள் சில:

இரவும் பகலும், உயர்ந்த மனிதன், பாத காணிக்கை, இது சத்தியம், கர்ணன், கந்தன் கருணை, கப்பலோட்டிய தமிழன், அன்பே வா, அடிமைப்பெண், வண்டிக்காரன் மகன், ஜக்கம்மா, வல்லவனுக்கு வல்லவன், நீரும் நெருப்பும், உலகம் சுற்றும் வாலிபன், ராமன் தேடிய சீதை, எங்க பாட்டன் சொத்து என வரிசைப்படுத்தலாம்.

எம்ஜிஆரை கதாநாயகனாக கொண்டு இவர் சொந்தமாக தயாரித்த படம் "நேற்று இன்று நாளை ".

இரவும் பகலும் படத்தில் "எறந்தவன சுமந்தவனும் எறந்துட்டான் அத இருப்பவனும் எண்ணிப் பார்க்க மறந்துட்டான் ! என்ற பாடலை தன் சொந்தக் குரலில் பாடினார் அசோகன். இவர் மகன் வின்சனும் ஓர் நடிகரே. நல்ல திறமையான அசோகன் பின்னாளில் நகைச்சுவை வேடங்களில் நடிக்க ஆரம்பித்து விட்டார். அலாவுதீன் அற்புத விளக்கும், ஆட்டுக்கார அலமேலு, தாயில்லாக் குழந்தை, துணிவே துணை, நான், பட்டிக்காட்டு ராஜா, மூன்றெழுத்து போன்ற படங்களில் நகைச்சுவையாக நடித்தார். ஏவியெம் நிறுவனம் எம்ஜியாரை கதாநாயகனாக கொண்டு தயாரித்த "அன்பே வா" திரைப்படத்திலும், உயர்ந்த மனிதனிலும் இவர் நடித்த குணச்சித்திர பாத்திரங்கள் அருமை. உயர்ந்த மனிதனில் அசோகன் நடித்த டொக்டர் வேடத்தையே முதலில் சிவாஜி கணேசன் விரும்பினார். அன்பே வா படத்தில் எம்ஜியார் நடிக்க பெரும் காரணமாக இருந்தவர் அசோகன். "ரத்தத்தின் ரத்தமே" படப்பிடிப்பில் கலந்து கொள்ள இலங்கைக்கு வந்தார் அசோகன்.

எஸ். ஏ. அசோகன் 1982 நவம்பர் 19 அன்று தனது 52ஆவது அகவையில் மாரடைப்பால் காலமானார். இந்திய சினிமா வரலாற்றில் அசோகன் தடம் பதித்த ஓர் அற்புத நடிகர்.



**ஆக்கம்: எஸ்.கணேசன் ஆச்சாரி**
**சதீஷ் கம்பளை**



மனைவி : என்ன பார்த்துகிட்டு இருக்கிங்க
கணவன் : ஒண்ணுமில்ல!
மனைவி : ஒண்ணுமில்லாமயா ஒரு மணிநேரமா மேரேஜ் சர்டிபிகேட்ட பார்த்துகிட்டு இருக்கிங்க!
கணவன் : எங்கேயாவது எக்ஸ்பிரி டேட் போட்டுருக்கானு பார்க்கிறேன்.!!



மனைவி : உங்க அம்மாவுக்கு சப்பாத்தி போட்டா பிடிக்கல இட்லி தோசை போட்டா பிடிக்கல உப்புமா போட்டா பிடிக்கல. . .
கணவன் : வேற என்னதான் போட்ட?
மனைவி : பேசாம பட்டினி போட்டேன்.



# சிரி...சிரி...தரும் மகிழ்ச்சி

மனைவி : என்னங்க, கணவன் – மனைவி சொர்க்கத்துல சேர்ந்து வாழ முடியாதாமே..!
கணவன் : அதனால்தானடி அதை சொர்க்கம்னு சொல்றாங்க..!



கணவன் : "டாக்டர் வெயிட் தூக்கக் கூடாதுன்னு சொன்னதுக்காக உங்க அம்மா பெரிய வெங்காயம் வாங்காம சின்ன வெங்காயம் வாங்கறதப்பாத்தா எனக்கு எரிச்சலா வருது"
மனைவி : ???



கணவன் : ஊரெங்கும் ஒரே காய்ச்சலா இருக்கு! குடிக்க வெந்நீர் கொடு!
மனைவி : ஏங்க இப்படி பயப்படுறீங்க? மூளைக் காய்ச்சல்தான் பரவுது! அது எப்பிடி உங்களுக்கு வரும்?



மனைவி : நமக்கு கல்யாணம் முடிஞ்சி இன்னியோட பத்து வருசம் ஆகுது?
கணவன் : எனக்கு அதெல்லாம் மறந்து போச்சு.
மனைவி : இது கூடவா?
கணவன் : ஆமாண்டி, நல்ல விசயங்களை மட்டும் தான் நான் ஞாபகம் வச்சிக்குவேன்.



"அக்கம் பக்கத்துலே கடன் வாங்கியாவது இப்ப சினிமா பார்த்தாகணுமா?"
"படம் எடுக்கறவங்களே கடன் வாங்கித் தாங்க எடுக்கறாங்க. அதனால இது ஒண்ணும் தப்பில்லே!"



காதல் ஒரு மழை மாதிரி. நனையும் போது சந்தோஷம்; நனைந்த பின்பு ஜலதோஷம்.



மனைவி : என்னை நேற்று தூக்கத்தில கன்னா, பின்னாவென்று திட்டுனீங்க ..
கணவன் : யார் சொன்னது நான் தூக்கத்தில் தான் இருந்தேன் என்று..

# இலக்கிய வானில் இன்னும் மின்னும் தாரகையாய் உலா வரும் வானும் மண்ணும் போற்றும்

# கலாபூஷணம் நூருல் அயின் நஜ்முல் ஹுசைன்








## செந்தூரம் சஞ்சிகைக்கான நேர்காணல்

● தமிழ் இலக்கிய வானில் தடம் பதித்து வருகின்ற ஒரு பரம்பரையாக உங்கள் பரம்பரை விளங்குகின்றது. கலாபூஷணம் நூருல் அயின் நஜ்முல் ஹுசைன் ஆகிய நீங்களும் உங்களது கணவராகிய நஜ்முல் ஹுசைன், உங்களது சகோதரராகிய சட்டத்தரணி ரஷீத் எம் இம்தியாஸ் என இப்படி நீண்டு கொண்டே போகிறது. தமிழ் இலக்கிய உலகுக்குள் மின்னுகின்ற தாரகைகளாக தமிழ்ப் பணியாற்றும் உங்கள் பரம்பரை. அந்த வகையில் நீண்டதொரு வரலாற்றைக் கொண்டது. உங்களுடைய தமிழ்ப்பணியின் தொன்மையையும் உங்களது இலக்கிய பிரவேசத்தைப் பற்றியும் கூறுங்களேன்...?

தமிழ் இலக்கிய வானில் தடம் பதித்து வருகின்ற ஒரு பரம்பரையில் நான் இருப்பதையிட்டு மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன். நீங்கள் குறிப்பிட்டது போல, தமிழை நேசித்து மிகவும் ஈடுபாட்டுடன் பணி புரிபவர் எனது கணவர் கவிமணி என் நஜ்முல் ஹுசைன். இவர் எழுதாத கவிதை தலைப்புகளே இல்லை எனலாம். இதுவரை மூன்று கவிதை நூல்களை வெளியிட்டுள்ளார். விரைவில் சிறுகதைத் தொகுதி ஒன்றையும் வெளியிடவுள்ளார். அவ்வாறே எனது மூத்த சகோதரர் சட்டத்தரணி ரஷீத் எம். இம்தியாஸ். உங்கள் தினகரன் வாரமஞ்சரி பத்திரிகையில் 'படித்ததும் பகர்வதும்' என்றும் ஒரு பகுதியை வாராவாரம் தொகுத்து வழங்குகிறார். அத்தோடு 'சட்டமும் நாமும்' என்ற பெயரில் ஒரு நூலையும், சிறுகதைத் தொகுதி ஒன்றையும் சமகாலத்தில் வெளியிடவுள்ளார். காலஞ்சென்ற மற்றுமொரு சகோதரரான ரஷீத் எம். ராசிக் (பஹ்ஜி) ஒரு மார்க்க அறிஞராவார். அவர் பல நூற்றுக்கணக்கான சிறப்பான ஆக்கங்களை பத்திரிகைகளுக்கும் வானொலிக்கும் எழுதியுள்ளார். தற்சமயம் கத்தார் இலங்கை தூதரகத்தில் பணிபுரியும் எனது மற்றுமொரு சகோதரரான ரஷீத் எம். பியாஸ், ரமலான் என்ற பெயரில் ஒரு நூலை வெளியிட்டுள்ளார். இன்னும் ஓர் ஆய்வுக் கட்டுரைத் தொகுதி ஒன்றையும் வெளியிட உத்தேசித்துள்ளார். அவர் ஒரு சிறுகதை எழுத்தாளரும் கூட. தினகரன் வாரமஞ்சரியில்' கவிதைப் பூங்கா' என்ற பகுதியை எனது மற்றுமொரு சகோதரரான ரஷீத் எம். றியாழ் சுமார் 10 ஆண்டு காலமாக தயாரித்தளித்தார். இந்தப் பகுதியில் கவிதைகள் எழுதி வந்த பல கவிஞர்கள் தமது கவிதைத் தொகுப்பு நூல்களையும் வெளியிட்டிருப்பது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். இன்று தமிழக திரைப்படங்களுக்குப் பாடல்கள் எழுதி சிறப்புச் சேர்க்கும் பொத்துவில் அஸ்மின் கூட ஆரம்பத்தில் கவிதைப் பூங்கா பகுதிக்கு கவிதைகள் எழுதியவர் என்பதை அவரே மகிழ்ச்சியுடன் நினைவுபடுத்துவார். றியாழ் தம்பி சிறுவர் இலக்கிய நூலொன்றை வெளியிடவுமுள்ளார். தற்போது கொழும்பு டீ. எஸ். சேனநாயக்க கல்லூரியில் கடமை புரியும் எனது தம்பி ரஷீத் எம். ஹாயிஸ் இளைஞர் சேவைகள் மன்றத்தால் நடத்தப்பட்ட அகில இலங்கை சிறுகதைப் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்று அன்றைய ஜனாதிபதி ஜே. ஆர் ஜெயவர்தனாவின் கரங்களால் இளைஞர் விருது பெற்றுள்ளார். அவ்வாறே கொழும்பு றோயல் கல்லூரி ஆசிரியராக இருந்த போது கல்லூரியின் கலை கலாசார நிகழ்ச்சிகளுக்குப் பொறுப்பாக இருந்து பல்வேறு கலை நிகழ்ச்சிகளை நடத்தி சபையோரின் பாராட்டையும் பெற்றுள்ளார். கொழும்பு சென் செபஸ்தீன் முஸ்லிம் மகா வித்தியாலய ஆசிரியராக இருக்கும் எனது ஒரே தங்கை நூருஸ் ஷபா ஸாஹிர் தமிழிலும் ஆங்கிலத்திலும் ஆக்கங்கள் படைப்பவர். பல ஆங்கிலப் பத்திரிகைகளில் இவரது ஆக்கங்கள் பிரசுரமாகியுள்ளன. எமது ஒரே மகள் சட்டத்தரணி நூருஸ் சப்னா சிராஜுதீனும் ஒரு கவிதாயினியாக ஜொலிக்கிறார்.



எல்லா புகழும் அல்லாஹ்வுக்கே. இந்த ஆய்வு நூலை ஆராய்ந்து எழுதி வெளியிடும் வரை இலங்கை முஸ்லிம் பெண் எழுத்தாளர்கள் பற்றிய முதலாவது ஆய்வு நூலாக எனது இந்த நூல் அங்கீகரிக்கப்படும் என நான் கனவிலும் நினைக்கவில்லை. ஆனால் எனது இந்த நூல் வெளியீட்டு விழாவின் போது உரை நிகழ்த்திய பேராசிரியர் எம். எஸ்.எம். அனஸ், பேராசிரியர் ஜலால்தீன் உட்பட ஏனைய சான்றோரும் மேடையில் உரை நிகழ்த்தியபோது இதனை உறுதி செய்தமை எனக்கு மட்டில்லா மகிழ்ச்சியைத் தந்தது.

சட்டக்கல்லூரியில் மட்டுமல்லாமல் தற்சமயம் வானொலி தொலைக்காட்சி கவியரங்குகளிலும் கவிதை பாடி வருகிறார். இவ்வாறு தமிழை நேசிக்கும் தமிழை வளர்க்கும் பரம்பரையாக எனது பரம்பரை இருப்பதில் நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

● நீங்கள் தமிழ்ப் பணியாற்றத் தொடங்கியது எப்போது?

1975 ஆம் ஆண்டளவில் நான் எனது ஊரான உடுதெனிய பாடசாலையில் உயர் வகுப்பு படிக்கும் காலத்திலேயே எழுத்துலகில் எனக்கு நாட்டம் ஏற்பட்டது. அக்காலப்பகுதியில் எனது சகோதரர் ரஷீத் எம். இம்தியாஸ் இந்தியாவிலிருந்து வரும் ராணி, குமுதம், ஆனந்த விகடன் போன்ற சஞ்சிகைகளை வாங்கி வருவார். இலங்கையில் வெளிவரும் தேசிய பத்திரிகைகளையும் வாங்கிப் படிப்பார். இதன் மூலமே எனக்கும் இதில் ஈடுபாடு ஏற்பட்டது. எனவே என்னால் எழுதப்பட்ட கவிதை, கட்டுரை, சிறுகதை போன்றவற்றை பத்திரிகைகளுக்கும் வானொலிக்கும் அனுப்பி வைப்பேன். எங்கள் வீட்டில் வானொலியே இல்லாத காலம் அது. ஒலிபரப்பாகும். எனது ஆக்கங்களை பக்கத்து வீட்டில் ஒலிக்கும் வானொலியில்தான் கேட்டு ரசிப்பதுண்டு. அவ்வாறே இன்றுபோல் திரும்பும் திசைகளெல்லாம் பத்திரிகைகள் பெறமுடியாது. தினகரன், தினபதி சிந்தாமணி, வீரகேசரி பத்திகைகள் மட்டுமே அன்று வெளிவந்த பத்திரிகைகள் எனலாம். அவற்றிற்கெல்லாம் ஆக்கங்களை அனுப்பி விட்டு அவை எப்போது பிரசுரமாகும் என ஏங்கித் தவித்த நாட்களும் உண்டு. ஆனால் 1980 ஆம் ஆண்டு தினபதி சிந்தாமணி பத்திரிகையின் ஆசிரியர் பீடத்தில் ஒரு பயிற்சி பத்திரிகையாளராக இணைந்ததன் பின்னர் எனக்கு தமிழ் தொண்டாற்ற நிறைய வாய்ப்புகள் கிடைத்தன. 1980 முதல 1990 ஆம் ஆண்டு அந்த நிறுவனம் மூடப்படும் வரை திருப்திகரமாக நான் எழுதிக் குவித்ததும் ஏராளம். அதையடுத்து நான் அரசாங்க தகவல் திணைக்களத்தில் தகவல் அதிகாரியாக பணிபுரியும் வாய்ப்பைப் பெற்றேன். சுமார் இருபது ஆண்டுகள் திணைக்களத்தில் பணிபுரிந்து தற்போது ஓய்வு பெற்றுள்ளேன். அரசுப் பணியில் இருந்து ஓய்வு பெற்றாலும் எனது எழுத்துப் பணியில் இருந்து ஓய்வு பெறவில்லை. இன்னும் எழுதிக் கொண்டிருக்கிறேன். அவ்வாறு நான் சிங்களத்தில் எழுதிய எழுத்தின் ஓர் அறுவடையே விரைவில் வெளிவரும் 'திதுலன தாரக்கா' (மின்னும் தாரகைகள்) என்ற சிங்கள நூலாகும்.

● எழுத்துலகில் உங்களுக்கு உந்து சக்தியாக இருந்து உங்களை ஊக்கப்படுத்தியவர்கள் யார்?

எழுத்தை நேசித்து ஊக்கம் அளித்தவர்கள் என் உயிர் பெற்றோர்தான். நான் எழுதி எனது ஆக்கங்களை எனது தந்தை தாயாரிடம் உரத்து வாசித்துக் காட்டுவார். வீட்டுக்கு வருபவர்களிடம் எல்லாம் அந்தப் பத்திரிகையை காட்டி பெருமைப்படுவார். எனது பெற்றோர் அன்று எனக்குத் தந்த இந்த ஊக்குவிப்பு எனது எழுத்துக்கு உந்துசக்தியாக

இருந்தது. அதனை அடுத்து எனது முன்னேற்றத்தின் முதுகெலும்பு எனது மூத்த சகோதரர் ரஷீத் எம். இம்தியாஸ். தினபதி சிந்தாமணி அலுவலகத்திற்கு முதன்முதலாக என்னை அழைத்துச் சென்றவரும் அவரே. ஏனைய எனது உடன்பிறப்புகளும் எனது எழுத்துப் பணிக்கு சாமரம் வீசுபவர்கள்தான். அதனை அடுத்து தினபதி, சிந்தாமணி அலுவலகத்தில் நான் கடமையாற்றிய போது என்னை ஊக்கப்படுத்திய எனது பத்திரிகை உலக தந்தையர்களான எஸ். டீ. சிவநாயகம், இரத்தினசிங்கம் ஐயா போன்றோர் ஆவர். வானொலியில் கூட எனது எழுத்துக்களுக்கு உரமிட்ட உத்தமிகள் பலர் உள்ளனர். மாதர் மஜ்லிஸ் தயாரிப்பாளரான ஆயிஷா ஜுனைதீன், புர்கான் பீ. இப்திகார் முதல் இன்றைய முஸ்லிம் சேவைப் பணிப்பாளர் ரினூஸியா ஜெளபர் வரை இப்பட்டியலில் நிறைய பேர் உள்ளனர்.

இன்று எனது எழுத்துகளுக்கு உந்து சக்தியாகவும் உரமாகவும் பலமாக இருப்பது எனது அன்புக் கணவர் நஜ்முல் ஹுசைன்தான். இவ்வாறு ஆரம்ப காலம் முதல் இன்றுவரை எனக்கு ஊக்கமளித்த உத்தமர்கள் பலர் இருக்கின்றார்கள். அவர்களின் பெயர்களை பட்டியலிட்டு கொண்டே போகலாம். இத்தகைய நல்ல உள்ளங்களின் ஊக்குவிப்புகள்தான் எனக்கு இன்னும் இன்னும் எழுத உறுதுணையாக இருக்கிறது. இந்த அத்தனை உள்ளங்களையும் நான் நன்றியுடன் நோக்குகிறேன்.

● உங்களின் "மின்னும் தாரகைகள்" நூலை சிங்கள மொழியிலும் வெளியிடும் ஆர்வம் உங்களுக்கு ஏன் வந்தது ?

1997ஆம் ஆண்டில் வெளிவந்த எனது முதலாவது நூல் 'பண்பாடும் பெண்' என்பதாகும். இந்த நூல் வெளியீட்டு விழாவில், நான் அப்போது கடமையாற்றிய அரசாங்க தகவல் திணைக்களத்தைச் சேர்ந்த சிங்கள சகோதர, சகோதரிகள் பலர் கலந்து கொண்டனர்.

எனது விழா முழுக்க முழுக்க தமிழ் மொழியில்தான் நடைபெற்றது. விழா முடிந்ததும் என்னை சூழ்ந்து கொண்ட அந்த சிங்கள சகோதர, சகோதரிகள் 'நீங்கள் சிங்கள மொழியிலும் ஒரு நூலை வெளியிட வேண்டும். நாங்கள் அதை ஆசையோடு வாசிக்க வேண்டும்' என அன்புக் கட்டளை இட்டனர். ஆமாம் சிங்கள மொழியிலும் நூல் வெளிவர வேண்டும் என்ற ஆசை அன்றுதான் என் மனதில் துளிர் விட்டது. அது மட்டுமல்ல எனது மின்னும் தாரகைகள் நூலை அலங்கரிக்கும் எமது முஸ்லிம் பெண் ஆளுமைகளை பெரும்பான்மை சமூகத்திற்கும் வெளிச்சமிட்டு காட்ட வேண்டும் என்ற பேராவல் என்னுள் தோன்றியது. அந்த ஆவலின் வெளிப்பாடே இந்த சிங்கள நூலாகும். அத்தோடு எனது இந்த நூல் சிங்கள மொழியில் மட்டுமல்ல ஆங்கில மொழியிலும் வெளிவர வேண்டும் என பலரும் வற்புறுத்துகின்றனர். குறிப்பாக கொழும்பு மருதானை தொழில்நுட்பக் கல்லூரியின் முன்னாள் அதிபரான எம். எச். ஏ. சமத் கூட இந்த நூலை ஆங்கில மொழியில் வெளியிடுவதாயின் தனது பூரண ஒத்துழைப்பு வழங்குவதாக முகநூலில் பதிவு செய்திருந்தார். அன்னாரின் பெருந்தன்மைக்கு நன்றி நவில்கின்றேன். இவ்வாறு பலர் தந்த ஊக்குவிப்பே எனது சிங்கள நூல் உருவாக காரணமாகும்.

● மின்னும் தாரகைகள் என்ற இலங்கை முஸ்லிம் பெண் எழுத்தாளர்கள் பற்றிய உங்களின் ஆய்வு நூலுக்கு சமூகத்தில் கிடைத்த அங்கீகாரம் என்ன ?

எல்லா புகழும் அல்லாஹ்வுக்கே. இந்த ஆய்வு நூலை ஆராய்ந்து எழுதி வெளியிடும் வரை இலங்கை முஸ்லிம் பெண் எழுத்தாளர்கள் பற்றிய முதலாவது ஆய்வு நூலாக எனது இந்த நூல் அங்கீகரிக்கப்படும் என நான் கனவிலும் நினைக்கவில்லை. ஆனால் எனது இந்த நூல் வெளியீட்டு விழாவின் போது உரை நிகழ்த்திய பேராசிரியர் எம். எஸ். எம். அனஸ், பேராசிரியர் ஜலால்தீன் உட்பட ஏனைய சான்றோரும் மேடையில் உரை நிகழ்த்தியபோது இதனை







உறுதி செய்தமை எனக்கு மட்டில்லா மகிழ்ச்சியைத் தந்தது. இந்த நூலாக்கத்தின் போது நான் எதிர்கொண்ட பல்வேறு சிரமங்களுக்கெல்லாம் ஒத்தடமாக அமைந்தது என்றால் அது மிகையாகாது.

ஆய்வாளரும், எழுத்தாளருமான 'தேசத்தின் கண்' மானா மக்கீன், பத்திரிகை உலக ஜாம்பவான்களாக திகழும் ஞானம் சஞ்சிகை ஆசிரியர் டாக்டர் ஞானசேகரன், ஜீவநதி சஞ்சிகையின் ஆசிரியர் பரணிதரன், சிறந்த விமர்சகரும் பன்னூலாசிரியருமான சிவகுமாரன், தெளிவத்தை ஜோசப் ஆகியோர் எனது "மின்னும் தாரகைகள்" நூலின் சிறப்பை தத்தமது பத்தி எழுத்துக்களில் பதிவு செய்தமை எனது நூலுக்குக் கிடைத்த வெற்றியாகும். வசந்தம் எப். எம்.; அறிவிப்பாளர் தயாரிப்பாளர் தம்பி அஸ்கர் எனது நூலின் சிறப்பைப் பற்றி காணொளி ஒன்றை தயாரித்து முகநூலில் பதிவிட்டார்.

அவ்வாறு மேலும் பல அன்புள்ளங்கள் எனது நூலை சிலாகித்து முகநூலில் பதிவுகளை போட்ட வண்ணம் இருக்கின்றனர். அது மட்டுமல்ல இலங்கையின் பிரபல தொலைக்காட்சி ஊடகங்களான சக்தி, யூடிவி, வசந்தம் டிவி, பிறை டிவி என்பன என்னை நேர்காணல் செய்து கௌரவித்தன.

அவ்வாறே ஜீஜீ டோக் சொப் என்ற பிரபல யூடியூப் அலைவரிசையில் சகோதரி ரினூஸா நவ்ஷாத் மற்றும் கட்டாரில் இயங்கிவரும் ஸ்கை தமிழ் அலைவரிசை என்பனவும் எனது நேர்காணல்களை ஒளிபரப்பி எனக்கு சிறப்பு சேர்த்தன.

சர்வதேச மட்டத்தில் இலக்கிய தொண்டாற்றி வரும் பேராசிரியர் சே. முகமது அலியின் இஸ்லாமிய இலக்கிய கழகம் கூட கடந்த ஆண்டு ஸூம் இணையவழி ஊடாக இலங்கை முஸ்லிம் பெண் படைப்பாளிகள் பற்றி சிறப்புரையாற்றுவதற்கு எனக்கு சந்தர்ப்பம் வழங்கியது. இத்தகைய அரிய சந்தர்ப்பம் எனக்குக் கிடைக்க வழிகோலியதே எனது மின்னும் தாரகைகள் என்ற ஆய்வு நூல்தான்.

அவ்வாறே எனது இந்த நூலின் சிறப்பை நன்கு உணர்ந்த வானொலி முஸ்லிம் சேவையில் இலக்கிய மஞ்சரி நிகழ்ச்சியை தொகுத்து வழங்கும் பன்னூலாசிரியர் கவிஞர் அஷ்ரப் சிஹாப்தீன் அவரது நிகழ்ச்சியிலும் எனது இந்திய இணையவழி உரையை தொடர்ச்சியாக ஒலிபரப்பு செய்தார். இவையெல்லாம் எனது நூலுக்கு சமூகத்தில் கிடைத்த அங்கீகாரமாகவே நான் கருதுகிறேன்.

● 460 பக்கங்களைக் கொண்ட இந்த ஆய்வு நூலை வெளியிட பெரும் செலவாகியிருக்குமே. இந்த செலவினங்களை உங்கள் நூல் ஈடு செய்ததா ?

உண்மைதான் நூல் பிரசுரம் என்பது ஒரு பிரசவத்தைப் போல வேதனை தரும் விடயம் தான். பல்வேறு பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியில் சுமார் 3 லட்சம் செலவிட்டு எனது மின்னும் தாரகைகள் நூலை வாசகர்களிடம் ஒப்படைத்தேன். இந்த செலவினங்கள் ஒரு பொருட்டல்ல. வருமானத்துக்காக நான் இந்தப் பணியை செய்ய வில்லை. ஒரு பதிவுக்காகவே செய்தேன். எனவே அதில் நான் மனநிறைவு கொள்கிறேன். எனினும் எழுதும் கரங்களை பலப்படுத்தும் பொறுப்பு சமுதாயத்திற்கு இருக்கிறது என்பது எனது தாழ்மையான அபிப்பிராயமாகும். அதுமட்டுமல்ல ஆகக் குறைந்த பட்சம் இந்த நூலில் உள்வாங்கப்பட்டுள்ள எழுத்தாளர்களாவது இந் நூலை வாங்க வேண்டாமா? அதில் கூட எமது பெண் எழுத்தாளர்களில் சிலர் அக்கறை காட்டாமலிருப்பதுதான் மிகவும் கவலையாக இருக்கிறது.

பல்வேறு பிரச்சினைகள் பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியில் தான் நான் இந்த சிங்கள நூலையும் வெளியிட முன் வந்தேன். எனது நெருக்கடி நிலைமைகளை அந்த இறைவன் மட்டும் தான் நன்கறிவான். எனினும் ஒரு சமுதாய பணியாக கருதியே நான் இந்தப் பணியை செய்கிறேன். கிழக்கு மாகாணத்தில் எனது நூலுக்கான ஓர் அறிமுக விழாவை நடத்த வேண்டும் என்று பலர் என்னை கேட்டுக் கொண்டனர். பெயர் குறிப்பிட்டுச் சொல்வதாயின் எம்மை விட்டு நிரந்தரமாக விடை பெற்றுச் சென்று விட்ட அன்பு சகோதரி கலைமகள் ஹிதாயா தனது தடாகம் கலை இலக்கிய அமைப்பின் மூலம் இந்த விழாவை நடத்த ஆசைப்பட்டார். அந்த ஆசை நிறைவேறாமலே அவர் எம்மை விட்டுப் பிரிந்தது வேதனையே.

அவ்வாறே மூத்த இலக்கிய ஆளுமையான எனது அன்பிற்கினிய சகோதரி காத்தான்குடி பாத்திமா காத்தான்குடியில் இயங்கும் இலக்கிய அமைப்பின் அனுசரணையுடன் இந்த விழாவை நடத்த விரும்பினார். ஓட்டமாவடி அன்புச் சகோதரி பாயிஸ் நவ்பல் (கவி நுட்பம்) அவர்கள் ஓட்டமாவடியில் இந்த விழாவை நடத்த முனைப்புடன் இருக்கிறார். கல்முனையில் உள்ள இலக்கிய அமைப்புகளுடன் சேர்ந்து இந்த இலக்கிய விழாவை சிறப்பாக நடத்துவோம் என்று எனது அபிமான தோழி ஜுல்பிக்கா ஷரீப்பும் ஆவலுடன் இருந்தார். ஆனால் துரதிஷ்டவசமாக கொழும்பில் இடம்பெற்ற குண்டுத் தாக்குதல்கள், அதேபோன்று நாட்டில் பரவிய கொரோனா அச்சுறுத்தல் போன்றவை எனது இந்த விழாவை நடத்த முடியாமல் தடை செய்து விட்டன.

இந்த விழாவுக்காக ஒதுக்கிய நூல்கள் இன்னும் எமது அலுமாரியில் தேங்கிக் கிடக்கின்றன. அவற்றை காணும் தோறும் கவலையாக இருக்கிறது. எனினும் இப்போது சிங்கள நூலும் வெளிவந்து விட்டதால் இரண்டு நூல்களுக்கும் ஓர் அறிமுக விழாவை கிழக்கு மாகாணத்தில் நடத்த வேண்டும் என தற்சமயம் கட்டாரில் வசிக்கும் தமிழ் மற்றும் துணிந்தெழு சஞ்சிகையின் ஆசிரியருமான அருமை தம்பி பாசித்தும் இலக்கிய அபிமானிகள் பலரும் கூறிக் கொண்டிருக்கின்றனர். காலம் கனிந்தால் அல்லாஹ் நாடினால் பார்ப்போம் என்று இருக்கிறேன்.



● உங்களின் திதுலன தாரக்கா என்ற சிங்கள நூலின் உள்ளடக்கமும் மின்னும் தாரகைகள் நூலின் உள்ளடக்கமா?

ஆமாம். ஆனால் ஒரு திருத்தம் சிங்கள நூலில், நூல்களை வெளியிட்ட நூலாசிரியர்கள் பற்றிய தகவல்கள் மட்டுமே உள்ளடக்கப்பட்டுள்ளன.

தொடர்ச்சி 10ம் பக்கம்

# படம் பிடித்தால் பாருங்கள் பிடிக்கவில்லை என்றால் பார்க்காதீர்கள்

படம் பிடித்தால் பாருங்கள் பிடிக்கவில்லை என்றால் பார்க்காதீர்கள் என்று எஸ்.ஏ. சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

ஜெய்பீம் திரைப்படம் மிகவும் பிடித்திருந்தது என்றும் படத்தில் எந்தத் தவறும் தெரியவில்லை என்றும் திரைப்பட இயக்குநர் எஸ்.ஏ. சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.



ஜெய்பீம் படம் குறித்து பேசிய அவர் படைப்பாளிக்கு இருக்கும் சுதந்திரத்தோடு ஜெய்பீம் திரைப்படத்தை இயக்குநர் எடுத்துள்ளார் என்றும் படத்தை அனைவரும் படமாக பார்க்க வேண்டும் என்றும் கூறியுள்ளார். மேலும் படம் பிடித்தால் பாருங்கள் பிடிக்கவில்லை என்றால் பார்க்காதீர்கள் என்று தெரிவித்துள்ளார்.

மேலும், படைப்பாளி என்ற முறையில் எனக்கு படத்தில் எந்தத் தவறும் தெரியவில்லை அதனால் நான் படத்தை பாராட்டுகிறேன் என்றும் கூறியுள்ளார்.

# ஊர்வசியின் 700ஆவது படம்



தமிழில் 1983ல் வெளியான முந்தானை முடிச்சு படத்தில் அறிமுகமாகி முன்னணி கதாநாயகியாக உயர்ந்தவர் ஊர்வசி. மலையாளம், தெலுங்கு, கன்னட மொழிகளிலும் அதிக படங்களில் நடித்துள்ளார்.

தற்போது குணச்சித்திர வேடங்களுக்கு ஊர்வசியை ஒப்பந்தம் செய்ய இயக்குனர்கள் ஆர்வம் காட்டுகின்றனர். சூர்யாவின் சூரரை போற்று, நயன்தாராவின் மூக்குத்தி அம்மன் ஆகிய படங்கள் அவரது நடிப்பில் கடைசியாக வந்தன. 8 படங்கள் கைவசம் வைத்து நடித்து வருகிறார். இந்த நிலையில் தமிழில் தயாராகும் அப்பத்தா என்ற படத்தில் அடுத்து நடிக்க உள்ளார். இந்த படத்தை பிரியதர்ஷன் இயக்குகிறார். இவர்கள் கூட்டணியில் மிதுனம் என்ற மலையாள படம் 1993ம் ஆண்டு வெளியானது. 28 ஆண்டுகளுக்கு பிறகு மீண்டும் புதிய படத்தில் இணைந்துள்ளனர்.

அப்பத்தா ஊர்வசிக்கு 700வது படம் என்பது குறிப்பிடத்தக்கது. ஊர்வசியின் 700வது படத்தை இயக்குவது பற்றிய தகவலை பிரியதர்ஷன் தனது சமூக வலைத்தள பக்கத்தில் மகிழ்ச்சியோடு பகிர்ந்துள்ளார்.

# சினிமாவுக்கு கவர்ச்சி காட்ட வரவில்லை



பிரபல பாலிவுட் நடிகையான ராதிகா ஆப்தே, சமீபத்தில் அளித்த பேட்டி ஒன்றில் கவர்ச்சியாக நடிப்பது குறித்து விளக்கம் அளித்து இருக்கிறார்.

தமிழில் ரஜினிகாந்த் ஜோடியாக கபாலி படத்தில் நடித்து பிரபலமான ராதிகா ஆப்தே தெலுங்கு, இந்தி படங்களிலும் நடித்து இருக்கிறார். ஒரு படத்தில் நிர்வாணமாக நடித்து பரபரப்பை ஏற்படுத்தினார். தற்போது ராதிகா ஆப்தே அளித்துள்ள பேட்டியில், ''சமீபத்தில் ஒரு இயக்குனர் என்னை சந்தித்து அவரது படத்தில் விலைமாது கதாபாத்திரத்தில் நடிக்க சொன்னார். ஏன் இதே போன்ற கதைகளுடன் வருகிறீர்கள் என கேட்டேன்.

நீங்கள் பட்லாபூர், அகல்யா போன்ற படங்களில் மிகவும் கவர்ச்சியாக நடித்தது மட்டுமின்றி ஏற்கனவே நிர்வாணமாக ஒரு படத்தில் நடித்து இருக்கிறீர்கள் அல்லவா என கேட்டார். எனவே இப்படத்தில் அதே போன்ற கதாபாத்திரம் செய்வீர்களோ என்ற எண்ணத்தில் உங்களை அணுகினேன் என தெரிவித்தார். அதை கேட்டு நான் அதிர்ச்சி அடைந்தேன்.

இந்திய சினிமாவில் மட்டுமல்ல வெளிநாட்டு படங்களிலும் நிர்வாணமாக நடிப்பது ஒன்றும் தவறல்ல. கதைக்கு தேவை என்றால் அப்படி நடிக்கலாம். நிர்வாணமாக நடிக்க வைப்பதற்காகவே கண்டபடி கதைகளை கொண்டு வந்தால் எப்படி?. நிர்வாணமாகவோ கவர்ச்சியை காட்டவோ மட்டுமே நான் சினிமாவிற்கு வரவில்லை. கதை பிடித்திருந்தால் எவ்வளவு தூரம் வேண்டுமானாலும் செல்வேன். கதையே இல்லாமல் உடம்பை காட்டவோ நிர்வாணமாக நடிக்கவோ மாட்டேன்'' என்றார்.

# நடிகை ஹேமமாலினிக்கு 'இந்திய திரைப்பட ஆளுமை விருது'

நடிகை ஹேமமாலினிக்கு 'இந்திய திரைப்பட ஆளுமை விருது' வழங்கப்பட்டது.

ஒவ்வொரு ஆண்டும் இந்தியாவில் சர்வதேச திரைப்பட விழாவையொட்டி இந்திய திரைப்பட ஆளுமை விருதுகள் அறிவிக்கப்படுவது வழக்கம். அதன்படி 2021ம் ஆண்டுக்கான இந்திய திரைப்பட ஆளுமை விருது பெறுபவர்களின் பெயர்களை மத்திய தகவல் ஒலிபரப்பு மற்றும் விளையாட்டுத்துறை மந்திரி அனுராக் தாகூர் கடந்த 18ந் திகதி அறிவித்தார்.

அதில் பிரபல நடிகையும், தற்போது உத்தரபிரதேச மாநிலம் மதுரா மக்களவை தொகுதியின் எம்.பி.யுமான ஹேமமாலினி மற்றும் சிறந்த பாடலாசிரியரும், மத்திய திரைப்பட சான்றிதழ் வாரிய தலைவருமான பிரசூன் ஜோஷி ஆகிய 2 பேருக்கும் இந்த விருதை மத்திய மந்திரி அறிவித்து இருந்தார்.

இந்த நிலையில் கோவாவில் 52வது சர்வதேச திரைப்ப விழா ஆரம்பமாகி நடந்து வருகிறது. இன்று 28ந் திகதி வரை இந்தத் திரைப்பட விழா நடைபெறுகிறது. இதில் இந்திய திரைப்படங்கள் மற்றும் சர்வதேச திரைப்படங்கள் திரையிடப்பட்டு விருதுகளும் வழங்கப்பட உள்ளன.

இதன் தொடக்க விழாவில் நடிகை ஹேமமாலினி, பாடலாசிரியர் பிரசூன் ஜோஷி இருவருக்கும் இந்திய திரைப்பட ஆளுமை விருது வழங்கப்பட்டது. இந்த விழாவில் மத்திய மந்திரி அனுராக் சிங் தாக்கூர், மத்திய இணை மந்திரி எல்.முருகன், இயக்குனர் கரண் ஜோகர், நடிகர் சல்மான் கான் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

1963ம் ஆண்டு வெளியான 'இது சத்தியம்' எனும் தமிழ் படம் மூலம் நடன கலைஞராக அறிமுகமான நடிகை ஹேமமாலினி, 1968ம் ஆண்டு இந்தியில் வெளியான 'சப்னோ கா சௌதாகர்' படத்தின் மூலம் பொலிவுட்டில் அடியெடுத்து வைத்தார்.

அதனைத் தொடர்ந்து தர்மேந்திரா, அமிதாப் பச்சன் உள்ளிட்ட பல முன்னனி பாலிவுட் நடிகர்களுடன் பல படங்களில் இவர் நடித்துள்ளார். தற்போது 75 வயதாகும் நடிகை ஹேமமாலினிக்கு இந்திய அரசு சார்பாக 'இந்திய திரைப்பட ஆளுமை விருது' வழங்கப்பட்டதையடுத்து திரைப்பிரபலங்கள் மற்றும் ரசிகர்கள் ஹேமமாலினிக்கு வாழ்த்து தெரிவித்து வருகின்றனர்.



# நாகசைதன்யாவுக்கு மீண்டும் காதல்

சமந்தாவை பிரிந்த கையோடு நாகசைதன்யாவுக்கு இன்னொரு பெண்ணுடன் காதல் ஏற்பட்டு இருப்பதாக தெலுங்கு பட உலகில் பேச்சு கிளம்பி உள்ளது.

நடிகை சமந்தாவும், தெலுங்கு நடிகர் நாக சைதன்யாவும் 7 வருடங்களாக காதலித்து திருமணம் செய்து கொண்ட நிலையில் கடந்த மாதம் விவாகரத்து செய்து பிரிவதாக அறிவித்தனர். இது திரையுலகில் பரபரப்பை ஏற்படுத்தியது.

கணவரை பிரிந்த பிறகு சமந்தா தீவிரமாக படங்களில் நடிக்க தொடங்கி உள்ளார். இமயமலைக்கு ஆன்மீக சுற்றுப்பயணமும் சென்று வந்தார். தற்போது தெலுங்கு படமொன்றில் கவர்ச்சியாக குத்தாட்ட நடனம் ஆடவும் ஒப்புக்கொண்டு இருப்பதாக கூறப்படுகிறது.

இந்த நிலையில் சமந்தாவின் விவாகரத்து அறிவிப்புக்கு பிறகு முதல் தடவையாக நாகசைதன்யா தற்போது இன்ஸ்டாகிராமில், ''என் வாழ்க்கைக்கு ஒரு காதல் கடிதம்'' என்ற பதிவை வெளியிட்டு உள்ளார்.

இதையடுத்து சமந்தாவை பிரிந்த கையோடு நாகசைதன்யாவுக்கு இன்னொரு பெண்ணுடன் காதல் ஏற்பட்டு இருப்பதாக தெலுங்கு பட உலகில் பேச்சு கிளம்பி உள்ளது. சமூக வலைத்தளத்திலும் நாகசைதன்யாவுக்கு புதிய காதல் மலர்ந்துள்ளதா? பெண் யார்



என்றெல்லாம் ரசிகர்கள் கேள்வி எழுப்பி பதிவுகள் வெளியிட்டு வருகிறார்கள்.





07ம் பக்கம் தொடர்...

புத்தகம் வெளியிடா விட்டாலும் இலக்கியத்துக்கு பங்களிப்பு செய்தவர்கள் 60 பேரின் பெயர்ப் பட்டியலை பதிவு செய்துள்ளேன். அவ்வாறே வானொலிக்கு பங்களிப்புச் செய்த பெண் எழுத்தாளர்கள் பெயர் பட்டியலை இணைத்துள்ளேன். நூல்களை தந்த நூலாசிரியர் 87 பேரின் தகவல்களே மின்னும் தாரகைகள் நூலில் இடம்பெற்றுள்ளன. எனினும் எனது சிங்கள நூலில் 124 நூலாசிரியர்கள் பற்றியும் அவர்களது நூல்கள் பற்றியும் பதிவு செய்துள்ளேன். 2018 .11.11 ஆம் திகதி எனது மின்னும் தாரகைகள் ஆய்வு நூல் வெளிவந்தது. அதற்குப் பின்னர் இலங்கையில் வெளிவந்த முஸ்லிம் பெண் எழுத்தாளர்கள் பற்றியும் அவர்களது நூல்கள் பற்றியும் எனது சிங்கள நூல் பேசுகிறது.

88 வயதுடைய மூத்த பெண் படைப்பாளியான மைமூனா ஸெயினுலாபுத்தீன் அவர்களது தகவல்களுடன் ஆரம்பமாகும் எனது இந்த சிங்கள ஆய்வு நூல், ஆங்கிலத்தில் கவிதை நூல் ஒன்றை வெளியிட்டுள்ள தெஹிவளையைச் சேர்ந்த ~ஹானா ~ஸ்லி என்ற எட்டு வயது சிறுமியின் தகவலுடன் நிறைவு பெறுவதும் இந்த நூலின் சிறப்பம்சமாகும். இவை தவிர முஸ்லிம் பெண் எழுத்தாளர்களை ஆசிரியர்களாக கொண்டு வெளிவந்துள்ள பத்திரிகைகள் சஞ்சிகைகள் பற்றிய விபரங்கள், இலக்கியத்துக்காக பங்களிப்புச் செய்யும் இலக்கிய தம்பதிகள் பற்றி விபரங்கள் என்பனவற்றையும் எனது சிங்கள நூலில் இணைத்துள்ளேன்.

பேராசிரியர் அனஸின் அணிந்துரை, பேராசிரியர் ஜலால்தீன் மௌலவி, இந்திய பேராசிரியர் சே.மு.மு முஹம்மதலி, இலங்கை மகளிர் பணியக பணிப்பாளர் சம்பா உபசேன ஆய்வாளரும், எழுத்தாருமான 'தேசத்தின் கண்' மானா மக்கீன உட்பட மேலும் சான்றோர் பலரின் ஆசி உரைகளும் இந்த நூலை அலங்கரிக்கின்றன.

● உங்களின் பல வருட கால இலக்கியப் பயணத்தில் இனிப்பான அல்லது கசப்பான சம்பவங்கள் ஏதும் உண்டா ?

எனது இலக்கியப் பயணத்தில் நான் சந்தித்த இனிப்பான கசப்பான சம்பவங்கள் அனந்தம். ஆனால் இது எனது மின்னும் தாரகைகள் ஆய்வு நூல் பற்றிய நேர்காணல் என்பதால் 20181111 ஆம் திகதி வெளியான அந்த நூல் மூலம் நான் அனுபவித்த இனிப்பான நிகழ்வுகளை பகிர்ந் பல உள. அதில் முக்கியமானவற்றை உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகின்றேன் இந்த ஆய்வு நூலுக்கான தேடலின் மூலம் எனக்கு நல்ல பல நட்புள்ளங்கள் கிடைத்தன. தினமும் அளவற்ற அன்பை சொரிந்து என்ன திக்குமுக்காட வைக்கும் இந்த அன்புள்ளங்களை எண்ணி நெஞ்சம் நெகிழ்கின்றேன். என்னை நேசிக்கும் இந்த நல்ல உள்ளங்களை பாசம் கலந்த நேசத்துடன் நோக்குகிறேன். நூல் வெளியீட்டு விழாவில் கலந்து கொள்ள முடியாமல் போன பெண் படைப்பாளிகளில் பலர் என் கரங்களினாலேயே எனது நூலைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற வேணவாவில் என் இல்லம் தேடி வந்து என் கரங்களினால் அந்த நூலைப் பெற்றுக் கொண்டனர். மேலும் சிலர் வாழ்த்துப்பத்திரங்களை வடிவமைத்து எனக்கு வாகையுடன் பரிசளித்தனர். இச்சம்பவங்களும் என் நெஞ்சை நெகிழச் செய்கின்றன. மேலும் சில அன்புள்ளங்கள் என்னையும் எனது நூலையும் பாராட்டி பாடல்களை இயற்றியும் பாடியும் அவற்றை காணொளியாக முகநூலில் பதிவிட்டும் என்னை மகிழ்ச்சி வெள்ளத்தில் ஆழ்த்திக் கொண்டிருக்கின்றனர். இந்த செயற்பாடுகளால் நான் திக்குமுக்காடிப் போகிறேன். இத்தகையோரின் இந்த அன்பு கனிந்த நடவடிக்கைகள் எனக்கு என் மனதில் இனிப்பான நிகழ்வுகளாகவே இருக்கின்றன

● கசப்பான நிகழ்வுகளையும் கொஞ்சம் இரை மீட்டினால் நல்லதே ?

ஆமாம் எனது ஆய்வு நூலுக்காக தகவல்களைப் பெற்றுக் கொள்ள முயன்றபோது சில பெண் எழுத்தாளர்கள் தமது தகவல்களை தர பின்வாங்கினார்கள். மேலும் சிலர் பீடிகை போட்டார்கள். இந்த கசப்பான அனுபவம் இந்த சிங்கள நூலை எழுதும் போதும் அனுபவிக்க நேர்ந்தது. எனது தொலைபேசி அழைப்புகளுக்குக் கூட மதிப்பளிக்காத சிலர் இருக்கின்றனர். அதுமட்டுமல்ல தமிழில் வெளியான எனது மின்னும் தாரகைகள் நூல் வெளிவந்து சுமார் மூன்று ஆண்டுகள் கடந்து விட்டன. ஆனால் இதுவரை இந்த நூலைப் பெற்றுக் கொள்ளாத பல பெண் எழுத்தாளர்களும் இருக்கிறார்கள் என்பதும் கசப்பான செய்திதான். 'உங்கள் நூலில் எனது தகவலும் இடம் பெற்றுள்ளதா? இந்த நூல் எப்படி இருக்கிறதோ ? பார்க்க ஆசையாக இருக்கிறது' என்ற எவ்வித ஆவல் கூட இல்லாத, எதையும் அலட்டிக்கொள்ளாமல் மௌனமாக இருக்கும் எமது எழுத்தாள சகோதரிகளை எண்ணும் போது மிகவும் வேதனையாக இருக்கிறது.

● சிங்கள மொழியில் இந்த நூலை மொழியாக்கம் செய்தது யார் என்று தெரிந்து கொள்ளலாமா ?

இந்த சிங்கள நூல் முழுவதையும் நானே எழுதினேன் என்பதில் நான் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன். சிங்களத்திலும் எனது நூல் ஒன்று வெளிவரவேண்டும் என்ற எனது நீணட நாளைய கனவு இதன் மூலம் நனவானதில் பெரு மகிழ்ச்சி. எல்லா புகழும் அல்லாஹ்வுக்கே. இந நூலை சரி பார்த்துத் தருமாறு அரசாங்க தகவல் திணைக்களத்தில் தெசத்திய என்ற சிங்கள சஞ்சிகையின் முன்னாள் ஆசிரியரான சகோதரர் சுமித் மாயாதுன்னேவிடம் ஒப்படைத்தேன். இதனை முழுமையாக வாசித்த அவர், எனது சிங்கள மொழி ஆற்றல் குறித்து பெரிதும் விதந்துரைத்தார். அத்துடன் நூலில் உள்வாங்கப்பட்ட முஸ்லிம் பெண் படைப்பாளர்களையும் பாராட்டி வியந்தார். கச்சிதமாக அந்த ஒப்புநோக்கு வேலையை செய்து தந்தார. எனது இந்த சகோதரரின் ஒத்துழைப்பும் அவரது புகழாரமும் எனக்கு மிகவும் மன வலிமையையும் மனதிடத்தையும் தந்தன.

● தமிழ் மொழி மூலம் கல்வி கற்ற நீங்கள் சிங்கள மொழி ஆற்றலை எவ்வாறு வளர்த்துக் கொண்டீர்கள்? சிங்கள மொழிமூல உங்கள் ஊடக இலக்கிய பங்களிப்பு பற்றியும் கூறுங்களேன்

1980 முதல் 90 ஆம் ஆண்டு வரை தினபதி, சிந்தாமணி பத்திரிகையின் ஆசிரிய பீடத்தில் நான் பணிபுரிந்த போதுதான் சிங்கள மொழியில் செயல்படும் வாய்ப்பு கிடைத்தது. சிங்கள ஊடகவியலாளர்கள் சிங்கள மொழியில் எழுதும் செய்திகளை தமிழில் மொழிபெயர்க்கும் பணியும் எமக்கு ஒப்படைக்கப்பட்டது. எனவே செய்திகளை தமிழில் மொழிபெயர்க்கும்போது தெரியாத சொற்களை தெரிந்தவர்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்வது, அகராதியை அணுகுவது என எனது சிங்கள ஆளுமையை வளர்த்துக் கொண்டேன். 1994 ஆம் ஆண்டில் அரசாங்க தகவல் திணைக்களத்தில் பணிபுரியும் வாய்ப்பு கிடைத்தது. ஒரு தமிழ் சஞ்சிகை வெளியிடும் நோக்கிலேயே எனக்கு அங்கு நியமனம் வழங்கப்பட்டது. ஆனால் நான் சென்ற வேகத்திலே அது நடைபெறவில்லை. எனவே திணைக்களத்தினால் பல வருட காலமாக வெளியிடப்படும் தெசத்திய என்ற ஜனரஞ்சக சஞ்சிகையின் சிறப்புக் கட்டுரை ஆசிரியராக கடமையாற்றினேன். அந்த சிங்கள சஞ்சிகைக்கு அரசியல் நேர்காணல் மற்றும் ஆக்கங்களை எழுதும்படி சஞ்சிகை ஆசிரியர் என்னிடம் கேட்டுக்கொண்டதற்கிணங்க நானும் மிகவும் ஆசையோடு, விருப்பத்தோடு சிங்களத்தில் எழுத ஆரம்பித்தேன். நான் எழுதும் ஆக்கங்களை சஞ்சிகை ஆசிரியர் எடிட் பண்ணுவார். அவ்வாறு எடிட் பண்ணிய பிறகும் எனது பிரதியை எடுத்து வாசிப்பேன். நான் எங்கு பிழை விட்டேன். அதை எவ்வாறு அவர் சரி செய்கிறார் என்று தெரிந்து கொண்டேன். இவ்வாறுதான் நான் எனது சிங்கள மொழி ஆளுமையை வளர்த்துக் கொண்டேன். இதன் பயனாகவே நான் சிங்கள மொழியில் தெசத்திய சஞ்சிகைக்கு எழுதிய 'தேசபாலன கரலிய' என்ற அரசியல் நேர்காணல்கள் தொடருக்கு அரசகரும மொழித் திணைக்களம் எனக்கு விருதும் பொற்கிழியும் வழங்கிக் கௌரவித்தது. இது மட்டுமன்றி அரசாங்க தகவல் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட 'தொறதுரு' என்ற வாராந்த பத்திரிகை, ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் 'பொதுஜன' என்ற வாராந்த பத்திரிகை போன்றவற்றிற்கு சிங்கள மொழியில் நிறையவே எழுதும் சந்தர்ப்பம் எனக்கு கிடைத்தது. 2000 ஆம் ஆண்டு கொழும்பு மாவட்ட செயலக ஊடகப் பிரிவின் பொறுப்பதிகாரியாக கடமை புரிந்த காலப்பகுதியில் அரசாங்க அபிவிருத்தித் திட்டங்கள் குறித்து மக்களை விழிப்பூட்டும் நோக்கில் 'கொழம்ப புவத்' (கொழும்புச் செய்திகள்) என்ற பெயரில் காலாண்டு செய்திப் பத்திரிகை ஒன்றை இரண்டு வருடங்களாக வெளியிடும் வாய்ப்பு எனக்கு கிடைத்தது. அந்த சிங்களப் பத்திரிகையின் பிரதம ஆசிரியராக நானே பணிபுரிந்தேன். அத்துடன் அதனைக் கணணிமயப்படுத்துவது, ஒப்பு நோக்குவது போன்ற எல்லாம் என்னால் மேற்கொள்ளப்பட்டது. மிகவும் கண்கவர் பத்திரிகையாக வெளிவந்த இந்த பத்திரிகை மாவட்ட செயலாளர்கள் மாநாட்டின்போது பாராட்டைப் பெற்றது என்பதையும் குறிப்பிட்டாக வேண்டும். கல்வி அமைச்சின் மேலதிக செயலாளராக கடமை புரிந்த மூத்த எழுத்தாளர் தில்லை நடராஜாவின் சிறுவர் நூல்களான பேசும் பேனா, மந்திர கண்ணாடி, கடற்கன்னி ஆகிய மூன்று நூல்களையும் நான் சிங்களத்தில் மொழி பெயர்ப்பு செய்துள்ளேன். எனது கணவர் நஜ்முல் ஹுசைனின் கவிதைகள் சிலவற்றை சிங்களத்தில் மொழிபெயர்க்கும் பணியில் ஈடுபட்டுள்ளேன். சிங்கள கவிஞர்களான நுவன் கட்டுகம்பொல, போதிதுங்க மடலகந்த, சுசில் சுரவீர ஆகியோரின் சிங்கள கவிதைகளையும் தமிழில் மொழிபெயர்ப்பு செய்துள்ளேன்.

● தமிழ் மொழியில் உங்களின் இலக்கியப் பங்களிப்பினை எமது வாசகர்களுக்காக சுருக்கமாக பட்டியலிட முடியுமா ?

## நான் வெளியிட்ட நூல்கள்

1. பண்பாடும் பெண் (1997) கட்டுரைத் தொகுதி
2. மின்னும் தாரகைகள் (2018) ஆய்வு நூல்
3. நஜ்முல் ஹுசைனின் நட்சத்திரக் கவிதைகள் (2018) (தொகுப்பு நூல்)
4. பூஞ்செண்டு (2018) கவிதைத் தொகுப்பு

"புத்தொளி" பத்திரிகையின் பிரதம ஆசிரியர்
"திங்கள்" சஞ்சிகையின் இணை ஆசிரியர்
"ஒளிஅரசி" சஞ்சிகையின் கட்டுரையாளர் ஆசிரிய ஆலோசகர்
"ஜனனி" சஞ்சிகை உதவி ஆசிரியர்

● உங்களின் 'திதுலன தாரக்கா' என்ற சிங்கள நூல் வெளியீடு பற்றி கூறுங்களேன்.

எதிர்வரும் டிசம்பர் மாதம் 4 ஆம் திகதி சனிக்கிழமை (4 12 2021) காலை 10 மணிக்கு கொழும்பு அல் ஹிதாயா தேசிய கல்லூரியின் பஹார்தீன் கேட்போர் கூடத்தில் இந்த விழா நடைபெற உள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறேன். எனது இவ் வெளியீட்டு விழாவில் எனது நூலின் முதல் பிரதியைப் பெற இருப்பவர் ஒரு பெண்மணியாவார். அவர் அக்கரைப்பற்றைச் சேர்ந்த பன்னூலாசிரியரும் ஓய்வு பெற்ற ஆசிரியையும் கவிதாயினியுமான என் அன்புக்குரிய சகோதரி திருமதி எம்.ஐ.எப். மதீனா உம்மா. எனது நூல் பிரசுரத்திற்குத் தயாரான நாளிலிருந்து இந்த நூலின் முதல் பிரதியை தானே வாங்குவேன் என என்னை சதா வலியுறுத்திக் கொண்டிருந்தார். அவரின் அன்புக்கு நன்றி பாராட்டுகிறேன். அதேநேரம் கொரோனா கொடூரம் காரணமாக அனைவரையும் அழைக்க முடியாமைக்கு வருந்துகிறேன். குறிப்பிட்ட எண்ணிக்கையினருக்கே அழைப்பு விடுத்துள்ளேன். இந்த விழா சிறப்புற எனது இலக்கிய வளர்ச்சிக்கு ஊக்கம் தரும் நல்ல உள்ளங்களின் நல்லாசிகள் வேண்டி நிற்கிறேன்.

● 88 வயது மைமூனா முதல் எட்டு வயது சஹானா வரை தேடிப்பிடித்து அவர்கள் சிந்திய இலக்கிய நயங்களை தொட்டுக் காட்டி மெருகூட்டி இருக்கின்றீர்களே…! இத்தோடு உங்களின் இந்த இலக்கிய தாகம் தீர்ந்து விட்டதா அல்லது இது இன்னும் ஏதாவது செய்ய வேண்டும் என்ற எண்ணத்தை துளிர்விட வைத்து விட்டதா?

எனது இலக்கியத் தாகம் இதோடு தீர்ந்துவிடுமா என்று கேட்கிறீர்கள். இது என் இதயத்தின் வற்றாத நீரூற்று போன்றது. தோண்டத் தோண்ட சுரக்கும் என்பார்கள். அது போலவே எழுத எழுத இன்னும் வந்துகொண்டே இருக்கிறது. எழுத்தே என் வீச்சு – எழுத்தே என் மூச்சு. என் கரங்களுக்கு எழுதும் வல்லமை உள்ளவரை நான் எழுதிக் கொண்டுதான் இருப்பேன். எனது இலக்கிய தாகம் என்றும் தணியாத தாகம்தான். அது மட்டுமல்ல எனது மின்னும் தாரகைகள் நூலில் உள்வாங்கப்படாத இளம் எழுத்தாளர்கள் பலர் எனது இந்த நூலின் இரண்டாம் பாகம் எப்போது வரும் என வினா தொடுத்த வண்ணம் உள்ளனர். நான் வேண்டா வெறுப்போடு இந்தப் பணியை செய்யவில்லை. பல்வேறு சிரமங்களுக்கு, பல்வேறு வேலைபளுக்களுக்கு மத்தியிலும் மிகவும் ஆர்வத்துடனும், அர்ப்பணிப்புடனும் தான் செய்கின்றேன். தகவல்களை தருவதில் ஒரு சில பெண் எழுத்தாளர்கள் பொடுபோக்காக செயல்பட்ட போதிலும் அவற்றை பொருட்படுத்தாது, கொண்ட கொள்கையில் நான் உறுதியாக இருந்தேன் இன்னும் இருக்கிறேன். என்று கூறிக் கொள்வதில் மிக மகிழ்கிறேன். எனவே எனது மின்னும் தாரகைகள் நூலின் இரண்டாம் பாகத்தை வெளியிடும் உத்தேசமும் எனக்குண்டு என்பதைக் கூறிக் கொள்வதிலும் அகமிக மகிழ்கிறேன். இறைவன் நாடினால் இந்த நூலும் வெளிவரும் என்ற நற்செய்தியையும் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.



கே.ஈஸ்வரலிங்கம்



பெண் எழுத்தாளர் 18

# கொழும்பு
# சிமாரா அலி ( ஊதாப்பூ)

**கொழும்பை வசிப்பிடமாகக் கொண்ட சிமாரா அலி தற்போது ஊதாப்பூ எனும் புனைப்பெயரில் முகநூலில் பல கவிதைகளை எழுதி வருகிறார்.**

இவர் செய்யத் ஹபீப் தூஃபதுல் மஹ் கூமா, அப்துல் ரஸ்ஸாக் ஆகியோரின் புதல்வியும் அலியுல் அக்பர் என்பவரின் மனைவியும் ஐந்து குழந்தைகளின் தாயுமாவார். பாத்திமா மகளிர் பாடசாலையில் ஆரம்பக் கல்வி கற்று பின் மடவளை மதீனா தேசிய கல்லூரியிலும் கற்று பின் கணினி மென் பொருள் ஏ.ம்.ஐ.,ஊடகத்துறையிலும் கற்றவராவார்.

இவரிடம் கலைத்துறைப்பயணம் பற்றி கேட்கப்பட்ட கேள்விகளுக்கு இவ்வாறு பதிலளித்தார்.


திருமணத்திற்கு முன் கலைத்துறை ஊடகத்துறையில் ஈடுபட்டிருந்ததாகவும் திருமணத்தின் பின் 13 வருடங்களின் பின்னர் மீண்டும் தனது பயணத்தை தொடர்ந்ததாகவும் குறிப்பிட்டார்.

தனது தந்தை வித்துவ தீபம் அப்துல் காதிர் புலவர் பரம்பரையில் வந்தவர் என்பதால் தனக்கும் சின்ன வயது முதல் கவிதை எழுதுவது எல்லாம் நெருங்கிய தோழியாகவே இருந்தது எனவும் தனது தாயை விட்டு அதிகம் கல்விக்காக தனது பெரியம்மா வீட்டில் இருந்ததால் அப்போது அங்கு உணர்ந்த தனிமை தன்னை வானொலியுடனும், எழுத்துடனும் நெருக்கத்தை ஏற்படுத்தியது எனவும் கூறினார். தனது மகிழ்ச்சி, துன்பம், சிரிப்பு, அழுகை எல்லாம் தன் எழுத்தே சுமக்கும் எனவும் எப்போதும் அதிகம் வாசிப்பதாகவும் அதுவும் எழுத முக்கிய காரணமாக அமைந்தது எனத் தெரிவித்தார்.

எழுத்துத் துறையில் கிடைக்கப்பெற்ற சான்றிதழ்கள், விருதுகள் பற்றி வினவியபோது, உலக இஸ்லாமிய மாநாட்டில் இரு விருதுகளும், சான்றிதழ்களும் கிடைத்ததாகவும் இந்தியாவில் தமிழ்ச் சங்கம் சந்தக் கவி விருதும், சென்னை நந்தவனம் ஃபவுண்டேஷன் சாதனைப் பெண் விருதும் வழங்கியதாகவும் குறிப்பிட்டார்,

தமிழ் இலங்கையர் பாரம்பரிய மற்றும் நவீன கலைகள் என்ற கலைஞர்களுக்கான அரச விருதும் வழங்கப்பட்டதோடு 2019 இல் கலைச்சுடர் விருது இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் வழங்கப்பட்டதாகக் குறிப்பிட்டார்.












மேலும் இவரின் நூல் வெளியீடு, கவிதை பிரசுரங்கள் பற்றி இவர் கூறியதாவது கவிதைகள் நிறைய பத்திரிகைகளிலும், சஞ்சிகைகளிலும் வந்துள்ளன . அதே போல இலங்கையில் இரண்டு பாடல்கள் எழுதியதோடு 2017ம் ஆண்டு "கரையைத் தழுவும் அலைகள்" எனும் ஒரு நூலையும் இவர் வெளியிட்டுள்ளதாக தெரிவித்தார்.

“கவிதை என்பது கவிஞனின மன நிலையில் இருந்து உணர்வுகளால் ஊற்றெடுப்பது . மற்றவர்களுக்கு புரியும் வகையில் ரசிக்கக் கூடிய விதமாக எழுதப்படல் வேண்டும்” இவர் குறிப்பிட்டார்.

எழுத்துத் துறையில் இவர் எதிர் நோக்கிய சவால்கள் பற்றி இவ்வாறு குறிப்பிட்டார்.

நூல் வெளியிட்டின் போது நிறைய பிற்போக்கான விமர்சனங்களால் தாக்கப்பட்டேன். அதன் பின்னும் அப்படியேதான். என்னைப் பொருத்தவரை காயங்கள், சவால்கள் இவை எல்லாம் வாழ்க்கையையும், மனிதர்களையும் புரிந்து கொள்ளக் கிடைக்கும் சிறந்த சந்தர்ப்பங்கள். சவால்களை கடந்து வந்த பின் நமக்குள் வரும் தைரியமே தொடர்ந்து செல்வதற்கான பாதையின் வழிகாட்டி எனக் குறிப்பிட்டார்.




இவ்வாறு சவால்களை சந்தித்த போது சில சமயங்களில் கடுமையாக பாதிக்கப்பட்டதாகவும் தெரிவித்த அவர், சவால்கள் என்பது நாம் கடந்து செல்லும் சாக்கடைகள் தான் தவிர சுமந்து செல்ல வேண்டிய ஒன்றல்ல எனவும் குறிப்பிட்டார்.

வளர்ந்து வருகின்ற இளம் எழுத்தாளர்களுக்கு இவர் கூறுவதாவது எப்போதும் எழுத்து என்ற விடயத்தில் திருப்தி காண முடியாது. நல்ல எழுத்தாளனாய் நமது பிழைகளை நாம் உணர வேண்டும். அத்தோடு அனுபவம் உள்ளவர்களின் ஆலோசனை வழிகாட்டலை ஏற்றுக் கொள்ளவேண்டும். எல்லோரும் எல்லாம் கற்றுக் கொண்டு வருவதில்லை. தெரியாததை கேட்பதால் எந்தத் தவறும் இல்லை. தேடி கற்றல் வேண்டும். நல்ல நூல்களை அதிகம் வாசிக்க வேண்டும். .இணைய வாசிப்பை விட நூல்கள் வாசிப்பது சிறந்தது என தனது கருத்துக்களைத் தெரிவித்தார்.

மேலும் எழுதுவதால் என்ன பயன் கிடைக்கிறது என பலரும் இன்று கேட்கும் கேள்வியாக இருப்பதால் இவ்வாறு பதிலளித்தார். ஒரு விடயம் அவ்வாறு கேட்பவருக்கு தெரிவதில்லை. கவிதை, இலக்கியம் இவை எல்லாம் ஒரு கால கட்டத்தில் இருந்த கலாச்சார பழக்கவழக்கங்கள். அதேபோல சமூக பிரச்சினைகள் இவைகளை இன்னொரு கால கட்டத்தில் வாழும் மனிதர்களுக்கு எடுத்துச் செல்லும் . இலக்கியங்களில் உயிரோட்டம் இருக்க வேண்டும் எழுத்துக்கள் காலத்தால் அழிக்க முடியாதவை எனவும் குறிப்பிட்டார்.

**மஜினா உமறு லெவ்வை**
**மாவடிப்பள்ளி**

## தொடர்பு படுத்துங்கள்



## இடைவெளியை நிரப்புங்கள்



| | | |
|---|---|---|
| ___ig | | u |
| ___ee | | p |
| ___up | | b |
| ___mbrella | | m |
| ___onkey | | c |

## வழிகாட்டுங்கள்



## புள்ளிகளை இணைத்து நிறம் தீட்டுங்கள்



**றொம்ப பிஸி பகுதிக்காக கவிஞர் சேனையூர் சப்றீனை சந்தித்தோம். அவருடனான நேர்காணல்**

● சேனையூர் சப்றீன் உங்களைப் பற்றிய அறிமுகத்தை எங்களது வாசகர்கள் நெஞ்சத்தை தொட்டே இனிதே ஆரம்பியுங்களேன்?

எனது பெயர் சஹாப்டீன் முஹம்மது சப்றீன் நான் கிழக்கு மாகாணத்தின் அம்பாறை மாவட்டதில் அட்டாளைச்சேனை எனும் ஊரில் வசித்து வருகிறேன். நான் சேனையூர் சப்றீன் எனும் புனைப்பெயரில் கவிதைகள், பாடல்கள், ஆய்வுக்கட்டுரைகள் என எழுதி வருகிறேன். அதுமட்டுமல்லாது இணைய தளங்களில் உள்ள எழுத்து. கொம் கவியுலகப் பூஞ்சோலை ஒரு கவிஞனின் கனவு மற்றும் அக்னிச்சிறகுகள் தமிழ்பேரவை போன்ற தளங்களிலும் குழுமங்களிலும் தொடராக எழுதி வருகிறேன். அதுமட்டுமல்லாது சுயாதீன ஊடகவியலாளராகவும் தற்போது பொது ஊடகங்களில் பேசப்படாத செய்திகளை தொலைபேசி ஊடகவியலாளராக நவீன முறையில் மேற்கொள்கிறேன் எனது குடும்ப பின்னனி பற்றி கூறப்போனால் எனது தந்தை சஹாப்டீன் தாய் றகுமத்தும்மா சகோதரர் ஜெசீல்(ஆசிரியர்) சஜீத் சகோதரி சபானி ஆகிய ஆறு உறுப்பினர்களை கொண்ட ஒரு சாதாரண குடும்பமாக வாழ்ந்து வருகிறோம்.

● சேனையூர் சப்றீன் கலைத்துறையில் ஈடுபாடு எப்படி ஏற்பட்டது?

இயல்பில் நான் ஒரு இலக்கியப் பித்துள்ளவன் புத்தகங்கள் மீது காதல் அதிகம் பாடசாலைக் காலங்களில் இருந்து வாசிப்பு மீதும் கதை, கட்டுரை, பேச்சு, அறிவிப்பு போன்றவற்றில் எனக்கு அதிகம் ஈடுபாடு இருந்தது சிறிய வயதில் இருந்தே முடிவெட்டும்சலூன் கடைகளுக்கு போனால் அங்குள்ள பத்திரிகைகளில் வெளிவரும் ஆக்கங்களை வாசிப்பதுண்டு பிறகு நான் ஆரம்பித்தில் இருந்தே முகநூல் வாயிலாக தத்துவ கவிதைகள் காதல் கவிதைகள் பாடல்கள் என சின்ன சின்ன பந்தி வரிகளால் ஆக்கங்களை எழுதிப்போடுவேன் அதனை என் முகநூல் நண்பர்கள் சிலர் குரல்கொடுத்து உயிர் கொடுப்பார்கள் சிலர் பத்திரிகைகளுக்கு அனுப்பிவெளிவந்ததை பிரதியாக எனக்கு அனுப்பி வைப்பார்கள் இவ்வாறே எனதான ஊக்கதையும் ஆர்வத்தையும் அதிகரித்தார்கள் இவ்வாறே கலைத்துறையில் ஈடுபாடு ஏற்பட்டது.

● உங்களது புனைப்பெயர் அந்தப் பெயருக்குப் பின்னால் ஏதாவது சுவாரசியங்கள் இருப்பின் அதை கூட பகிர்ந்து கொள்ளலாம் எங்களது வாசகர்களுக்காக?

ஆரம்ப காலங்களில் நான் முஹம்மது சப்றீன் எனும் எனது பெயரில் தான் என் எழுத்துக்களை ஆரம்பித்தேன் ஆனால் சமூகவலை தளங்களில் எனது கவிதைகளுக்கும் பாடல்களுக்கும் மிகப்பெரிய அங்கீகாரம் கிடைத்தது அதன்பிறகு எனது சொந்த ஊர் அட்டாளைச்சேனை அதில் சேனையூர் எனும் பதத்தை எடுத்து சேனையூர் சப்றீன் என்று எனது ஆக்கங்களை எழுதி வருகிறேன் புனைப் பெயராக மாற்றக் காரணம் எனது ஊர் மீதான அதீத காதலும் பற்றுதலும் பொதுவாகவே எனது ஊர் நடைப்பாவனைகள் அனைத்தும் இலக்கியம் சார்ந்தே கலையாக இயற்கையை வளமாகவே கொண்டு அமைந்துள்ளது ஆகவே எனது ஊரையும் உலகரியச் செய்யவே எனது நாமத்தோடு ஊரையும் சேர்த்து எழுதி வருகிறேன்.

● கவிஞர், பாடலாசிரியர் இந்த இரு முகங்களுக்கும் எவ்வாறான ஒற்றுமை வேற்றுமை காணப்படுகின்றது?

கவிதைகள் பாடல்கள் இரண்டுமே ஒரு கருவை வைத்துதான் அமையும் அதனாலே அதில் ஒற்றுமை காணப்படுகிறது ஒரு கருவை வைத்து எழுதி விட்டு அதனை பந்தியாக அமைத்தால் கவிதையாக இனம் காணப்படும் ஆனால் பாடல் எழுதும் போது அதற்கு அதிகம் விதி முறைகள் உள்ளன பல்லவி அனுபல்லவி சரணம் போன்றவை வார்த்தையில் சந்தம் அதிகம் இருக்க வேண்டும் இசைக்கு எதிராக அமைய வேண்டும் இதில் வேற்றுமை உள்ளது.



# தென்னிந்திய தமிழ் சினிமாவில் பாடல் எழுத வாய்ப்பு கிடைத்தது. அதனை நான் பெரிதாக விரும்பவில்லை

## கவிஞர் பாடலாசிரியர் சேனையூர் சப்றீன்



நான் றொம்ப பிஸி...

● உங்கள் முயற்சியில் உருவான பாடல்கள் பற்றி கூறுங்களேன்?

தனது ஊரிலே தேசிய மட்டத்தில் பல சாதனைகள் படைத்த சோபர் என்று அழைக்கப்படும் ஒரு விளையாட்டுக் கழகம் உள்ளது சமூகத்துக்கு உதவி செய்வதில் அதீத ஈடுபாடாக இருப்பதுடன் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகளை ஏற்படுத்தி கொடுப்பதிலும் அதிகம் சந்தர்பங்களையும் வாய்ப்புகளையும் பெற்றுக் கொடுப்பதிலும் பெரும் சக்தி வாய்ந்த அந்த விளையாட்டுக் கழகத்துக்கே எனது சொந்த முயற்சியில் நடையில் வீரம் பயிற்சியின் தேகம் என்று ஆரம்பிக்கும் துள்ளலான பாடலை எழுதி முகநூல் வாயிலாக வெளியிட்டேன் அதிகமான ரசிகர்களின் பார்வைக்கு எட்டியது அதன் பிறகு தென்னிந்திய திரைப்பட இசையமைப்பாளர் திரு. கபிலேஷ்வரின் இசையில் காதல் பாடல் எழுத வாய்ப்பு கிடைத்தது தற்போது தமிழ்சினிமாவில் வெளிநாட்டு பாடலாசிரியராக கலக்கிக் கொண்டிருக்கும் கவிஞர் பாடலாசிரியர் பொத்துவில் அஸ்மினால் தான் இந்த வாய்புகிடைத்தது அதனையும் வெற்றிகரமாக எழுதினேன் பலதரப்பட்ட தமிழ் வானொலிகளில் அந்த பாடலை வெளியிட்டு நல்லதொரு வரவேற்பு கிடைத்தது பிறகு முன்னால் கிழக்கு மாகான முதலமைச்சர் ஹாபீஸ் நசீர் அவருக்கும் ஒரு பாடல் எழுதியிருக்கிறேன் ஊர் சோகம் எதனாலே உருவானது என ஆரம்பிக்கும் பாடல் அதற்கும் நல்ல வரவேற்ப்புகிடைத்தது நீ வந்த வாழ்க்கையே என்று ஆரம்பிக்கும் காதல் பாடல் கெலெக்சி ஹிட்டினால் வெளியிட்டுயிருந்தோம் இலங்கையின் தேசிய சுயாதீன தொலைக்காட்சி வசந்தம் டீவியில் நம்ம ஹிட்ஸ் நிகழ்ச்சியில் பேசும் பாடலாக அமைந்தது அதன் பிறகு தென்னிந்திய தமிழ் சினிமாவில் பாடல் எழுதவாய்ப்பு கிடைத்தது. அதனை நான் பெரிதாக விரும்பவில்லை. எனது இலக்கு அதுவல்ல

● உங்களது மொழியாளுமையை வளர்த்துக்கொள்ள நீங்கள் எவ்வகையான முயற்சிகளை மேற்கொள்கின்றீர்கள்?

எனது திறமைகளை வளர்ப்பதற்க்கு நான் அதிகம் புத்தகங்களை வாசிப்பேன் ஒரு கலைஞன் தன் இலக்கியப் பயணத்தில் மேல் உயர்ந்து போவதற்க்கு அடிப்படையாக அவர்கள் வாசிப்பை நேசிக்க வேண்டும் அந்த வாசிப்புதான் நாளை அவர்களை வாசிக்கும். எனது தேடலில் அதிகம் வாசிப்புதான் அந்த வாசிப்புதான் நாளுக்கு நாள் என்னை தேடித்தருகிறது இவ்வாறே நான் பலரை தேடியும் இருக்கிறேன்.

● மிக இலகுவாக இணையவழி போட்டிகளில் பரிசுகள் விருதுகள் கிடைக்கின்றது இது எத்தனை காத்திரம் என நினைக்கின்றீர்கள்?

முழுமையாக சொல்லப்போனால் இவ்வாறான போட்டிகளுக்கு நான் அதிகம் போட்டியிடுவதில்லை எனக்கு நேரம் கிடைத்தால் அந்த நேரத்தில் வாய்ப்புகள் இருந்தால் போட்டி விதிமுறைகளை அறிந்து கொண்டு நான் போட்டியிடுவேன் ஆனாலும் சிலர் நன்றாக செயற்படுகிறார்கள் சிலர் ஒரு குழுவாக இருந்து கொண்டு அவர்கள் போட்டிகள் நடாத்தி கலைஞர்களுக்கு அழைப்பு விடுத்து அந்த கலைஞர்களை போட்டியிட வைத்து ஏற்பாட்டு குழுமத்தில் உள்ளவர்களுக்கே அதிகம் பரிசு வழங்குவதை என்னால் காணக்கூடுது இவர்கள் ஏன் இவ்வாறு செயற்படுகிறார்கள் என்றால் அவர்களது வளர்ச்சியை பட்டை தீட்டவே இந்த முயற்சி என கூறலாம். ஆனால் நேர்மையாக செயற்படும் இலக்கிய உள்ளங்களின் வீட்டுக்கதவை விருதுகள்தானாகவே முன் வந்து தட்டும்.



**எல்.எம். ஹரீஸ்**
**(வாழைச்சேனை விசேட நிருபர்)**

தொடர்புகளுக்கு :
றொம்ப பிஸி

எம்.எஸ்.பாஹிம்...
shumsfahim@gmail.com

# பெண்களின் வயதும் குழந்தை பாக்கியமும்...!



**திருமண வயதை தள்ளிப்போடுவது பெண்களுக்குத்தான் பாதகமானது. வயது அதிகரிக்கும்போது குழந்தை பெற்றுக்கொள்ளும் பாக்கியத்தை பெறுவதற்கான சூழல் குறைய தொடங்கிவிடும்.**

படிப்பை முடித்துவிட்டு நல்ல வேலையில் சேர்ந்து, ஓரளவு செட்டிலான பின்பு திருமணம் செய்து கொள்ளலாம் என்ற மன நிலையில் நிறைய பேர் இருக்கிறார்கள். அப்படி திருமண வயதை தள்ளிப்போடுவது பெண்களுக்குத்தான் பாதகமானது. வயது அதிகரிக்கும்போது குழந்தை பெற்றுக்கொள்ளும் பாக்கியத்தை பெறுவதற்கான சூழல் குறைய தொடங்கிவிடும்.

### வயது அதிகரிப்பு கருவுறுதலை எவ்வாறு பாதிக்கிறது?

20 வயதுகளின் ஆரம்ப காலகட்டம் குழந்தை பேறுக்கு ஏற்றது. அந்த சமயத்தில் கருத்தரிப்பில் சிக்கல்கள் ஏற்படாது. ஆனால் 30 வயதை நெருங்கும்போது கர்ப்பம் தரிக்கும் திறன் குறைய தொடங்கிவிடும். 35 வயதை கடக்கும்போது கருவுறுதல் திறன் வேகமாக குறைய தொடங்கும். 45 வயதுக்கு பிறகு பெரும்பாலான பெண்களுக்கு இயற்கையாக கர்ப்பம் தரிக்கும் திறன் சாத்தியமில்லை.

### கரு முட்டைகள் எத்தகைய பாதிப்புகளை அடையும்?

பெண்கள் பருவமடையும்போது கருப்பையில் குறிப்பிட்ட எண்ணிக்கையிலான முட்டைகள் நிறைந்திருக்கும். வயது அதிகரிக்க, அதிகரிக்க கரு முட்டைகளின் எண்ணிக்கை குறைய தொடங்கும். மேலும் பெண்களுக்கு வயதாகும்போது, கருப்பை கட்டிகள் மற்றும் எண்டோமெட்ரியசிஸ் போன்ற கருவுறுதலை பாதிக்கக்கூடிய பாதிப்புகள் உண்டாகக் கூடும்.



### வயதாகும்போது கர்ப்பம் தரிப்பதற்கான வாய்ப்பு குறைவதற்கு காரணம் என்ன?

20 முதல் 30 வயதுடைய தம்பதியரில் மாதவிடாய் சுழற்சியின்போது 4ல் 1 பெண் கர்ப்ப மடைவதற்கு வாய்ப்பு இருக்கிறது. 40 வயதை நெருங்கும்போது மாதவிடாய் சுழற்சியில் 10 பெண்களில் ஒருவர் தான் கர்ப்பமடைவதற்கு வாய்ப்பு உள்ளது. வயதுக்கு ஏற்ப கருவுறுதல் திறன் குறைந்துவிடுகிறது.

### தாமதமாக கர்ப்பமடைவதால் பாதிப்பு நேருமா?

குறிப்பிட்ட வயதை கடந்து தாமதமாக கர்ப்பமாகும்போது ஒருசில சிக்கல்களை எதிர்கொள்ள நேரிடும். உதாரணமாக 40 வயதை கடக்கும் கர்ப்பிணி பெண்களுக்கு உயர் ரத்த அழுத்த பாதிப்பை ஏற்படுத்தும் பிரீக்ளாம்ப்சியா எனப்படும் நோய் பாதிப்பு ஏற்பட வாய்ப்பு இருக்கிறது. கருவில் வளரும் குழந்தையின் ஆரோக்கியமும் பாதிப்புக்குள்ளாகக்கூடும். இளம் பெண்களை விட வயதான பெண்களுக்கு உடல்நலப் பிரச்சினைகள் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் அதிகம். வயதானவர்களுக்கு ஏற்படும் உயர் ரத்த அழுத்த பிரச்சினைதான் பாதிப்பை அதிகப்படுத்தக்கூடும்.

# இனிப்பு சோமாஸ்

### தேவையான பொருட்கள்

ரவை 1/2 கிலோ
மைதா 1/2 கிலோ
பூரணம் செய்ய
நிலக்கடலை 100 கிராம்
பொட்டுக்கடலை 100 கிராம்
வெல்லம் 1/4 கிலோ ஏலக்காய் 5 (பொடி செய்தது)
எண்ணெய் 1/2 லிட்டர்

### செய்முறை

1. நிலக்கடலையை வறுத்து தோல் நீக்கி மிக்ஸியில் போட்டு பொடித்துக் கொள்ளவும்.
2. பொட்டுக்கடலையை தனியே மிக்ஸியில் போட்டு பொடித்துக் கொள்ளவும்.
3. ஒரு பாத்திரத்தில் வெல்லத்தைப் போட்டு நன்கு பொடித்து அதனுடன் ஏற்கனவே பொடித்து வைத்துள்ள நிலக்கடலை, பொட்டுக்கடலை, ஏலக்காய் போன்றவற்றைச் சேர்த்து நன்கு கிளறவும். இப்போது பூரணம் தயார்.
4. அடுப்பில் வாணலியை வைத்து ரவையை கொட்டி லேசாக வறுத்து, மிக்ஸியில் பொடித்துக் கொள்ளவும்.
5. ஒரு பாத்திரத்தில் மைதா மாவு, பொடித்து வைத்துள்ள ரவை, ஒரு சிட்டிகை உப்பு, தேவையான அளவு தண்ணீர் சேர்த்து சப்பாத்திக்கு மாவு பிசைவது போல் பிசைந்து கொள்ளவும்.
6. சிறிய எலுமிச்சை அளவு மாவு எடுத்து பூரிக்கு தேய்ப்பது போல் தேய்த்து நடுவில் 1 முதல் 2 தேக்கரண்டி கலந்து வைத்துள்ள பூரணம் வைத்து இரண்டாக மடித்து ஓரங்களை நன்கு அழுத்தி ஒட்டவும்.
7. பிறகு கடையில் விற்கும் நெளி தேக்கரண்டியையோ அல்லது சோமாஸ் செய்வதற்கான அச்சையோ பயன்படுத்தி ஓரங்களை அழகு பட வெட்டவும். இவை எதுவும் கிடைக்காத பட்சத்தில் கத்தி கொண்டு ஒரே சீராக ஓரங்களை வெட்டிக் கொள்ளவும்.
8. அடுப்பில் வாணலியை வைத்து எண்ணெய் ஊற்றி மிதமாகக் காய்ந்ததும் ஒட்டி வைத்துள்ள சோமாஸ்களை எண்ணையில் போட்டு பொன்னிறமாக வேக விட்டு எடுக்கவும். வடிதட்டில் போட்டு எண்ணெய் வடிந்ததும் காற்று புகாத பாத்திரத்தில் பத்திரப்படுத்தி வைத்து சாப்பிட்டு மகிழவும்.



### குறிப்பு

1. ஏலக்காய் பொடி செய்யும் போது 2 தேக்கரண்டி சர்க்கரை சேர்த்து மிக்ஸியில் பொடிக்கவும்.
2. பூரணம் மிகுதியாகிவிட்டால் லேசாக தண்ணீர் தெளித்து உருண்டை பிடித்து நிலக்கடலை உருண்டையாகவும் செய்து கொள்ளலாம்.

## தமிழ்த் திரையிசைப் பாடல்கள்
### நயப்பும் வியப்பும் – 29

# மதுரக் குரலால் தாலாட்டும் மனோவின் பாடல்கள்



**பழரசம் போன்று இனிமையான தன் குரல் மூலம் பல பாடல்களைப் பாடி ரசிகர்கள் மத்தியில் நல் வரவேற்பைப் பெற்றவர் பாடகர் மனோ. தமிழ் திரையிசை வெளி கண்ட பாடகர்களுள் தனக்கானதொரு தனிச் சிறப்பை உருவாக்கிக் கொண்டவர் இவராவார்.**

80களிலும், 90களிலும் ஒரு வித்தியாசமான குரலிசையாளனாக பல நல்ல பாடல்கள் மூலமாக அறியப்பட்ட மனோவின் குரல் பலருக்கு பிடித்துப் போன குரலாக மருவிக் கொண்டது. பாடல்களிற்கேற்ப தன் குரலை மாற்றி மாற்றி பாடும் திறமை கொண்ட இவரின் திறமை பாடல்கள் பலவற்றின் வாயிலாக வெளிப்பட்டு இவருக்கு நல் வரவேற்பைப் பெற்றுக் கொடுத்தது.

பாடகர் எஸ். பி.பாலசுப்பிரமனியத்தின் குரலை ஒத்ததாகக் காணப்பட்ட இவரின் குரலிலமைந்த பல பாடல்கள் இருவரின் பெயர்களால் அழைக்கப்படுகின்ற சந்தர்ப்பங்களும் திரைவெளியில் காணப்பட்டிருக்கின்றது. மனோவை பல பாடல்கள் மூலம் பிரகாசிக்கச் செய்தவர் இசைஞானி இளையராஜா ஆவார். 'ராஜாதி ராஜா' திரைப்படத்தில் பஞ்சு அருணாசலம் வரிகளில் உருவான,

'மீனம்மா மீனம்மா
கண்கள் மீனம்மா'

பாடலை சித்ராவுடன் இணைந்து மிக அழகாகப் பாடியிருப்பார் மனோ.

1994இல் மணிவண்ணன் இயக்கத்தில் வெளியான திரைப்படம் 'அமைதிப்படை'. மிக நல்ல வரவேற்பைப் பெற்ற இத்திரைப்படத்தில் இசைஞானியின் இசையில் மனோவும், சுவர்ணலதாவும் இணைந்து பாடிய,

'சொல்லிவிடு வெள்ளி நிலவே
சொல்லுகின்ற செய்திகளையே'

என்ற பாடல் இன்றைக்கும் பலராலும் விரும்பி ரசிக்கின்ற பாடலாக அமைந்திருக்கின்றது.

பாடகி சுவர்ணலதாவோடு மனோ இணைந்து பாடிய பாடல்களும் அநேகராலும் விரும்பி ரசிக்கப்பட்ட பாடல்களாகவே வெளிவந்தது. மிகவும் பொருத்தமான ஜோடிக் குரல்களாக பல அரிய முத்தான பாடல்களை இந்தக் குரல்கள் தாங்கி வந்தன. அந்த வகையில் சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் நடிப்பில் வெளியான 'வீரா' திரைப்படத்தில் இசைஞானியின் இசையிலும், வாலியின் வரிகளிலும் மனோ சுவர்ணலதா குரலில் இடம்பெற்ற,

'மலைக் கோயில் வாசலில்
கார்த்திகைத் தீபம் மின்னுதே'

என்ற பாடல் மிக அருமையாக அமைந்து மனோவிற்கு ரசிகர்கள் மத்தியில் நன்மதிப்பைப் பெற்றுகொ கொடுத்தது. ஒரு காலத்தில் தொடர்ச்சியாக தன் இனிய குரல் மூலம் பல காதல் பாடல்களை இசையமைப்பாளர்கள் இசையில் பாடி பல இள நெஞ்சங்களை தாலாட்டிய பெருமையும் இவருக்கானது.







மனோவின் தனித்துவம் மிக்க ஆளுமைகளில் மிகப் பிரதானமானது குரலினை மாற்றி வித்தியாசமாகப் பாடுவது ஆகும். இதனை பல பாடல்களில் வெளிப்படுத்தியுள்ளார். அப்படியாக பாடிய பாடலில் ஒன்றே 'உள்ளத்தை அள்ளித்தா' திரைப்படத்தில் உருவான,

'அழகிய லைலா
இவளது ஸ்டைலா'

என்ற பாடலும்

'முத்து' திரைப்படத்தில் ரஹ்மான் இசையில் சுஜாதாவோடு இணைந்து பாடிய,

'தில்லானா தில்லானா நா
தித்திக்கின்ற தேனா'

போன்ற பாடல்கள் மனோ பாடிய விதத்தில் நல் வரவேற்பைப் பெற்றுக் கொடுத்தது.

'வால்டர் வெற்றிவேல்' திரைப்படம் இசைஞானியின் இசையில் உருவான அனைத்து பாடல்களும் மெஹா ஹிட் பாடல்களாக அமைந்த திரைப்படமாக இது அமைந்தது.

இத்திரிஅப்படத்தில், எஸ். ஜானகியோடு இணைந்து மனோ பாடிய,

'சின்ன ராசாவே
சிட்டெறும்பு என்னைக் கடிக்குது'

என்ற பாடல் பட்டி தொட்டி எங்கும் அந்நாளில் ஒலித்து அநேகரின் விருப்பும் பாடலாக அமைந்தது.

பாடகர் மனோவின் குரலில் அமையப் பெற்ற பல பாடல்களிற்குள் மனோவிற்கு மிக நல்ல பாடல் என்கின்ற அந்தஸ்தை கொடுத்த பாடலாக அமைத்து 'எங்க ஊர் பாட்டுக்காரன்' திரைப்படத்தில் இசைஞானியின் இசையில் சித்ராவுடன் இணைந்து பாடிய,

'மதுர மரிக்கொழுந்து வாசம் என்
ராசாத்தி உன்னுடைய நேசம்'

என்ற பாடல், இளையோர் முதல் பெரியோர் வரை இன்றைக்கும் அனைவரையும் துள்ள வைக்கின்ற பாடலாக இது அமைந்தது.

'காதலன்' திரைப்படத்தில், ரஹ்மானின் இசையில் வாலியின் வரிகளில் உருவான,

'முக்கால முக்காபுல்லா
லைலா'

என்ற பாடல் 90கள் தொடங்கி இன்று வரை மனோவின் குரலிலமைந்து அனைவரையும் துள்ள வைக்கின்ற பாடலாக அமைந்தது. சுவர்ணலதாவோடு இணைந்து போட்டி போட்டுக் கொண்டு மனோ இப்பாடலைப் பாடியதும் அனைவரையும் கவர்ந்தது. இந்தப்பாடல் மனோவை இந்தத் தளத்தில் புதிய பரிமாணத்தில் அடையாளப்படுத்தியது.

எந்த விதமான பாடல்களாக இருந்தாலும், அதற்கேற்ப அதற்குள் இறங்கி அன்று தொடங்கி இன்று வரை அநேகரையும் ரசிக்க வைக்கின்ற குரலாக அமைந்து காணப்படும் மனோவின் குரலில் அமைந்த அத்தனை பாடல்களும் தமிழ் திரையிசை வெளியில் மிக முக்கியமானவையே.

**வெற்றி துஷ்யந்தன்**







# அரச வானொலியின் விருது வழங்கும் விழா

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2021 நவம்பர் மாதம் 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.